அல்ஹஸனாத்

الحسنات إسلامية شهرية تصدرها الجماعة الإسلامية السريلانكية

மலர் : 30 இதழ் : 11 நவம்பர் 2004 ரமழான் - ஷவ்வால் 1425

நோன்பு முடிந்தால் மார்க்கம் முடிந்ததா?

புண்ணிய மாதமா, பிச்சைக்கார மாதமா?

வாசகர்களுக்கு
ஈதுல் பித்ர்
வாழ்த்துக்கள்

25/=

ISLAMIC MONTHLY இஸ்லாமிய இலட்சியக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமானா தகா:புல் காப்புறுதி

தகா:புலின் **SECURA, EDUKATE, HALE & HEARTY** என்பன பெரும் வெற்றி!

அமானா தகாபுல் அறிமுகப்படுத்திய SECURA, EDUKATE, மற்றும் HALE & HEARTY ஆகியவற்றுக்கு முன்னெப்போதும் இல்லாத அளவு நாட்டின் பல பாகங்களில் இருந்தும் பொதுமக்களின் ஆதரவு கிடைத்துள்ளது. இதனால் இவை பெரும் வெற்றியை உறுதி செய்துள்ளன.

- ☞ **SECURA** நிதி நிலையின் தளம்பல்களில் இருந்து தனது குடும்பத்தை பாதுகாக்க விரும்பும் இளைஞர்களுக்கு உதவுகிறது.
- ☞ **EDUKATE** எதிர்கால சந்ததியினர் இலங்கையில் அல்லது வெளிநாட்டில் கல்வி பெறுவதற்கான நிதியுதவியாக உள்ளது.
- ☞ **HALE & HEARTY** அனைத்து மக்களினதும் அனைத்து வேளைகளிலுமான சுகாதார நலனைப் பேணுவதற்கு உதவுகிறது. (வைத்தியக் காப்புறுதி)

★ SECURA, EDUKATE, HALE & HEARTY ஆகியவற்றை அறிமுகப்படுத்திய முதலிரு வாரங்களில் எமது நிறுவனம் 200% வளர்ச்சியைக் கண்டதுடன் அதன் வர்த்தக அடையாளப் பெறுமானம் அதிகரித்தது. இம்மூன்று திட்டங்களிலும் மக்கள் காட்டும் ஆதரவைப் பார்க்கும்போது இவ்வருடம் 300% வளர்ச்சியை அடைய முடியும் இன்ஷா அல்லாஹ். (என விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் பிரிவுத்தலைவர் அஷ்பாக் முஹமட் அலி தெரிவிக்கின்றார்).

★ 1999இல் எமது நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது. கடந்த 5 வருடங்களில் வருடாந்தம் 100% வளர்ச்சியை நாம் கண்டுள்ளோம். 2003இல் மட்டும் எமது வளர்ச்சி வீதம் 170% ஐ விடவும் அதிகமாக இருந்தது. இது தனிநபர்களிலும் நிறுவனங்களிலும் உண்மையான கவனம் எடுத்து அவர்களுடன் பங்கெடுத்ததால் அவர்கள் தமது ஆதரவை எங்களுக்கு காட்டியிருக்கிறார்கள் என்பதையே காட்டுகிறது. இதனால் எமது நிறுவனத்திற்கும் இலாபம், வாடிக்கையாளர்களுக்கும் இலாபம். ஆரம்பத்திலிருந்து இதுதான் எமது நடவடிக்கைகளின் அடிப்படை ஆகும். இதனால்தான் அபரிமிதமான வளர்ச்சி எமக்கு கிடைத்துள்ளது (என்கிறார் அஷ்பாக் அலி.)

★ அமானா தகா:புல் தனிநபர்களுக்கும், நிறுவனங்களுக்குமாக எதிர்காலத்தில் ஷரிஆவுக்கு ஏற்புடையதான பெறுமானம் சேர்க்கப்பட்ட நிதி, மற்றும் காப்புறுதித் திட்டங்களையும் அறிமுகப்படுத்தவுள்ளது.

★ கவனம் எடுப்பது மாத்திரமின்றி உண்மையாக பங்கெடுப்பவர்கள் நாம் என்ற எமது வாக்குறுதியை காப்பாற்றியதன் விதமாக இன்னும் சில மாதங்களில் நவீன தொழில்நுட்ப மற்றும் நுகர்வோர் சார்பு திட்டங்களின் மூலம் இலங்கை மக்கள் நன்மை அடையவுள்ளனர்.

★ அமானா தகா:புல் அமானா முதலீட்டு நிறுவனத்தினதும் உலகின் மிகப்பெரும் தகா:புல் விநியோகஸ்தர்களான தகா:புல் மலேசியா முதலீட்டு நிறுவனத்தினதும் கூட்டுச் சேர்க்கையாகும்.

தகா:புல் காப்புறுதி எதையும் ஒத்ததல்ல

தகா:புல்

அமானா தகா:புல் லிமிற்றட்

கிளைகள்:- **கம்பளை, கண்டி, மாத்தளை, குருநாகல், புறக்கோட்டை**

அழையுங்கள் : **011 2597430**

இணையத்தளம் : www.takaful.lk

அமானா தகா:புல் லிமிற்றற் - 98, பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு - 04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

بسم الله الرحمن الرحيم

அருளாளன் அன்புடையோன்
அல்லாஹ் அவன் பெயரால்

"(மக்கள்) நல்லுணர்வு பெறுவதற்காகவே இந்தக் குர்ஆனை நாம் எளிதாக்கியுள்ளோம். எனவே நல்லுணர்வு பெறுவோர் உண்டா?" (அல்கமர்:18)

அல்ஹஸனாத்

மலர் 30 இதழ் 11 நவம்பர் 2004
ரமழான் - ஷவ்வால் 1425

ISSN : 1391 - 460X

வெளியீடு:
இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி
Sri Lanka Jama'ath-e-Islami
77, Dematagoda Road,
Colombo 09
Phone :(011) 2698771
Fax :(011) 2686030
web :www.alhasanath.net

விலை விபரம்

உள்நாடு
தனிப்பிரதி : ரூபா 25.00
வருட சந்தா : ரூபா 300.00

வெளிநாடு
வருட சந்தா
இந்தியா, பாகிஸ்தான், மாலைதீவு, சிங்கப்பூர் : 700.00
மத்திய கிழக்கு நாடுகள் : 850.00
இங்கிலாந்து, நியூசிலாந்து, அவுஸ்திரேலியா, மலேஷியா, ஜப்பான், கொரியா : 950.00
ஐக்கிய அமெரிக்க நாடுகள் : 1250.00

உள்ளே உள்ளவை

அல்குர்ஆன் விளக்கம்
அல்குர்ஆனின் வெளிச்சத்தில் நல்லுணர்வு 4-5

அல்ஹதீஸ் விளக்கம்
இழக்கும் கலை 6-7

சர்வதேசம் (தாய்லாந்து)
மூச்சுத்திணறி முடங்கிப்போன தாய் நோன்பாளிகள் 12-13

ரமழான் கட்டுரைகள்
புண்ணிய மாதமா, பிச்சைக்கார மாதமா? 8-9
பத்ர் போராட்டம் 14-15
இரவுத் தொழுகையில் ஒற்றுமை பேணுவோம் 16-17
பிக்ஹ் ரமழான் 18-19

ஏனைய கட்டுரைகள்
ஆசிரியர்கள் கௌரவிக்கப்பட வேண்டியவர்களே! 33-34
பெருநாளை இப்படிக் கொண்டாடுவோம் 38-39
பிள்ளைகளின் பண்பாட்டு விருத்திக்கான... 46-47

தஃவா களம்
பெருநாள் எப்படி? 10-11

கவிதா பவனம் 26-27

சிறுகதை
தலைப் பெருநாளில் முதல் பரிசு 31-32

ஐம்இய்யா பக்கம் 40-41

சிறுவர் பூங்கா 42-43

கேள்வி – பதில்
நோன்பு முடிந்தால் மார்க்கம் முடிந்ததா? 35

உலகச் செய்திகள் 48-49

அந்நிஸா

உறவில் நாட்டமில்லை தீர்வு என்ன? 21
முஸ்லிம்களின் சமூக உறவு 23
தக்வா உருவாக்கும் சிறந்த குடும்ப அமைப்பு 25

ஆரோக்கிய சந்திப்பு:
நீலக் குழந்தையின் இதயம் 28-29

அல்ஹஸனாத் இதழுக்கு சந்தாக்கள் அனுப்ப நாடுவோர் குறிப்பிட்ட தொகைக்கு ALHASANATH என்ற பெயருக்கு மணியோடர் எடுத்து பெறும் கந்தோர் DEMATAGODA எனக் குறிப்பிட்டு அனுப்பவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனவரி முதல்...

அல்ஹஸனாத்தின் மற்றுமொரு வெளியீடு!

அகரம்

மாதாந்த சிறுவர் சஞ்சிகை

- புலமைப் பரிசில் வழிகாட்டி
- பாடசாலை அறிமுகம்
- அஸாபீர் பக்கம்
- 8-10 ம் வகுப்பு மாணவர்களுக்கான பிரதான ஐந்து பாடங்களுக்கான வழிகாட்டல்
- அல்குர்ஆன் கூறும் விஞ்ஞானம்
- வரலாற்றில் முன்னோடிகள்
- சர்வதேச செய்திகள்
- கல்விச் செய்திகள்
- விளையாட்டு உலகம்
- அறிவியல் தகவல்கள்
- நாடுகள் அறிமுகம்
- மாணவர் ஆக்கங்கள்
- மாணவர் உளவியலும் கேள்வி-பதிலும்
- சிறுகதை
- சித்திரக் கதை
- கவிதைகள்
- போட்டிகள்

இன்னும் பல சுவையான அம்சங்களுடன்.....

விற்பனை முகவர்களாக செயற்பட விரும்புவோர் இப்பொழுதே எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்குர்ஆனின் அழைப்பொலி கேட்கிறதா?

"இந்தக் குர்ஆனை அரபி அல்லாத மொழியில் நாம் இறக்கிவைத்திருந்தால், 'இதனுடைய வசனங்கள் விவரித்துக் கூறப்பட்டிருக்க வேண்டாமா? இதுவோ அரபி அல்லாத மொழி, நாமோ அரபிகள்' என நிச்சயமாகக் கூறுவார்கள். நீர் கூறும்! இது விசுவாசம் கொண்டவர்களுக்கு நேர்வழியாகவும், சஞ்சீவியாகவும் இருக்கிறது. எவர்கள் விசுவாசம் கொள்ளவில்லையோ அவர்களின் காதுகளில் செவிடு இருக்கிறது. அது பார்வையை மறைக்கும் திரையாக இருக்கிறது. அவர்கள் வெகு தொலைவில் இருந்து அழைக்கப்படுபவர்கள் (போலிருக்கின்றனர்)" (41:44)

அல்குர்ஆன் அரபு மொழியில் அரபிகளுக்கு அருளப்பட்டது. அதுவும் படிப்படியாக 23 ஆண்டுகளாக சிறிது சிறிதாக இறங்கியது. இஸ்லாத்தை இவ்வுலகில் நிலைநிறுத்தும் பணியை அச்சமூகத்தின்மீது சுமத்திய அல்லாஹ், அவர்கள் எடுத்துவைக்கும் ஒவ்வொரு எட்டிலும் வழிகாட்டிக் கொண்டே வந்தான். இறைதூதர் அவர்கள் முன் செல்ல, அவர்களது தோழர்கள் நிழல்போல் பின்தொடர்ந்தார்கள்.

ஆரம்பத்தில் பொறுமையின் சிகரமாக விளங்கிய அம்மக்கள், தீனை அடுத்தவருக்கு எத்திவைக்கும் பணியில் ஏற்பட்ட கஷ்டங்கள், துன்பங்களை சகித்து பொறுமை காத்தார்கள். பதின்மூன்று வருடங்களை இவ்வாறு கழித்த அவர்கள், இறுதியில் இடம்பெயர்ந்து ஓர் அரசை ஸ்தாபித்தனர். போர்க்களங்களில் எதிரிகளுடன் போராடிய அவர்கள், பல சோதனைகளின் மத்தியில் வெற்றிவாகை சூடினர். இஸ்லாம் இறுதியில் இவ்வவனியில் நிலைபெற்றது.

இப்பாரிய பொறுப்பை, இலட்சியத்தை, தூதை சுமந்த சமூகம் குர்ஆனை ஓதியது, விளங்கியது, அதன்படி நடந்தது, அதன்பால் அனைவரையும் அழைத்தது. ஆனால்....

இன்று நாம் அரபு மொழி தெரியாத அஜமிகளாக வாழ்கிறோம். அல்குர்ஆனை ஓதுகிறோம், புரியாத பாஷையில்! அதனை விளங்க வேண்டுமே என்ற எத்தகைய அக்கறையும் எழக்கில்லை. விளங்கவில்லை எனக் கூறிவிடுவார்கள் என்பதற்காக அரபிமொழியில் அல்குர்ஆனை அருளியதாக அல்லாஹ் கூறுகிறான். இதிலிருந்து அதனை விளங்கிக் கொள்வது எவ்வளவு முக்கியம் என்பதை நாம் உணர வேண்டும். ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இரவு நேரத் தொழுகைகளிலே அல்குர்ஆனின் நீண்ட சூறாக்களை ஓதுவார்கள். பின்தொடரும் ஸஹாபிகளும் பொறுமையுடன் அதனை கேட்டுக்கொண்டு நிற்பார்கள். காரணம் அது அவர்களுக்கு விளங்கியது. அவர்கள் எப்படிச் செயல்பட வேண்டும் என்பதை அது விளக்கியது. அவர்களது நம்பிக்கையை மேலும்மேலும் வலுப்படுத்தியது. அவர்களது பணிக்கு அது உத்வேகத்தை அளித்தது.

ஆனால், இன்று இஸ்லாம் வெறும் சடங்கு, சம்பிரதாயங்களாக நமக்கு அறிமுகப்படுத்தப்படுவதால், விரும்பினால் பின்பற்ற முயற்சிக்கிறோம். தனிமனிதனுக்கான ஆன்மீக வழிகாட்டலாகக் காட்டப்படுவதால், தனிப்பட்ட வாழ்வில் கடைப்பிடிக்க முயற்சிக்கிறோம். அத்தோடு சரி. அல்குர்ஆனை விளங்க வேண்டும் என்ற எந்தத் தேவையும் எமக்கில்லை. அது என்ன பணிக்காக இவ்வுலகில் அருளப்பட்டது என்பது பற்றி நாம் அறிய வேண்டிய அவசியமும் இல்லை.

உலகில் எத்தனை தீமைகள் பரவிப்படர்ந்து மனித வாழ்வை சீரழித்தாலும் எமக்கு கவலை இல்லை. ஷைத்தானே உலகை ஆட்சி செய்தாலும் நமக்கென்ன? நாமுண்டு நம் அமல்கள் உண்டு. மௌத்தானாலும் அவை எம்மை சுவனத்திற்கு கொண்டு சேர்த்துவிடும். வட்டி ஸ்தாபனங்கள் வானளாவ வளர்ந்து கிளை பரப்பி நின்றாலும் நமக்கென்ன நஷ்டம்? மது அரக்கன் நம் அண்டை வீட்டையே ஆக்கிரமித்திருந்தாலும் அலட்டிக் கொள்ளத் தேவையில்லை. அது அவர்களது சுதந்திரம். நாம் ஏன் தலையிட வேண்டும்? இவைதாம் எமது சிந்தனையில் உதிப்பவை. இதுதான் நாம் பின்பற்றும் இஸ்லாம்.

ஆனால் அல்குர்ஆனை ஆழமாக நோக்குவோமானால் இத்தீமைகள் அனைத்தையும் இந்த உலகிலிருந்து களையும்படியே முஸ்லிம்களை அது பணித்துக் கொண்டிருக்கிறது. அல்லாஹ்வின் சட்டங்கள் ஆட்சி செலுத்த வேண்டும். அதுவரை போராடுவதுதான் எம் பணி என்பதை விளக்கிக் கொண்டிருக்கிறது. இந்த இலட்சியத்தை அடைந்துகொள்ள ஒற்றுமையுடன் கைகோர்த்து முயற்சிக்க வேண்டிய தேவையை அது உணர்த்தி நிற்கின்றது.

ஆனால் உலகுக்கு வழிகாட்ட வேண்டிய முஸ்லிம் சமூகமோ வழிமறித்து நிற்கின்றது. பிற சமூகங்கள் சத்தியத்தைப் புரிந்துகொள்வதை விட்டும் தடுத்துவிடுகிறது. அவர்கள் நரகத்திற்கு உரித்தான காபிர்கள் என ஒதுக்கியே வைத்துவிடுகிறது.

அல்குர்ஆன் நம்மிடமிருந்தும் அதனை விளங்கிக் கொள்ள முடியாமல் செவிடர்களாகவும், பார்க்க முடியாத குருடர்களாகவும் ஆகிவிடுவோமானால் அது எவ்வளவு பெரிய நஷ்டம்! இன்று இஸ்லாமிய பணிக்கு நாம் அழைப்பு விடுக்கும்போது, முஸ்லிம்கள் எவ்வளவோ தொலைவில் இருப்பதுபோல் கேட்க முடியாதவர்களாக, பார்க்க முடியாதவர்களாக, விளங்கிக்கொள்ள முடியாதவர்களாக வாழ்கின்றார்கள்!!

மேலே குறிப்பிட்ட குர்ஆன் வசனம் மூலம் அல்லாஹ் எவ்வளவு தெளிவாக இதனை எடுத்தியம்புகிறான்.

இது மார்க்கம் சுமந்த மக்களின் மந்தநிலை. புனித ரமழானின் நோன்பும், பயிற்சியும் இதனை மாற்றி, தீமையை ஒழித்து, நன்மையை நிலைநிறுத்தும் சமூகத்தை உருவாக்கிச் செல்லுமானால் அதுவே அல்குர்ஆனுக்கு நாம் அளிக்கும் கௌரவமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஷ்ஷெய்க் எம்.எச்.எச். முஹம்மது முனீர் (முஹம்மதி)

அல்குர்ஆனின் வெளிச்சத்தில் நல்லுணர்வு பெற விரையுங்கள்!

"(மக்கள்) நல்லுணர்வு பெறுவதற்காகவே இந்தக் குர்ஆனை நாம் எளிதாக்கியுள்ளோம். எனவே நல்லுணர்வு பெறுவோர் உண்டா?" (அல்-கமர்:18)

ஸூறா அல்-கமரின் 18ஆம் 22ஆம் 32ஆம் 40ஆம் வசனங்களில் மீட்டி மீட்டிக் கூறப்படும் இவ்வசனம், 'அல்குர்ஆனைக் கற்றுணர்ந்து கொள்ளுங்கள்' எனவும், அதனைக் கற்றுக்கொள்வது மிக எளிய காரியமெனவும், இவ்வுயர்ந்த முயற்சியில் ஈடுபடுவோர் இல்லையா? எனவும் பரிவோடு பேசுகிறது.

உலகில் மனிதனின் வாழ்நாட்கள் மிகவும் உயர்ந்ததும் கண்ணியமானதும் மேலானதுமாகும். ஆனால் அதனை பலரும் பாழாக்கிவிடுகின்றனர். அல்குர்ஆனின் வெளிச்சத்தை இழந்த மனிதர்கள் உலகிலும் மறுமையிலும் மிகப்பெரிய நஷ்டவாளிகளாக ஆகிவிடுவர். அல்குர்ஆனை தம்மிடம் வைத்திருப்போர் அதன் நன்மாராயங்களையும், வரம்பிட முடியாத அருட்கொடைகளையும் இழந்த நிலையில் இருக்கின்றார்கள். அல்லாஹ் அல்குர்ஆனை அனுப்பியதன் நோக்கம் அதனை ஒதியுணர்ந்து அதன்படி வாழவேண்டும் என்பதுவும் அதனை வைத்து அவனது பூமியில் அல்லாஹ்வுடைய தீனை நிலைநாட்ட வேண்டும் என்பதற்காகவும், மறுமையில் வெற்றியாளர்களாக சுவனலோகத்து சுகந்தங்களை அனுபவிக்க வேண்டும் என்பதற்காகவுமேயாகும்.

ஆனால், பெரும்பாலான முஸ்லிம்கள் அதனை பரக்கத் பெறுவதற்காக காலையிலும், மாலையிலும் பொருள் புரியாமல் பாராயணம் செய்பவர்களாகவும், அதன் வசனங்களை எழுதி கழுத்தில் கட்டுபவர்களாகவும், கரைத்துக் குடிப்பவர்களாகவுமே இருக்கின்றனர்.

வாழ்வின் நோக்கும், போக்கும் எப்படி இருக்க வேண்டும்? எமது நடத்தை எவ்வாறு அமைய வேண்டும்? நட்பிலும், பகைமையிலும் எந்தச் சட்டத்தை பின்பற்ற வேண்டும்? எமக்கு கண்ணியமும் வெற்றியும் நற்பயனும் எதில் இருக்கின்றன? என்றெல்லாம் அலகுர்ஆனிடம் கேட்பதில்லை. எனவே விளைவு மிக மோசமானதாக அமைந்துவிட்டது.

அளவில்லா அருளும், இணையில்லாக் கருணையும் கொண்ட அல்லாஹ் தனது அடியார்கள், தான் இறக்கி வைத்த அல்குர்ஆனை நல்ல முறையில் அறிந்துணர்ந்து அவனது உண்மையுள்ள உயர்ந்த அடியார்களாக வாழவேண்டும் என்றே விரும்புகின்றான். அல்குர்ஆனுக்கு அவன் வழங்கிய பல்வேறு அறிமுகங்கள் குர்ஆன் முழுவதும் விரவிக் காணப்படுகின்றன. அவை அனைத்தும் அல்குர்ஆனை கற்றுணர வேண்டும் என்ற ஆர்வத்தையும், வேட்கையையும் தரக்கூடியனவாக அமைந்துள்ளன. அல்குர்ஆனின் எந்த ஒரு பகுதியேனும், கருத்து மயக்கத்தையோ, புரிந்துகொள்ள முடியாத நிலையையோ ஏற்படுத்துவதில்லை.

ஸூறா ஆல இம்ரானின் 137ஆவது வசனம் இப்படிக் கூறுகின்றது: ''இது மனிதர்களுக்கு (சத்தியத்தின்) தெளிவான விளக்கமாகவும், பயபக்தியுடையோருக்கு நேர்வழிகாட்டியாகவும், நற்போதனையாகவும் இருக்கிறது".

ஸூறா அல்-மாயிதாவின் 15ஆம் 16ஆம் வசனங்கள் அல்குர்ஆன் மீது ஆழ்ந்த நம்பிக்கையையும், அதனுடைய உறவை மேலும் மேலும் வலுவூட்டக்கூடியவைகளாகவும் அமைந்துள்ளன.

''(வேதத்தையுடையவர்களே!) நிச்சயமாக அல்லாஹ்விடமிருந்து பேரொளியும், தெளிவுமுள்ள (திருக்குர்ஆன் என்னும்) வேதமும் உங்களிடம் வந்திருக்கின்றது. அல்லாஹ் இதைக்கொண்டு அவனது திருப்பொருத்தத்தைப் பின்பற்றக்கூடிய அனைவரையும் பாதுகாப்புள்ள நேர்வழிகளில் செலுத்துகின்றான், இன்னும் அவர்களை இருள்களிலிருந்து வெளியேற்றி, தன் நாட்டப்படி ஒளியின் பக்கம் செலுத்துகிறான், மேலும் அவர்களை நேரான வழியில் செலுத்துகின்றான்."

ஆக, முஸ்லிம்கள் அல்குர்ஆனை தெரிந்து கொள்ள, அதில் சொல்லப்பட்டுள்ள கருத்துக்களை புரிந்துகொள்ள உறுதிகொள்ள வேண்டும். அது ஒரு சிரமமான காரியமல்ல. குறைந்தது ஒரு நாளைக்கு மூன்று வசனங்களையாவது மொழிபெயர்ப்புடன் படித்துவந்தால் நான்கைந்து வருடங்களில் குர்ஆன் முழுவதையும் படித்து முடித்துவிடலாம். பேராசிரியர் குர்ரம் முராத் (ரஹ்) அவர்கள் பின்வருமாறு கூறுகிறார்கள்: 'உறுதியான எண்ணத்துடன் தினமும் ஐந்து நிமிடங்கள் மூன்றே மூன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குர்ஆன் வசனங்களை அல்லாஹ்தஆலா என்னுடன் பேசுகிறான், உரையாடுகிறான்(என்னை நோக்கி கூறுகிறான்) என்ற சிந்தனையில் படித்து வருவீர்களானால் சில நாட்களிலேயே அல்குர்ஆனின் கருத்துச்சுவையும், இலக்கிய அழகும் உங்களைப் பற்றிக் கொள்ளும். நீங்கள் விரைவில் அதில் மூழ்கி முத்தெடுப்பீர்கள் என உறுதியாகச் சொல்ல முடியும்."

இப்னு அப்பாஸ் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அல்குர்ஆனை விளங்கிக் கொள்வதை பின்வருமாறு வகைப்படுத்திக் காட்டினார்கள். 'அதில் ஒரு பகுதியுண்டு. அது அல்லாஹ்வுக்கு மாத்திரமே புரியும்; அடுத்து இன்னுமொரு பகுதியுண்டு அது ஆழ்ந்த அறிவுஞானமிக்கவர்களுக்கே புரியும்; மூன்றாவது இன்னுமொரு பகுதியுண்டு அது எல்லோராலும் புரிந்து கொள்ளக் கூடியதாகும். அதுவே அதிகமாகும்".

மெத்தப்படித்த மேதாவிகளால் மாத்திரம்தான் குர்ஆனைப் புரிந்து கொள்ள முடியும் என்பதல்ல. எல்லா அறிவு மட்டங்களைச் சார்ந்தோராலும் அல்குர்ஆனிலிருந்து நல்லுணர்வு பெறமுடியும். 'தஸக்குர்' எனும் உணர்வு பெறவேண்டுமென முயற்சிப்பவர்களுக்கு குர்ஆன் பல வகையிலும் எளிதாக ஆக்கப்பட்டுள்ளது. அறிஞர்கள் அதனை பின்வருமாறு வகைப்படுத்துவர்:

(I) அல்குர்ஆனின் மொழி:

அரபுமொழி மிகவும் வளமிக்கதாகவும், மிக நுணுக்கமான இலக்கணத்தைக் கொண்டிருந்த போதும் அல்குர்ஆனின் அரபுமொழி மிகவும் எளிய அமைப்பைக் கொண்டதாகும். அதன் ஓசை நயமும், சொல்லாட்சியும், வசன அமைப்பும் மிக எளிதாக அமைந்துள்ளன. உதாரணமாக 'அல்காரிஆ; மல்காரிஆ. வமா அத்ராக மல் காரிஆ!" ''தட்டுதல், தட்டுதல் என்றால் என்ன? தட்டுதல் பற்றி உமக்கு எது அறிவித்தது?" போன்ற வசனங்கள் குர்ஆன் முழுதும் விரவிக் காணப்படுகின்றன.

(II) அல்குர்ஆன் கூறும் உதாரணங்களும், உவமான உவமேயங்களும் எல்லோராலும் புரிந்து கொள்ளக் கூடியவாறு எளிதாக அமைந்துள்ளன. ''மேலும் இவ்வுலக வாழ்க்கைக்கு ஓர் உதாரணம், அவர்களுக்கு (நபியே!) நீர் கூறுவீராக! 'அது நாம் வானத்திலிருந்து இறக்கி வைத்த நீரைப் போலிருக்கிறது. பூமியிலுள்ள தாவரங்கள் அதனுடன் கலந்து செழித்தன. ஆனால் அவை காய்ந்து, பதராகி அவற்றைக் காற்று அடித்துக் கொண்டு போய்விடுகிறது. மேலும் எல்லாப் பொருட்களின் மீதும் அல்லாஹ் ஆற்றல் உடையவனாக இருக்கிறான்". (கஹ்.'.பு - 45)

(III) அல்குர்ஆன் முன்வைக்கும் கேள்விகள், தர்க்கங்கள், விமரிசனங்கள் யாவும் எளிதானவையாகும். ''(கர்ப்பப்பையில்) நீங்கள் செலுத்தும் இந்திரியத்தைக் கவனித்தீர்களா? அதை நீங்கள் படைக்கிறீர்களா? அல்லது நாம் படைக்கிறோமா? (பூமியில்) விதைப்பதை நீங்கள் கவனித்தீர்களா? அதனை நீங்கள் முளைக்கச் செய்கிறீர்களா? அல்லது நாம் முளைக்கச் செய்கிறோமா?" (அல்வாகிஆ)

(IV) அல்குர்ஆன் கூறும் கதைகள், வரலாற்று நிகழ்வுகள் யாவும் எளிய முறையிலேயே அமைந்துள்ளன. ஸுறா யூஸுப் கூறும் அழகிய கதை, ஸுறத்துத் தாஹா விவரிக்கும் நபி மூஸா அலைஹிஸ்ஸலாம், ஸுறத்துல் கஹ்ப் கூறும் குகைவாசிகள், துல்கர்னைன் முதலாம் நிகழ்வுகள் யாவும் சிந்தித்து நல்லுணர்வு பெறுவதற்கு மிக எளியவையாகவே அமைந்துள்ளன.

அல்குர்ஆனைப் படித்து நல்லுணர்வு பெற இரண்டு அடிப்படைத் தகைமைகளை வளர்த்துக் கொள்ள வேண்டும். முதலில் அல்குர்ஆனை படிக்கச் செல்லும் ஒருவர் தனது உள்ளத்தை தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டும். அழுக்கடைந்த உள்ளத்துக்குள் அல்குர்ஆன் செல்ல மாட்டாது. இரண்டாவதாக அல்குர்ஆனிலிருந்து 'தஸக்குர்' சிந்தித்து நல்லுணர்வு பெறும் அளவுக்கு அரபுமொழி அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும். (அதாவது அல்குர்ஆனை ஓதும்போது, ஓதக் கேட்கும்போது பொருள் புரிகின்ற அளவுக்கு அரபு தெரிய வேண்டும்) இவ்விரண்டு சாதனங்களின் மூலமாக அல்குர்ஆனின் பேரின்பத்தைப் பருக முயற்சிக்க வேண்டும். இதனை இழந்தவன் ஒரு துர்ப்பாக்கியவானே!

டாக்டர் இஸ்ரார் அஹ்மத் அவர்கள் பின்வருமாறு துர்ப்பாக்கியவான்களை விபரிக்கிறார்: ''பல்கலைக்கழக பட்டதாரிகளும், பட்டங்கள் பெற்ற அறிஞர்களும், கடினமான விஞ்ஞானக் கலைகளான மருத்துவம், பொறியியலில் துறைபோகக் கற்றுத் தேர்ந்த முஸ்லிம்களும் இந்தப் புனித குர்ஆனை விளங்கிக் கொள்ளும் அளவுக்கு அரபுமொழியைக் கற்றுக் கொள்ளாமலிருப்பதால் அல்லாஹ்வின் நீதிமன்றத்தில் என்ன சாட்சி சொல்லப் போகிறார்களோ என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியாமலிருக்கிறது. இந்த முஸ்லிம்கள் மீது அனுதாபமும் கலப்பற்ற அக்கறையும் கொண்டிருப்பதனால்தான் நான் இதைக் கூறுகிறேன். அரபுமொழியைக் கற்பதில் அவர்கள் காட்டும் அலட்சியமும் அசிரத்தையும் அல்லாஹ்வின் கலாமாகிய குர்ஆனை எள்ளிநகையாடுவது மாத்திரமின்றி அதனை அவமதிப்பு செய்வதற்கும் சமமாகிவிடுகிறது. இது சம்பந்தமாக அவர்களது பொறுப்பற்ற நடத்தையினால் அவர்கள் பயங்கரமான தண்டனைக்கும் அபாரமான குற்றத்திற்கும் ஆளாகிவிட நேரிடும் என்பதை அவர்கள் உணரவேண்டும்".

அல்குர்ஆனின் பொருள் அறிந்து ஓத முடியாத நிலைதான் முஸ்லிம்களின் வாழ்க்கையில் மிகப்பிழையான நடத்தைகளை ஏற்படுத்தியுள்ளது. அன்றாடம் நிறைவேற்றும் தொழுகை உயிரற்றுப் போனதற்கும், இரவுத் தொழுகையில் ஆர்வமின்மைக்கும், நோன்புகாலங்களில் நிறைவேற்றப்படும் தராவீஹ் தொழுகையில் ஆர்வமின்மைக்கும் இதுவே காரணமாகும்.

ஒரு முஸ்லிமின் எல்லா நடவடிக்கைகளின் போதும் அல்குர்ஆன் வசனங்கள் அவனுக்குள் தோன்றி வெளிச்சம் காட்ட வேண்டும். அவனது இரவிலும், பகலிலும், காலையிலும், மாலையிலும் அவனது ஆரோக்கியத்திலும், நோயிலும், செல்வநிலையிலும், வறுமையிலும், சுவனத்தின் சுகந்தங்கள் நன்மாராயம் கூறி, நரகத்தின் அவலங்கள் எச்சரிக்கை ஓசை எழுப்பி அவனை நெறிப்படுத்தி, வழிப்படுத்தி பூமியில் ஒரு புனிதனாய் வாழச்செய்ய வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்ஹதீஸ் விளக்கம்

அல்லாஹுத்தஆலா கூறுவதாக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்:

"எனக்காக மனிதன் தனது உணவையும், குடிப்பையும், இச்சையையும் விட்டுவிடுகின்றான். எனவே, நோன்பு எனக்காக நோற்கப்படுவதாகும். அதற்குரிய நற்கூலியை நான் விஷேடமாக வழங்குகின்றேன்" (முஸ்லிம்)

அஷ்ஷெய்க் எச்.எம். மின்ஹாஜ் (இஸ்லாஹி)

இழக்கும் கலை

ஒரு மாதகால நோன்பு ஒரு முஸ்லிமை பல்வேறு வகையில் பயிற்றுவிக்கிறது. அவனது உடலும், உள்ளமும், சிந்தனையும் புடம்போடப்படுகின்றன; அவனது ஐம்புலன்களும் பக்குவநிலையை அடைகின்றன; அவன் வானவர்களின் நிலையை நோக்கி தரம் உயர்கின்றான். இவ்வாறே ஒரு முஸ்லிம் தனக்கென அல்லாஹ் வழங்கிய அடிப்படைத் தேவைகளான உணவையும், குடிப்பையும், இச்சையையும் றமழான் காலத்தில் விட்டுவிடுகிறான். இது பெரியதொரு அர்ப்பணமாகும். அல்லாஹ்வுக்காக எதனையும் இழக்கின்ற கலையை றமழான் என்னும் பயிற்சி முகாமில் கற்றுக்கொள்கின்றான்.

மலக்குகளிலிருந்து மனிதனை வித்தியாசப்படுத்துகின்ற அடிப்படைப் பண்புகளே உணவும், குடிப்பும், இச்சையும். இவைகளைத் தவிர்த்துக் கொண்டு மனிதன் வாழ்வது சிரம சாத்தியமானதாகும். அவற்றையும்கூட முஸ்லிம் இழப்பதற்கு தயார் நிலையில் இருக்க வேண்டும் என்பதே அல்லாஹ்வின் எதிர்பார்ப்பாகும். உணவையும், குடிப்பையும், இச்சையையும் மனிதன் நோன்பின் மூலமாக விட்டுவிடுவதன் விளைவாக அவனுக்கு தேகாரோக்கியமும், நோய் நிவாரணமும் கிடைக்கின்றன என்ற தாத்பரியம் அழுத்திச் சொல்லப்படுகின்றவேளை இழக்கும் கலை குறித்து பரவலாகப் பேசப்படுவதில்லை. நாம் விளக்கப்புகுந்துள்ள ஹதீஸ் இக்கலை குறித்துப் பேசுகின்றது.

அல்லாஹ்த் தஆலா முஸ்லிம்களுக்கு இழக்கும் கலையை கற்றுக்கொடுக்கின்றான். அவன்தான் முஸ்லிம்களின் குரு. உலகில் குரு என்பவர் பொதுவாக தனது சீடர்களுக்கு கலைகளை கற்றுக்கொடுத்து இறுதியில் விசுவாசப் பிரமாணம் ஒன்றை பெறுவதுண்டு. அல்லது சத்திய வாக்கொன்றை பெறுவதுண்டு. ஏனெனில், குறித்த கலை தனது சீடர்களினால் துஷ்பிரயோகம் செய்யப்படக்கூடாது என்ற ஒரே நோக்கத்திற்காக. இவ்வாறே அல்லாஹ்த் தஆலா இழக்கும் கலையை முஸ்லிம்களுக்கு கற்றுக் கொடுத்து உடன்படிக்கை ஒன்றை செய்துள்ளான். அதாவது அவர்கள் இழக்கும் ஒவ்வொன்றுக்கும் பெறுமதிமிக்க சுவனத்தை இழப்பீடாக வழங்கக் காத்திருக்கின்றான்.

"நிச்சயமாக அல்லாஹ் தஆலா முஃமின்களிடமிருந்து உயிர்களையும், சொத்து செல்வங்களையும் சுவனத்தைப் பிரதியீடாக தருவதாகக் கூறி விலைக்கு வாங்கிவிட்டான்"

(ஸூரா அத்தௌபா 111)

முஸ்லிம்கள் இந்த உடன்படிக்கையின்படி சகல சௌபாக்கியங்களையும் தேவைப்படின் இழக்கக் கடமைப்பட்டுள்ளார்கள். நோன்பு அத்தகைய கடமையுணர்வை ஞாபகப்படுத்துவதோடு நடைமுறைச் சாத்தியமான பயிற்சியையும் வழங்குகின்றது. முஸ்லிம்கள் வரலாற்று நெடுகிலும் இந்தக் கலையை உலகறியச் செய்து மனிதர்களை வாழ வைத்துள்ளார்கள். ஆனாலும் இன்று அவர்களுக்கு நிவாரணப்பிச்சை வாங்குவதற்கும். உரிமைகளைப் பெற்றுக்கொள்வதற்கும் கொடுக்கப்படுகின்ற ஊக்குவிப்பும், உற்சாகமும் இழக்கின்ற கலையை கற்றுக்கொள்வதற்கு உற்சாகம் தரப்படுவதில்லை.

உலகம் உணவுக்காக, நீர்வளத்திற்காக போட்டாபோட்டியில் இறங்கியிருக்கின்றது. முதலாளித்துவ கொள்கையினால் ஆளப்படுகின்ற அபிவிருத்தியடைந்த நாடுகள் மிதமிஞ்சிய உணவுப் பொருட்களையும், விவசாய உற்பத்திப் பொருட்களையும் வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் நாடுகளுக்கு அள்ளி வழங்கத் தயாராக இல்லை. மாறாக பன்றிகளுக்கு தீனியாக போடவும், கடலில் கொட்டிவிடவும் தயாராக இருக்கின்றன. வட்டியுடன் கூடிய கடன்வழங்க தயாராக இருக்கின்றன. மென்மேலும் தமது முதலாளித்துவ வயிற்றை நிரப்பிக் கொள்வதற்கே அவை சந்தை வாய்ப்பை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றன.

ஒரு நாட்டு மக்கள் பட்டினிச்சாவை எதிர்நோக்கினாலும் கூட தங்கள் நாட்டு அணைக்கட்டை திறந்து நீர் வழங்க தயாராக இல்லாத கருமித்தனமிக்க அரசாங்கங்களை நாம் அவதானிக்கிறோம். இவர்கள் இழக்கும் கலை பயிலாதவர்கள்; சேமிக்கும் கலையில் தேர்ச்சி பெற்றவர்கள்.

வாழ்வை எவ்வழியிலாவது வளப்படுத்திக்கொண்டு கீழ்த்தரமான இச்சைகளை எவ்வகையிலாவது தீர்த்துக்கொண்டு, பிறரை எட்டிப்பார்க்காது, மனதால் கூட எண்ணிப்பார்க்காது இழக்கும் மனப்பான்மை அறவே இல்லாத, தான் வரைந்த கோட்டுக்குள் தனது குடும்பமும், உறவுகளும் வாழ்ந்தால் போதும் என்ற சிந்தனைப் பாங்குள்ள மனிதர்களையே உலகில் தோற்றம் பெற்றுள்ள பொருளாதாரக் கொள்கைகள் வடிவமைத்துள்ளன.

ஆனால் அல்லாஹ்வும் அவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூதரும் முஸ்லிம் தனிமனிதர்களிடத்தில் இழக்கும் கலையை ஊக்குவித்தார்கள். ஒரு சமூகத்தின் முக்கிய கூறாகிய தனிமனிதர்கள் இந்தக் கலையை திறம்பட பயிலாதவிடத்து சமூகத்தில் நல்ல விளைவுகளை எதிர்பார்க்க முடியாது. இந்த வகையில் இழப்பதற்கான ஊக்குவிப்பை அண்ணலார் இவ்வாறு முன்வைத்தார்கள். அல்லாஹ்த் தஆலா கூறுகின்றான்: ''ஆதமுடைய மகனே! நீ செலவழிப்பாயாக! உனக்காக செலவழிக்கப்படும்".

அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எதையும் எந்நேரமும் இழக்கத் தயாராக இருந்தார்கள். ஸஹாபிகள் கூறுவார்கள்: ''அண்ணலாரிடம் ஏதாவதொன்றை தருமாறு வேண்டப்பட்டால் அவர்கள் 'இல்லை' என கூறமாட்டார்கள். அவர்களுக்கு வழங்கப்படுகின்ற அன்பளிப்புக்களைக்கூட அடுத்த கணம் தேவைப்பட்டோருக்கு கொடுத்து விடுவார்கள்".

இப்னு அப்பாஸ் றழியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கின்றார்கள் றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கொடை வள்ளலாக திகழ்ந்தார்கள். றமழானில் ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள், அவர்களைச் சந்திக்கும்போது வாரிவாரி வழங்கும் வள்ளலாக இருப்பார்கள். றமழானில் ஒவ்வொரு இரவிலும் ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் குர்ஆனை அவர்களுக்கு பாராயனம் செய்து கற்றுக்கொடுப்பதற்காக அவர்களை சந்திக்கும்போது சுழன்றடிக்கும் காற்றை விட வேகமாக வாரி வழங்கும் வள்ளலாகத் திகழ்வார்கள்"

(புகாரி, முஸ்லிம்)

இழப்பதற்கு முன்னர் இழக்கும் மனப்பான்மை அவசியம். இழக்கும் மனப்பான்மை இல்லாமல் இருப்பது சுவனம் செல்வதற்கு தடையாக அமைந்துவிடும். இதனையே அல்குர்ஆன் இவ்வாறு கூறுகின்றது: **"அவன் தடை தாண்டவில்லை. தடை என்றால் என்னவென்று உமக்கு அறிவித்தது எது? ஓர் அடிமையை விடுதலை செய்வது அல்லது பட்டினியும், பஞ்சமும் நிலவும் ஒரு நாளில் உறவினரான அனாதைக்கோ அல்லது மண்கவ்விக் கிடக்கும் ஓர் ஏழைக்கோ உணவளித்தலாகும்.**

(ஸூரா அல்பலத் 11-16)

பத்துப் பேருக்கு உணவளிக்கும்போதும், பத்து ரூபாவை வழங்குகின்றபோதும் உள்ள மனநிலை முக்கியமானது. எண்ணிக்கையும், தொகையும், அளவுப் பருமனும் முதன்மைப்படுத்தப்படுவதை விட மனித மனத்தின் தரம் முதன்மைப்படுத்தப்படல் வேண்டும். ஆகவேதான் நபியவர்கள் ஒரு உதாரணம் கூறினார்கள்.

உலகம் உணவுக்காக, நீர்வளத்திற்காக போட்டாபோட்டியில் இறங்கியிருக்கின்றது. முதலாளித்துவ கொள்கையினால் ஆளப்படுகின்ற அபிவிருத்தியடைந்த நாடுகள் மிதமிஞ்சிய உணவுப் பொருட்களையும், விவசாய உற்பத்திப் பொருட்களையும் வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் நாடுகளுக்கு அள்ளி வழங்கத் தயாராக இல்லை. மாறாக பன்றிகளுக்கு தீனியாக போடவும், கடலில் கொட்டிவிடவும் தயாராக இருக்கின்றன. வட்டியுடன் கூடிய கடன்வழங்க தயாராக இருக்கின்றன. மென்மேலும் தமது முதலாளித்துவ வயிற்றை நிரப்பிக் கொள்வதற்கே அவை சந்தை வாய்ப்பை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றன.

(தருமம் செய்யாத) கஞ்சனுக்கும் தருமம் செய்பவனுக்கும் உவமை, இரும்பு அங்கிகள் அணிந்த இரு மனிதர்கள் ஆவர். அவர்களுடைய கைகள் அவர்களின் கழுத்தெலும்புகளோடு ஒட்டியிருக்கும். (அந்த அளவுக்கு அவை இறுக்கமானவை) தருமம் செய்பவர் தருமம் செய்ய விரும்பும்போது (அவர் அணிந்திருக்கும் அந்த) அங்கி அவருக்கு விசாலமாகிவிடுகிறது. எந்த அளவுக்கென்றால் அவர் (நடந்துசெல்லும்போது அது நீண்டு) அவரது பாதச்சுவட்டை அது அழித்துவிடுகிறது. (அதாவது தருமம் அவரது குற்றங்குறைகளை மறைத்து விடுகிறது) கஞ்சன் தருமம் செய்ய விரும்பும்போது (அவனது இரும்பு அங்கியின்) ஒவ்வொரு வளையமும் அடுத்த வளையத்தை நெருக்குகின்றது. அவனை (தன் பாரத்தால்) அழுத்துகின்றது. அவனது இரு கைகளும் கழுத்தெலும்புகளுடன் ஒட்டிக் கொள்கின்றன"

''கஞ்சன் அந்த அங்கியை விசாலமாக்க முயற்சி செய்வான். ஆனால் அது விசாலமாகாது" என்றும் நபியவர்கள் கூறினார்கள். (புகாரி) எனவே தாராள மனப்பான்மை இங்கு நோக்கற்பாலது.

சொத்து செல்வத்தை இறைவழியில் வழங்குவது மட்டுமல்ல. ஆசைகளையும், அபிலாஷைகளையும், உணர்வுகளையும், உணர்ச்சிகளையும் இழப்பதும் இக்கலையுடன் சம்பந்தப்படுகின்றது. றமழான் மாத நோன்பு இவை அனைத்திற்கும் ஒரு பயிற்சியாக அமைகின்றது. இறைவழியில் இழக்கும் திறமை உள்ளவர்கள் உள்ளம் உயர்ந்த மனிதர்கள். அவர்களே மனிதர்களில் சிறந்தவர்கள். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: ''எடுக்கும் தாழ்ந்த கையை விட கொடுக்கின்ற உயர்ந்த கைகள் மேலானவை"

(புகாரி, முஸ்லிம்)

தீனுல் இஸ்லாத்தை வாழ வைப்பதற்கு இழக்கும் கலை பயின்றவர்களே தேவை. அவர்களையே நோன்பு உருவாக்குகின்றது. அவர்கள் இழப்பார்கள். சேமிக்கும் மனப்பான்மையை விட இழக்கும் மனப்பான்மையே அவர்களை ஆதிக்கம் செலுத்தும். இஸ்லாத்தின் மூலம் தனக்கு ஒரு உலகியல் இலாபம் என்றால் தூர விலகிவிடுவார்கள். தன்னில் உள்ளவற்றையும், தன்னையும் இழந்து இஸ்லாத்திற்கு இலாபம் சேர்க்க நெருங்கி வருவார்கள். பிரவாகித்து வரும் இச்சையைக் கூட இறைநெறிக்காக இழக்க முன்வருவார்கள். அனர்த்தங்களின்போது அலட்டிக்கொள்ள மாட்டார்கள்.

அனர்த்தங்களைப் பட்டியல் போடமாட்டார்கள். பஞ்சம் ஓத மாட்டார்கள். ஏனெனில் அவர்கள் ஏலவே பல றமழான்களில் இழந்து பழகியவர்கள். இவர்களுக்கே பிரத்தியேகமான நற்கூலி! இவர்களுக்கு 'ரய்யான்' என்னும் சுவன வாயில் சொந்தம்! இவர்களே ரமழானின் வசந்தத்தைச் சுவாசித்தவர்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புண்ணிய மாதமா, பிச்சைக்கார மாதமா?

Dr. மரீனா தாஹா ரிபாய்

புண்ணிய மாதமாம் ரமழான் மீண்டுமொருமுறை எம்மிடம் வந்துள்ளது. முஸ்லிம்கள் அல்லாஹ்வுக்காக, அவனது திருப்பொருத்தத்திற்காக பசித்திருந்து, தாகித்திருந்து, உலக வேலைகளைக் குறைத்திருந்து இபாதத்களில் ஈடுபட வேண்டிய மாதம்.

ஆம், மஸ்ஜிதுகள் நிரம்பி வழிகின்றன. ஆயினும், பாதைகளும் நிரம்பி வழிகின்றனவே தலையிலும், கைகளிலும் அரிசி மூடைகள் சுமந்த மிஸ்கீன்களால்!

ஆங்காங்கே கூட்டம் கூட்டமாக ஒழுங்கான ஹிஜாப் இன்றி, தாய், தந்தை, மகன், மகள் என வித்தியாசமின்றி ஆண்களும் பெண்களும் வயதானோரும் இளைஞர்களும், குழந்தைகளும் வீடுவீடாகக் கதவைத் தட்டி ஒரு பத்து ரூபாவையோ, ஒரு பிடி அரிசியையோ பெற்றுக் கொள்ள அலைந்து திரிகின்றனர். அதுவும் அன்போடு இரக்கத்தோடு அல்ல. ஏச்சோடும், எரிச்சலோடும் முஸ்லிம் முஸ்லிமல்லாதோர் யாவருடைய கதவையும் வித்தியாசமின்றித் தட்டுவதால் நாயை விட்டுக் கூட சிலர் விரட்டியடிக்கப்படுகின்றனர். புண்ணிய மாதம் முஸ்லிமல்லாதோரால் பிச்சைக்கார மாதம் எனப் பழிக்கப்படும் பரிதாபம்!

நெஞ்சு பொறுக்குதில்லையே இந்த நிலைகெட்ட மனிதரை நினைத்துவிட்டால்!

இது யார் குற்றம்? தமக்குரித்தான ஸகாத்தை உரிய முறையில் பெற்றுக் கொள்ள முடியாமல் தவிக்கும் மிஸ்கீன்கள் குற்றமா? ஸக்காத்தை உரிய முறையில் கொடுக்கத் தவறும் தனவந்தர் குற்றமா? இருபக்கத் தவறுகளையும் பார்த்துக் கொண்டு வாளாவிருக்கும் ஆலிம்கள் குற்றமா?

ஸக்காத் எப்படிக் கொடுக்கப்பட வேண்டும் என்பது ஷரீஆவில் மிக விளக்கமாக, தெளிவாக சொல்லப்பட்டுள்ளது. எனினும், இலங்கையில் ஸக்காத் கொடுக்க வேண்டிய அநேகமானோர் ஸக்காத் கொடுப்பதில்லை. கொடுப்பவர்களும் கொடுக்க வேண்டிய விதத்தில் கொடுப்பதில்லை. ஏதோ கடமை என்று வாசலில் வந்து தட்டுபவர்களுக்கெல்லாம் 100 ரூபாய், 200 ரூபாவைக் கொடுத்து விட்டு 'எனது கடன் கழிந்தது' என்று இருந்து விடுகிறார்கள். பத்திரிகையில் கூட தலா 300 ரூபாய் ஸக்காத் வழங்கப்படும் என்று விளம்பரம் போட்டு எங்கெல்லாமோ இருந்து வருகின்ற யார் யாருக்கெல்லாமோ ஸகாத்தைக் கொடுத்துவிட்டு பெரிய சாதனை நிகழ்த்தி விட்டதாக நினைத்துக் கொள்கிறார்கள்.

இதுவா ஸக்காத்? இல்லவே இல்லை! இஸ்லாம் ஸக்காத் திட்டத்தை அமைத்திருப்பது ஒரு குறித்த நோக்கத்துக்காக. அடிப்படையில் பிச்சைக்காரன்-ஏழை-கை நீட்டுபவன் என்போர் எம் சமுதாயத்திலேயே இல்லாத நிலையைக் கொண்டுவருவதற்காக. ஆனால் நாமோ இன்று ஸக்காத்தைக் கொண்டே பிச்சையெடுக்காதவர்களைக் கூட ஊர் ஊராக அலைய வைக்கிறோம். முஸ்லிம், முஸ்லிமல்லாதார் யாவரும் தலையில் தொப்பியையோ, முந்தானையையோ போட்டுக் கொண்டு இந்த ஸக்காத்தை வாங்கித் திரிகிறார்கள். நோன்பு தொழுகை எனும் கட்டாயக் கடமைகள் காற்றோடு பறந்து விடுகின்றன. நடுரோட்டில் அமர்ந்து கொண்டு ரமழானின் பட்டப்பகலில் சாப்பிட்டுக் கொண்டும், குடித்துக் கொண்டும் 'ஸக்காத்' தேடித் திரிகிறார்கள். கேட்டால் 'பிரயாணி' என்கிறார்கள்.

அல்குர்ஆன் ஸகாத்தை யாருக்குக் கொடுக்க வேண்டும் எனத் தெளிவாகச் சொல்லியிருக்கிறது. வாசலில் வருபவரெல்லாம் மிஸ்கீன் என நினைத்துக் கொண்டு கொடுக்கிறோம். இவர்கள் இதனை வருடம் பூராவும் வட்டிக்குக் கொடுக்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்ளாமல்.

ஸக்காத் வாங்குபவர் முஸ்லிமா, இல்லையா என்று தெரிந்து கொள்வதற்கு நூதனமான முறைகளைக் கையாள்கிறோம். ஒரு பள்ளியில் சூரதுல் பாத்திஹா ஓதச் சொல்லிப் பார்க்கிறார்கள். இஸ்லாத்தில் இணைந்தோருக்கு பாத்திஹா கற்றுத்தர ஆளில்லை. ஆனால், பாத்திஹா ஓதாதவருக்கு ஸக்காத் இல்லை. இதுவா இஸ்லாம் போதிக்கும் மார்க்கம்?

இன்னோரிடத்தில் வருவோரிடமெல்லாம் 'கலிமா தெரியுமா?' என்று கேட்கிறார்கள். ஒரு பெண், 'ஓ தெரியுமே! அந்த உயரமான கறுப்பு பொம்பிளைதானே?" என்று கூறுகிறாள். இதையெண்ணி அழுவதா, சிரிப்பதா? சமுதாயமே இவற்றைப் பார்த்துக் கொண்டு அனுமதித்துக் கொண்டு இன்னுமின்னும் இவ்வாறே நடந்து கொண்டிருக்க வழிவகைகளும் செய்து கொண்டிருக்கிறது.

இதற்கு யார் பொறுப்பு? இப்படிப் பெண்களும், இளம் வாலிபர்களும் கைநீட்டி வாங்குவதை இஸ்லாம் வன்மையாகக் கண்டிக்கிறது என்பது தெரியாமல் வாசல்படி ஏறி இறங்கும் ஏழைகள் பொறுப்பா? 'சும்மா தானே கொடுக்கிறார்கள்? நாமும் பெற்றுக் கொள்வோமே' என்று கும்பலோடு கும்பலாகச் செல்லும் முஸ்லிமல்லாதார் பொறுப்பா? இஸ்லாத்தில் நுனிப்புல் மேய்ந்து கொண்டு ''நீட்டிய கைக்குத் தவறாமல் கொடுத்து விடுங்கள். கேட்பவர் குதிரை மேல் வந்தாலும் சரியே" என்ற ஹதீஸை மாத்திரம் தெரிந்துகொண்டு ஸக்காத்தைத் துண்டம் போடும் பணக்காரரின் பொறுப்பா? இஸ்லாம் விதித்துள்ள விதிமுறைகளை மக்களுக்கு எடுத்துச் சொல்வதில் பின்தங்கியிருக்கும் ஊர்த் தலைவர்களின் பொறுப்பா? நாம் ஆழமாகச் சிந்திக்க வேண்டிய விடயம் இது.

''இப்படியாக வீடு வீடாக ஏறி இறங்கினால்தான் வருடத்துக்குத் தேவையான அரிசியைச் சேர்க்க முடிகிறது" என அங்கலாய்க்கிறார்கள் ஏழை மிஸ்கீன்கள்; சேர்த்துக் கொடுக்க வேண்டும் என்று தெரிந்திருந்தாலும் 'சேர்த்துக் கொடுப்பதற்கு ஒருவரும் முன்வரவில்லையே' என்று முறையிடுகிறார்கள் வசதியுள்ளோர்.

ஆகிராவில் அல்லாஹ் தஆலா வழி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழியாக நடையாய் நடப்பவரைக் கேட்பானா? நிச்சயமாக பாமரர்களுக்கு முன் படித்தோர் கேள்வி கேட்கப்படுவர். அறியாதவனை விட அறிந்தவன் அதிகம் சோதிக்கப்படுவான்.

ஸலபுஸ் ஸாலிஹீன்களின் வழிமுறை அந்தந்த ஊரின் மஸ்ஜிதில் அவ்வூரின் எல்லா ஸக்காத்தையும் சேர்த்து அங்குள்ள ஸக்காத் பெறத் தகுதியானோரை அடையாளம் கண்டு அவர்களுக்கு மரியாதையாகக் கொடுப்பதாகும். எனவே ஒரு ஊரிலுள்ளவர்கள் யாரும் வெளியூர்களுக்கு ஸக்காத் வாங்கச் செல்லக் கூடாது எனக் கட்டளை பிறப்பிக்கப்பட வேண்டும். ஆனால், இன்றோ பள்ளிகளும் பகைகொண்டு பிரிந்து நிற்கின்றன; ட்ரஸ்டிகள் மீது மற்றோருக்கு நம்பிக்கையில்லை. அல்லது இன்னாருக்கு கொடுக்க வேண்டும் என்பதில் மக்களிடையே ஏகோபித்த கருத்து இல்லை. யாருக்கு எவ்வளவு கொடுக்கலாம் என்பதில் கருத்து வேறுபாடு. இஸ்லாத்துக்கு வந்தவர் யார் என்று ரமழானில்தான் கண்விழித்து தேடிப் பார்க்கிறார்கள். இதுவும் ஒரு பிரச்சினை.

ஒற்றுமையை நிலைநாட்ட வந்த சாந்தி மார்க்கத்தின் அடிப்படைக் கட்டளையில் ஒன்றைப் பின்பற்றுவதிலாவது மக்களுக்கு ஒற்றுமையில்லை. அந்தோ பரிதாபம்!

ஸகாத்தை இப்படிக் கொடுத்துச் செல்லுபடியாகாது என்று தெரிந்தவர்கள்கூட ஸக்காத்தைத் தகுந்தோருக்குக் கொடுத்து விட்டு வழியில் போவோர் வருவோருக்கு 2,3 ரூபாய் கொடுத்துக் கதவைச் சாத்திக் கொள்கிறார்கள். ஏழை மக்களும் (ஏழையல்லாதோரும்) கைநீட்டிக் கொண்டேயிருக்கிறார்கள். இவர்களுக்கு இஸ்லாத்தின் உண்மை நிலையை எடுத்துச் சொல்லி உணர வைப்பது பர்ளு கிபாயா அல்லவா? யாரொருவரும் செய்யாதவிடத்து நாம் எல்லோரும் அல்லாஹ்வுக்கு முன் குற்றவாளியாக நிற்க வேண்டிவருமே நவூதுபில்லாஹ்.

இதற்கு வழிதான் என்ன? முழு சமுதாயமும் திட்டமிட்டு ஒன்றுகூடிச் செயற்பட்டாலன்றி இந்தத் தீயபழக்கத்தை எம் சமுதாயத்திலிருந்து ஒழிக்க முடியாது.

கேட்டுத் திரிவோர் இஸ்லாத்தின் உண்மை தெரிந்தால் நிச்சயம் திரிய மாட்டார்கள். இவர்களுக்கு அல்லாஹ்த் தஆலாவினதும் ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களினதும் கட்டளைகளை எடுத்துக் கூறினால் மனந்திருந்தி பொறுமையைக் கடைபிடித்து அல்லாஹ்வின் ரஹ்மத்தைப் பெற்றுக் கொள்வர். இவர்களை நோன்புக்கு முன்பே பல்வேறு முறைகளில் அணுகி நல் வழியைப் போதிக்க வேண்டும். வானொலி, தொலைக்காட்சி, குத்பா மூலமாகவும் நோன்புக்குத் தயாராக்கும் பயான்கள் மூலமாகவும் நல்லுரைகள் கொடுக்கப்பட வேண்டும். ஸக்காத் கொடுப்பது, எடுப்பது பற்றிய நிபந்தனைகளை சமுதாயத்திலுள்ள எல்லோரும் நன்கு தெரிந்திருக்க வேண்டும். பின்வரும் ஹதீஸ்கள் யாவருக்கும் விளக்கப்பட வேண்டும்:

ரமழான் மாதம் துஆக்கள் கபூலாகும் மாதம்; ரஹ்மத் இறங்கும் மாதம்; தௌபா தேட வேண்டிய மாதம்; ஒவ்வொரு அமலுக்கும் 10 மடங்கு அதிகமாக கூலி கொடுக்கப்படும் மாதம்.

''யாரொருவர் ரமழான் மாதத்தை அடைந்தும் அதில் அவர் நோன்பு வைக்க வில்லையோ அவர்களை ஜிப்ரீல் அலைஹிஸ் ஸலாம் அவர்கள் சபிக்க நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அதற்கு ஆமீன் சொல்லியிருக்கிறார்கள்."

''அந்நியரிடம் இரந்து நீட்டிய கை என்றும் நீட்டிய நிலையில் தாழ்ந்தே இருக்கும். கொடுக்கிற கை கொடுக்கும் நிலையில் உயர்ந்தே இருக்கும்"

''யாரொருவர் தன் கஷ்டங்களைப் பிறரிடம் சொல்லாமல் மறைத்து, தன்மானத்துடன் பசி பட்டினியையும் பொறுத்துக் கொண்டு அல்லாஹ்விடம் மட்டுமே தன் குறைகளைக் கூறி மன்றாடுகிறாரோ, அவரைப் பார்த்து மற்றோர், 'இவருக்கென்ன குறை? இவருக்கு யார் உதவியும் தேவையில்லை. எல்லா வசதிகளையும் பெற்றவராயிருக்கிறாரே' என்று கூறுவார்களாயின் அந்தச் சொல்லை அல்லாஹ் உண்மையாக்குவான். (அதாவது அவர் எல்லா வசதிகளையும் பெற்ற நிலையை அடைவார்)"

''ஸக்காத்துக்கு உரிமையில்லாதோர் ஸக்காத் பெற்றுக் கொள்வது கூலிவேலை செய்த ஒரு மனிதன் வியர்வை அழுக்கை நீக்குமுகமாக குளிக்கும்பொது அவனது மர்ம ஸ்தானத்தைக் கழுவிய நீரைக் குடிப்பதற்கு ஒப்பாகும்"

''அல்லாஹ்வின் கண்களில் மிக இழிவான மனிதன் பிச்சை கேட்டுத் திரிபவனாகும்"

''திடகாத்திரமான உடலையுடைய ஒருவன் உழைத்துப் பிழைக்கக் கூடியவனாக இருப்பின் அவன் மற்றோரிடம் கைநீட்டி வாங்குவது ஹராமாகும்".

ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தனக்கு ஸக்காத்தை ஹராமாக்கிக் கொண்டார்கள். இதனால் பல பெரிய ஸஹாபிகளும் இவற்றைத் தவிர்ந்து கொண்டனர்.

இயன்றவரை நாமும் ஸக்காத், ஸதக்கா விடயத்தில் பேணுதலாக இருக்க முயற்சி செய்ய வேண்டும். 'சும்மா கிடைக்குதுதானே' என பலர் இவற்றை அனுபவிக்கிறார்கள்.

'இன்னொருவரிடம் உதவி கேட்காதே, பெறாதே' என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் வலியுறுத்திக் கூறியதைத் தொடர்ந்து ஸஹாபிகள் தங்களது வாள் கீழே விழுந்தால்கூட இன்னொருவரிடம் அதை எடுத்துத் தருமாறு கூறமாட்டார்கள் என்பதை வசதியற்றோர் வசதியுள்ளோர் யாவரும் நினைவில் வைத்திருக்க வேண்டும்.

இவ்வளவுக்கு மற்றோரிடம் எதையும் கேட்காமல் பெறாமல் வாழுமாறு கூறும் இஸ்லாம், யாராவது தானாக விரும்பித் தந்தால் பெற்றுக் கொள்வது அவசியம் என்றும், பெருமை கொண்டு மறுத்துவிடும் ஏழைகளை அல்லாஹ் விரும்பவில்லை என்றும் விதித்துள்ளது. எனவே, கேளாமல் நிலையறிந்து கொடுப்பதுதான் இஸ்லாத்தின் கட்டளை.

வாங்கி வாங்கி ருசி கண்ட ஒரு சிலர் பழக்க தோஷத்தால் என்னதான் சொன்னாலும் கேட்டுத் திரியத்தான் செய்வார்கள். ஆனால், அநேகமான ஏழைகள் குர்ஆன் ஹதீஸ் எனக் கேள்விப்படும்போது பயந்து அவற்றுக்கு அடிபணிவது உண்மை. இவற்றை அவர்களுக்கு எடுத்துச் சொல்வதற்கு சமுதாயம் முன்வராததுதான் இன்று நடக்கும் பெரிய தவறு. கூட்டம் கூட்டமாக மக்கள் பாதையில் திரிவது நிற்குமானால் தனி மனிதர்களும் திரிய மாட்டார்கள்.

இது ஒருபுறம்; மறுபுறம் இன்று ஸக்காத் கொடுக்கக் கடமையிருந்தும் கொடுக்காமலிருப்போர் அதிகம். இவர்களில் பலருக்கு இதன் பாரதூரம் விளங்குவதில்லை. இவர்கள் சேர்த்து வைக்கும் பணம், நகை நட்டு முதலானவை மறுமை நாளில் கொதிக்கக் காய்ச்சப்பட்டு இவர்களின் முன்நெற்றியிலும், தோள்களிலும் ஊற்றப்படும் என்பதை அறிவார்களேயானல் அநேகமானோர் அலறிக் கொண்டு ஸக்காத்தைக் கொடுக்க முன்வருவர். உண்மையில் இன்று எம் நாட்டில் கொடுக்கப்பட வேண்டிய ஸக்காத் உரிய முறையில் உரியவர்களுக்கு கொடுக்கப்படுமேயானால் ஒரே நாளில் முஸ்லிம்களிடையே ஓர் ஏழை, ஓர் அகதி இருக்கத் தேவையில்லாத நிலை ஏற்படும். அந்நிலை வருமா?

ஸக்காத் கொடுக்காதோர் சொத்தின் நஜீஸை நாளாந்தம் உண்டு வருகிறார்கள் என்பது நபிமொழி. நகை நட்டு சேர்த்து வைத்திருக்கும் பெண்களும் தாம் ஸக்காத் கொடுப்பதற்கு உரித்தானோர் எனத் தெரிந்து கொண்டு அந்நகையில் ஒரு துண்டை விற்றாவது ஸக்காத்தைக் கொடுத்து விட வேண்டும். ஏனெனில், ஸக்காத் இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளுள் ஒன்று. இதைக் கொடுக்கத் தயங்கியவர் மீது அபூபக்ர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் போர் தொடுத்தார்கள் என்றால் எவ்வளவு கட்டாயக் கடமை என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

(50ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உஸ்தாத்
ரஷீத் ஹஜ்ஜூல் அக்பர்

பெருநாள் எப்படி?

ரமழான் பற்றிப் பேசும் ஸூரதுல் பகராவின் 185 வது வசனத்தின் இறுதியில் ஈதுல் பித்ர் பெருநாளைக் கொண்டாடுவதன் நோக்கம் பற்றி அல்லாஹ் பின்வருமாறு கூறுகிறான்:

''நீங்கள் (ரமழான் மாதத்தைச் கணக்கிட்டு நோன்பின்) எண்ணிக்கையை பூர்த்தி செய்ய வேண்டும். மேலும் (இந்த மாதத்தில் குர்ஆனை இறக்கி) உங்களுக்கு (உங்களது இரட்சகன்) நேர்வழி காட்டியதற்காக தக்பீர் முழங்க வேண்டும். நீங்கள் நன்றியுள்ளவர்களாக மாறலாம்''.

குர்ஆனை இறக்கியருளி நேர்வழிகாட்டிய அல்லாஹ்வுக்கு நன்றி கூறும் பொருட்டு, அவனது நாமத்தை தக்பீராக முழங்கிக் கொண்டாட வேண்டிய நாள்தான் நோன்புப் பெருநாள் என்பதை இந்த வசனம் தெளிவாக எடுத்துக் கூறுகிறது.

மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் இஸ்லாமிய சுலோகம்தான் தக்பீர்- அல்லாஹு அக்பர்!

பெருநாள், மகிழ்ச்சியின் நாளாகும். அன்றைய மகிழ்ச்சி, புத்தாடை அணிகிறோம்; அறுசுவை உண்டு சுவைக்கிறோம் என்பது மட்டுமல்ல.

உலகில் நாம் வாழ வேண்டிய வழியை அல்லாஹ் எமக்கு காட்டிவிட்டான் என்பதே பெருநாளின் மகிழ்ச்சியாகும்.

முஸ்லிம்கள் அந்த மகிழ்ச்சியை வெளிப்படுத்துவதற்காக அழகியதொரு வழிமுறையை அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வகுத்துத் தந்திருக்கிறார்கள்.

பெருநாள் தினம் சுபஹ் தொழுகைக்கு முன்பே முஸ்லிம்கள் தமது பெருநாள் கொண்டாட்டத்திற்குத் தயாராக வேண்டும். குளிப்பு, புத்தாடை, நறுமணம் என்பவற்றோடு சுபஹ் தொழுகைக்காக ஒரு திறந்த வெளியில் முஸ்லிம்கள் ஒன்றுகூடுவார்கள். ஆண்கள், பெண்கள், சிறுவர்கள், முதியவர்கள் அனைவரும் இந்த ஒன்றுகூடலில் பங்கேற்பார்கள். மாதவிலக்கு காரணமாக தொழ முடியாதிருக்கும் பெண்களாக இருப்பினும்கூட இந்தப் பெருநாள் ஒன்றுகூடலில் பங்கேற்பதை தவிர்க்கக் கூடாது. ஆண்கள் முன்வரிசையிலும், சிறுவர்கள் அதற்குப் பின்னாலும், பெண்கள் பின் வரிசையிலும் அணிவகுத்து நிற்பார்கள்.

காலை 9.00 மணிக்கும் 10.00 மணிக்கும் தான் பெருநாள் தொழுகை ஆரம்பமாகிறது. சுபஹ் தொழுகையை தூக்கத்தில் 'கழா' வாக்கிவிட்டுத் தாமதமாகத் துயிலெழுந்து ஆறுதலாகக் குளித்துவிட்டு பெருநாள் தொழுகைக்காக பள்ளிவாசல் நோக்கிச் செல்லும் சோம்பேறித்தனம்தான் இன்றைய பெருநாட்களை அலங்கரிக்கின்றது.

சுபஹ் தொழுகை முடிந்ததும் சூரிய உதயம் கழித்து, அடிவானில் சூரியன் ஒரு ஈட்டியளவு உயரும்வரை அந்த வெளியில் அனைவரும் காத்து நிற்பார்கள். பெருநாள் தொழுகை ஆரம்பமாகும். இந்த நேரம் வரை தக்பீர் முழக்கத்தால் தங்களது மகிழ்ச்சிப் பிரவாகத்தை அவர்கள் வெளிப்படுத்துவார்கள்.

ஒரு திறந்த வெளியில் மண்ணிலிருந்து விண்ணை நோக்கி உயரும் இந்தத் தக்பீர் முழக்கம் மூலமாகத்தான் விண்ணிலிருந்து மண்ணை நோக்கி தமக்கு அருளப்பட்ட குர்ஆனுக்காக முஸ்லிம்கள் நன்றி தெரிவிக்கிறார்கள்.

அந்த நன்றி முழக்கத்தோடு பெருநாள் தொழுகை ஆரம்பமாகிறது. பின்னர் ரமழானின் பரிசாகிய ஹிதாயத்தைப் பெற்றுக்கொண்டு ரமழானை வழியனுப்பும் ஒரு பேருரை பெருநாளுரையாக நிகழ்த்தப்படுகிறது. அது ஒரு சடங்குக்காக நிகழ்த்தப்படும் உரையல்ல. ரமழானை முடித்துக்கொண்ட முஸ்லிம் உம்மத்தின் அடுத்த 11 மாதகாலத்திற்கான பிரகடன உரையாகும்.

அந்த உரையோடு விண்ணினதும் மண்ணினதும் இரட்சகனுக்கு நன்றி கூறிய முஸ்லிம்கள் முஸாபஹாவும், 'முஆனகா'வும் செய்து ஒருவரை ஒருவர் வாழ்த்தும் கண்கொள்ளாக் காட்சி உலகில் எந்த கொண்டாட்டத்திற்கும் ஈடாக மாட்டாது.

இவை யாவற்றையும் முடித்துக் கொண்டு வந்த வழியை விட்டு வேறு வழியாகத் தங்களது வீடுகளை நோக்கித் திரும்பிச் செல்லும்போது இன்னுமுள்ள முஸ்லிம் சகோதரர்களையும் சந்தித்து ஸலாம் கூறும் வாய்ப்புக் கிட்டுகிறது.

இவ்வாறு அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் முன்மாதிரிக்கமைய கொண்டாடப்பட வேண்டிய பெருநாள் இன்று அதன் தன்மையை முற்றாக இழந்து நிற்கிறது.

1. எதற்காக, எந்த மகிழ்ச்சியை வெளிப்படுத்துவதற்காக இப்பெருநாளைக் கொண்டாடுகிறோம் என்பது எமக்குப் புரியாமல் இருக்கிறது.
2. காலை 9.00 மணிக்கும் 10.00 மணிக்கும் தான் பெருநாள் தொழுகை ஆரம்பமாகிறது. சுபஹ் தொழுகையை தூக்கத்தில் 'கழா' வாக்கிவிட்டுத் தாமதமாகத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துயிலெழுந்து ஆறுதலாகக் குளித்துவிட்டு பெருநாள் தொழுகைக்காக பள்ளிவாசல் நோக்கிச் செல்லும் சோம்பேறித்தனம்தான் இன்றைய பெருநாட்களை அலங்கரிக்கின்றது.

4. ஆண்கள் பள்ளிக்குப் போகிறார்கள். பெண்கள் ஆங்காங்கே வீடுகளிலும், தக்கியாக்களிலும் சிறு சிறு குழுக்களாக பெருநாள் தொழுகையை நிறைவேற்றுகிறார்கள். அவர்களுக்கு குத்பா இல்லை.

5. தாமதமாகி பள்ளிக்குச் செல்லும் ஆண்களுக்கு குத்பாவின் பின்னரும் பெருநாள் தொழுகை தொழுவிக்கப்படுகிறது. ஏற்கனவே தொழுகை ஒன்பது பத்துமணிவரை தாமதமாவது ஒருபுறம், அதற்கு மத்தியில் சோம்பேறித்தனத்திற்கு கண்ணியம் வேறு.

6. இவ்வாறு கொண்டாடப்படும் இந்தப் பெருநாளில், பெருநாளின் நோக்கம் சிறிதளவும் பிரதிபலிப்பதில்லை. குர்ஆனை அருளி ஹிதாயத்தைத் தந்த அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தும் தன்மையை இன்றைய பெருநாட்களில் காண முடியாதிருக்கிறது. பட்டாசு கொழுத்தி ரமழானை விரட்டும் ஒரு வகை வறட்டு மகிழ்ச்சிதான் இன்றைய பெருநாட்களின் தோரணையாக மாறியிருக்கிறது.

ஏன் இப்படி? அல்லாஹ்வின் தூதர் காட்டித் தந்த முன்மாதிரிக்கமைய எமது பெருநாட்களை கொண்டாட முடியாதா? ஆண்கள், பெண்கள் எல்லோரும் சேர்ந்து திரையில்லாத ஒரு பெருவெளியில் நபிகளாரின் பெருநாளைப்போல நாம் பெருநாள் கொண்டாடினால் என்ன? என்று சமூகத்தை கேட்டுப்பார்த்தால் கிடைக்கும் பதில்கள் ஆச்சரியமாக இருக்கின்றன.

ரமழானில் பள்ளிவாசல்களிலும், தக்கியாக்களிலும் ஆங்காங்கே வீடுகளிலும் தராவீஹ் தொழுகை நடாத்தியவர்களுக்கு கிடைக்க வேண்டிய 'பெருநாள் கலெக்ஷன்' இல்லாது போய்விடுமே என்ற பயம்தான் பெருநாளின் தாக்கத்தையும் இல்லாது செய்து நபிகளாரின் முன்மாதிரியையும் குழிதோண்டிப் புதைக்கிறது.

என்ன ஆச்சரியம்! தராவீஹ் தொழுகை நடாத்தியவர்களுக்கு நன்றி தெரிவிப்பதற்காகத்தான் பெருநாள் கொண்டாடப்படுகிறதா? குர்ஆனின் மூலம் ஹிதாயத்தை அருளிய அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தும் நோக்கில் பெருநாள் கொண்டாடப்படுகிறதா? புரியவில்லை.

ஒரு திறந்த வெளியில் பெருநாள் கொண்டாடுவதற்கு முற்படுகின்றபோது ஒவ்வொரு தக்கியாவிலும் தராவீஹ் தொழுதவர்கள் அந்தத் தக்கியாவிற்குரிய நன்கொடையை வெவ்வேறாக செலுத்துவதற்குரிய ஒரு முறையைக் கையாளலாம். அப்போது 'பெருநாள் கலெக்ஷன்' பாதிப்படைவதற்கில்லை.

எனினும் இத்தகைய வழிமுறைகளைக் கையாளாமல் நபிகளாரின் சுன்னாவை புறக்கணித்துவிடும் எமது சமூகம், மார்க்கத்தின் ஏனைய சுன்னாக்களை எவ்வாறுதான் உயிர்பெறச் செய்ய முடியும்!?

அது மட்டுமல்ல, சன்மார்க்க விவகாரங்களில் பங்கெடுப்பதற்கு இஸ்லாம் அனுமதித்த எந்த இடத்திற்கும் முஸ்லிம் பெண்களை நாம் அனுமதிக்க மாட்டோம் என்பதில் பிடிவாதமாக இருக்கும் ஒரு கூட்டம் நபிகளாரின் முன்மாதிரியைப் பின்பற்றி பெருநாள் கொண்டாடுவதற்கு மற்றுமொரு தடையாக இருக்கிறது.

இவர்களது வாதம் என்னவென்றால் ஆண்களும், பெண்களும் ஒரேவெளியில் ஒன்றுகூடுவதை அனுமதிக்க முடியாது என்பதாகும்.

உண்மையில் இவர்கள் பெண்கள் சமூகத்தைப் பாதுகாப்பதாக நினைத்து அல்லாஹ்வின் தீனை விட்டும் அவர்களைத் தூரமாக்கும் வேலைகளையே செய்கிறார்கள்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஏற்படுத்திய சமூக மாற்றத்திற்கான காரணங்களுள் ஒன்று ஆண்களைப் போலவே சமூகத்தில் சரிபாதியான பெண்களை சன்மார்க்க விவகாரங்கள் அனைத்திலும் அவர்கள் பங்குகொள்ளச் செய்ததாகும்.

ஆனால் இன்று இஸ்லாமியப் பணியில் ஈடுபட்டிருப்பவர்கள், பெண்கள் மார்க்கம் படிக்க வேண்டியதில்லை, பெண்களை பாடசாலைகளுக்கும், பல்கலைக்கழகங்களுக்கும் அனுப்ப வேண்டியதில்லை. பெண்கள் இஸ்லாமிய பணிகளில் ஈடுபடவும் கூடாது. இதேபோன்றுதான் பெண்கள் ஜும்ஆத் தொழுகைகளிலோ பெருநாள் தொழுகைகளிலோ கலந்து கொள்ளவும் தேவையில்லை என்று கூறுகிறார்கள்.

இந்தக் கொள்கையை விடாப்பிடியாக செயல்படுத்தும் சில மார்க்க பக்தர்கள் காரணமாக பெண்கள் சமூகம் இஸ்லாத்திலிருந்து வெகு தூரம் விலகிச் சென்று கொண்டிருக்கிறது. இஸ்லாத்தின் எத்தனையோ சுன்னாக்களும் குழிதோண்டிப் புதைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அவற்றுள் ஒன்றுதான் நபிகளார் கொண்டாடிய பெருநாள்.

நாம் இன்று கொண்டாடும் பெருநாளுக்கும் நபிகளாரின் பெருநாளுக்கும் இடைவெளி வெகுதூரம்.

ஆண்கள், பெண்கள் எல்லோரும் சேர்ந்து திரையில்லாத ஒரு பெருவெளியில் நபிகளாரின் பெருநாளைப்போல நாம் பெருநாள் கொண்டாடினால் என்ன? என்று சமூகத்தை கேட்டுப்பார்த்தால் கிடைக்கும் பதில்கள் ஆச்சரியமாக இருக்கின்றன. ரமழானில் பள்ளிவாசல்களிலும், தக்கியாக்களிலும் ஆங்காங்கே வீடுகளிலும் தராவீஹ் தொழுகை நடாத்தியவர்களுக்கு கிடைக்க வேண்டிய 'பெருநாள் கலெக்ஷன்' இல்லாது போய்விடுமே என்ற பயம்தான் பெருநாளின் தாக்கத்தையும் இல்லாது செய்து நபிகளாரின் முன்மாதிரியையும் குழிதோண்டிப் புதைக்கிறது.

இந்த இடைவெளியைக் குறைக்க பெருநாள் கொண்டாடுவதற்கு தயாராகிக் கொண்டிருக்கும் எமது சமூகமும் சமூகத்தை வழிநடத்தும் மார்க்க அறிஞர்களும் தயாராவார்களா? ■

உங்கள் சந்தாக்களை புதுப்பித்துக் கொள்ளுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முச்சுத்திணறி முடங்கிப்போன தாய் நோன்பாளிகள்

கடந்த வாரம் பத்திரிகை மற்றும் இலத்திரனியல் ஊடகங்களின் கவனத்தை தாய்லாந்து ஈர்த்தது. காரணம் அங்கு நோன்பாளிகளாக இருந்த 84 முஸ்லிம்கள் பரிதாபமாக கொல்லப்பட்டமையாகும்.

அதனைத் தொடர்ந்து தாய்லாந்தில் எல்லாப் பகுதிகளிலும் பெரும் பதட்டம் ஏற்பட்டது. பிரதமர் தக்சின் ஷினாவட்டாவின் அரசும் பல்வேறு எதிர்ப்புகளுக்கு முகம்கொடுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. கடந்த ஏப்ரல் மாதத்திலும் இதே வகையான மிருகத்தனமான தாக்குதல் தாய்லாந்து முஸ்லிம்களுக்கு எதிராக நடைபெற்றது.

இவ்வாறு தாய் முஸ்லிம்கள் மீது இழைக்கப்பட்டுவரும் தாக்குதலுக்குப் பின்னுள்ள அரசியல் வரலாற்றை இவ்விதழில் தருகிறோம்.

தாய்லாந்தின் வரலாற்றுப் பின்னணி

தென்கிழக்காசிய நாடுகளில் முக்கிய நாடுகளில் தாய்லாந்தும் ஒன்றாகும். அது 1980களில் NIC நாடுகள் (Newly indusrtrialized country) வரிசையில் முதன்மையான நாடாக விளங்கியது. ஆரம்ப காலங்களில் சீனா, ஜப்பான் போன்ற நாடுகள் இப்பிராந்தியத்தின்மீது செல்வாக்குச் செலுத்தின. இதில் தாய்லாந்து முக்கியமானதாகும்.

1850 களில் சீனர்களின் அதிகாரப் பலமே தீவிரமாக இங்கு நிலைப்படுத்தப்பட்டிருந்தது. எனினும் முதலாம், இரண்டாம் உலக மகா யுத்தங்களின் பின் இந்நாடுகளின் செல்வாக்கு குறைந்தது. தொடர்ந்து பிரித்தானிய வல்லரசின் ஆதிக்கம் இப்பிராந்தியத்தில் ஊடுருவியது. அதேநேரம் ஆரம்பத்தில் தாய்லாந்து 'சயாம்' (Siam) என்ற பெயர்கொண்டு அழைக்கப்பட்டது. இப்பெயரின் அடிப்படையிலேதான் தாய்லாந்து வரலாற்றில் முக்கிய நிகழ்வாக கருதப்படும், 1909இல் இடம்பெற்ற 'ஆங்கிலேய - சயாம்' உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. பின்பு இப்பெயர் 1939இல் அப்போதைய பிரதமர் லுஆவ் பளக் என்பவரால் தாய்லாந்து (சுதந்திர பூமி) என மாற்றம் செய்யப்பட்டது.

தாய்லாந்தின் சனத்தொகையை பொறுத்தவரையில் 84% ஆனோர் பௌத்த மக்களாகும். இவர்கள் தேரவாத பௌத்தத்தைச் சேர்ந்தவர்கள். மற்றும் 10% ஆன சீனர்களும் 5% முஸ்லிம்களும் அத்தோடு 1% ஆன பழங்குடிகளும் இங்கு வாழ்கின்றனர்.

தாய்லாந்து முஸ்லிம்களின் வரலாறு

தாய்லாந்தில் இன்று அண்ணளவாக 8 மில்லியன் முஸ்லிம்கள் சிறுபான்மையினராக வாழ்கின்றனர். இவர்களுள் மலாய் இனத்தைச் சேர்ந்த முஸ்லிம்கள் அதிகமானோர் ஆவர். தென் தாய்லாந்தில் பெரும்பான்மை முஸ்லிம்களைக் கொண்ட மாகாணங்களாக பட்டாணி, நரத்திவாட், யாலா, சொங்சலா, சட்டும் ஆகியவை உள்ளன. இவை 80% முஸ்லிம்களைக் கொண்டிருக்கின்றன.

ஆரம்பத்தில் தென்கிழக்காசியப் பிராந்தியத்தில் ஒரு சில நாடுகளே இருந்தன. அப்போது மலாய் முஸ்லிம்களின் ஆட்சியும் இப்பிராந்தியத்தில் செல்வாக்குச் செலுத்தியது. உதாரணமாக 1572இல் பட்டாணிப் பிராந்தியம், சுல்தான் மன்சூர் ஷாவின் சிற்றரசின்கீழ் நீண்ட காலமாக இருந்தது. அப்போது இப்பிராந்தியத்தில் உள்ள சில நாடுகள் இச்சிற்றரசின் ஆதிக்கத்தின் கீழேதான் இருந்தன. தொடர்ந்து இவருடைய ஆண் வாரிசுகள் கொல்லப்பட்டதன் காரணமாக மன்சூர் ஷாவின் ஆட்சி ஆட்டம் கண்டது. எனினும் 'பீரு' 'உங்கு' 'கூனிங்' போன்ற பெண் வாரிசுகள் இச்சிற்றரசின் அதிகாரத்தை சில காலத்துக்கு நடத்திச் சென்றனர்.

அக்காலத்திலே இப்பிராந்தியம் இந்திய, சீன, ஜப்பான் மற்றும் ஐரோப்பிய நாடுகளின் முக்கிய வர்த்தக மையமாகத் திகழ்ந்ததோடு இதில் முஸ்லிம்களின் பங்களிப்பும் அதிகமாக இருந்தது. பிற்பட்ட காலத்தில் தாய்லாந்து அரசு பெரும்பாலும் பௌத்த சிந்தனையின்கீழ் வந்ததன் பின்னர் இப்பிராந்திய முஸ்லிம்கள் பல்வேறு சவால்களை எதிர்நோக்க ஆரம்பித்தனர்.

முஸ்லிம்களின் போராட்ட ஆரம்பம்

காலனித்துவத்திற்குப் பின் பௌத்த சிந்தனையில் உருவாகிய தாய்லாந்தின் மத்திய அரசு, தென்பகுதி முஸ்லிம்கள் விடயத்தில் தொடர்ந்து ஓரவஞ்சனையுடன் நடந்துகொண்டது. தென்பகுதி பல்வேறு வளங்களைக் கொண்ட பூமியாக இருந்தும் அவற்றை அபிவிருத்தி செய்வதில் அரசு எந்த முயற்சியிலும் ஈடுபடவில்லை. மட்டுமன்றி கல்வி, பொருளாதார, பதவி நியமனங்களிலும் இனரீதியான பாரபட்சம் தொடர்ந்தது. மேலும், தென்பகுதியில் இருந்த முஸ்லிம்களின் பெரும்பான்மைப் பலத்தைத் தகர்ப்பதற்காக புதிய குடியேற்றங்கள் திட்டமிட்ட அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டன. அத்தோடு அரசியல்ரீதியாக போதிய பிரதிநிதிகள் இல்லாமையின் காரணமாக பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் முஸ்லிம்களுக்கு ஒரு சோதனையாக அமைந்தது.

இவ்வாறானதொரு பின்னணியில்தான் தாய்லாந்து முஸ்லிம்கள் இவற்றுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எதிராகப் போராட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர். இதன் ஒரு கட்டமாகவே 1940, 1948 களில் அரசுக்கெதிரான கிளர்ச்சிகள் முஸ்லிம்களால் மேற்கொள்ளப்பட்டன. அப்போது அப்பிராந்தியத்தில் அமைக்கப்பட்டிருந்த மலாயா கூட்டரசுடன் தாங்களும் இணைக்கப்பட வேண்டும் என்பது இவர்களுடைய கோரிக்கையாக இருந்தது. 1960, 1980களிலும் தங்களுடைய உரிமைகளுக்காக தாய்லாந்து முஸ்லிம்கள் போராட்டங்களை முன்னெடுத்துச் சென்றார்கள்.

அதேவேளை இவ்வாறான போராட்டங்களை முன்னெடுப்பதிலும் மக்கள்மயப்படுத்துவதிலும் சில அமைப்புக்கள் இப்பிரதேசத்தில் இயங்கின. அதில் முக்கியமான அமைப்பே 'பட்டாணி ஐக்கிய விடுதலை அமைப்பு' (PULO) ஆகும். இதுதவிர 'நராதிராட் இஸ்லாமிய சம்மேளனம்' (NIC), 'யாலா இஸ்லாமிய அமைப்பு' (YIC) என்பனவும் குறிப்பிடத்தக்கவை.

அண்மைய போராட்ட முன்னெடுப்புக்கள்

''இனவாதத்தின் இயல்பு என்னவெனில், எதிர்ப்பு, மறுப்பு எதிர்மறை சக்திகளின் உந்துதலால் அது உருவாக்கப்பட்டது. அதனை எதிர்க்கும்போதே அது ஆவேசப்படும்" என்ற யதார்த்தத்திற்கேற்பவே முஸ்லிம்களின் போராட்டம் இனவாதிகளுக்கு தடையாகவும் எதிர்ப்பாகவும் அமையத் தொடங்கியதன் பின்பே இனப்பூசல்கள் இரட்டிப்பாகின. அதனைத் தொடர்ந்து தாய்லாந்தில் இனரீதியான பல்வேறு முரண்பாடான நடவடிக்கைகள் அரங்கேற்றப்பட்டன.

இதன் வெளிப்பாடாகவே கடந்த ஜூலை மாதம் இப்பிராந்தியத்தில் உள்ள பல பாடசாலைகள், அரசாங்கத்திற்கு கெதிராக செயற்படத் தூண்டுகின்றன எனக் குற்றஞ்சாட்டப்பட்டு காலவரையறையின்றி மூடப்பட்டன.

இவ்வாறான சிவில் அடக்குமுறைகள் மட்டுமன்றி உயிர், உடமைச் சேதங்களும் முஸ்லிம்கள் மீது ஏவிவிடப்பட்டன. அண்மையில் மனித உரிமைகளுக்கான ஆசிய அமைப்பின் (AHRC) அறிக்கையின்படி கடந்த இரண்டு வருடங்களில் 2500க்கு மேற்பட்ட மக்கள் கொலைசெய்யப்பட்டுள்ளனர் என தெரியவந்துள்ளது. இதில் பெரும்பான்மையானோர் முஸ்லிம்கள் ஆவர். இவ்வருடமும் கிட்டத்தட்ட 414 பேர் கொலை செய்யப்பட்டுள்ளதாக சில அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

கடந்த ஏப்ரல் மாதம் 28ம் திகதி பட்டாணி மாகாணத்தில் உள்ள 'குருசே' பள்ளிவாயலில் 108 முஸ்லிம்கள் படுமோசமான முறையில் கொலை செய்யப்பட்டனர். கொலைசெய்யப்பட்டவர்களுள் பெரும்பான்மையானோர் இளைஞர்கள். அதனைத் தொடர்ந்தும் தென் பிராந்தியத்தில் ஆங்காங்கே சில கொலைச்சம்பவங்கள் நடைபெற்றதும் குறிப்பிடத்தக்கது.

இதன் தொடராகவே கடந்த திங்கட்கிழமை 'நராதிராட்' மாகாணத்தில் பொலிசாரால் 6 முஸ்லிம் இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டதைக் கண்டித்து மக்கள் ஆர்ப்பாட்டத்தில் இறங்கினர். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களை அரசாங்கத்தின் உத்தரவின்பேரில் தாய்லாந்து பொலிசார் கைது செய்து ட்ரக் வண்டிகளில் ஏற்றிச் செல்லப்பட்ட வேளையில் 84 அப்பாவிப் பொதுமக்கள் உயிர்நீத்தனர்.

''ஆர்ப்பாட்டக்காரர்கள் நோன்பாளியாகவும் இன்னும் சிலர் போதையில் இருந்த நிலையிலும் அரசுக்கெதிராக கிளர்ந்ததனாலேயே இவ்வாறானதோர் கைதும் உயிர்ச்சேதமும் ஏற்பட்டது" என தாய்லாந்து பொலிசாரும், பிரதமர் தாக்சின் ஷின்ட்ராவும் வாய்கூசாமல் அறிக்கை விட்டனர். ஆனாலும் இப்பிராந்தியத்தில் உள்ள முஸ்லிம் அமைப்புக்கள் இச்சம்பவத்தை வன்மையாகக் கண்டித்துள்ளதோடு ''தாய் பொலிசார் ஆர்ப்பாட்டக்காரர்களின் மேலாடைகளை நீக்கச் சொன்னதுடன் மோசமாக நடத்தியதும், ஏதோ ஒருவகை நச்சுவாயுவை பிரயோகித்திருக்கலாம்" எனவும் சந்தேகிக்கின்றனர்

இப்பயங்கரவாத நடவடிக்கைகளை அயல்நாடுகள் பல கண்டித்துள்ளன. மலேசிய இஸ்லாமியக் கட்சி (PAS), இந்தோனேசிய 'ஜகர்த்தா போஸ்ட்', 'றிபப்ளிகா' போன்ற நாளிதழ்களும் இப்பயங்கரவாத செயலை கண்டித்துள்ளன.

இந்நிகழ்வுகளின் பின்னணியில் பல்வேறு அரசியல் நோக்கங்கள் இருப்பதாக சர்வதேச அரசியல் அவதானிகள் கூறுகின்றனர். அதிலும் தென் பிரதேசத்தைச் சேர்ந்த முஸ்லிம்கள் வரலாற்றில் ஏற்கனவே பட்டாணி பிராந்திய மலாய் முஸ்லிம்களால் ஆட்சி செய்யப்பட்டது போன்று மீண்டும் இங்கு முஸ்லிம்களுக்கான ஒரு தனிப்பிராந்தியம் உருவாகி விடும் என்றும், அதற்கான போராட்டத்தை இங்கு இயங்கிவரும் அமைப்புகள், சர்வதேச பயங்கரவாத அமைப்புகளுடன் தொடர்புபட்டதாக இயங்குவதாகவும் அதேநேரம் இவற்றிற்கு மலேசியாவின் மறைகரம் இருப்பதாகவும் இவர்கள் நம்புகின்றனர்.

இவற்றை முழுதாக ஏற்றுக்கொள்ள முடியாவிட்டாலும் தாய் அரசின் மோசமான நடவடிக்கைகளின் காரணமாக பட்டாணி பிராந்திய மக்கள் தனியான ஒரு அதிகார பிரதேசத்தின் கீழ் வாழ்வதையே விரும்புவது ஏற்றுக் கொள்ளக்கூடிய நியாயமாக இருக்கிறது.

அண்மையில் பட்டாணி ஐக்கிய விடுதலை அமைப்பு விடுத்துள்ள அறிக்கை, இதனை உறுதிப்படுத்துகிறது. ''நாம் அல்லாஹ்விடம் உடன்படிக்கை செய்திருக்கிறோம். நிச்சயமாக எங்களுடைய உடமைகளை சிதைத்தவர்களையும், இரத்தத்தை ஓட்டியவர்களையும் இனி நிம்மதியாக தூங்க விடமாட்டோம்; நிச்சயமாக எமது மக்களின் நிம்மதியான வாழ்க்கை கிடைக்கும் வரை போராட்டம் தொடரும்"

- இப்னு ஸுபைர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரமழான் சுமந்து வந்த பல நிகழ்வுகள், சிந்தனைகள், படிப்பினைகள் போன்றன பேசப்படாமலேயே இவ்வருட ரமழான் கடந்து விடும் போலிருக்கிறது. அதில் முக்கியமானது பத்ர் போராட்டம். வழமைபோலவே பதினேழாவது நோன்பைக் கடக்கும்போது பத்ர் பற்றி ஒரு பயான், ஒரு இப்தார் என்ற அனுஷ்டானங்களுடன் பிரியாவிடை கொடுக்கப்படுகிறது. அவ்வாறே அப்போராட்டத்தை ஆன்மீகப் பின்னணியுடன் மட்டுமே நோக்கும் எமது பார்வை, அது போதித்துச் சென்ற தூரநோக்கான சிந்தனையை உள்வாங்கத் தவறி விட்டது.

பத்ர் போராட்டம்:

முஸ்லிம் தனியலகுச் சிந்தனைக்கு முன்மாதிரி!

இமாம் புகாரி றஹிமஹுல்லாஹ் அவர்கள் குறிப்பிடுவதுபோல ''நபிகளாரின் போராட்டங்களை வெறுமனே நாம் நிகழ்வுகளுடன் மட்டும் நோக்குவதை விட தூதரின் வாழ்வியல் ஒழுங்குடன் (சீரா) நோக்குவது உண்மையான தாத்பரியத்தையும், கருத்தையும் தெளிவுபடுத்துவதாக அமையும்"

இப்பின்னணியுடன்தான் 'பத்ர்' பற்றிய நிகழ்வையும் எமது சிந்தனைக்கு உள்வாங்க வேண்டியது இன்றைய காலத்தின் தேவை.

மக்கத்து தேசத்தில் றஸுல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இஸ்லாம் என்ற கொள்கை சுமந்த சொற்பமான தோழர்களுடன் அவலங்களையும், அச்சுறுத்தல்களையும் எதிர்நோக்கினார்கள். இறுதியாக அல்லாஹ்வின் கட்டளைப்படி தூதர் அவர்களும் தோழர்களும் தங்களது அனைத்து சொத்து செல்வங்களையும் துறந்து மதீனா நோக்கி ஹிஜ்ரத் மேற்கொண்டார்கள். இந்நிகழ்வு கி.பி. 622இல் இடம்பெற்றது. இது இஸ்லாமிய வரலாற்றில் திருப்புமுனையான நிகழ்வாகும். இதன் பின்னரான றஸுல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் ஒவ்வொரு நிகழ்வும், திருப்பமும் இன்றைய நாட்களில் எமது சமூகத்தின் எல்லா தளங்களிலும் சிந்திக்க வேண்டிய தேவையிருக்கிறது.

இன்று பரவலாக 'தனியலகு', 'முஸ்லிம் தேசம்', 'சுயநிர்ணயம்' போன்ற கருத்தியல்களும், அவற்றிற்கான போராட்டங்களும் உலகளாவிய ரீதியில் நாளாந்தம் நடைபெறும் நிகழ்வுகளாகும். எமது நாடும் விதிவிலக்கல்ல. இவற்றை ஒரு முஸ்லிம் எந்த நோக்கில் சிந்திக்க வேண்டும்; அல்லது இஸ்லாமிய இயக்கம், போராட்ட அமைப்புகள் இவற்றுக்கான போராட்டங்களை எவ்வாறு முன்னெடுக்க வேண்டும் என்பதற்கான ஒரு முன்வரைவை பத்ர் எமக்கு போதித்திருக்கிறது. இச்சிந்தனையை நோன்பு 17 ஞாபகப் படுத்திச் செல்லுமாயின் அதுவே எமது போராட்டத்தின் துவக்கமாக அடையாளப்படுத்தலாம்.

ஆரம்பமாக, நவீன அரசியல் குறிப்பிடுவது போன்று ஒரு கொள்கைக்கான, இனத்துக்கான சுயநிர்ணய போராட்டம் ஒரு தனி நிலத்தினை மையமாக வைத்தே ஆரம்பிக்கப்பட வேண்டும் என்ற உண்மையை றஸுல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மதீனா ஹிஜ்ரத்தின் ஊடாக நிலைப்படுத்தியிருக்கிறார்கள். றஸுல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எவ்வாறு பத்ருக்கு முன்பு ஒரு தனியலகைத் திட்டமிட்டார்கள்? அதன் பின்னணி இலக்கு எதுவாக இருந்தது? எவ்வாறு அதனை ஸ்திரப்படுத்தினார்கள்? என்பதற்கு சில பின்னணிக் குறிப்புக்களை நோக்குதல் வேண்டும்.

1. 1ம், 2ம் அகபா உடன்படிக்கைகள்

றஸுல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மதீனாவுக்கு ஹிஜ்ரத் சென்றது திடீர் நிகழ்வல்ல. அங்கு செல்ல முன் தங்களுடைய கொள்கையை ஏற்ற ஒரு குழுவை தயார்படுத்தியிருந்தார்கள். ஹஜ் காலத்தில் (கி.பி 621) முதன்முதலாக இவர்களைச் சந்தித்தார்கள். இதில் 12 பேர் உள்ளடங்கியிருந்தனர். இவர்கள் நபியவர்களுக்கு முற்றுமுழுதாக கட்டுப்படுவதாக உறுதிமொழி வழங்கியதோடு முஸ்அப் றழியல்லாஹு அன்ஹு அவர்களை தங்களுக்கு இஸ்லாத்தைக் கற்பிப்பதற்காக அழைத்துச் சென்றார்கள்.

தொடர்ந்து வந்த ஹஜ் காலத்தில் மீண்டும் 75 பேரைக் கொண்ட, இஸ்லாத்தை ஏற்ற கொள்கைவாதிகள் நபிகளாருடன் ஒரு உறுதிமொழியை செய்தார்கள். இவ்வாறான பூரண நம்பிக்கையின் பிற்பாடு அல்லாஹ்வின் கட்டளையின் பிரகாரம் கி.பி 622இல் றஸுல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மதீனா தேசத்திற்கு சென்றார்கள்.

2. மஸ்ஜிதுன் நபவி நிர்மாணம்

மதீனாவுக்கு சென்ற றஸுல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் முதன் முதலில் மஸ்ஜிதுன் நபவியை முஹாஜிர், அன்சார் தோழர்களுடன் கட்டிமுடித்தார்கள். இதனோடு இணைந்ததாக தம்முடைய வீட்டையும் நிர்மாணித்தார்கள். அறிஞர் ஸபியுர் ரஹ்மான் குறிப்பிடுவதுபோல ''இப் பள்ளிவாயல் வெறுமனே தொழுகைக்காக மட்டும் இயங்காமல் ஒரு அரசியல் பீடமாகவும் இயங்கியது."

3. சகோதரத்துவ இணைப்பு

றஸுல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மதீனாவில் மேற்கொண்ட அடுத்த முக்கிய விடயமே இதுவாகும். அதாவது ஜாஹிலிய்யா காலத்தில் இன, குல ரீதியாக பிளவுபட்டிருந்த தோழர்கள் மீண்டும் அதே மனோநிலை தோன்றி பிரச்சினைகள் ஏற்படக்கூடாது என்பதற்காக முஹாஜிர்களையும் அன்ஸார்களையும் இருவர் இருவராக இணைத்தார்கள். இது பற்றி முஹம்மத் கஸ்ஸாலி (ரஹ்) அவர்கள், ''ஜாஹிலிய்யக் காலத்தில் இருந்ததுபோல இனமத ரீதியாகவும், பிரதேச ரீதியாகவும் மீண்டும் ஸஹாபிகள் பிளவுபடாமல், இஸ்லாத்துக்காக இணைந்த சகோதரர்கள் என்ற மனநிலையை இந்நிகழ்வு ஏற்படுத்தியது" என்கிறார்கள்.

3. பின்கட்ட போதனைகள் (FOLLOW UP)

சகோதரத்துவ இணைப்புடன் மாத்திரம் றஸுலுல்லாஹ் ஸஹாபிகளை விட்டுவிடவில்லை. மாறாக இஸ்லாத்தின் அடிப்படைகள் மற்றும் பண்பாடுகள் தொடர்பான விடயங்களில் ஆட்தரத்திற்கேற்ப நெறிப்படுத்தினார்கள்.

4. யூதர்களுடன் ஒப்பந்தம்

மதீனாவைச் சேர்ந்த யூதர்கள் தங்களுடைய சமூகத்தில் இருந்தே ஒரு நபி வருவார் என்று நம்பியிருந்தார்கள். எனினும், நபிகளார் மதீனாவுக்கு வந்ததன் பிறகு இந்நம்பிக்கை பலவீனப்பட்டது. ஏற்கனவே இவர்களின் எதிர்பார்ப்பையும் வரலாற்றில் இவர்களின் இயல்பையும் அறிந்திருந்த தூதர் அவர்கள் இவர்களுடன் ஒப்பந்தம் ஒன்றை செய்தார்கள். அதில், ''யூதர்கள் மத சுதந்திரம் உடையவர்கள்; யூதர்களும் முஸ்லிம்களும் நட்போடு வாழ வேண்டும்; மதீனாவில் ஏதும் பிரச்சினை ஏற்பட்டால் இரண்டு சமூகமும் அதனைத் தடுக்க வேண்டும்; பல்வேறு விவகாரங்களில் முஹம்மது அவர்களே தலைமை தாங்குவார்." என்றிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. ஏனைய கோத்திரங்களுடன் ஒப்பந்தம்

மதீனாவைச் சூழ வாழ்ந்த பல கோத்திரங்களுடன் நபிகளார் ஒப்பந்தங்களைச் செய்தார்கள். ஹிஜ்ரி 2ம் ஆண்டு மதீனாவுக்கு 80 மைல் தூரத்தில் உள்ள 'பனூ தும்ரா' என்ற சமூகத்துடனும், துல்ஆசிரா எனுமிடத்தில் உள்ள 'பனு முத்லஜ்' எனும் கோத்திரத்துடனும், மேற்குக்கரைப் பிரதேசமான 'ஹவ்ரா' எனுமிடத்தில் வாழ்ந்த ஜுஹைனா எனும் கோத்திரத்துடனும் பரஸ்பர புரிந்துணர்வு ஒப்பந்தங்களை செய்தார்கள். இது நபிகளார் பற்றியும் இஸ்லாத்தைப் பற்றியும் நன்மதிப்பை ஏற்படுத்தியது.

6. ரோந்து நடவடிக்கைகள்

மதீனாவில் முஸ்லிம்கள் பலம்பெற்ற சக்தியாகத் திகழ்ந்தார்கள். அதேநேரம் எல்லைப்புறங்களில் முஸ்லிம்களுக்கான பகைமையும் வளர்ந்தது. எனவே தம் பலத்தை வெளிப்படுத்துவதற்காக ரோந்து நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள். உதாரணமாக ஹிஜ்ரி முதலாம் ஆண்டு ஹம்ஸா ரழியல்லாஹு அன்ஹு தலைமையில் 30 முஹாஜிர்களைக் கொண்ட குழு மதீனாவின் எல்லைப்புறத்தில் வந்த அபூஜஹ்லின் 300 பேர் கொண்ட வர்த்தக் குழுவை எதிர் கொண்டது. ஆனால் மோதல்கள் ஏற்பட வில்லை. அதே ஆண்டு உபைதா இப்னு ஹாரிஸ் ரழியல்லாஹு அன்ஹு தலைமையிலான குழு அர்ராபி சமவெளிக்கும், சஹ்த்பின் அபீவக்காஸ் ரழியல்லாஹு அன்ஹு தலைமையிலான 8 பேர் கொண்ட குழு 'அல்கர்ரார்' பிரதேசத்திற்கும் சென்றது. ஹிஜ்ரி 2 றஸூலுல்லாஹ்வின் தலைமையிலான 80 பேர் கொண்ட குழு 'அப்வா' எனுமிடத்திற்கும் சென்றது. இவ்வாறாக பல வேறு இடங்களுக்கு தம்முடைய படை பரிபாலனத்தைக் காட்டுவதற்காகவும் உளவியல் ரீதியான அச்சத்தை எதிரிகளுக்கு ஏற்படுத்தவும் நபிகளார் இவைகளை நுணுக்கமாக கையாண்டார்கள்.

மேற்குறிப்பிட்ட நபிகளாரின் திட்டங்கள், செயற்பாடுகள், வியூகங்கள் மதீனா மண்ணில் கொள்கைவாத முஸ்லிம் தனியலகு எவ்வாறான அடித்தளங்களையும் தூர நோக்கையும் கொண்டிருக்க வேண்டும் என்பதற்கு சிறந்த முன்மாதிரியாக அமைந்தன. போராட்டத்திற்கான 'தனிநிலம்' ஒன்று கிடைத்ததன் பிறகே ஆயுதப் போராட்டத்திற்கான நகர்வு முன்னெடுக்கப்பட்டது.

பத்ர் நிகழ்வின் ஆரம்பம்

மதீனாவில் நபிகளார் அதிகாரம் பெற்ற ஒரு தலைமையாக உருவாகி வருவது மதீனத்து யூதர்களுக்கும், மக்கா குறைஷிகளுக்கும் எரிச்சலூட்டியது. இதனை துடைத்தெறிய திட்டம் தீட்டினர். இவற்றிற்கு மத்தியில் சிறுசிறு மோதல்கள் இடம்பெற்றன. இறுதியாக, *''போர் தொடுக்கப்பட்டோருக்கு அவர்கள் அநியாயம் செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பதனால் (அவ்வாறு போர் தொடுத்த காபிர்களை எதிர்த்துப் போராடுவதற்கு) அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. நிச்சயமாக அவர்களுக்கு உதவிசெய்ய அல்லாஹ் பேராற்றலுடையவன்." (22:39)* என்ற வசனம் மூலமே உத்தியோகபூர்வமாக போராட்டத்திற்கு அனுமதி வழங்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து ஹிஜ்ரி 2ம் ஆண்டு (கி.பி.623) போர் மூண்டது. இதில் 313 முஸ்லிம்களும் 1000 க்கும் மேற்பட்ட நிராகரிப்பாளர்களும் கலந்து கொண்டனர். இராணுவச் சமமின்மைக்கு மத்தியில் நடைபெற்ற இப்போராட்டத்தை அல்குர்ஆன் சத்தியத்திற்கும் அசத்தியத்திற்கும் இடையிலான போராட்டமாக விபரிக்கிறது.

இதில் எமது வாசிப்பிற்குட்பட வேண்டியது நபிகளார் சிறுதொகையான படையுடன் எதிரிகளை வெற்றிகொள்வதற்கும், இஸ்லாத்தை அதிகாரம் பெற்ற சக்தியாக மாற்றுவதற்கும் எவ்வாறான வியூகங்களை, சாணக்கியமான சிந்தனைகளை போராட்டக்களத்தில் முன்னெடுத்தார்கள் என்பதாகும்.

- ரீஸ்வி ஸுபைர் -

1. தன்னிகரற்ற இராணுவத் தலைமை

றஸூலுல்லாஹ் சமூகத்தின் எல்லா விவகாரங்களுக்கும் நேர்வழி காட்டியிருக்கிறார்கள். அந்த வகையில்தான் பத்ர் களத்திற்கு புறப்பட்டபோது இராணுவத் தளபதியாக திகழ்ந்தார்கள். அறிஞர் 'செய்யத் அஸ்ஸாத் கிலான் ''றஸூலுல்லாஹ் ஆன்மீகத்தையும், இராணுவ உத்தியையும் கச்சிதமாக செய்தார்கள்; இதுவே வெற்றிக்கு வழியமைத்தது" என குறிப்பிட்டிருக்கிறார்.

பத்ர் போராட்டக் களத்துக்குச் செல்லமுன் முஹாஜிர்கள் அன்சாரிகளின் இயல்பை புரிந்து, இரண்டு குழுக்களாகப் பிரித்து முறையே அலி இப்னு அபீதாலிப், ஸ.்.த் இப்னு முஆத் ரழியல்லாஹு அன்ஹும் ஆகியோரை தலைமை வகிக்க நியமித்தார்கள். போராட்ட இடையிலும் அடிக்கடி, ''முன்னேறுங்கள்; உற்சாகத்தோடு போராடுங்கள்; இப்போது எதிரிகள் முகம் குப்புற வீழ்ந்து கிடப்பதை காணக்கூடியதாக இருக்கிறது." எனக்கூறி உற்சாகப்படுத்தினார்கள்.

2. கலந்தாலோசனை

தலைமைத்துவத்தின் அடிப்படைப் பண்பாக அல்குர்ஆன் இதனைக் குறிப்பிடுகிறது. பத்ர் களத்தை நோக்கி சென்றதும் இனி போராடுவதே தீர்மானமாகிவிட்ட நிலையில் தோழர்களுடன் உரையாடினார்கள். 'இனிப் போராட்டத்தில் முஹாஜிர்கள் சார்பாக அபூபக்ர், உமர் முன் செல்ல வேண்டும்' என்று கருத்துரை வழங்கினார்கள். உடனே மிக்தாத றழியல்லாஹு அன்ஹு அவர்கள் ''அல்லாஹ்வின் தூதரே, உங்களுக்கு ஏவியவற்றைச் செய்யுங்கள். மூஸாவுக்கு இஸ்ரவேல் சந்ததியினர் கூறியதுபோல 'நீரும் உமது இறைவனும் போராடுங்கள் என்று சொல்ல மாட்டோம்' எனக் கூறினார்கள். அவ்வாறே அன்சார்களின் மனோநிலையையும் அறிய வேண்டியிருந்தது. ஆனால் நேரடியாக கேட்க முடியவில்லை. அத்தருணம் ''மக்களே, ஆலோசனை கூறுங்கள்" எனக் கேட்டபோது விடயமறிந்த ஸ.்.த் இப்னு முஆத் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் எழுந்து ''அல்லாஹ்வின் தூதரே! நீங்கள் எங்களிடம் தான் கேட்பது புரிகிறது. நாங்கள் வாக்களித்ததன் பிரகாரம் இறுதிவரையும் உங்களுடனேயே இருப்போம்" எனக் கூறினார்கள். அவ்வாறே நபிகளார் பத்ர் நோக்கி புறப்பட்டு அங்கு ஓரிடத்தில் முகாமிட்டபோது ஹப்பாப் இப்னு முன்திர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள், ''தூதரே! இவ்விடத்தை விட நாம் கிணற்றுக்குப் பக்கத்தில் உள்ள ஓரிடத்தில் முகாமிட்டால் அங்கு நீரை வசதியாக சேமித்துக் கொள்ளலாம். அது எமக்கு இலகுவானதாக இருக்கும்" என கருத்துரை வழங்கினார்கள். நபிகளாரும் எவ்வித மறுப்புமின்றி அதனை அங்கீகரித்தார்கள்.

3. புலனாய்வும், போரியல் உத்தியும்

பத்ர் போராட்டத்தில் முக்கிய படிப்பினையில் இது விஷேடமானது. முதலில் அபூஸுப்யான் சிரியாவில் இருந்து திரும்பி வரும் காலம் நபிகளார் தல்ஹா ஸயீத் ரழியல்லாஹு அன்ஹும் ஆகியோரை படைபற்றி புலனாய்வு செய்ய ஹௌரா எனுமிடத்திற்கு அனுப்பினார்கள். இவர்களின் வருகைக்கு முன்னரே மதீனாவை விட்டுப் புறப்பட்டு தென் பகுதி நோக்கி சென்று கொண்டிருந்தபோது ஜுஹைனா கோத்திரத்தைச் சேர்ந்த இன்னுமிரண்டு உளவாளிகளை அபூ சுப்யானின் படையை அறிந்து வருமாறு பத்ர் நோக்கி அனுப்பினார்கள். பத்ர் பிரதேசத்தில் உள்ள ஒரு கிணற்றடியில் இரண்டு பெண்கள் அபூ சுப்யானின் வர்த்தகக் குழு நாளை மறுநாள் வரும் என்ற செய்தியை ஞாபகமூட்டிக் கொண்டிருந்தார்கள். இது அடுத்த கட்ட நகர்வுக்கு மிகவும் இலகுவாக இருந்தது.

அவ்வாறு பத்ர் களத்தை அடைவதற்கு ஒரு நாள் அளவு தூரம் இருக்குமிடத்தில் பாசறை அமைத்திருந்த நபிகளார் இரவு நேரம் அலி, சுபைர், ஸ.்.த் ரழியல்லாஹு அன்ஹும் ஆகியோரை பத்ரை நோக்கி அனுப்பி வைத்தார்கள். உளவுபார்க்கச் சென்ற இவர்கள் அப்பிரதேசத்தின் கிணற்றடியிலிருந்த இருவரை கைதிகளாகக் கொண்டு

(51ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரவுத் தொழுகையில் ஒற்றுமை பேணுவோம்!

அஷ்ஷெய்க் ரீ.எம். நிலாம் இஸ்லாஹி

இஸ்லாமிய ஷரீஆ அனுமதிக்கின்ற ஒவ்வொரு செயலுக்கும் நோக்கங்களும், செய்முறைகளும் காணப்படுகின்றன. கியாமுல் லைல், தஹஜ்ஜுத், தராவீஹ் போன்ற பெயர்களால் அழைக்கப்படுகின்ற இரவுத் தொழுகைக்கும் நோக்கங்களும், செய்முறைகளும் காணப்படுகின்றன. இவற்றை அல்குர்ஆன் அஸ்ஸுன்னா என்பவற்றில் மிகத் தெளிவாக கண்டுகொள்ள முடியும். முற்றிலும் மறுமையில் நல்வாழ்வை இலக்காக கொண்ட பின்வரும் நோக்கங்களை இதன்மூலம் அடைந்துகொள்ள நாம் முயற்சி செய்வது அவசியமாகும்.

1. தவறுகள், பாவங்கள் என்பவற்றிற்கான மன்னிப்பை பெறுதல்
2. அல்லாஹ்வை நெருங்குதல்
3. அல்லாஹ்வின் அன்பையும் திருப்தியையும் பெறுதல்
4. சுவனத்தை அடைதல்
5. அல்லாஹ்வின் உண்மை அடியான் என்பதை நிரூபித்தல்

இரவு வணக்கத்தின் இந்த நோக்கங்களை அடைந்துகொள்வதற்கான செயல் முறையையும் இறுதித்தூதர் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கற்றுத் தந்துள்ளார்கள். அருமை நபித்தோழர்களும் அதையே பின்பற்றியுள்ளார்கள். இறுதித் தூதருக்கு கடமையாக்கப்பட்டிருந்த இத்தொழுகை, தம்மீதும் விதியானது எனும் மனநிலையுடன் நபித்தோழர்கள் இதனை இரவின் இறுதிப் பகுதியில் நிறைவேற்றினர்.

இரவின் இறுதிப்பகுதி சிறப்பானது

ஹழ்ரத் உமர் றழியல்லாஹு அன்ஹு அவர்களின் ஆட்சிக் காலத்தில் அதிகமானோர் இதனை இரவின் முற்பகுதியில் நிறைவேற்றும் வழக்கம் காணப்பட்டது. இது தனியாகவும் கூட்டாகவும் நிறைவேற்றப்படுவதை கண்ட உமர் றழியல்லாஹு அன்ஹு அவர்கள் உபை இப்னு க.ப் றழியல்லாஹு அன்ஹு அவர்களின் தலைமையில் தராவீஹ் என்ற கூட்டுத்தொழுகையை உயிர்ப்பித்தார்கள்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இரு தினங்கள் ஜமாஅத்தாக தொழுவித்து பின்னர் அது கடமையாகும் என்ற அச்சத்தினால் மூன்றாவது நாள் தன் வீட்டிலேயே தொழுதுகொண்ட நிகழ்வையும், உபை இப்னு க.ப் றழியல்லாஹு அன்ஹு அவர்கள் தன் வீட்டுப் பெண்களுக்கு கூட்டாகத் தொழுவித்து ரஸூலுல்லாஹ்வின் அங்கீகாரத்தைப் பெற்ற நிகழ்வையும் ஆதாரமாகக் கொண்டே உமர் றழியல்லாஹு அன்ஹு அவர்கள் அத் தீர்மானத்தை எடுத்தார்கள். அதனை அன்று மதீனாவில் நிரம்பியிருந்த சஹாபிகள் எதிர்க்கவில்லை.

ஒருநாள் இரவின் முற்பகுதியில் அது நிறைவேற்றப்படுவதைக் கண்ட உமர் றழியல்லாஹு அன்ஹு அவர்கள், ''இது ஒரு சிறந்த பித்அத்'' என்றும், ''இது இரவின் பிற்பகுதியில் அமையுமென்றால் இதைவிட சிறப்பாக இருக்கும்'' என்றும் கூறினார்கள். (புகாரி, இப்னு ஹுஸைமா, பைஹகீ)

அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பின்வருமாறு கூறினார்கள்: ''அல்லாஹ் இரவின் மூன்றிலொரு பகுதியில் கீழ்வானத்திற்கு இறங்கி வந்து, 'நான் பதிலளிப்பதற்கு என்னை அழைப்பவர் யார்? நான் கொடுப்பதற்கு என்னிடம் கேட்பவர் யார்? நான் பாவங்களை மன்னிப்பதற்கு என்னிடம் கேட்பவர் யார்?'' எனக் கேட்கிறான்''. (அல்ஜமாஅ)

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பின்வருமாறு கூறினார்கள்: ''இரவின் இறுதிப்பகுதியில்தான் அடியான் அல்லாஹ்வை தொழுகையின் மூலம் அதிகம் நெருங்குகிறான்''. (ஹாகிம்)

நீண்ட நேரம் அல்லாஹ்வோடு உரையாடுவது மேன்மையானது

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இத்தொழுகையை மிக நீண்டதாகவும் அழகாகவும் அமைத்துக் கொண்டார்கள். அவர்களின் செய்முறை பற்றி ஆஇஷா றழியல்லாஹு அன்ஹு அவர்கள் பின்வருமாறு அறிவிக்கிறார்கள்: ''நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நான்கு ரக்அத் தொழுவார்கள். அதன் நீளத்தையும் அழகையும் பற்றி என்னிடம் கேட்க வேண்டாம். அது அவ்வளவு நீளமானது. அவ்வளவு அழகானது. மீண்டும் நான்கு ரக்அத்களைத் தொழுவார்கள். அதன் நீளத்தையும் அழகையும் பற்றி என்னிடம் கேட்க வேண்டாம். அது அவ்வளவு நீளமானது. பிறகு மூன்று ரக்அத் வித்ர் தொழுவார்கள்'' நீங்கள் வித்ர் தொழ முன் தூங்குவதில்லையா என ஆஇஷா றழியல்லாஹு அன்ஹா அவர்கள் கேட்ட போது ''எனது கண்கள் தூங்குகின்றன; எனது உள்ளம் தூங்குவதில்லை'' என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பதிலளித்தார்கள். (புகாரி, முஸ்லிம்)

''நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இரவுத்தொழுகையின் ஆரம்ப இரண்டு ரக்அத்களையும் சுருக்கமானதாகவும், ஏனையவற்றை மிக நீண்டதாகவும் அமைத்துக் கொள்வார்கள்'' (முஸ்லிம்)

எனவே இந்த அமைப்பில் எமது வழிகாட்டியின் தொழுகை அமைந்திருந்ததால் 9 ரக்அத் அல்லது 11 ரக்அத் அல்லது 13 ரக்அத்களை விட அதிகம் தொழுவதற்கு நேரம் இருக்கவில்லை. பஜ்ருடைய நேரம் நெருங்கிவிடும்.

இறைதூதர் தொழுகையில் அல்குர்ஆனை ஓதி, அல்லாஹ்வை புகழ்ந்து அவனோடு நீண்ட நேரம் உறவாடுதல் என்ற விடயத்திற்கே முக்கியத்துவம் வழங்கினார்கள். அல்லாஹ் தன் அடியார்களிடம் இருந்து எதிர்பார்ப்பதும் இதுவேயாகும். எனவேதான் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் இரவுத்தொழுகையை தொடராக அவதானித்த அல்லாஹ்த்தஆலா பின்வருமாறு குறிப்பிடுகிறான்.

''நபியே! நீரும் ஸஹாபிகளின் ஒரு குழுவும் கிட்டத்தட்ட இரவின் மூன்றில் இரண்டு பகுதி நேரம், இரவின் அரைப்பகுதி நேரம், இரவின் மூன்றில் ஒரு பகுதிநேரம் நின்று வணங்குவதை இறைவன் அறிவான். அல்லாஹ்தான் இரவையும் பகலையும் கணக்கிடுகிறான். நீங்கள் அதனை சரிவர கணக்கிட மாட்டீர்கள் என அறிந்த அல்லாஹ் இவ்விடயத்தில் உங்களை மன்னித்து விட்டான். எனவே இரவுத் தொழுகையில் உங்களுக்கு சௌகரியமான அளவு ஓதுங்கள். ஏனெனில், உங்களில் நோயாளிகள், அல்லாஹ்வின் அருளைத் தேடி பயணிப்போர், மற்றும் புனித யுத்தம் புரிய செல்வோர் இருப்பதையும் அல்லாஹ் நன்கறிவான். எனவே உங்களுக்கு சௌகரியமான அளவு ஓதுங்கள். ஆயினும் தொழுகையை சரியாக நிறைவேற்றுங்கள். ஸகாத்தும் கொடுங்கள். நீங்கள் உங்களுக்காக செய்து அனுப்புகின்ற நற்கருமங்களை அல்லாஹ்விடத்தில் கண்டுகொள்வீர்கள். அதுவே மேலானதும் மகத்தான கூலியுமாகும். நீங்கள் அல்லாஹ்விடம் மன்னிப்புக் கோருங்கள். அவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னிப்பவனாகவும், இரக்கமுடையவனாகவும் இருக்கிறான்". (முஸம்மில் : 20)

இரவு வணக்கம் பற்றிப் பேசுகின்ற இவ்வசனத்தில் பின்வரும் விடயங்கள் உள்ளடங்கியுள்ளன.

1. நீண்ட நேரம் இரவு வணக்கத்தில் ஈடுபடுதலின் தேவை
2. மனிதன் இரவு வணக்கத்தில் ஈடுபடாதிருப்பதற்கான காரணங்களை அல்லாஹ் நன்கு அறிவான்
3. மனிதத் தேவைகளையும், பலவீனங்களையும் அல்லாஹ் அறிந்துதான் தன் ஷரீஆவை முன்வைத்துள்ளான்.
4. எந்தக் காரியத்தையும் நேர்த்தியாக நிறைவேற்றுவது அவசியம்
5. நன்மைகளை அதிகம் தேடுவதற்கான தூண்டல் வழங்கப்பட்டுள்ளது
6. நற்கருமங்களை சரியாகச் செய்ய முடியாமை, மனிதப் பலவீனம், தேவைகள் நிமித்தம் விடுபட்ட கருமங்களுக்காக அல்லாஹ்விடம் மன்னிப்புக் கேட்பதன் அவசியம்
7. அல்லாஹ் தன் அடியார் மீது அளவில்லா அன்புள்ளவனாக இருக்கிறான்

இரவுத் தொழுகையில் ஈடுபடுவோர் இந்த விடயங்களை மனதிற் கொள்வது அவசியம்.

பாவம் மன்னிக்கப்படுதல் முக்கியமானது

கியாமுல்லைல் என்பது முஸ்லிம்களின் ஈமானின் உறுதியையும், நன்மை தேடும் ஆர்வத்தையும் பிரதிபலிக்கின்ற இபாதத் ஆகும். தூக்கத்தில் சுகம் காணும் ஒருவர் திடீரென விழித்து தன் விலாவை படுக்கையிலிருந்து ஒதுக்கி ஏக அல்லாஹ்வை நடுநிசியில் அல்லது இரவின் பிற்பகுதியில் தொழுவாரென்றால் அங்குதான் அவரது உண்மையான ஈமானும், தக்வாவும், சுவன அவாவும் வெளிப்படுகிறது. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் இரவு வண்க்கம் இப்படித்தான் காணப்பட்டது. தன் அருகாமையில் துயில்கொண்ட தன் அன்புக் கணவரை நடுநிசியில் விழித்தெழுந்து அன்னை ஆஇஷா றழியல்லாஹு அன்ஹா அவர்கள் தேடிப் பார்ப்பார்கள். அருமைத் தூதர் ஓரிடத்தில் தொழுது கொண்டிருப்பார்கள். பாவங்கள், தவறுகள் மன்னிக்கப்பட வேண்டுமென்றால் இவ்வாறுதான் தொழ வேண்டும் என்பதை அறிந்திருந்த ஆஇஷா றழியல்லாஹு அன்ஹா, தூதரிடம் ''முன்பின் பாவங்கள் மன்னிக்கப்பட்ட நீங்கள் ஏன் கால் வீங்குமளவுக்கு நின்று வணங்குகிறீர்கள்?" என்று கேட்டபோது, ''நான் அல்லாஹ்வுக்கு நன்றியுள்ள அடியானாக இருக்கக் கூடாதா?" என்று வினவினார்கள். தன்மீது பல்லாயிரம் அருள்களைப் பொழிந்த அல்லாஹ்வுக்கு நன்றிக்கடன் நிறைவேற்றும் உணர்வுடனே அருமைத் தூதர் இரவுத் தொழுகையில் ஈடுபட்டார்கள்.

உண்மையான ஈமானோடும், நன்மை தேடும் உணர்வோடும், நன்றியுணர்வோடும் இரவு வணக்கம் நிறைவேற்றப்படும்போதே பாவங்கள் மன்னிக்கப்பட முடியும் என்பதை பின்வரும் ஹதீஸ் சுட்டிக்காட்டுகிறது.

''யார் ரமழானில் ஈமானோடும், நன்மையை எதிர்பார்த்தும் நின்று வணங்குகிறார்களோ அவர்களின் முன்னைய பாவங்கள் மன்னிக்கப்படும்". (அல்ஜமாஆ)

ரமழானில் நோன்பு நோற்பது பற்றியும் இதே மாதிரியான ஒரு ஹதீஸ் இடம்பெற்றுள்ளது. எனவே பாவங்கள் மன்னிக்கப்படுவதற்கு பகலில் நோன்பு நோற்பதிலுள்ள தூய மனநிலை, பொறுமை, இறையச்சம், ஐக்கிய உணர்வு என்பன இரவுத்தொழுகையிலும் பிரதிபலிக்க வேண்டும் என்பதை உணர்த்துவதாக அது அமைந்துள்ளது. இவ்வாறு நிறைவேற்றப்படும் ஓரிரு ரக்அத்களுக்கு கூட ஏராளமான நன்மைகள் கிடைத்து விடுகின்றன. இதனையே அல்குர்ஆன் வசனங்களும், சுன்னாவும் சுட்டிக்காட்டுகின்றன.

''நிச்சயமாக அல்லாஹ்வைப் பயந்து வாழ்ந்த மனிதர்கள், அல்லாஹ் அவர்களுக்கு கொடுத்த சன்மானங்களைப் பெற்ற நிலையில் சுவனச் சோலைகளிலும், நீரூற்றுகளுக்கு அருகாமையிலும் இருப்பார்கள். அவர்கள் இதற்கு முன்னர் நற்கருமங்களில் ஈடுபடுபவர்களாகவும் (இரவில் நின்று வணங்குவதால்) கொஞ்ச நேரமே தூங்குபவர்களாகவும் இரவின் பிற்பகுதியில் பாவ மன்னிப்புக் கோருபவர்களாகவும் இருந்தார்கள்"

''அல்லாஹ்வின் அடியார்கள் நின்ற நிலையிலும், சிரம் தாழ்த்திய நிலையிலும் இரவில் அல்லாஹ்வை தொழுவார்கள்"

(அல்புர்கான் - 64)

இறுதித்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மதீனாவிற்குள் புகுந்த முதல் நாளில் தன்னைச் சூழ்ந்திருந்த மக்களைப் பார்த்து பின்வருமாறு கூறினார்கள்.

''மனிதர்களே! உங்களுக்கு மத்தியில் ஸலாமைப் பரப்புங்கள். ஏழைகளுக்கு உணவளியுங்கள். இரத்தபந்தங்களை சேர்ந்து வாழுங்கள். மனிதர்கள் தூங்கும் இரவு நேரங்களில் நின்று வணங்குங்கள். அமைதியாக சுவனம் நுழைவீர்கள்".

(ஹாகிம், இப்னு ஹிப்பான்)

''மஸ்ஜிதுன் நபவி, ஹரம் ஷரீப், எல்லைக் காவல் அரண் போன்றவற்றில் தொழுவதைவிட நடுநிசியில் இரண்டு ரக்அத்கள் நின்று வணங்குவது சிறந்ததாகும்" என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக அனஸ் றழியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள்.

(ஹாகிம், இப்னு மாஜா)

ஒரு ஆட்டில் பால்கறக்கும் நேரமாவது இரவில் நின்று வணங்க வேண்டுமென நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக இயாஸ் றழியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கின்றார்கள்"

(தபரானி)

''ஒரு ரக்அத்தேனும் இரவில் தொழுது கொள்ளுங்கள்" என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக இப்னு அப்பாஸ் றழியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள். (தபரானி)

உண்மையில் தூக்கத்தை விட்டு எழும்பி முகத்தை கையால் தடவி விட்டு வுழூ செய்து அல்லாஹ்வுக்காக இரண்டு ரக்அத் தொழுவது என்பது அல்லாஹ்வை ஆழமாக நேசிக்கும் நல்லடியார்களால் மாத்திரமே சாத்தியமாகும்.

எண்ணிக்கை முக்கியமல்ல

அல்லாஹ் எண்ணிக்கையை பார்ப்பதில்லை. அது அவனுக்கு முக்கியமல்ல. எனவேதான் அல்குர்ஆனில் நேரத்துக்கும் மனநிலைக்கும் முக்கியத்துவம் வழங்கியுள்ளான். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மிக நீண்ட நேரம் தொழுததால் 9 அல்லது 11 அல்லது 13 ரக்அத்களே தொழ முடியுமாக இருந்தது. நபியவர்கள் 20 ரக்அத்கள் தொழுததாகவும் 'ஷாபி' என்ற கிரந்தத்தில் இமாம் அபூபக்ர் அப்துல் அஸீஸ் (ரஹ்) அவர்கள் ஒரு ஹதீஸை அறிவித்துள்ளார்கள். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஒருபோதும் ரக்அத்களின் எண்ணிக்கையை குறிப்பிட்டுக் கூறவும் இல்லை.

இரவு வணக்க வரலாற்றைப் பார்க்கும் போது உமர் றழியல்லாஹு அன்ஹு அவர்களின் ஆட்சிக்காலத்தில் மக்கள் 23 ரக்அத்கள் தொழுததாக யஸீத் இப்னு ருமான் அறிவிக்கும் ஒரு ஹதீஸை ஆதாரம் காட்டி இமாம் மாலிக் (ரஹ்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். உஸ்மான், அலி றழியல்லாஹு அன்ஹும் ஆகியோரின் ஆட்சிக் காலங்களிலும் மக்கள் 23 ரக்அத்துக்களே தொழுது உள்ளார்கள்.

எனவேதான் இமாம்களான ஷாபிஈ, அபூ ஹனீபா, மாலிக், அஹ்மத் (ரஹ்) போன்ற பிரபலமான இமாம்கள் கூட 23 ரக்அத் தொழுவதை அங்கீகரித்துள்ளார்கள். மதீனா வாசிகள் 36 ரக்அத் தொழுவதை தான் கண்டதாக இமாம் மாலிக் (ரஹ்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். இதைவிட அதிக எண்ணிக்கைகளையும் வேறு சில இமாம்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

(20ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸகாத்துல் பித்ர்

கேள்வி: ஸகாத்துல் பித்ரை பொருளாகவே கொடுக்க வேண்டுமா? அதன் பெறுமதியை பணமாக கொடுக்க முடியாதா? ஸகாத்துல் பித்ர் பற்றி சிறிது விளக்கமாக சொல்ல முடியுமா?

பதில்: ஸகாத்துல் பித்ர் கொடுப்பது ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் கடமையாகும். ஆண், பெண், சிறியவர், பெரியவர் ஊரிலிருப்பவர், வெளியூரில் இருப்பவர் என்ற பேதமில்லாது அனைவருக்காகவும் இது நிறைவேற்றப்பட வேண்டும். ''நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஈத்தம்பழம், அவரை என்பவற்றிலிருந்து ஒரு ஸா.் அளவை முஸ்லிமான ஒவ்வொரு சுதந்திரவான், அடிமை, ஆண், பெண் மீதும் ஸகாத்துல் பித்ரை கடமையாக்கினார்கள்'' என இப்னு உமர் றழியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள். (முவத்தா மாலிக், சுனனு தாரக்குத்னி)

மிகப் பெரும்பான்மையான அறிஞர்கள் ஸகாத்துல் பித்ர் பர்ளு என்ற கருத்தை முன்வைக்கின்றனர். மாலிக் மத்ஹபைச் சார்ந்த சிலர் ஸகாத்துல் பித்ர் சுன்னத் என்கின்றனர். ஸகாத் விதியாக்கப்பட்டதன் மூலம் ஸகாத்துல் பித்ர் என்ற சட்டம் மாற்றப்பட்டதாக வேறு சில அறிஞர்கள் கூறுகின்றனர். நாட்டுப் புறத்தவர்கள் மீதும், அனாதைகள் மீதும் ஸகாத்துல் பித்ர் கடமையல்ல என்று கூறும் சில அறிஞர்களுமுள்ளனர். (பிதாயதுல் முஜ்தஹித்)

இவற்றில் பெரும்பான்மையான அறிஞர்கள் தவிர்ந்து ஏனைய அறிஞர்களின் கருத்துக்கள் அனைத்தும் வெறுமனே இஜ்திஹாதின் அடிப்படையில் பெறப்பட்டவையாகும். இப்னு உமர் றழியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கும் ஹதீஸ் ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் கடமை என தெளிவாக வந்திருப்பதனாலும், நாட்டுப்புறத்தான், நகர்ப்புறத்தான் என வேறுபடுத்திச் சொல்லாமல் முஸ்லிம் என பொதுவாக வந்துள்ளதாலும் பெரும்பான்மை அறிஞர்கள் கூறும் கருத்தே மிகச்சரியானது.

ரமழானில் ஸகாத்துல் பித்ர் கொடுப்பதற்கு பல நோக்கங்கள் உள்ளன. அவற்றில் சில ஸகாத்துல் பித்ர் கொடுப்பவரோடு தொடர்புடையன.

ஸகாத்துல் பித்ர் அதனை நிறைவேற்றுபவரை தவறுகளிலிருந்து தூரமாக்கி, பாவக்கறைகளிலிருந்து சுத்தப்படுத்துகின்றது. ''நபியே அவர்களுடைய செல்வத்திலிருந்து தர்மத்திற்கானதை எடுத்துக் கொண்டு அதனால் அவர்களை உள்ளும், புறமும் தூய்மையாக்குவீராக'' (சூறத்துத் தவ்பா 103)

இஸ்லாமிய ஷரீஆவில் செயல்கள் அனைத்தும் அதன் முடிவைக் கொண்டே தீர்மானிக்கப்படுகின்றன. இந்த வகையில் நோன்பாளி ஒருவர் தனது நோன்பை சிறப்பாக நிறைவு செய்வதற்கு ஸகாத்துல் பித்ர் உதவுகின்றது. அல்லாஹ்த்தஆலா நற்செயல்களுக்கான கூலியை பன்மடங்காக வழங்கும் இம்மாதத்தின் இறுதிப் பகுதியில் ஸகாத்துல் பித்ர் கடமையாக்கப்பட்டிருப்பதனால் அந்நேரத்தில் ஸகாத்துல் பித்ரை நிறைவேற்றுகின்ற ஒருவர் அளவில்லா நற்கூலியை பெற்றுக்கொள்கின்றார்.

அடுத்து ஸகாத்துல் பித்ர் பரஸ்பர அன்பை சமூகப் பொறுப்பை வெளிப்படுத்தி நிற்கின்றது. பெருநாளைக்கு இரண்டு, மூன்று தினங்களுக்கு முன் நோன்பாளிகள் அனைவரும் பெருநாளைக் கொண்டாட தயாராகிக் கொண்டிருப்பர். ஏழைகள் இக்கொண்டாட்டத்தில் பங்கேற்க அவர்களது வறுமையும் ஏழ்மையும் தடையாகவிருக்கும். ஏழ்மையை நீக்கி அவர்களையும் பெருநாள் சந்தோஷத்தில் பங்கேற்க வைப்பது சமூகக் கடமையாகும். இத்தினத்தில் அவர்களை (ஏழைகளை) கையேந்தாத வசதியுடையவர்களாக ஆக்குங்கள். (சுனனு தாரகுத்னி) என்ற ''ஹதீஸ் இக்கருத்தை மேலும் வலியுறுத்துகின்றது.

இது நிறைவேற்றப்பட வேண்டிய நேரத்தைப் பொறுத்தவரை ரமழான் மாத ஆரம்ப முதல் ஸகாத்துல் பித்ர்ரை கொடுக்க முடியும் என இஸ்லாமிய சட்ட அறிஞர்கள் கூறுகின்றார்கள். அது கடமையாகும் நேரத்தைப் பொறுத்தவரை அவர்களுக்கு மத்தியில் கருத்து வேறுபாடு உண்டு. பெருநாளைக்கு மறுதின சூரிய உதயத்தோடு கடமையாவதாக இமாம் அபூ ஹனீபாவும் அம்மத்ஹபைச் சார்ந்தவர்களும் கூறுகின்றனர். பெருநாளைய சூரிய உதயத்தோடு ஸகாத்துல் பித்ர் கொடுப்பது கடமையாகின்றது என இமாம் மாலிக் கூறுகின்றார். ரமழான் மாதத்து இறுதி தின சூரிய அஸ்தமனத்துடன் கடமையாகின்றது என இமாம் மாலிக்கிடமிருந்து வரும் பிறிதொரு அறிவிப்பு தெரிவிக்கின்றது. இக்கருத்தையே இமாம் ஷாபிஈ அவர்களும் கூறுகின்றார்கள். நாம் ஆரம்பத்தில் குறிப்பிட்ட இப்னு உமர் றழியல்லாஹு அன்ஹு அவர்களது ஹதீஸ் ''ரமழான் மாதத்தில் கடமையாக்கினார்கள்'' என பொதுவாக வந்திருந்தாலும், ''இத்தினத்தில் (பெருநாளில்) அவர்களை வசதியுடையவர்களாக ஆக்குங்கள்'' என்று பெருநாள் தின தொழுகைக்கு முன்னர் ஸகாத்துல் பித்ர் கொடுக்கப்பட வேண்டும் என்பதை உணர்த்தி நிற்கின்றது. பெருநாளைக்கு ஓரிரண்டு நாட்களுக்கு முன்னர் ஸகாத்துல் பித்ர் கொடுத்தாலேயே அதன் மூலம் ஏழைகள் பயனடைவர்.

பெருநாள் தினத்தன்று தனக்கும் தனது பராமரிப்பில் இருப்போருக்கும் உணவுத்தேவை போக மேலதிக வசதி படைத்தோர் ஸகாத்துல் பித்ர் கொடுப்பது கடமையாகும். முதலில் ஒருவர் தனக்காகவும், தனது பராமரிப்பில் இருப்போருக்காகவும் செலவு செய்ய வேண்டும். மீதி இருந்தாலே அவர் ஸகாத் கொடுக்க வேண்டும் என்பது இஸ்லாமிய ஷரீஆ சட்டமாகும். ''தேவைக்குப் போக மீதமிருந்தாலே ஸதக்கா கொடுக்க வேண்டும்'' (முஸ்னத் அஹ்மத்) என்ற நபி மொழி இதற்கு ஆதாரமாகும்.

தனது பராமரிப்பில் இருப்போர் எனும்போது பெற்றோர், மனைவி மக்கள் போன்ற இஸ்லாம் பராமரிப்பை கடமையாக்கியவர்கள் என்பவர்களோடு வீட்டில் தங்கியிருந்து வேலை பார்ப்போரும் உள்ளடங்குவர். எனவே ஒருவர் தனக்காகவும் தனது பராமரிப்பில் இருப்போருக்காகவும் ஸகாத்துல் பித்ர் கொடுக்க வேண்டும்.

எதை, எந்தளவு? என்பதை பொறுத்தவரையில் குறிப்பிட்ட ஊரில் உணவாக உட்கொள்ளப்படும் தானியத்தின் ஒரு சா.் (ஏறத்தாழ இரண்டே முக்கால் கிலோ அளவு) ஒருவருக்காக ஸகாத்துல் பித்ர் ஆக நிறைவேற்றப்பட வேண்டும். உதாரணமாக ஒரு ஊரில் அரிசியே பிரதான உணவாக உட்கொள்ளப்படுகிறது எனின் அரிசியை கொடுப்பதே சிறந்தது. ஏனெனில் ஸகாத்துல் பித்ர்ரின் நோக்கம் அது நிறைவேற்றப்படுவது மாத்திரமல்ல. மாறாக அதன்மூலம் பிரயோசனம் அடையப்பட வேண்டும் என்பதுமாகும்.

குறிப்பிட்ட தானியத்தை இலகுவாக பெற்றுக்கொள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிந்திருந்தால் அல்லது ஸகாத்துல் பித்ரை பெறுவோர் பொருளாகவன்றி காசாக மாத்திரம் அதனைப் பெற்றுக்கொள்ள விரும்பினால் தானிய அளவுக்கு சமமான பெறுமதியாக கொடுப்பதே நல்லதாகும். தான் வசிக்கும் இடத்தில் இருப்போர் ஸகாத்துல் பித்ரின்பால் தேவையற்றோராக இருப்பின் தேவையுடையோர் இருக்கும் பகுதிக்கு ஸகாத்துல் பித்ர் அனுப்பப்பட வேண்டும்.

மூலம் : மஜல்லதுல் புஹூசில் பிக்ஹிய்யா அல்முஆஸிரா 28வது இதழ்

தமிழில்: எம்.எப். ஸைனுல் ஹுஸைன்

விற்பனைக்காக வாங்கப்பட்ட நிலத்துக்குரிய ஸகாத்

கேள்வி : என்னிடம் நீண்ட காலத்திற்கு முன் வாங்கப்பட்ட பல நிலங்கள் உண்டு. அவற்றுக்கான ஸகாத் பற்றிய சட்டத்தை அறிய விரும்புகிறேன். அவற்றுக்கு ஸகாத் கொடுக்க வேண்டுமாயின் அவற்றை வாங்கிய பணப்பெறுமதிக்கு ஸகாத் கொடுக்க வேண்டுமா அல்லது வருடந்தோறும் அவற்றின் பெறுமதியைக் கணித்து ஸகாத் கொடுக்க வேண்டுமா? ஒவ்வொரு வருடமும் அவற்றின் பெறுமதியைக் கணிப்பதில் பல சிரமங்கள் இருக்கின்றன.

பதில் : வாங்கப்படும் நிலம் இருவகைப்படும். ஒன்று இலாபநோக்கில், விற்பனை செய்வதற்காக வாங்கப்படுவது. இது ஒரு வகை வியாபாரமாகும். இந்நிலையில், நிலம் ஒரு வியாபாரப் பொருளைப் போன்றே கணிக்கப்படும். எனவே ஒவ்வொரு வருடமும் அதனுடைய பெறுமதியை மதிப்பிட்டு, மொத்தப் பெறுமதியில் 2.5 வீதத்தை ஸகாத்தாக கொடுத்துவிட வேண்டும். அதாவது ஒவ்வொரு 1000க்கும் 25 ஐக் கொடுக்க வேண்டும்.

விற்பனைக்காக வாங்கப்படும் நிலத்தைப் பொறுத்தவரை, பெரும்பாலான சட்ட நிபுணர்களின் (புகஹாக்கள்) கருத்து இதுவே. ஆனால், மாலிக் மத்ஹபின்படி குறிப்பிட்ட நிலத்தை விற்கின்றபோது பெறப்படும் பணப்பெறுமதிக்கே 2.5 வீதத்தை ஸகாத்தாகக் கொடுக்க வேண்டும். என்றாலும், அதிகமான புஹாக்களின் கருத்துப்படி அந்நிலம் ஒரு வியாபாரப் பொருளாக இருப்பதால், அதற்கு ஒவ்வொரு வருடமும் ஸகாத் கொடுக்க வேண்டும். இதுவே மிகச்சரியான கருத்தாகும்.

சில சந்தர்ப்பங்களில், உதாரணமாக விலை வீழ்ச்சி ஏற்படும்போது இமாம் மாலிக்கின் கருத்தை நாம் பின்பற்ற முடியும். அதாவது ஒருவன் ஒரு நிலத்தைக் குறிப்பிட்டதொரு விலைக்கு வாங்கினான். பின்பு அதன் பெறுமதி குறைந்துவிட்டது. அப்போது அவன் அதனை விற்பதாயின் குறைந்த விலைக்கே விற்க முடியும். இதுபோன்ற சந்தர்ப்பத்தில் மாலிக் மத்ஹபின்படி தீர்ப்புச் சொல்லலாம். ஆனால் 10,000க்கு வாங்கிய நிலத்தை இன்று நடைமுறையில் இருப்பதுபோல் ஒரு வருடத்தின்பின் 50,000க்கோ அல்லது அதனை விட கூடுதலான விலைக்கோ விற்பதாயின் ஏனைய வியாபாரங்கள் போன்று இதுவும் ஒரு இலாபகரமான வியாபாரமாகவே கணிக்கப்படும். இந்நிலையில் நிலச்சொந்தக்காரன் கைதேர்ந்த அனுபவசாலிகளின் மூலம் வருடா வருடம் அதன் பெறுமதியைக் கணித்து மொத்தப் பெறுமதிக்குரிய ஸகாத்தைக் கொடுத்துவிட வேண்டும்.

நிலத்தை விற்பதற்காக அல்லாமல் அதனைக் கட்டடம் கட்டுவதற்காக வாங்கியிருந்தால் அதற்கு ஸகாத் கொடுக்க வேண்டியதில்லை. அந்நிலையில் கட்டடங்கள் கட்டி, அவற்றைக் கூலிக்குக் கொடுப்பதாக இருந்தால், அந்தச் சொத்துக்களில் இருந்து பெறப்படும் வருமானத்திற்கு ஸகாத் கொடுப்பது கடமையாகும்.

வசதியுடைய சகோதரர்களுக்கு ஸக்காத் கொடுத்தல்

கேள்வி : மனைவிக்கும், செலவு கொடுப்பது தன்மீது கடமையானவர்களுக்கும், வசதியுள்ள சகோதரர்களுக்கும் ஸக்காத் கொடுக்கலாமா?

பதில் : கணவனின் ஒரு பகுதியாக மனைவி இருப்பதால் அவளுக்கு கணவன் தனது செல்வத்திலிருந்து ஸக்காத் கொடுக்க முடியாது என்பது ஏகோபித்த கருத்தாகும். *''(நீங்கள் சேர்ந்து வாழக்கூடிய உங்கள்) மனைவிகளை, நீங்கள் அவர்களிடம் மன நிம்மதி பெறுவதற்காக உங்களிலிருந்தே அவன் படைத்திருப்பது அவனுடைய அத்தாட்சிகளில் உள்ளதாகும்'' (குர்ஆன் 30:21)*

அவன் குடும்பம் நடத்தும் வீடு அவளுடையதாகும். இதனை அல்லாஹ் இவ்வாறு கூறுகிறான். *''நீங்கள் (உங்களது மனைவியர்களாகிய) பெண்களைத் 'தலாக்' கூற விரும்பினால், அவர்களுடைய இத்தாவின் ஆரம்பத்தில் கூறி, 'இத்தா' வைக் கணக்கிட்டு வாருங்கள். (இந்த விடயத்தில்) உங்கள் இறைவனாகிய அல்லாஹ்வை பயந்து கொள்ளுங்கள். (நீங்கள் 'தலாக்' கூறிய) பெண்கள் பகிரங்கமாக யாதொரு மானக்கேடான காரியத்தைச் செய்தாலன்றி, அவர்களை அவர்களது வீட்டிலிருந்து ('இத்தா'வுடைய காலம் முடிவு பெறுவதற்கு முன்னர்) வெளியேற்றிவிட வேண்டாம்'' (25:1)*

அவர்களது வீடு என்பதன் கருத்து அவர்கள் குடியிருந்து குடும்பம் நடத்தும் வீடு என்பதாகும். அது மனைவியின் வீடுமாகும். கணவனின் சொத்து மனைவியின் சொத்தைப் போன்றதே. எனவே அவளுக்கு அவன் ஸக்காத் கொடுத்தால், உண்மையில் அவன் தனக்குத்தானே ஸக்காத் கொடுப்பதாகவே அமையும். ஒருவன் தனக்குத்தானே ஸக்காத் கொடுத்துக் கொள்வதாகவே அமையும். கணவன் தனது ஸகாத் பணத்திலிருந்து ஒருபோதும் மனைவிக்கு கொடுக்க முடியாது என்ற விடயத்தில் இஸ்லாமிய அறிஞர்கள் ஏகோபித்த கருத்துக் கொண்டுள்ளார்கள். இவ்வாறே அவனது பிள்ளைகளும் அவனின் ஒரு பகுதி ஆகையால் அவர்களுக்கும் ஸக்காத் கொடுக்க முடியாது. ''உங்கள் பிள்ளைகள் உங்கள் உழைப்பால் வந்தவர்கள்'' என ஹதீஸ் குறிப்பிடுகிறது. அவனது பெற்றோர்களது நிலமையும் அத்தகையதே. அவர்களின் ஒரு பகுதியாகவே அவன் காணப்படுகின்றான்.

ஆனால், இமாம் இப்னு தைமியாவின் கருத்துப்படி பெற்றோர் வறியவர்களாகவும், அவர்களுக்குச் செலவு செய்ய மகனால் முடியாமலும் இருந்தால், தனது ஸகாத் பணத்தைப் பெற்றோருக்கு கொடுக்கலாம். இக்கருத்திலும் தவறில்லை.

சகோதரர்களைப் பொறுத்தவரை அவர்கள் வறியவர்களாயின் அவர்களுக்குச் செலவு கொடுப்பது அவன்மீது கடமையாகும். எனவே அவர்களுக்கு ஸகாத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுக்க முடியுமா, முடியாதா என்ற விடயத்தில் அறிஞர்களிடையே கருத்து வேறுபாடு நிலவுகிறது. பொதுவிதியின்படி, ஒருவன் தனது வறிய சகோதரர்களுக்குத் தனது ஸகாத்தை வழங்க முடியுமென்ற கருத்தை நான் மிகச் சரியானதாகக் கருதுகிறேன். மனைவி, பிள்ளைகள், பெற்றோர் முதலானோரை அந்தப் பொதுவிதியிலிருந்து நீக்கினாலும், சகோதரர்கள் அவ்விதிக்கு உட்பட்டவர்களாகவே இருப்பர். சிறிய தாய், மாமி, மாமி மகள் சிறிய தாயின் மகள் போன்ற ஏனைய உறவினர்களைப் பொறுத்தவரையில், அவர்களுக்கு ஸகாத் கொடுப்பதில் தவறில்லை என்பது ஏகோபித்த கருத்தாகும்.

வசதி படைத்த சகோதரர்களாயின் அவர்களுக்கு ஸகாத் கொடுக்க முடியாது. சகோதரராயினும், அல்லாவிட்டாலும் வசதியிருப்பின் ஸகாத் கொடுக்க முடியாது.

''வசதியுடையவர்களும், உடல் ஊனமற்ற, பலம் வாய்ந்தவர்களும் ஸகாத் பெறுவது கூடாது'' என நபிகளார் குறிப்பிட்டுள்ளார்கள். மேலும், அது செல்வந்தர்களிடமிருந்து பெறப்பட்டு வறியவர்களுக்கு கொடுக்கப்படும் என்றார்கள். எனவே வசதி படைத்தவர்களுக்கு ஸகாத் கொடுப்பது , அது விதியாக்கப்பட்டதன் அடிப்படை நோக்கத்துக்கே முரண்பட்டதாகும்.

நன்றி: இஸ்லாமிய சட்டத் தீர்ப்புகள்
(ரேஷ்மா வெளியீடு)

இரவுத் தொழுகையில்

இந்த உண்மைகளை ஆய்வுக் கண் கொண்டு நோக்கிய பல இஸ்லாமிய அறிஞர்கள், இந்த விடயத்தில் முஸ்லிம்கள் பின்பற்ற வேண்டிய செயல்முறையை ஒப்பீட்டு ரீதியில் முன்வைத்தனர். அதாவது ஓதலின் அளவு குறையும்போது ரக்அத்களின் எண்ணிக்கை அதிகரிக்க முடியும். ஓதலின் அளவு கூடும்பொழுது ரக்அத்களின் எண்ணிக்கை குறைய முடியும். இந்த கருத்தை இமாம்களான இப்னு தைமிய்யா, ஷேய்க் அப்துல்லாஹ் பின் பாஸ், ஷேய் உஸைமீன் போன்ற அறிஞர்களும் ஆதரித்துள்ளார்கள்.

மேலும் 11 ரக்அத்களை விட அதிகம் தொழலாம் என அபிப்பிராயம் தெரிவிக்கும் இமாம்களில் சிலர் 11 ரக்அத் தொழுவது சுன்னத்து எனக் கருதப்பட்டு மேலதிகமாக தொழுத ரக்அத்கள் நபிலாகக் கருதப்படும் எனவும் குறிப்பிட்டுள்ளனர்.

எனவே இரவு வணக்கத்தில் ரக்அத்க ளின் எண்ணிக்கை முக்கியமல்ல. தனது சக்திக்குட்பட்டளவில் நீண்ட நேரம் தொழு வதே முக்கியமானது. ஆகக் குறைந்தது க.்பதுல்லா உட்பட உலகின் அறுதிப் பெரும்பான்மையான பள்ளிவாயல்களில் தராவீஹ் என்ற பெயரில் நிறைவேற்றப்படும் 23 ரக்அத்களையாயினும் சகல முஸ்லிம் களும் நிறைவேற்றுவதற்கு முன்வருவது அவசியமாகும்.

பல பள்ளிவாயில்களில் தராவீஹ் தொழுத பின்னர் கியாமுல்லைல் என்ற பெயரில் கூட்டாக 11 ரக்அத் தொழுகை நடைபெறுகிறது. இவற்றிலும் ஈடுபடலாம். மேலும் தூங்கியெழுந்து இரவின் இறுதிப் பகுதியில் தஹஜ்ஜுத் என்ற பெயரில் தனித்தனியாக நிறைவேற்றப்படும் தொழு கையிலும் கூடிய கவனம் செலுத்தலாம். இவையனைத்தும் ரமழான் இரவுகளில் நிறைவேற்றப்படும்பொழுது ''கியாமு ரமழான்'' எனவே அழைக்கப்படுகிறது. இவற்றை இரண்டு ரக்அத்களாக தொழு மாறு இப்னு உமர் றழியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கற்றுக்கொடுத்ததற்கு இணங்க நிறைவேற்றலாம். இறுதி நேரத்தில் வித்று தொழுவது மிகவும் சிறந்ததாகும்.

(அஹ்மத்)

எனவே ரமழான் இரவுகளில் இரவு வணக்கத்தில் ஈடுபட்டு அந்த இரவுகளை உயிர்ப்பிக்கும் நல்லடியார்களாக வல்ல அல்லாஹ் ஆக்கியருள்வானாக. ஐக்கிய மாக அதை நிறைவேற்றும் மனநிலையை முஸ்லிம்கள் அனைவருக்கும் தந்தருள்வானாக! ■

அல்ஹஸனாத்
நீங்களும் வாசியுங்கள்
பிறருக்கும்
அறிமுகம் செய்யுங்கள்

ஆஇஷா ஸித்தீகா கலாபீடம்

- சிறந்த ஒரு தாய் உருவானால் சீரிய ஒரு சமூகம் உருவாகும் என்ற இலட்சியக் குறிக்கோளுடன் கடந்த 4 ஆண்டுகளாக ஆஇஷா ஸித்தீகா கலாபீடம் இயங்கி வருகின்றது.
- எதிர்கால சந்ததியினரின் ஈருலக வெற்றிக்கு வழிகாட்டும் சிறந்த இஸ்லாமிய தாய்மார்களை உருவாக்க உதவும் பல்கலைக்கழக பட்டப்படிப்பை உள்ளடக்கிய பொதுக் கல்வியையும், அரபு மொழி, ஷரீஅத் பாடங்கள், திறன்விருத்தி, குடும்பப் பெண்களுக்கு அவசியமான அறிவும் பயிற்சிகளும் என்ற பல்வேறு துறைகளிலும் G.C.E. O/L சித்தியடைந்த யுவதிகளுக்கு இங்கு கல்விப் போதனையும் பயிற்சிகளும் அளிக்கப்படுகின்றன.
- உள்வாரியாகவும் வெளிவாரியாகவும் இக்கலாபீடத்திற்கு சேர விரும்பும் நூற்றுக்கணக்கான யுவதிகளுக்கு அறிவும் பயிற்சிகளும் பெற வசதியாக ஆஇஷா ஸித்தீகா கலாபீடத்தின் கட்டட நிர்மாணப்பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இப்புனித ரமழானில் ஸகாத், ஸதகா நிதியில் இருந்து இப்பணிக்கு தாராளமாக உதவி இதில் பங்காளிகளாகச் சேர்ந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

த.பெ.இ. 14, மாவனல்லை, தொ.பே 035 2241640, 035 4682172
வங்கி இலக்கம். AYESHA SIDDEEQA EDUCATIONAL INSTITUE CEYLAN BANK MAWANELLA
AC / NO 048001072647-001

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவில் நாட்டமில்லை, தீர்வு என்ன?

"எனது பிரச்சினைக்கு அல்ஹஸனாத் தீர்வு தரும் என்ற எண்ணத்தில் எழுதுகிறேன். தயவு செய்து இந்தக் கடிதத்தைக் குப்பைத் தொட்டியில் போட்டுவிட வேண்டாம்" என்ற வலுக்கட்டாயமான வேண்டுகோளுடன் திருமணம் செய்த ஒரு இளம் பெண் இவ்வாறு கூறுகிறார்:

"எனக்கு தாம்பத்திய உறவில் நாட்டம் வருவதே இல்லை. இது விடயத்தில் எனது கணவர் என்னை பலவந்தப்படுத்துவதுதான் வழமை. திருமணம் முடிந்த புதிதில் நான் இதனைப் பிரச்சினையாக கருதவில்லை. நாள் செல்லச் செல்ல எனக்கு இது ஒரு பெரும் பிரச்சினையாக மாறிவிட்டது.

காரணம், எனது கணவர் என்னிடம் மிக அன்பாக இருக்கிறார். நானும் அவர்மீது உயிராக இருக்கிறேன். அவர் எனக்கு எந்தவிதமான குறையையும் வைக்கவில்லை.

அப்படிப்பட்ட கணவருக்கு திருப்தி தரும் மனைவியாக நான் இருக்க முடியவில்லையே என்பதுதான் எனது கவலை. இதனால் விரக்தியின் உச்ச நிலைக்கு நான் சென்றிருக்கிறேன்.

எனது கணவர் என்னுடைய இந்த விருப்பமின்மை பற்றி சிலபோது கேட்பார். அப்போது என்ன பதில் சொல்வதென்றே தெரியாமல் நான் தவிப்பேன். தாம்பத்திய சுகம் என்னவென்றே தெரியாமல் இருக்கும் நான் என்ன பதில் சொல்வேன்?

கண்ணீரோடு வாழும் இவளுக்கு சந்தோசமான வாழ்வு கிடைக்க வழி கூறுங்கள். அத்தோடு இஸ்லாத்தின் பார்வையில் எனது நிலை என்ன? கணவனை திருப்திப்படுத்தாத பாவம் என்னை வந்துசேருமா?"

என்று தனது வாழ்க்கையையே வினாக்குறியாக மாற்றியிருக்கும் இந்தப் பெண்ணுக்கு தனிப்பட்ட பதில் எழுதவும் முடியவில்லை. காரணம் அவர் தனது பெயர் முகவரி என்பவற்றை குறிப்பிடவில்லை. அல்ஹஸனாத்தில் பதில் எழுதாமல் இருக்கவும் முடியவில்லை. காரணம் அவரது பரிதாப நிலையும், பதில் தராமல் கடிதத்தைக் குப்பைத் தொட்டியில் போட்டுவிட வேண்டாம் என்ற வலுக்கட்டாயமான அவரது வேண்டுகோளுமாகும்.

அதேவேளை இத்தகையதொரு பிரச்சினை பற்றியும் அதற்கான தீர்வு பற்றியும் வெளிப்படையாக எழுதுவது (குறிப்பிட்ட நபரோடு தனியாகப் பேசுவதைப்போன்று) எளிதானதல்ல.

எனவே பிரச்சினையை அறிந்து கொள்ளும் முயற்சியில் வெட்கத்தை விட்டு கணவனும் மனைவியும் மனம் திறந்து பேச ஆரம்பிக்க வேண்டும். இரண்டு பேருக்குமிடையில் நெருக்கமும் அன்பும் இருக்கின்றபோது இதனைப் பேசாமல் வெறுப்புக்கள் உருவாகியதன் பின் பேச ஆரம்பித்தால் அது பயன்தர மாட்டாது. இரண்டுபேரும் மனம் திறந்து பேச ஆரம்பித்தால் சிலபோது பிரச்சினை அதிகரிக்கலாம் என்ற அச்சமிருப்பின் தீனுக்கும், மானத்துக்கும் நம்பத்தகுந்த ஒருவரின் ஆலோசனையை வேண்டி நீங்கள் நாடி வரலாம்.

இருப்பினும் தீர்வை நோக்கிச் செல்வதற்கு சில வழிகாட்டல் குறிப்புக்களைத் தருகிறேன். அல்லாஹ் உங்களது பிரச்சினையைத் தீர்த்து வைப்பானாக.

முதலில் இது உங்களது ஒரு உளவியல் பிரச்சினையா? என்பதைத் தெரிந்து கொள்ள முயற்சியுங்கள்.

ஆண்கள் என்றாலே அருவருப்பு என்பது போன்ற ஒரு மனநிலை சில பெண்களுக்கு இருப்பதாக உளவியலாளர்கள் கூறுகிறார்கள். இவர்கள் தமது இந்த மனநிலையை பிறருக்கு எடுத்துக் கூற முடியாத நிலையில் திருமணத்திற்குச் சம்மதிக்கிறார்கள். திருமணம் செய்த பின்னரும் கணவரின் நெருக்கத்தை ஏற்கவும் முடியாமல் மறுக்கவும் முடியாமல் தவிக்கிறார்கள். கணவன் மிக நல்லவராக இருந்துவிட்டால் பிரச்சினை இன்னுமொருபடி உயர்ந்துவிடுகிறது. அதாவது தன்மீது அன்பு வைத்திருக்கும் கணவரின் விருப்பங்களுக்குத் தன்னால் இணக்கமாக நடக்க முடியவில்லையே என்பதுதான் அது. இதுதான் உங்கள் நிலை என்றால் உங்களது மனநிலையில் ஒரு உளவியல் மாற்றம் நடந்தாக வேண்டும். அதற்கு இரண்டு வகையான உதவிகளை நீங்கள் நாடவேண்டி இருக்கும்.

1. உங்களது மனோநிலையை மாற்றக் கூடிய இஸ்லாத்தின் போதனைகள், வழிகாட்டல்கள்

2. அதேபோன்று இந்த மனோநிலையை மாற்றக்கூடிய உளவியல் ஆலோசனைகள்

உரியவர்களை நாடி இவற்றைப் பெற முயற்சி செய்யுங்கள்.

பிரச்சினை உளவியல் ரீதியானதல்ல என்று நிச்சயமாகிவிட்டால் உடல்ரீதியானதா என்பதை அறிய முயற்சி செய்யுங்கள். அதாவது கணவனது நெருக்கத்தின்போது ஸ்பரிச இன்பமும், உடலியல் வேட்கையும் ஏற்படாமல் உடல் மரத்துப் போனது போன்ற ஒரு நிலை இருக்குமாயின் பிரச்சினை உடல் ரீதியானதாகவும் இருக்கலாம். அவ்வாறாயின் தகுந்த ஒரு வைத்திய நிபுணரை நீங்கள் நாடவேண்டி இருக்கும்.

சிலபோது உங்களது இந்தப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரச்சினைக்கு காரணம் உங்களது கணவராக இருக்கலாம். அவர் உங்களை அணுகும் முறைகளும், அவரது உடலியல் ஈடுபாடுகளும் உங்களது விருப்பத்தைத் தூண்டும விதமாக அமையாதிருக்கலாம். அவ்வாறாயின் இது விடயத்தில் ஆலோசனை வழங்கப்பட வேண்டியவர் நீங்களல்ல, உங்களது கணவரே!

இவ்வாறு பிரச்சினை எங்கே இருக்கிறது என்பதை முதலில் கண்டறிய வேண்டும். பிரச்சினை இங்குதான் இருக்கிறது என்பதை அறிந்துவிட்டால் அதனைத் தீர்ப்பது சுலபமாகிவிடலாம்.

எனவே பிரச்சினையை அறிந்து கொள்ளும் முயற்சியில் வெட்கத்தை விட்டு கணவனும் மனைவியும் மனம் திறந்து பேச ஆரம்பிக்க வேண்டும். இரண்டு பேருக்குமிடையில் நெருக்கமும் அன்பும் இருக்கின்றபோது இதனைப் பேசாமல் வெறுப்புக்கள் உருவாகியதன் பின் பேச ஆரம்பித்தால் அது பயன்தர மாட்டாது.

இரண்டுபேரும் மனம் திறந்து பேச ஆரம்பித்தால் சிலபோது பிரச்சினை அதிகரிக்கலாம் என்ற அச்சமிருப்பின் தீனுக்கும், மானத்துக்கும் நம்பத்தகுந்த ஒருவரின் ஆலோசனையை வேண்டி நீங்கள் நாடி வரலாம்.

எவ்வாறாயினும், உங்களுக்கு இது விடயத்தில் வழிகாட்டத்தக்க சில நூல்களையும் இங்கு குறிப்பிடுகிறேன். வாங்கிப் படித்துப் பாருங்கள். அதிலும் உங்களுக்குப் பயன் கிடைக்கலாம்.

1. 'மனோகரமான மணவாழ்க்கை'- ஜமால்
2. 'இல்லறச் சோலையில் கணவன் மனைவி' ஏ.எச்.என்.எம். இஸ்மாயில்

இந்த இரண்டு நூல்களும் உங்களது பிரச்சினைக்கு வழிகாட்டப் பொருத்தமாக இருக்கலாம் என்று கருதுகிறேன். அத்தோடு மேலதிகமாகவும் இதோ இன்னும் சில நூல்கள்:

1. 'இஸ்லாத்தில் உடலுறவுச் சட்டங்கள்' முஹம்மத் யூஸுப் எஸ்.பி
2. 'இன்ப மணமக்களுக்கு இனிய வழிகாட்டி' டாக்டர், மௌலவி எம்.எம். பஹாவுத்தீன்
3. 'மறை கூறும் மணக்கோலம்' எம்.வை. ஷாஹுல் ஹமீத் மன்பஈ
4. 'முஸ்லிம் மனைவியின் கடமைகள்'
5. 'முஸ்லிம் கணவனின் கடமைகள்' எஸ். முஹம்மது பஷீர் ■

ஒவ்வொரு முஸ்லிம் மீதும் பாவமன்னிப்பு கேட்பது கடமை

பாவமன்னிப்பு என்பது ஒரு மனிதன் பாவங்களில் இருந்து மீளுவதாகும். இது அல்லாஹ்வின் அன்பை ஒரு மனிதனுக்கு கொடுக்கின்ற ஒரு பொக்கிஷமாகவும் விளங்குகிறது. இதனையே அல்லாஹ் தன் திருமறையில் இவ்வாறு குறிப்பிடுகிறான்:

"நிச்சயமாக அல்லாஹ் பாவமன்னிப்பு கேட்டு மீளுகின்றவர்களையும் தூய்மையாக இருப்பவர்களையும் நேசிக்கிறான்" (அல்பகறா: 222)

அல்லாஹ்விடம் பாவமன்னிப்புக் கோருவது ஆண், பெண்ணான முஸ்லிம் இருபாலார் மீதும் கடமையாகும். இதனைப் பற்றி அல்லாஹ் தன் திருமறையில் இவ்வாறு குறிப்பிடுகிறான்:

"விசுவாசிகளே கலப்பற்ற தவ்பாவாக பாவத்திலிருந்து விலகி அல்லாஹ்விடம் நீங்கள் தவ்பாச் செய்யுங்கள்" (அத்தஹ்ரீம்: 8)

அந்த பாவமன்னிப்பு (தவ்பா) ஒரு மனிதனின் வெற்றிச் சாதனங்களில் ஒரு சாதனமாக விளங்குகிறது. அல்லாஹ் தன் திருமறையில் பின்வருமாறு குறிப்பிடுகிறான்:

"விசுவாசிகளே நீங்கள் வெற்றி பெறுவதற்காக அல்லாஹ்வின் பக்கம் பாவமன்னிப்புக் கோரி தவ்பாச் செய்யுங்கள்" (அந்நூர்: 31)

பாவமன்னிப்பு (தவ்பா) ஒரு மனிதன் பாவங்களில் இருந்து விடுபடுவதற்கான ஒரு உபதேசமாகவும் விளங்குகிறது.

"தங்கள் மீது அளவுகடந்த பாவங்கள் செய்து விட்டோராகிய என் அடியார்களே! அல்லாஹ்வின் அருளில் இருந்து அவன் மன்னிப்பை விட்டும் நிராசையற்றோராக நீங்கள் ஆகிவிட வேண்டாம். நிச்சயமாக அல்லாஹ் உங்கள் பாவங்கள் யாவற்றையும் பிழைபொறுக்கத் தேடினால் அவன் மன்னிப்பான். ஏனென்றால் நிச்சயமாக அவன்தான் மன்னிக்கக்கூடியவன். மிக்க கிருபை உடையவன் என்று நபியே நீர் கூறுவீராக."

மேற்கில் சூரியன் உதிக்கின்ற வரைக்கும் பாவமன்னிப்பின் வாயில் திறக்கப்பட்டு இருக்கிறது. இதனைத்தான் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பின்வருமாறு கூறினார்கள்: "இரவில் செய்தவர்களின் பாவங்களை பகலில் மன்னிப்பதற்காகவும், பகலில் செய்தவர்களின் பாவங்களை இரவில் மன்னிப்பதற்காகவும் அல்லாஹ் தன் இரு கைகளையும் விரித்திருக்கிறான்- சூரியன் மேற்கில் உதிக்கின்றவரைக்கும்" (முஸ்லிம்)

பாவங்கள் செய்து அல்லாஹ்விடம் பாவமன்னிப்பு தேடுகின்ற மனிதர்களைப் பற்றி அல்லாஹ் தன் திருமறையில் இவ்வாறு குறிப்பிடுகிறான்:

"இன்னும் அவர்கள் எத்தகையோரென்றால் அல்லாஹ்வுடன வேறொரு நாயனை வணக்கத்திற்குரிவனாக பிரார்த்தித்து அழைக்க மாட்டார்கள். அல்லாஹ் தடுத்திருக்கும் எந்த உயிர்களையும் உரிமையின்றி கொலை செய்யமாட்டார்கள். எவரேனும் இவைகளை செய்ய முற்பட்டால் அவர் அதற்குரிய தண்டனையை சந்திப்பார். மறுமைநாளில் அவருக்குரிய வேதனை இரட்டிப்பாக்கப்படும். மேலும் இழிவுபடுத்தப்பட்டவராக அதில் என்றென்றும் தங்கிவிடுவார். இப்பாவங்களில் இருந்து எவர் தவ்பா செய்துகொண்டு நற் செயல் செய்கிறாரோ அவரைத் தவிர. அத்தகையவரின் தீமைகளை அல்லாஹ் நன்மைகளாக மாற்றிவிடுவான். மேலும் அல்லாஹ் மன்னிப்பவனாகவும், கிருபை உடையவனாகவும் இருக்கிறான்". (அல்புர்கான் 68-70)

மொழியாக்கம் : எம்.எம். தௌபீக், சாய்ந்தமருது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துரிதமாக மாறிச் செல்லும் உலகில்

முஸ்லிம் பெண்களின் சமூக உறவு-01

- யஹ்யா ஷரீப் -

சமூக வாழ்வில் பெண்களின் உறவு என்பது மிக முக்கியமான ஒரு விடயமாகும். "ஆண்களின் அடுத்த பகுதியினர் - அடுத்த சம பகுதியினர் பெண்கள்" எனும்போது அடுத்த பகுதியினர் ஒடுக்கப்பட்டு, முடக்கப்பட்டு செயலற்றுக் கிடப்பார்களானால் சமூகம் எழுச்சியடைவதும் தாமதமாகும். எனவே ஆணும், பெண்ணும் சம அந்தஸ்துடையவர்கள் என்ற கண்ணோட்டத்தில் வீட்டிலும், வீட்டிற்கு வெளியிலும் சம அந்தஸ்தோடு அவள் சமூக உறவை அமைத்துக் கொள்ள முடியுமா? என்ற கேள்வி எழுகிறது. இஸ்லாம் வாழ்வின் சகல துறைகளுக்குமான மிதமான தீர்வை வழங்கும் மார்க்கம் என்ற அடிப்படையில் பெண்ணின் சமூக உறவு பற்றியும் மிகத் தெளிவாகப் பேசுகின்றது.

பெண் எதிர்காலப் பரம்பரையை உருவாக்கும் அதி உன்னத பொறுப்பு வாய்ந்தவள். அவளது உடல், உள இயற்கை அமைப்புகள் அனைத்தும் அந்த மகத்தான பணிக்கு ஏற்ப அல்லாஹ்வால் சிருஷ்டிக்கப்பட்டுள்ளன. இதன் பொருள் அவள் வீட்டில் அடைபட்டு ஓர் அடிமையாக முடங்கிக் கிடக்க வேண்டும் என்பதல்ல. அவள் வீட்டை விட்டு வெளியேறி சமூகக்களம், ஏன்? போர்க்களங்கள் வரை செல்வதற்குக் கூட இஸ்லாம் அனுமதித்துள்ளது. ஆனால் அவளது வீட்டுப்பணிக்கு அது பாதகமாக அமைந்துவிடக்கூடாது என்பதில் மிகக் கவனமாக இஸ்லாம் போதனை வழங்குகிறது.

சமூகக்களம் ஆணின் முதன்மையான பகுதி. பெண்ணின் முதன்மையான பகுதி வீடும் குடும்பமுமாகும். சமூகக்களம் அவளின் இரண்டாவது பகுதி. இவ்வாறு இஸ்லாம் ஆணின் மீதும், பெண்ணின் மீதும் விதித்துள்ள கடமைகளையும், பொறுப்புகளையும் ஆழ்ந்து நோக்கும்போது மிக அற்புதமான தொரு சமநிலையை ஆண்-பெண், குடும்பம்-சமூகம் என்ற இருவகை அலகுகளுக்கும் இடையே பேணியுள்ளமையை அவதானிக்க முடியும்.

சமூக சீர்திருத்த முயற்சியிலும் உழைப்பிலும் பெண்ணின் பங்கைப் பொறுத்தவரை மிக அவசியமானது. அந்நியர்கள் இஸ்லாமிய நாட்டின்மீது படையெடுத்து நாட்டுக்குள் நுழைந்துவிட்டால் அனைவர்மீதும் (ஆண், பெண், சிறுவர், பெரியவர்) ஜிஹாத் கடமையாகிறது.

> 1567ம் ஆண்டு ஸ்கொட்லான்ட் பாராளுமன்றம் பெண்களுக்கு எந்த அதிகாரமும் கொடுக்கக்கூடாது என்று சட்டமியற்றியது. இவ்வாறே 8வது ஹென்றியின் காலத்தில் ஆங்கிலேய பாராளுமன்றம் பெண்கள் அசுத்தமாக இருப்பதால் பிஞ்சிலே படிப்பது கூடாது என்று சட்டமியற்றியது. பிரான்ஸ் நாட்டவர் 1586ம் ஆண்டு பெண்கள் மனித இனத்தைச் சார்ந்தவர்களா, இல்லையா என ஆய்வுசெய்து முடிவெடுக்க ஒரு சபையை அமைத்தனர்.

எனினும், சமூகத் தீமைகளுக்கு எதிராக பாடுபடுதல், உழைத்தல் என்பது பெண்களுக்கு கடமையல்ல என்ற மனப்பதிவு பரவலாகக் காணப்படுவதோடு மட்டுமல்லாது, அவ்வாறு உழைத்தல் பெண்களுக்கு களங்கம் விளைவிக்கும் என்ற எண்ணமும் சமூகத்தில் ஆழமாகப் பதிந்துள்ளது. இதுபற்றி, சிந்திப்பதும், இதற்கான இஸ்லாமிய தீர்வு தேடுதலும் அவசியமாகும்.

ஏனைய சமூகத்தில் பெண்களின் நிலை

இஸ்லாத்தின் நிழலில் சமூகத்தில் பெண்களின் சமூக உறவை ஆய்வுக்கு உட்படுத்த முன்னர் பெண்களை மற்ற சமூகத்தினர் எவ்வாறு நடத்திக் கொண்டிருந்தார்கள் என்று புரிந்து கொள்வது இஸ்லாத்தில் பெண்களின் மாண்பை காட்டிட இலகுவாக இருக்கும்.

கிரேக்கர்கள் பெண்களை விற்பனைப் பொருட்களாகவே கருதினர். அவர்களுக்கென எந்த உரிமையும் கிடையாது. 'உரிமைகள் அனைத்தும் ஆண்களுக்கே' என்றனர். அங்கு பெண்களுக்கு சொத்துரிமை, கொடுக்கல் வாங்கல்கள் போன்ற உரிமைகள் தடுக்கப்பட்டிருந்தன. அவர்களில் பிரபல்யம் மிக்க விஞ்ஞானியான 'சாக்ரடீஸ்', *"பெண்கள் இருப்பது உலகின் மிகப்பெரிய அழிவிற்கு மூல காரணம். நிச்சயமாக பெண்கள் விஷ மரத்திற்கு ஒப்பானவர்கள். அம்மரத்தின் புறத்தோற்றம் அழகாக இருக்கிறது. எனினும் அதிலுள்ளதை சிட்டுக்குருவிகள் சாப்பிட்டவுடனேயே மரணித்து விடுகின்றன"* என்றார்.

பெண்கள் விடயத்தில் இந்தியர்களின் கண்ணோட்டமும் இவ்வாறுதான் இருந்தது. கணவன் மரணித்துவிட்டால் அவனோடு சேர்த்து எரித்துவிடுவார்கள் இது 'உடன்கட்டை ஏறல்' எனப்படுகிறது. சீனர்கள் பெண்களை விற்கவும் உயிரோடு எரிக்கவும் செய்தனர். யூதர்கள் பெண்களை சாபத்துக்குரியவர்கள் எனக் கருதினர். ஏனெனில், அவள் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களை வழிகெடுத்து, தடுக்கப்பட்ட கனியை சாப்பிடச் செய்தாள் என்று எண்ணினர். பெண்ணிற்கு மாதவிடாய் ஏற்பட்டு விட்டால் வீட்டையும், பாத்திரங்களையும் அவள் தொட்டால் அசுத்தமாகிவிடும் என்று கருதி ஒதுக்கி வைத்தனர்.

கிறிஸ்தவர்கள் பெண்ணை ஷைத்தானின் முகவர் (Agent) என கருதினர். கிறிஸ்தவ பாதிரியொருவர் "பெண் மனித இனத்தை சேராதவள்" எனக் கூறினார். செம்பூனா பென்தூரா என்ற கிறிஸ்தவன் "நீங்கள் பெண்களைக் கண்டால் அவளை மனித இனத்தைச் சார்ந்தவள் எனக் கருதிவிடாதீர்கள். அவளை ஓர் உயிருள்ள ஜீவனாகக்கூட கருதாதீர்கள். நிச்சயமாக நீங்கள் காண்பது ஷைத்தானின் உருவத்தைத்தான். இன்னும் நீங்கள் செவியேற்கும் சத்தம் பாம்பின் சீற்றம்தான்" என்றான்.

19ம் நூற்றாண்டின் நடுப்பகுதிவரை ஆங்கிலேயர் பொதுச்சட்டப்படி பெண்கள் பிரஜா உரிமை கொடுக்கப்படாத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்களாகவே இருந்தனர். இதுபோன்றே பெண்களுக்கு எவ்வித மனித உரிமையும் கிடைக்கவில்லை. அவள் அணியும் ஆடை உட்பட எந்தப் பொருளையும் சொந்தப்படுத்திக் கொள்ள உரிமை வழங்கப்படவில்லை.

1567ம் ஆண்டு ஸ்கொட்லான்ட் பாராளுமன்றம் பெண்களுக்கு எந்த அதிகாரமும் கொடுக்கக்கூடாது என்று சட்டமியற்றியது. இவ்வாறே 8வது ஹென்றியின் காலத்தில் ஆங்கிலேய பாராளுமன்றம் பெண்கள் அசுத்தமாக இருப்பதால் பிஞ்சிலே படிப்பது கூடாது என்று சட்டமியற்றியது. பிரான்ஸ் நாட்டவர் 1586ம் ஆண்டு பெண்கள் மனித இனத்தைச் சார்ந்தவர்களா, இல்லையா என ஆய்வுசெய்து முடிவெடுக்க ஒரு சபையை அமைத்தனர். 1805ம் ஆண்டுவரை ஆங்கிலேயரின் சட்டத்தில் ஒரு கணவன் தன் மனைவியை விற்பது கூடும் என்றே உள்ளது. மேலும் மனைவியின் விலையை 6 பென்ஸ் அரை ஷிலிங் (ஆங்கிலேய நாணயத்தின் பெயர்) என நிர்ணயித்தார்கள்.

இஸ்லாத்திற்கு முன்புவரை பெண்கள் புண்களாக எண்ணப்பட்டு இழிவான ஈனப் பிறவிகளாகவும் இதயமற்ற மாமிச பிண்டங்களாகவும் கருதப்பட்டு உரிமைகள் பறிக்கப்பட்டு ஒடுக்கப்பட்டார்கள். பெண் பிள்ளை பிறந்தால் உயிரோடு புதைக்கப்பட்டார்கள். இவ்வாறு அகிலம் முழுவதும் பெண்ணினத்திற்கு அளிக்கப்பட்ட கொடூரங்கள் எண்ணிலடங்காதவை. இவை அனைத்து அநியாயங்களை விட்டும் பெண்களைப் பாதுகாக்க இஸ்லாம் வருகை தந்தது. பெண் குழந்தை பிறந்ததை நற்செய்தி என்று குர்ஆன் குறிப்பிடுகிறது. எனினும், ஜாஹிலிய மக்கள் அதனை அபச்செய்தியாகவே கருதினார்கள்.

"அவர்களில் ஒருவனுக்கு பெண் குழந்தை பிறந்துள்ளது என்று நன் மாராயம் கூறப்பட்டால் அவன் முகம் கறுத்துவிடுகிறது. அவன் கோபமுடையவனாகிறான்" (16:58)

இஸ்லாத்தின் பார்வையில் பெண்கள்

பெண்கள் பற்றிய எண்ணக்கரு சமூக நிலை மிகுந்த கருத்துவேறுபாட்டையும் அதிதீவிர கொள்கையையும் அடக்கிய பிரச்சினையாகும். எனினும், இஸ்லாம் சமநிலைப் பண்புகொண்ட கொள்கை என்ற வகையில் எத்தகைய தீவிர நிலையையும் அது தன் அடிப்படைக் கொள்கைகளிலோ, வணக்க வழிபாடுகளிலோ சமூக நடைமுறைக்கான சட்டங்களிலோ கொள்வதில்லை.

பெண்ணை முழுமையாக ஆணாக அல்லது பெண்ணை அனுபவிக்கப்படும் பொருளாக மற்றும் இதுபோன்ற பல்வேறு தீவிர நிலைகளிலும் இஸ்லாம் அங்கீகரிப்பதில்லை. ஆனால் நவீன காலப்பிரிவில் பெண்களை ஆணாகவே பாவிக்கும் இயந்திர சிந்தனை வலுப்பெற்று சமூகங்கள் அனைத்திலும் செல்வாக்கு செலுத்தி வருகின்றன.

உரிமைகளிலும், சட்டங்களிலும் இஸ்லாம் ஆண்களுக்கும், பெண்களுக்கும் இடையே ஒரு சமநிலையை ஏற்படுத்தியிருந்தது.

"மனிதர்களே! நிச்சயமாக நாமே உங்களை ஓர் ஆணிலிருந்தும் பெண்ணிலிருந்தும் படைத்தோம்" (49:13)

இஸ்லாத்தில் ஆண்-பெண் சமத்துவம் என்பது உண்மை. பெண்ணை எல்லா விதத்திலும் ஆணைவிட தாழ்த்திப் பார்ப்பது அவள் மீது இழைக்கப்படும் அநீதி என்பதில் சந்தேகம் இல்லை. எனவே ஆணையும், பெண்ணையும் ஒரே இனமாகப் பார்க்க வேண்டும். பெண்ணை ஒரு போகப்பொருளாக பார்த்து மனித அந்தஸ்தை விட்டுத் தாழ்த்துவது ஒரு பெருங்குற்றம். அவள் மீது இழைக்கப்படும் அநீதிகளுக்கு மூலமாக அமைவது இதுவே.

அதேவேளை ஆணையும், பெண்ணையும் எந்த வித்தியாசமும் அற்ற ஒரே இனமாக காண முனைவதும் பெண்மீது அநியாயங்கள் இழைக்கப்பட காரணமாக அமைந்துவிடுகிறது. நவீனகால மேற்கத்தியப் பெண்களின் வாழ்வு இதற்கு முதன்மையான உதாரணமாகும். இவ்வாறான நிலைகளுக்கிடையே இஸ்லாம் நடுநிலையான சிந்தனையையே முன்வைக்கிறது. இருவருக்கும் சமஅந்தஸ்தைக் கொடுக்கும் இஸ்லாம் சமூக வாழ்வில் இருவரும் ஒருவருக்கொருவர் உதவி வாழ்வது அவசியம் எனக் காண்கிறது.

"ஆணாயினும் சரி பெண்ணாயினும் சரி ஈமான் கொண்டவர்களாக நற்கருமங்கள் செய்கின்றார்களே, இவர்கள் சுவனபதியில் நுழைவார்கள். இன்னும் அவர்கள் கடுகளவும் அநியாயம் செய்யப்பட மாட்டார்கள்". (4:124)

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: "அல்லாஹுத் தஆலா உங்கள் உருவங்களையோ செல்வங்களையோ பார்ப்பதில்லை. மாறாக உங்கள் உள்ளங்களையும் செயல்களையுமே பார்க்கிறான்." (முஸ்லிம்)

மேலும் நபிமொழியொன்று பின்வருமாறு பேசுகின்றது:

"மு.ஃமின்களில் பூரண ஈமான் உடையவர்கள் அவர்களில் அழகிய குண முடையவர். உங்களில் சிறந்தவர் தனது மனைவியிடத்தில் சிறந்தவர்".

"உலகம் மிக இன்பமானது. அந்த உலக இன்பத்தில் மிகச் சிறந்தது நல்லொழுக்கமான மனைவியாகும்"

(முஸ்லிம்)

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் ஒரு மனிதர் வந்து, "மனிதர்களில் நான் அழகிய நற்பண்புடன் நடந்து கொள்ளக்கூடியவர் யார்?" என்று கேட்டார். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் 'தாய்' என்றார்கள். 'பின்பு யார்?' என்று கேட்டார். "உனது தாய்' எனக் கூறினார்கள். 'பின்பு யார்?' எனக் கேட்டார். 'உனது தந்தை' என்றார்கள்"

இவை பெண்கள் பற்றிய இஸ்லாத்தின் சுருக்கமான கண்ணோட்டமாகும். எனவே ஒருவரையொருவர் பூரணப்படுத்தும் இரு சமூக அலகுகளே ஆணும் பெண்ணும் என்பதே இஸ்லாத்தின் கருத்தாகும்.

"கணவர்களுக்கு பெண்களிடம் இருக்கும் உரிமைகள் போன்று முறைப்படி அவர்கள்மீது பெண்களுக்கும் உரிமை உண்டு"

கூலி, தண்டனை வழங்குவதில் இஸ்லாம் சமமாகவே பார்க்கிறது. ஆணைப் போலவே ஷரீஆ விடயங்களில் பெண்ணும் பொறுப்பு மிக்கவள். செல்வம் சேகரிப்பதற்கும் சொத்துக்கு உரிமையாளராக இருப்பதற்கும் கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகளில் ஈடுபடவும் கருத்து வெளியிடவும் அவளுக்கு பூரண உரிமையுண்டு.

இந்த வகையில், இஸ்லாம் பெண்களுக்கு வழங்கிய உரிமைகளைப் போன்று வேறு எந்த மதமோ நாகரிகமோ வழங்கியதை காண முடியாது. வாரிசுச் சொத்தில் தனக்கு ஏற்ற கணவனை தெரிவுசெய்வதில் ஏன் தனக்குப் பொருத்தமின்றேல் கணவனிடத்தில் விவாகரத்து கோரும் அவளுக்குரிய உரிமையையும் இஸ்லாம் வழங்குகிறது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தக்வா உருவாக்கும் சிறந்த குடும்ப அமைப்பு

தமிழில் எம்.ஐ. தௌபீக் - நன்றி: Impact

குடும்ப அமைப்பு என்பது மனித சமுதாயத்தின் ஒரு ஸ்தாபனமாகும். அது அன்பு, கருணை, பாசம் போன்றவற்றின் ஊற்றாகும். குடும்ப அமைப்பு சரிவர அமைகின்றபோதுதான் சமூகத்தில் முன்னேற்றம், சமத்துவம் போன்றவை ஏற்படும். குடும்பம் என்ற வட்டம் ஓர் ஆண், பெண் திருமணத்தின் மூலமே ஏற்படுகிறது. அவ்வாறே அவர்களுடைய உறவின் மூலம் புதிய சந்ததி உருவாகின்றது.

மேலும் குடும்பத்திற்காக அதிகமான கவனத்தையும், நேரத்தையும் வீட்டில் செலவழிக்க வேண்டும். அதிகமான வேலைப்பளு மற்றும் பொருளாதார சுமைகள் காரணமாக இன்று வீடுகள் மனிதர்கள் தூங்குவதற்காக மட்டும் செல்கின்ற விடுதிகள் போன்று மாறியுள்ளன. சில குடும்பங்கள் வீடுகளிலே சாப்பிடுவதுகூட இல்லை.

பெற்றோரைப் பொறுத்தவரை தங்களை விடவும் தங்களது பிள்ளைகள் மகிழ்ச்சியுடையவர்களாகவும் ஆரோக்கியமுடையவர்களாகவும் கல்வியில் அதிக ஈடுபாடுடையவர்களாகவும் இருப்பதையே விரும்புகின்றனர். இஸ்லாம் குடும்ப விடயங்களைப் பொறுத்தவரை ஒரு முக்கியமான இடத்தை கொடுத்துள்ளது.

மேற்குலகில் குறிப்பாக, அமெரிக்காவில் குடும்ப அமைப்புக்கள் பாரிய பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துக் கொண்டிருக்கின்றன. அங்கு கிட்டத்தட்ட 50% க்கு மேற்பட்ட குழந்தைகள் திருமண உறவின்றியே (Out side wedlock) பிறக்கின்றன. குடும்ப வன்முறைகள், சிறுவர் துஷ்பிரயோகம் வயது முதிர்ந்த பெற்றோர்களை துன்புறுத்தல் போன்றவைகள் அச்சமூகத்தில் தலைவிரித்தாடுகின்றன. அங்குள்ள சில மனிதர்கள் இது விடயத்தில் கவனம் செலுத்தி சீர்குலைந்த குடும்ப அமைப்பை மீள கொண்டுவருவதற்கு விரும்புகிறார்கள். ஆனால் இதனை வெறும் போதனைகள் அல்லது எதிர்பார்ப்புக்களினால் மாத்திரம் கட்டியெழுப்ப முடியாது. அந்த சமூகத்திற்கு சிறந்த கொள்கையின் அடிப்படையில் வழிகாட்டப்பட வேண்டும். சிறந்த குடும்ப அமைப்பை மீள கொண்டு வருவதற்கு சரியான கொள்கைகள், ஆன்மிக விடயங்கள் மனிதர்களின் சிந்தனையிலும், இதயங்களிலும் ஆழமாக பதிக்கப்படல் வேண்டும். அப்போதுதான் மனிதர்களுக்கான சட்டங்கள் சமூகத்தில் நிலைநாட்டப்படும். சிறந்த சமூக அமைப்பு ஒன்றை ஏற்படுத்த சில விடயங்களில் கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

முதலில் பாலியல் துஷ்பிரயோகங்கள் தடைசெய்யப்படல் வேண்டும். இவை ஒழுங்கில்லாத முறையில் ஆடை அணிதல், சுதந்திரமான ஆண், பெண் கலப்பு, போதைவஸ்து பாவனை, பாலுணர்வைத் தூண்டும் இலக்கியங்கள், சினிமாக்கள் போன்றவற்றின் ஊடாக ஏற்படுகிறது. சமூக சீரழிவுக்கு காரணமான இவற்றை அடியோடு ஒழித்துக்கட்டாவிடில் சிறந்த குடும்ப அமைப்பை உருவாக்குவது என்பது அசாத்தியமான விடயமாக அமைந்துவிடும்.

மேலும் குடும்பத்திற்காக வேண்டி அதிகமான கவனத்தையும், நேரத்தையும் வீட்டில் செலவழிக்க வேண்டும். அதிகமான வேலைப்பளு மற்றும் பொருளாதார சுமைகள் காரணமாக இன்று வீடுகள் மனிதர்கள் தூங்குவதற்காக மட்டும் செல்கின்ற விடுதிகள் போன்று மாறியுள்ளன. சில குடும்பங்கள் வீடுகளிலே சாப்பிடுவதுகூட இல்லை.

இன்று குடும்ப அங்கத்தவர்களுக்கிடையில் குறைந்தளவு தொடர்பே காணப்படுகிறது. சில இளைஞர்கள் தங்களது பெற்றோருடன் கதைப்பதே கிடையாது. இந்த உறவில் ஏற்பட்ட குறைபாட்டால் பெற்றோரும் பிள்ளைகளும் தங்களுடைய ஓய்வு நேரங்களையும் விடுமுறைகளையும் நண்பர்களுடன் கழிக்கின்ற நிலமை காணப்படுகிறது.

மேலும் இன்று குடும்பங்கள் சிறியனவாகவே மாறிவிட்டன. குடும்பமானது கணவன், மனைவி மற்றும் பிள்ளைகள் மாத்திரம் கொண்டதாகவே காணப்படுகிறது. இது மகிழ்ச்சியின்மையை உருவாக்கும். நோய்கள், பிரச்சினைகள், பொருளாதார கஷ்டம் மற்றும் கணவன் மனைவி அல்லது பெற்றோர் பிள்ளைகளுக்கிடையில் முரண்பாடுகள் ஏற்படுகின்றபோது ஒரு வகையான மன அழுத்தத்தை இது ஏற்படுத்துகிறது. எனவே குடும்பமானது முடிந்தளவுக்கு கூட்டாக வாழ்வது அவசியமாகும்.

இது தவிர குடும்பத்தின் தலைவன் கணவன் என்ற வகையில் குடும்பத்தை நிருவகிக்கும் அதிகாரம் அவனுக்கு வழங்கப்பட்டுள்ளது. குடும்ப அமைப்பு எந்தவொரு கட்டுப்பாடுமின்றி சும்மா செயற்படுவதை இஸ்லாம்

மேலும் இன்று குடும்பங்கள் சிறியனவாகவே மாறிவிட்டன. குடும்பமானது கணவன், மனைவி மற்றும் பிள்ளைகள் மாத்திரம் கொண்டதாகவே காணப்படுகிறது. இது மகிழ்ச்சியின்மையை உருவாக்கும். நோய்கள், பிரச்சினைகள், பொருளாதார கஷ்டம் மற்றும் கணவன் மனைவி அல்லது பெற்றோர் பிள்ளைகளுக்கிடையில் முரண்பாடுகள் ஏற்படுகின்றபோது ஒரு வகையான மன அழுத்தத்தை இது ஏற்படுத்துகிறது. எனவே, குடும்பமானது முடிந்தளவுக்கு கூட்டாக வாழ்வது அவசியமாகும்.

விரும்புவதில்லை. கணவனுக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருப்பது என்பதன் பொருள் சர்வதிகாரியைப் போன்று குடும்பத்தை அடக்குவதற்கான அனுமதியல்ல. இதுபற்றி, ''*உங்களில் சிறந்தவர் தங்களுடைய குடும்பத்திற்கு சிறந்தவரே. மேலும் நான் உங்களை*

(30ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கவிதை நெய்தல் 53 முடிவுகள்

தொகுப்பு:
எம்.ஏ.பாஹிம்

முதலிடம் பெற்ற கவிதை

கவிதை நெய்தல் – 54



கையடக்கம்தான்
கையடக்கக் குர்ஆன்தான்
கல்பினை அடக்குவதும்
குர்ஆன்தான்
ஏ.எச். பர்மின்- மருதமுனை

யாருமில்லையா?

படிக்கப்படுகிறேன்
பாராயணம் செய்யப்படுகிறேன்
நானோ வந்த பணி பாரியது
நாடி வர யாருமில்லையா?

A.W.U. நஸ்ரியா, புத்தளம்

நூலகம்

அறிவியலுக்கு
அடிப்படைகள்
அனைத்தும் கொண்ட
அழகிய நூலகம்

எம்.ஏ.அமீரா, கல்பிடிய

அன்றும் இன்றும்

சுவனத்தின் வரைபடம் கொண்டும்
புதையல் கண்டறியா கூட்டம் அன்று!
மறைதனை
இறையிடம் பெற்றுக் கொண்டும்
சுவனத்தின்
வழி தெரியா கூட்டம் இன்று!

ரம்லா பின்த் ரவுஸ்தீன், நாவலபிடிய

புரட்டு

விஞ்ஞானம், மெய்ஞானம்
அரசியல் ஆன்மிகமென
எல்லாம் படித்தாய்
இன்னும் புரட்டு
வரலாறும் வணிகமும்
படிப்பாய் - ஏன்
கவிதையும் படிப்பாய்
கவனமாய்ப் புரட்டு

நஸீபா சலீம், நேரியகுளம்

தொடுவது எப்போது?

கைகளால் மட்டும் தொட்டு
வாயால் என் வரியை
உச்சரிக்காதே!
மனதால் என்னைத் தொட்டு,
வாழ்க்கையின் வழிகாட்டியாய்,
என்னைத் தொடு

ஜெஸ்லியா, கம்பிரிகஸ்வெவ

மறதி

இப்போதாவது
நினைவு வந்ததா?
இப்படியொரு
நேர் வழி உள்ளதென்று?

என்.எம்.றியாஸ், அக்குரணை

தேடல்

தேடு விடை கிடைக்கும்
ஆழ்ந்த கண்ணோட்டமும்
ஆதார சட்ட மூலமும்
ஆராயும் உன் நோக்கம்
என்ன விடை தேடியோ?

முஹம்மட் நதார், திருமலை

வேத வரிகள்

வீரிந்த வேத நூலின்
வேத வரிகள்
நெஞ்சில் பதிவானால்
பாரும் சீராகும்

எம்.எப்.வஜீஹா, புத்தளம்

ரமழானில் மட்டுமோ..?

மூடிக்கிடந்த நீ
விழித்துக் கொள்ள
மறந்து கிடப்பவனெல்லாம்
உன்முன்
மண்டியிட்டுக் கொள்ளனுமே...!

விதைக் கவி ஏறாவூர் அஷ்ர.ப்

பாவியின் கையில்

ரமழானுக்காக திறந்து
பேருக்காக ஓதி
இறுதியில் மூடும்
பாவியின் கையில் நீ!

அதாரி சஹீர், மடவளை பஸார்

வேத நூல்

ஓத மட்டுமல்ல
உலகையே மாற்ற வந்த நூல்
ஆனால் - இன்று
வெறுமனே படிக்கப்படுகிறது

நாஸிக், புத்தளம்

புதிய உதயமா?

சிலை வணங்கிய கைகளே..!
திருமறையை
சிந்திக்கும் உணர்வு,
இன்றுதான் உதயமானதோ?

றிஸ்னியா நயீமுதீன், ஹெம்மாதகம

நவீன முஸ்லிம்!

நெஞ்சில் ஏந்த வேண்டியதை
கைகளில் மாத்திரம் ஏந்தியதால்
வழிகாட்டக் கூடியவன்
வழி தேடித் திரிகிறான்!

பின்த் பாரூக், மாவனல்லை

அற்புதம்

அற்புதம்
அதனால்
பத்திரப்படுத்தப்படுகிறது
பயன்படுத்தப்படவில்லை

அப்துல் காதர் நஜீமா,கல்முனை

ஒருங்கிணைப்பு

படித்ததும் முடிவிட
இது பாடசாலை சிலபஸ் அல்ல
ஒளியாகவும்..
சேமிப்பாகவும்...
உன்னுடன் ஒருங்கிணைவது

அஸ்மியா நிஸாம், நாவலப்பிட்டி

இனிமை

இசை இனிமை
என்கிறார்களே!
குர்ஆன் ஒதுவதை
கேட்காததினாலோ?

நுஸ்ரா நிஸ்தார், மாவனல்லை

தேடல்

தீர்வு தேடித் தேடி
வீடை காணாத நம் வீழ்ச்சிக்கு
தீர்வு தேடி
தூசு தட்டுங்கள்
இந்த ரமழானிலாவது..

முஹமட் ஸப்றீன், வல்கம்பாய

உணர்ந்து உயிர்ப்பியுங்கள்

'வேதமோதும் சாத்தான்கள்'
பட்டம் பெற்ற பின்னும் ஏன்?
புரியாததைப் புரட்டுகிறாய்?
இந்த ரமழானிலாவது
அதன் அர்த்தம் புரிந்துகொள்ளும்,
முயற்சியில்லையோ?

பாத்திமா சிபானா, அக்கரைப்பற்று

நன்றிகள் ரமழானே!

நன்றிகள் உனக்கு ரமழானே
நீ வந்த பின்தான்
திருமறைகள் துடைக்கப்பட்டு
வீரிக்கப்படுகின்றன...

எம்.ஐ. அஸீஸ் செம்மண்ணோடை

தேடல்

தேவையற்றது என்று
கிழித்துவிட்டாய் அன்று
தேவையானதுதானோ என்று
தாள்கள் தேடி புரட்டுகிறாய் இன்று

நஜாத், நாச்சியாதீவு

நீ ஆழி
சகதிக்குள் குதித்து
இரத்தினங்கள் தேடுவதால்
உனக்குள் மூழ்கி
முத்தெடுக்க நேரமில்லை
இந்த முஸ்லிம்களுக்கு!

பின்த் நஸ்ருதீன், மாவனல்ல

மாமறையே

நீ ஈமானியர்களின் ஈர்ப்பு வீசை
எதேச்சதிகாரிகளுக்கு சவால்
அந்த ஏகனின் யதார்த்தம்
புதைந்துள்ள அமைதிப் பூங்கா

இன்ஸாப் இம்தியாஸ், பேருவளை

முடிவுரை

வாழ்வின் தொடர்கதைகளுக்கு
முடிவுரை அமைப்புக்கள்
தெரியுது குர்ஆனிலே தேடுங்கள்

நுஸ்பா நிஸாம், வெரவத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிகாட்டி

அகிலவுலகத்து வழிகாட்டி
அல்லாஹ்வினால் அருளப்பட்ட
அற்புதமான நூல்
அரசனும் ஆண்டியும்
இது ஓதப்படுமிடத்தில் சரிசமமே!

கல்லடி றொபட்
களுத்துறைச்சிறை

தேடல்

குர்ஆனை
கையில் ஏந்திக் கொண்டு
தேடுகிறார்களாம்
சமாதானத்தை
மூலை முடுக்கெல்லாம்

யும்னா, மாவனல்லை

என்ன பயன்?

ஆராயிரம் ஆயத்துக்களும்
ஒதி என்ன பயன்?
அதில் ஒன்றேனும் உள்ளத்தை
உருக்காதபோது

எஸ்.ஏ.எம். றபீக் கனோலுவ

கற்றுக் கொடுங்கள்

ஊட்டுங்கள்
உங்கள் இளசுகளின்
உள்ளங்களில்
சினிமாப் பாடல்களையல்ல
திருக்குர்ஆன் வசனங்களை

றிஸ்லியா, அக்கரைப்பற்று

ஏனோ?

ஓ மனிதா!
அற்புதங்களை அள்ளித் தந்து
அமைதியையும் தரும்
மறை வேதம் விட்டு
போலி அமைதியை
தேடிச் செல்வது ஏனோ?

தஸ்னீம் பானு, ஒட்டமாவடி

அற்புத மலர்

ரமழானில் பூத்த,
உதிராத உலகப் பொதுமலரே!
உந்தன் அருள்வாடை
இறுதிநாள்வரை,
கறைபடிந்த உள்ளங்களின்
கறையகற்றி சென்றிடும்

சிஹாரா இக்ராம்- இல்லவதுரை

ஓத மட்டும்தானா?

இறைமறையே!
ஆயிரத்து நானூறு
ஆண்டுகளுக்கு முன்
குர்ஆனிய சாம்ராஜ்யத்தை
கட்டியெழுப்பிய நீ
இன்று ஓதலுக்காய் மாத்திரம்
மனிதம் மண்ணாகி விட்டதா?

ரிஷாத், மாதம்பை

உண்மை வேதம்

மதிகெட்டுப் பதிகெட்டு
மாற்றாரின் பார்வையில்
இழிவைத்தாவி..
வாழ்ந்த மானிடனை
மனிதப் புனிதனாக
வாழவைத்த உன்னத வேதம்!

எம்.ரி.எம். யூனுஸ்,காத்தான்குடி

அணையா விளக்கு

அறியாமை இருளகற்ற
ஆயிரம் மாதம் சுமந்த இரவில்,
இறைதூதர்
இதயத்தில் இறங்கியது
அணையா ஒளிவிளக்கு

துறையூரான்

உள்ளங்கள் மறுப்பதேன்?

கைகள் மாத்திரம்
உன்னைத் திறக்க
உள்ளங்கள் ஏன்
இன்னும் திறக்க மறுக்கின்றன?

ஏ.கே.எம். முபஸ்ஸிர், திகழி

சுயசரிதை

இன்றுதானோ
தூசுதட்டித் திறக்கின்றீர்?
ரமழான் முடிய
மீண்டும் அதே இடத்தில் வைத்து
இது சுயசரிதை சொல்லுமளவு
வைக்காதீர்கள்!

பாத்திமா ஷிரோமி அக்கரைப்பற்று

வெற்றிக்கு வழி

மனிதா
என்னைப் படி
இப்பாருக்கு
என்னால் மட்டுமே
வெற்றி நிச்சயம்

றுஜ்ஹான், காத்தான்குடி

திறக்குமா திருமறை?

நீ திறந்திருந்து வரவேற்கிறாய்
புனிதமிக்க ரமழானை!
மனித மனங்களோ - உனை
ரமழானிலேனும் திறக்குமா?

மாவனல்லை முஷ்ரிபா

அவகாசம்

நெஞ்சில் நஞ்சு செருகும்
சினிமாவை
அறுத்துப் பலியிட்டு...,
இதயமதில் இறைமறை சுமந்திட
இன்னுமோர் சந்தர்ப்பம்

நைஜீல், கொழும்பு

நோக்கம்

ரமழானுக்குள்
ஒதி முடிக்கும் நோக்கமோ
ஓதுங்கள்
விளையாட்டுக்கல்ல

ஐ.எம். பாஹிம், மஹாபொத்தானை

புனித வேதம்

தூன்பங்கொள் இதயத்தில்
இன்பங்கொள் வெளிச்சத்தை
இதமாக ஏற்றிவைக்கும்
இவ்வேத வரிகள்
புனிதத்திலும் புனிதம்

யமீன் மொஹமட், மாவனல்லை

பாவ மீட்சி

மறைதந்த வசனங்களால்
கறைபடிந்த கல்பினைக்
கழுவிட இந்த
வசந்தத்தில் யாசிப்போம்

அம்முனா, கல்முனை

நோபல் பரிசு

நேரிய பாதையில்- மனிதன்
நெறியுடன் வாழ
நோன்பு மாதம் தந்த
நோபல் பரிசு

ஜவாஹிர், ஹொரவபொத்தானை

என் ஆயுதம்

போராட என்னிடம்
போராயுதமில்லை
இறைவனின் மறை இருக்கிறது
இயலுமென்றால் வென்றுபார்!

எச்.எஸ்மின் புத்தளம்

நீருற்று

உன் வசன நீருற்றுகள்
எங்கள் இதய சஹாராக்களை
உயிர்ப்பிக்கின்றன-
ஈமானிய ஒளியேற்றி

ரினோஸியா ஸலாம், உயன்வத்தை

மருந்து

தீமையினால் நோயுற்றிருக்கும்
இதயங்களுக்கு
விலை கொடுக்கும்
வாங்க முடியாத அருள்
அல்குர்ஆன்

சிப்னா மஹ்பூல்- பலகத்துறை

ஒற்றுமைப் பாலம்

யூதனின் சதியில்
சிதைந்துபோன
முஸ்லிம் உம்மாவை
குர்ஆனின் வரியில்
இணைத்துப் பார்க்க
ஓதுகிறீரோ?

மறப்பது ஏனோ?

மண்ணை ஆராய்ந்து
விண்ணை ஆராயும் இவர்கள்
இவ்வேதத்தை மட்டும்
ஆராய மறுப்பது ஏனோ?
உண்மை உதயமாகுமென்றோ?

ஹஸானா மன்சூர், மாவனல்லை

புனிதமும், புதுமையும்

உங்கள் வேதனைகள் மட்டுமல்ல
உலக சோதனைகளும்
விரண்டோடும்
குர்ஆனின் புனிதத்தில்
புதைந்திருக்கும்
புதுமை கண்டு

ருஸைனா, மாவனல்லை

கேளுங்கள்

இறைவனின் ஆணையை
இறக்கச் செய்த தீயோரை
அக்கினி நரகத்துள்
அமிழ்த்துவது திண்ணமென
இயம்புகிறது இவ்வேத நூல்

வஸீம் அக்ரம், கஹடகஸ்திகிலிய

அருட்கொடை

அருள்பொழியும் திருமறை
அல்லாஹ் எமக்களித்த தேன்மறை
ரமழான் தந்த பேரருட்கொடை
மாந்தரை வழிநடத்தும் இறைமறை

சஹ்ருல் சலாஹுதீன், உக்குவெல

சின்னம்

திறந்திருக்கும்
திருமறையே - நீ
புனித ரமழானின்
பொற் சின்னமோ?

ஹபீலா .ஏ. லதீப், கலுகமுவ

பெட்டகம்

கற்பனைப் பட்டறையல்ல
இலக்கியப் பெட்டகம்
வீணற்ற உலகை
வழிநடத்த வந்த
வைர எழுத்துப் பெட்டகமே!

ஜசூர் எம். பாவா, சம்மாந்துறை

உதயத்தைத் தேடும் முயற்சியா?

இரத்தம் தோய்ந்த கைகளால்
உதயத்தைத் தேடும்
முயற்சியா இது?

கைரியா நிஸார், தங்கல்ல

தேடல் தொடங்கட்டும்

விரித்தது பார்க்கவல்ல மானிடா
விண்ணிலும் மண்ணிலும்
உன் தேடல் தொடங்கவே

எம்.ஐ. பாத்திமா, நுவரெலியா

அரும்பு

தூசில் நானிருந்தபோது
தூங்கிக் கிடந்தது உம்மத்
தூக்கும் கரங்கள் வந்தபோது
துளிர்த்தெழுகிறேன் மீண்டும்
துளிர்விடும் உள்ளங்களில்!

ரிஸ்லான் பாரூக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீலக் குழந்தையின் இதயம்

Dr. M.L.M. றயீஸ் M.B.B.S. (SL), D.C.H (Colombo), MD (Paed.Col)
சிறுவர் நோய் வைத்திய நிபுணர், ஸ்ரபட்ஷையார் பல்கலைக்கழக வைத்தியசாலை,
மகப்பேற்று மற்றும் சிறுவர்கள் பிரிவு, ஸ்ரோக் ஒன் றென்ற், இங்கிலாந்து.

கடந்த வாரம் திங்கட்கிழமை 10.00 மணியளவில் ஸ்ரபட்ஷையார் பல்கலைக்கழக வைத்தியசாலையின் மகப்பேற்று பிரிவில் இருந்து சிறுவர் நோய்ப்பிரிவிற்கு ஓர் அவசர அழைப்பு வந்தது. ''தற்போது பிறந்த குழந்தை நீலமாக இருக்கிறது; நிறுவர் நோய் வைத்தியர்களில் ஒருவர் உடனடியாக வந்து இந்தக் குழந்தையைப் பாருங்கள்'' என்பதுதான் அந்த அழைப்பு. மகப்பேற்று பிரிவில் பிரசவத்திற்கு பொறுப்பாகவிருந்த தாதியிடமிருந்து வந்த அழைப்பைத் தொடர்ந்து அந்தக் குழந்தையை பார்க்கச் சென்றோம்.

குழந்தைகள் பிறந்தவுடன் அழ வேண்டும் என்பது விதி. குழந்தை அழவில்லையென்றால் நுரையீரல்களுக்கு ஒட்சிசன் செல்லாது. ஒட்சிசன் இரத்தத்தில் சேரவில்லையென்றால் அது குழந்தையை கடுமையாகப் பாதிக்கும். அனேகமான குழந்தைகள் பிறந்து அழ ஆரம்பிக்குமுன் ஒரு சில விநாடிகள் நீலமாகும். அதே நேரம் குழந்தை அழ ஆரம்பித்ததும் நீலநிறம் மெதுவாக மறைந்து Pink ஆக மாறும்.

குழந்தை அழ வேண்டும்; நீலநிறம் மறைந்துவிட வேண்டும். இதுதான் சாதாரணமாக நடக்கின்ற விடயம். ஒருசில குழந்தைகள் உடனடியாக அழுவதற்குத் தயங்கும். இந்நிலையில் செயற்கையாக ஒட்சிசன் கொடுப்பதன் மூலம் குழந்தை நீலமாவதைத் தவிர்ந்து கொள்ள முடியும்.

மகப்பேற்று பிரிவின் கதவருகே நாங்கள் வரும்போது குழந்தை வீறிட்டு அழும் சத்தம் கேட்கிறது. ''நல்லது, குழந்தை அழுகிறது; நீலநிறம் மறைந்திருக்கும்'' என்று என்னோடு வந்த மருத்துவ மாணவருடன் பேசிக்கொண்டே உள்ளே சென்றேன்.

குழந்தை இன்னும் நீலமாகத்தான் இருக்கிறது. தாதி ஒட்சிசன் கொடுத்துக் கொண்டிருந்தாள். ''நான் தொடர்ந்தும் ஒட்சிசன் கொடுத்துக் கொண்டுதான் இருக்கிறேன், ஆனால் குழந்தையின் நீலநிறம் மாறவில்லை'' என்றாள் தாதி.

உடனடியாக குழந்தையை முழுமையாகப் பரிசோதனைக்கு உட்படுத்தினோம். ''நுரையீரல்கள் சரியாகத்தான் இயங்குகின்றன. எனவே வளிமண்டலத்தில் இருக்கும் ஒட்சிசனை பயன்படுத்துவதில் குழந்தைக்கு எந்தவித பிரச்சினையும் இல்லை'' என்று கூறி ஒட்சிசன் கொடுப்பதை நிறுத்தும்படி சொல்லிவிட்டு குழந்தை நீலமாவதற்கான காணங்களை தேடிக்கொண்டிருந்தோம்.

இதயத்தில் அல்லது இரத்த ஓட்டத்தில் ஏதாவது பிரச்சினை இருக்கலாம் என்பதால் குழந்தையின் இதயம் தீவிர பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது. இதயத்தை 'ஸ்கேன்' செய்து பார்த்தபோது விபரீதம் புரிந்தது.

சாதாரணமாக ஒரு மனிதனின் இதயத்தில் நான்கு அறைகள் இருக்கும். இடதுபக்கத்தில் மேலும் கீழுமான இரண்டு அறைகளுக்கிடையே ஒரு 'வால்வு' இருந்து இரு அறைகளுக்கிடையேயான தொடர்பை ஏற்படுத்துகிறது. ஆனால் வலது பக்கத்திற்கும், இடது பக்கத்திற்குமிடையே எந்தவிதமான இணைப்பும் இருப்பதில்லை. அப்படி இணைப்பு ஏதும் ஏற்பட்டுவிட்டால் அது ஓட்டை விழுந்த இதயமாக கருதப்படும்.

இதயத்தின் இடதுபக்கத்திற்கு வரும் இரத்தம் ஒட்சிசன் நிறைந்த சுத்தமான இரத்தம் என்று சொல்லலாம். இந்த இரத்தத்தை பெருநாடி (Aorta) என்னும் மிகப்பெரும் நாடி முழு உடலுக்கும் அனுப்பும். உடற்கலங்கள் தமது செயற்பாட்டிற்கு இந்த சுத்தமான இரத்தத்தை பயன்படுத்தும். அதன்பின்னர் உடற்கலங்களில் இருந்து இதயத்தை நோக்கிவரும் ஒட்சிசன் குறைந்த தூய்மையாக்கப்பட வேண்டிய இரத்தம் இதயத்தின் வலது பக்கத்தில் வந்து சேரும். வலதுபக்க இதயவறையிலிருந்து சுத்தமாக்கப்படுவதற்காக குருதி பெருநாளம் மூலமாக நுரையீரலுக்குச் செல்லும். நுரையீரலில் இருந்து சுத்தமாக்கப்பட்ட இரத்தம் மீண்டும் இடதுபக்க அறையை வந்தடையும். இங்கிருந்து பெருநாடி மூலம் இரத்தம் மீண்டும் உடற்கலங்களை நோக்கிச் செல்லும்.

இவ்வாறு எமது இதயம் ஒரு நாளைக்கு 103,680 தடவைகள் இரத்தத்தை முழு உடலையும் நோக்கி சுற்றி ஓடவைக்கிறது. இதுதான் இதயத்தில் சாதாரணமாக ஏற்படுத்தப்பட்டிருக்கும் அற்புதமான அமைப்பு.

இக்குழந்தை நீலமாக இருக்கின்றதென்றால் சாதாரண இந்த அமைப்பில் ஏதாவது மாற்றங்கள் நிகழ்ந்திருக்க வேண்டும் என்பதை உணர்ந்த நாங்கள் குழந்தையை 'ஸ்கேன்' செய்து (Echo) பார்த்தோம். இடதுபக்கத்தில் இருந்து சுத்தமான இரத்தத்தைக் கொண்டுசெல்ல வேண்டிய அந்தப் பெருநாடி, வலது பக்கத்தில் இணைந்திருந்தது. இதனால் வலது பக்கத்தில் இருந்து சுத்தமாக்கப்பட வேண்டிய இரத்தம் நுரையீரலுக்குச் செல்லாமல் முழு உடலுக்கும் சென்று கொண்டிருந்தது. அதேநேரம் வலது பக்கத்தில் இருந்து சாதாரணமாக நுரையீரலை நோக்கிச் செல்லும் பெருநாளம் இடதுபக்கத்தில் இணைந்திருந்தது. இதிலிருந்து சுத்தமாக்கப்பட்ட ஒட்சிசன் கூடிய இரத்தம் மீண்டும் நுரையீரலுக்கே சென்றது. இவ்வாறு பெருநாடியும், பெருநாளமும் இடம்மாறி அமைந்திருந்ததால்தான் இந்தக் குழந்தை நீலமானது. இந்த நிலை Transposition of Great Arteries என்று அழைக்கப்படுகிறது.

குழந்தை நீலமாகக் காரணம் இதுதான் என்று குழந்தையின் பெற்றோருக்கு எத்திவைத்தபோது அவர்களால் அதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. தாய் வீறிட்டு அழ ஆரம்பித்தாள். தந்தை கண்கள் கலங்க அதிர்ந்துபோய் நின்றுகொண்டிருந்தார். குழந்தை தொடர்ந்தும் வாழ வேண்டுமென்றால் இடம்மாறியிருக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடிகள் இரண்டும் உரிய இடத்தில் பொருத்தப்பட வேண்டும் என்று சொன்னபோது அதை உடனடியாக செய்யும்படி கெஞ்சிக் கேட்டார் தந்தை. தன் குழந்தையை எப்படியாவது உயிர் வாழ வைக்க வேண்டும் என்ற ஆதங்கத்தில் அப்படி பதைபதைத்து நின்றார் அவர்.



குழந்தை ஓர் இயந்திரமாயிருப்பின் உடனடியாக கழற்றி பக்கம் மாற்றிப் பூட்டிவிடலாம். ஆனால் மனிதன் ஓர் அற்புதப் படைப்பு. அதிலும் இதயம் இன்னும் அற்புதம்! அந்த இதயத்தின் நாடிகள் இரண்டையும் இதயத்தில் இருந்து பிரித்து மாற்றி இணைப்பது தற்கால மருத்துவத்தால் முடியுமான காரியம்தான். இருந்தபோதும் நினைத்தவுடன் செய்யக்கூடிய காரியமல்ல அது. இந்தப் பாரிய ஒபரேஷனைச் செய்வதற்கு குழந்தைக்கு ஒரு மாத வயதாவது ஆக வேண்டும்.

'அதுவரையும் என்ன செய்வது? குழந்தை உயிர்வாழுமா?' என்று கேட்டார் தந்தை. 'நாடிகளைப் பிரித்து மீண்டும் சரியாகப் பொருத்துவதற்கு குழந்தையின் வயது ஒரு மாதமாவது இருக்க வேண்டும். ஒரு மாதம் வரைக்கும் அந்தக் குழந்தை இந்த நிலையில் உயிர்வாழ முடியாது. அதற்காக தற்காலிகமாக ஒரு சிறிய ஒபரேஷன் செய்து ஒரு மாதத்திற்கு உயிர்வாழ வைக்க வேண்டும். அதன்பின் பெரிய ஒபரேஷன் மூலம் நிரந்தரமான தீர்வைப் பெற முடியும்' என்று சொன்னபோது தாயுடன் சேர்ந்து அந்தத் தந்தையும் அழ ஆரம்பித்துவிட்டார்.

குழந்தை தொடர்ந்து நீலமாகத்தான் இருந்தது. நான்கு மணி நேரங்கள் சென்றுவிட்டன. தற்காலிக ஒபரேஷனுக்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன. குழந்தையின் காலில் இருந்து ஒரு இரத்த நாளத்தினுள் மெல்லிய கம்பி போன்ற அமைப்பும் (Catheter) அதனுள் ஒரு வகையான பலூனும் சேர்ந்து இதயத்தை நோக்கி மெதுவாக செலுத்தப்பட்டன. கம்பியும் பலூனும் இதயத்தின் வலது பக்க அறையை வந்தடைந்துவிட்டதை ஸ்கேன் மூலமாக உறுதிப்படுத்திக்கொண்டு வலது பக்கத்தின் மேல் அறையில் இருந்து இடது பக்கத்தின் மேல் அறைக்கு கம்பியையும், பலூனையும் அனுப்புவதற்காக இதயத்தின் சுவர் துளைக்கப்பட்டு கம்பியும் பலூனும் இடதுபக்க மேல் அறைக்கு கொண்டுவரப்பட்டன. இந்நிலையில் பலூன் ஊதப்பட்டு வந்த வழிநோக்கி மீண்டும் இழுக்கப்பட்டு இதயத்தின் சுவரில் செயற்கையாக ஒரு ஓட்டை ஏற்படுத்தப்பட்டது. இதன் மூலம் தற்காலிகமாக சுத்தமான இரத்தத்தின் ஒரு பகுதி உடற்கலங்களுக்கு செல்லுவதற்கு வழி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது. இது Baloon Septoplasiy என்று அழைக்கப்படுகிறது.

இது ஒரு தற்காலிக அமைப்பு. இந்த தற்காலிக நிலையில் குழந்தையால் ஓரிரு மாதங்கள் வாழ முடியும். ஆனால் தொடர்ந்தும் வாழ வேண்டுமென்றால் நிரந்தர ஒபரேஷன் செய்ய வேண்டும். நிரந்தர ஒபரேஷன் செய்வதற்கு குழந்தையின் வயது ஒரு மாதமானதும் குழந்தையின் நெஞ்சறையைப் பிளந்து இதயத்தின் சுவரை கழற்றி இடம்மாறியிருக்கும் பெருநாடிகள் இரண்டையும் இதயத்தில் இருந்து பிரித்தெடுத்து மீண்டும் சரியாகப் பொருத்த வேண்டும்.

இந்த ஒபரேஷனைச் செய்வதற்கு ஏறக்குறைய 8 மணி நேரங்கள் எடுக்கும். இன்னும் 3 வாரங்களில் இந்தப் பாரிய ஒபரேஷனை எதிர்பார்த்து அந்தச் சின்னஞ்சிறிய குழந்தை எங்களோடு இப்போது தீவிர சிகிச்சைப் பிரிவில் இருக்கின்றது.

சில குழந்தைகளில் ஏன் இவ்வாறு இதயத்தில் விகாரங்கள் ஏற்படுகின்றன? என்பது மருத்துவ உலகுக்கு தெரியாது. எப்படியோ இவ்வாறான விகாரங்கள் ஏற்படும்போதுதான் அல்லாஹ்வின் அற்புதமான படைப்பின் பெருமை புரிகின்றது. அல்லாஹ்வின் படைப்பாற்றலின் பெருமையை மனிதர்களுக்குப் புரிய வைப்பதற்காக அல்லாஹ் இவ்வாறான விகாரங்களை சிலரில் ஏற்படுத்தியிருக்கிறான் என்று எண்ணத் தோன்றுகிறது. எல்லாமே சரியாக அமைந்துவிட்டால் எவரும் உடலின் அற்புதமான படைப்பைப் பற்றி சிந்திப்பதில்லை. எமது உடலின் அனைத்துக் கலங்களும் எல்லா உறுப்புகளும் சரியாக இயங்கும்வரை நாம் சுகமாய் வாழ முடியும். எங்காவது ஒரு மூலையில் ஏற்படும் ஒரு சிறிய விகாரம் எம்மைக் கட்டிலோடு சேர்த்துவிடும்.

மருத்துவம் முன்னேறியிருக்கிறது. சந்தேகமில்லை. அப்படியிருந்தும்கூட உடலின் முழுமையான தொழிற்பாட்டினையும் விளக்க முடியாமல் இருப்பது 'முன்னேறியிருக்கிறது' என்று நாம் சொல்லும் விஞ்ஞானம் அல்லாஹ்வின் படைப்பை விளக்கவும் தகுதியில்லாமல் பின்தங்கியிருக்கிறது என்பதுதான் உண்மை.

அல்லாஹ் எமது உடலை கச்சிதமாய்ப் படைத்து சமநிலையில் இயங்க வைக்கிறான் என்றால் அது நாம் பெற்ற பாக்கியம். இதனை வாசிக்கும் உங்களின் இதயம் அந்தக் குழந்தையின் இதயத்தைப் போல் நாடிகள் இடம் மாறியிருக்கவில்லை. அப்படி இடம்மாறியிருந்தால் நீங்கள் இப்போது உயிரோடு இருந்திருக்க மாட்டீர்கள்.

இந்தக் குழந்தையில் செய்யப்படவிருக்கும் ஒபரேஷன் அண்மைக்காலத்தில் விருத்தியடைந்த

(30ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடவும் எனது குடும்பத்திற்கு சிறந்தவன்" என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள்.

நபியவர்களின் குடும்ப நிருவாகம் என்பது அதிகம் அன்பு, கருணை கொண்டதாகவே இருந்தது.

குடும்பத்தை சீராக நிருவகிக்க மனைவி கணவனுக்கு செவிமடுப்பவளாகவும், கணவன் மனைவியிடம் ஆலோசனை கேட்பவனாகவும் அவளோடு கலந்துரையாடுபவனாகவும் இருக்க வேண்டும். பிள்ளைகள் கட்டாயம் தமது பெற்றோருக்கு செவிமடுப்பவர்களாகவும், கட்டுப்படுபவர்களாகவும் இருக்க வேண்டும். பெற்றோர் அவர்களுடைய உணர்வுகளுக்கும் கருத்துக்களுக்கும் மதிப்பளிக்க வேண்டும். பிள்ளைகளும் தங்களது உணர்வுகளுக்கு மதிப்பளித்து பெற்றோரை கண்ணியப்படுத்த வேண்டும். நாங்கள் எமது பெற்றோரை கண்ணியப்படுத்தினால்தான் எங்களுடைய பிள்ளைகள் எங்களை கண்ணியப்படுத்துவார்கள்.

விவாகரத்து செய்வதை இஸ்லாம் அனுமதித்தாலும் கூட ஊக்குவிக்கவில்லை. விவாகரத்து சம்பந்தமான நபிமொழி இவ்வாறு கூறுகிறது: *''தலாக் அனுமதிக்கப்பட்ட ஒன்றாகும். ஆனால் அது அல்லாஹ்வின் பார்வையில் மிக வெறுக்கத்தக்க ஒரு விடயமாக இருக்கிறது".*

இந்த அனுமதியானது கணவன், மனைவி இனி சேர்ந்திருக்க முடியாது என்ற இறுதிக்கட்ட நிலையிலேயே எடுக்கப்பட வேண்டும். கணவன், மனைவியான இருவரும் முரண்பாடுகள் தோன்றுகின்றபோது இது விடயமாக அனுபவசாலிகளிடமிருந்து ஆலோசனை பெறத் தவறக்கூடாது.

அநேக விவாகரத்துக்கள் சுயநலம், விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையின்மை, பரஸ்பரம் தங்களுக்குள் மதிப்பைக் கொடுக்காமை மற்றும் இஸ்லாத்தின் வழிகாட்டலை பின்பற்றாமையினாலேயே ஏற்படுகின்றன. எனவே, தங்களுடைய வாழ்க்கையை தக்வாவின் அடிப்படையில் அமைத்துக் கொள்கிறவர்களால் சமுதாய எழுச்சிக்கான சிறந்ததொரு குடும்பத்தை உருவாக்கலாம் என்பது நிச்சயமானது. ■

நீலக் குழந்தையின் இதயம்

மருத்துவமுறை. 20 வருடங்களுக்கு முன்னால் இப்படியொரு ஒபரேஷன் நினைத்துப் பார்க்கக்கூட முடியாமல் இருந்தது. இந்நிலையில் எமது இதயங்கள், நாடிகள் இடம்மாறியிருந்தால்.... சில மணி நேரங்கள் வாழ்ந்துவிட்டு மரணிப்பதைத் தவிர வேறு வழியே இருந்திருக்காது.

இலங்கையிலும்கூட பல சிறுவர்கள் இப்படியான இதயத்துடன் பிறக்கின்றனர். அவர்களுள் 95% ஆனவர்கள் மரணிக்கின்றனர். ஒரு சிலரில் ஒபரேஷன் நடக்கின்றது. இந்தப் பாரிய ஒபரேஷனுக்கு பல மில்லியன்கள் பணம் தேவைப்படுவதால் பலர் பணம் சேர்த்து எடுப்பதற்குள் குழந்தைகள் மரணித்து விடுகின்றன.

உடலின் சமநிலை குலைந்து நோயோடு பிறக்கும் குழந்தைகளையும் நோயோடு வாழும் மனிதர்களையும் பார்க்கின்றபோது அவர்கள் அனுபவிக்கும் துன்பங்களை கண்களால் காணும்போது அல்லாஹ் எம்மீது காட்டும் கருணையின் அளவு புரிகிறது. நிச்சயமாக நாம் அல்லாஹ்வுக்கு நன்றியுள்ள அடிமைகளாக அவனைப் புகழ்ந்து சுஜூதில் அதிக நேரங்கள் கழிப்பதைத் தவிர எமக்கு வேறு வழியில்லை.

ஸக்காத் கேட்டு அலைவோரிடையே முஸ்லிமாத்தின் பணி

கொழும்பில் வீடுவீடாக, தெருத்தெருவாக ஸக்காத் கேட்டுத் திரியும் மக்களை ஒன்றுகூட்டி அவர்களுக்கு இஸ்லாத்தின் போதனைகளை வழங்குகிறது. வாரத்தில் மூன்று நாட்கள் இதற்கென ஒதுக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு கேட்டு வருவோரை அழைத்து வசதியாக அமரச் செய்து, தகுதியில்லாமல் ஸக்காத் கேட்டுத் திரிவதன் பாரதூரங்களை விளக்கி போதனைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

ஐந்து வருடங்களாக இந்தப் பணியினை முஸ்லிமாத் செய்து வருகிறது. இவ்வாறான போதனைகள் நன்கு பலன் அளிப்பதாகவும், தகுதியின்றி ஸக்காத் பெற்று வந்த பலர் மனந்திருந்தி அதனைக் கைவிட்டுள்ளதாகவும் அல்முஸ்லிமாத்தைச் சோர்ந்த டாக்டர் மரீனா தாஹா ரியாய் தெரிவித்தார்.

மணமகன் தேவை

இஸ்லாமிய சூழலில் வாழ விரும்பும் 29 வயது பட்டதாரி முஸ்லிம் யுவதிக்கு இஸ்லாமியப் பற்றுள்ள மணமகனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். சீதனம் வழங்கப்பட மாட்டாது. வீடு, காணி என்பன உண்டு. பெற்றோருக்குப் பின் மணமகளுக்கு வாரிசுரிமை உண்டு.

தொடர்புகளுக்கு

Nikah Service, AH/NS/005,
77, Dematagoda Road, Colombo-9.

மணமகன் தேவை

கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்த கிராமப் புறத்தில் வசிக்கும் இஸ்லாமிய ஒழுக்க நெறிகளுக்கு அமைவான 33 வயதுடைய முன்பள்ளி ஆசிரியைக்கு தகுந்த மணமகன் தேவை. மணமகன் நல்ல மார்க்கப்பற்றுள்ள வராக, சாதாரண குடும்பத்தைச் சேர்ந்த வராக இருத்தல் வேண்டும்.

தொடர்புகளுக்கு:

Nikah Service, AH/NS/006
77, Dematagoda Road, Colombo-9

உங்கள் உறவினருக்கு, உங்கள் நண்பருக்கு அளிக்கும் அன்பளிப்பாக ஏன் ஒரு வருட அல்ஹஸனாத் சந்தா இருக்கக் கூடாது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

தலைப் பெருநாளில் முதல் பரிசு

பின்த் யூனுஸ், மாத்தளை

"மகன்ட கல்யாணத்தை எப்பிடியும் வார நோம்புக்கு முன்னால முடிச்சு வைக்க வேணும்" என்று அடிக்கடி தனது கணவனுக்கு ஞாபகமூட்டிக் கொண்டிருந்தாள் மர்லியா.

நஸீமுக்கு திருமணம் பேசி இப்போது ஒன்றரை வருடங்களும் தாண்டிவிட்டன. பெற்றவர்கள் முடிவுசெய்த திருமணம்தான். இருப்பினும் பெண் வீட்டார் திருமணத்தைப் பிற்போட்டுக் கொண்டே இருந்தார்கள். இதற்கும் காரணம் இல்லாமல் இல்லை. நஸீமின் வாப்பா மகனுக்குச் சீதனமாக இரண்டு இலட்சம் பணத்தை சுளையாகக் கேட்டிருந்தார். இதனால் நிச்சயிக்கப்பட்ட பெண் ஹம்னாவின் தந்தை இரவையும் பகலாக்கி உழைத்துக் கொண்டிருந்தார்.

காமில் ஹாஜியாரின் இளைய மகன் நஸீம். அவருக்கு ஏகப்பட்ட சொத்துக்கள். மூன்றும் ஆண் பிள்ளைகள். மூத்த இருவரையும் கொழுத்த சீதனத்துடன் முடித்துக் கொடுத்த பெருமை அவருக்கு. தனது இளைய மகனுக்கும் சீதனம் எடுக்காமல் முடித்துக்கொடுக்க கௌரவம் இடம்கொடுக்க மறுத்தது. என்றாலும் மகனின் வேண்டுகோளின் பேரில் கொஞ்சம் குறைத்துக் கேட்டதுதான் இரண்டு இலட்சம்.

ஹம்னா வீட்டில் மூத்த பிள்ளை. இன்னும் இரண்டு பெண் பிள்ளைகள் சலீம் நானாவுக்கு. மனைவி ஹலீமா அந்தப் பகுதியிலேயே பெயர்பெற்ற தையற்காரி. சலீம் நானா ஒன்றும் பெரிய தொழில் செய்பவரல்ல. ஒரு கடையில் நாளாந்த சம்பளத்திற்கு வேலை பார்க்கிறார். நல்லொழுக்கத்துடனும், கட்டுப்பாடுடனும் தமது பிள்ளைகளை வளர்த்த பெருமை பெற்றவர்களையே சாரும். உண்மையில் அல்லாஹ் அக்குழந்தைகள் மூலம் அவர்களுக்கு கண்குளிர்ச்சியை ஆக்கியிருந்தான். என்றாலும் மூன்றையும் பெண்ணாகப் பெற்றதுதான் சலீம் நானாவுக்கு கொஞ்சம் மன வருத்தமாக இருந்தது.

தனது மகளின் எதிர்காலம் சுகந்தமானதாக இருக்க வேண்டுமென விரும்பிய சலீம் நானாவும், மர்லியா தாத்தாவும் எப்பாடுபட்டாவது இரண்டு இலட்சம் ரூபாவை சேர்க்கும் முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள்.

ஒருவாறாக சேர்த்த பணத்துடன் தெரிந்தவர்களிடம் கடன்பட்டும் குறித்த தொகைப் பணம் கைக்கு வந்துவிட்டது. உடனே சம்பந்தி வீட்டுக்குச் சென்று திருமணத்திற்கு நாளும் குறித்துவிட்டார் சலீம் நானா. இரு வீட்டிலும் அதற்கான ஏற்பாடுகள் தடல்புடலாக நடைபெற்றுக் கொண்டிருந்தன. தனது மூத்த மகளுக்கு பெரிய இடத்தில் திருமணம் முடித்துக் கொடுக்கும் மகிழ்ச்சியில் கடன்பட்டவைகூட மறந்துபோன நிலையில் மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கிக் கொண்டிருந்தார் சலீம் நானா.

♥ ♥ ♥

ஊரில் கொடுக்க வேண்டிய திருமண அழைப்பிதழ்கள் அனைத்தும் கொடுத்தாகி விட்டது. இனி வெளியூருக்கு கொடுக்க வேண்டிய சில அழைப்பிதழ்கள் மட்டும் எஞ்சி இருந்தன. வெள்ளிக்கிழமை அவற்றை எடுத்துக்கொண்டு காலையிலேயே வெளியூருக்குப் புறப்பட்டுவிட்டான் நஸீம். உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் குறித்த அழைப்பிதழ்களை பரிமாறிவிட்டு ளுஹர் நேரமானதும் அவ்வூர் ஜும்ஆ மஸ்ஜிதுக்குச் சென்றான் நஸீம். அன்று அம்மஸ்ஜிதில் 'சீதனம்' என்ற கருப்பொருளில்குத்பா நடத்தப்பட்டது. சீதனத்தின் சீரழிவையும், மஹரின் மாண்புகளையும் விளக்கமாகவும், தெளிவாகவும் கூறினார் கதீப். அவரது உணர்வூட்டும் உரையைக் கேட்ட பின் சீதனம் எடுத்து மணமுடித்த பலர் அதனைக் கொடுத்துவிடும் மனோநிலைக்கு தள்ளப்பட்டார்கள். அங்கிருந்த இளைஞர் சமூகத்திடம் அவர் இறுதியாகக் கேட்ட உறுதிமொழி நஸீமின் காதுகளுக்குள் இன்னும் எதிரொலித்துக் கொண்டே இருந்தன. "நாளைய ஜன்னாவின் வாரிசுகளே! கைக்கூலி வாங்கி உங்கள் பெறுமதிமிக்க ஆண்மையை அற்ப விலைக்கு விற்றுவிட வேண்டாம். நீங்கள் ஆண்மையுள்ள ஆண்களாக வாழ விரும்பினால் மஹர் கொடுத்து மணமுடித்துக் கொள்ளுங்கள். சீதனம் என்ற சொல்லை உங்கள் அகராதியில் இருந்து இன்றே, இந்த நிமிடமே எடுத்துவிடுங்கள். இந்த உறுதியுடனே இவ்விடத்தை விட்டு நீங்கள் எழுந்துசெல்ல வேண்டும்".

உண்மையில் அங்கிருந்த இளைஞர்கள் பலர் இந்த உறுதியுடன்தான் எழுந்து சென்றிருப்பார்கள் என்று நஸீம் எண்ணினான். அவன் இன்னும் இருந்த இடத்தைவிட்டு எழவில்லை. அவனால் என்ன செய்வதென்று தெரியவில்லை. தான் செய்தது எத்தனை பெரிய பாவமான செயல் என்பதை அவன் அப்போதுதான் உணர்ந்திருந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மஸ்ஜிதில் இருந்து அனைவரும் சென்றுவிட்டார்கள். நஸீம் மட்டும் இன்னும் அவ்விடத்திலேயே உட்கார்ந்திருந்தான். அப்போதுதான் அம்மகத்தான உரைக்குச் சொந்தக்காரரும், அப்பள்ளி ஹஸ்ரத்துமான அந்த மனிதர் அவ்விடம் வந்தார். நஸீமை நல்ல முறையில் அணுகி அவனது பிரச்சினையையும் நல்ல முறையில் தீர்த்து வைத்து அவனை சந்தோஷமாக வழியனுப்பி வைத்தார்.

உறுதியான முடிவுடன் நஸீம் வீடு வந்து சேரும்போது ம.ரிப் நேரமாகிவிட்டது.
அலங்கரிக்கப்பட்டிருந்த வீட்டையும் தனது தந்தையையும் பார்த்த அவனுக்கு சிரிப்பதா, அழுவதா என்று தெரியவில்லை.

♥ ♥ ♥

ஒருவாறாக நஸீம்-ஹம்னாவின் திருமணம் இனிதே நிறைவுபெற்றது. பெரிய பொறுப்பில் இருந்து நீங்கிவிட்ட சந்தோஷத்தில் ஹம்னாவின் பெற்றோர் இருந்தார்கள்.

திருமணம் முடித்து மூன்று நாட்கள்தான். நஸீம் வீட்டில் இருந்தான். நான்காம் நாளே தனது தொழிலுக்குச் சென்றுவிட்டான். இவ்வளவு காலமும் தனது வாப்பாவின் கடையிலேயே மேற்பார்வையாளராய் இருந்த நஸீம் இப்போது வாடகைக்கு ஒரு சிறிய கடையை எடுத்து தனியே நடத்த ஆரம்பித்துவிட்டான். நாட்கள் வேகமாக நகர ஆரம்பித்தன. அவன் தொழில் செய்வதிலேயே தனது முழு நேரத்தையும் செலவிட்டான். இரவில் தாமதித்து வரும் நஸீம் காலையிலேயே வெளியில் சென்றுவிடுவது ஹம்னாவின் உள்ளத்தில் சந்தேக விதையை விதைத்துவிட்டதில் ஆச்சரியம் ஏதும் இல்லைதான். திருமணம் முடித்து ஒரு மாதத்திற்கு மேலாகியும் இன்னும் இருவரும் வெவ்வேறாகவே இருந்தனர். ஹம்னா சிந்தனைவயப்பட ஆரம்பித்தாள்....

தான் கட்டிய மனக்கோட்டைகள் அனைத்தும் மண்கோட்டையாவதைப் போன்ற உணர்வு அவளுக்கு. திருமணம் முடித்து இத்தனை நாட்களாகியும் இவர் ஏன் இன்னும் என்னைப் புரிந்துகொள்ளவில்லை...?

அன்பாகப் பேசுகிறார், எதைக் கேட்டாலும் வாங்கித் தருகிறார், எங்கு வேண்டுமானாலும் கூட்டிச் செல்கிறார். ஆனால் இந்த விடயத்தில் மட்டும்....? சில வேளை அவருக்கு என்னிடம் பிடிக்காத, தவறான பண்புகள் ஏதும் இருக்குமோ, அல்லது இவரது பெற்றோர் இதற்குத் தடையாக இருக்கிறார்களோ....? அல்லது வேறு யாருடனும்.... இனிமேலும் பொறுத்திருக்க திராணியற்றவளாய் நஸீமின் வருகைக்காய் எதிர்பார்த்திருந்தாள் ஹம்னா.

எப்படி, எதைக் கேட்பது என்ற சஞ்சலத்துடன் சாப்பாட்டை முடித்து கைகளைத் துடைத்துக் கொண்டிருந்தவனிடம், "நீங்க ஏன் இவ்வளவு கஷ்டப்பட்டு உழைக்கணும்? மாமாவுக்குத்தான் நிறைய சொத்துக்கள் இருக்குதே!"

"இல்ல ஹம்னா! இனியும் வாப்பாட சொத்த நம்பி இருக்குறதுல நியாயமில்ல. எங்களுக்கெண்டும் நாங்களா ஏதாவது தேடணும் இல்லையா? அதோட எனக்கு பெரிய பொறுப்பும் இருக்கு" என்று கூறியவன் அவளது பதிலை எதிர்பார்க்காதவனாய் படுக்கைக்குச் சென்றுவிட்டான்.

♥ ♥ ♥

காலம்தான் யாருக்காகவும் காத்திருப்பதில்லையே! நோன்பும் அவர்களை வந்தடைந்துவிட்டது. நோன்பிலும் அவன் 'பிஸி'யாகவே இருந்தான். ஹம்னா தனது ஒவ்வொரு தொழுகைக்குப் பின்னும் இறைவனிடம் கையேந்திக் கண்ணீர் விடுவது அவனுக்கும் புரியாமல் இல்லை. தஹஜ்ஜுத் தொழுகையில் கூட இருவருடைய பிரார்த்தனைகளும் ஒன்றையே வேண்டி நின்றன. நோன்பு பொறுமையின் மாதம் என்பதால் நோன்பு முடியும்வரை ஹம்னாவின் பொறுமையும் நீடித்தது.

நாளை பெருநாளாக இருக்குமென ஊர் மக்கள் பேசிக் கொண்டனர். உற்சாகமாக இப்தாரை பள்ளியில் முடித்துவிட்டு நேரகாலத்தோடு வீடு வந்தான் நஸீம். அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துவதற்காக சுன்னத் இரண்டு ரக்அத் தொழுதுவிட்டு தனது அன்பு மனைவியை அன்போடு அழைத்தான். என்றுமில்லாத அந்த அழைப்புக்கு பதில்கொடுக்க ஒரு கணம் தயங்கினாள் ஹம்னா. என்றாலும் தன்னை சுதாகரித்துக் கொண்டு அவனருகே சென்றாள்.

"ஹம்னா! நான் ஒன்ன இரண்டு இலட்சம் ரூபா பணத்தை சீதனமா எடுத்துத்தான் திருமணம் முடிச்சேன். உண்மையில் அது பிழையெண்டு அல்லாஹ் எனக்கு உணர்த்தியது எங்கட திருமணத்திற்கு முதல் நாள்தான். அன்டைக்கே நான் இந்த தொகையை எம்மேல உள்ள கடனா நினைச்சிட்டேன். இத திருப்பி ஒப்படைக்காத வரையில நான் உன்னோட சேர்ந்து வாழ விரும்பல்ல. அது பாவமும் கூட. என்னால நீ எவ்வளவோ கஷ்டப்பட்டன்டு எனக்கும் தெரியும். ஆனா அதவிட பெரிய கஷ்டம்தான் இத நான் திருப்பித் தராட்டி மறுமையில் படவேணும்டு நெனச்சேன். நான் எப்படியும் இந்தப் பணத்தை என்ட கையால உழைச்சி தர வேணும்டு நெனச்சதனாலதான் அல்லாவும் எனக்கு இவ்வளவு சீக்கிரமா இந்த தொகையை சேர்த்து தந்திட்டான். அல்ஹம்துலில்லாஹ் என்னால நீ பட்ட கஷ்டங்கள் அல்லாஹ்வுக்காக மன்னிச்சுக்கோ...!

"இந்தா ஹம்னா இதுல இரண்டு இலட்சம் ரூபா பணம் இருக்குது. இத உண்ட வாப்பாட்ட கொடுத்திடு. இதுல ஆயிரம் ரூபா இருக்குது. இத மஹர் தொகையா வெச்சுக்க. இதுதான் நான் ஒனக்குத் தர என்ட தலைப் பெருநாள் பரிசு" பணத்தை அவளிடம் நீட்டினான் நஸீம்.

அவனது உறுதிமிக்க ஈமானைக் கண்டு வியந்தவளாய், தனக்கு இப்படியொரு இலட்சியக் கணவனையும், பெறுமதி மிக்க பெருநாள் பரிசையும் தந்த இறைவனுக்கு நன்றி செலுத்த சுஜூதில் வீழ்ந்தாள் ஹம்னா நிம்மதியுடன்.

தலைப்பிறை தெரிந்த சந்தோஷத்தில் பள்ளிவாசல் மினாராக்களில் ஒலித்த தக்பீர் முழக்கம் இருவர் வாழ்விலும் ஒரு புதிய அத்தியாயத்தைத் தரக் காத்திருந்தது! ♥

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேகம இஸ்ஸதுல் கரீமா அனாஸ்

ஆசிரியர்கள் கௌரவிக்கப்பட வேண்டியவர்களே!

சர்வதேச ரீதியாக ஒக்டோபர் 6ம் திகதி 'ஆசிரியர் தினம்' எனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. ஆசிரியர்களுக்கென்றே ஒரு தினம் ஒதுக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்க விடயமாகும். ஆசிரியர்களின் உரிமைக் குரல்களை வெளியிடுவதற்கான ஓர் அரிய சந்தர்ப்பம் இதுவாகும்.

கல்விக்கு உயிர்கொடுப்பவர்கள் ஆசிரியர்கள். ''கல்விக்கு உயிர் கொடுப்பவன் மரணிக்க மாட்டான்'' என்றொரு பொன்மொழியும் நம்மை உயிரூட்டிக் கொண்டிருக்கிறது. ஆம், ஆசிரியர்கள் கல்விக்கு உயிர்கொடுக்க ஆணிவேராக நிற்பவர்கள்; மரணித்தாலும் மரணிக்காதவர்களே என்றுதான் சொல்ல வேண்டும்.

தாம் கல்வி ஊட்டிய ஒவ்வொரு மாணவர்களதும் உள்ளங்களில் அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களை போற்றவும் புகழவும், வாழ்த்துக் கூறவும் இந்த ஒரு நாள் போதாது. நாள்தோறும் அவர்கள் நினைவுபடுத்தப்படக் கூடியவர்கள்; பாராட்டப்பட வேண்டியவர்கள். எனினும், எந்நாளுமே போற்றப்படாத இந்த ஆசிரியர்களுக்கு அந்த ஒருநாளும் பெருநாள்தான்.

அல்குர்ஆன், அல்ஹதீஸ் கொண்டு உருவான இஸ்லாம், கல்விக்கு மிக உயர்வான முக்கியத்துவத்தை வழங்கியுள்ளது. 'ஓதுவீராக!' என்ற முதல் வாக்கியமே நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு முதல் வாக்கியமாக வஹி மூலம் அருளப்பட்டது. அன்றிலிருந்து மக்களுக்கு கல்வி அறிவு அவசியம் என்பது தெளிவுபடுத்தப்பட்டது.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், அவர்களைத் தொடர்ந்து வந்த ஸஹாபிகள் அவர்களைத் தொடர்ந்தோர் யாவருமே கல்விக்கு முக்கியத்துவம் அளித்திருக்கிறார்கள். ஆசிரியர்களுக்கு கௌரவம் அளித்திருக்கிறார்கள். இமாம்கள் பாடம் நடத்தும் மஜ்லிஸ்களை கண்ணியப்படுத்தியிருக்கிறார்கள். தூய்மையாக வெள்ளை உடை அணிந்து சென்றிருக்கிறார்கள். எல்லாத் துறையிலும் கல்வியைக் கற்றிருக்கிறார்கள். எனவே கல்வியும், கல்வியை வழங்கும் ஆசானும் மதிக்கப்பட வேண்டும்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியிருக்கிறார்கள் ''நீ கற்பவனாக இரு; அல்லது கற்றுக் கொடுப்பவனாக இரு; அல்லது கற்பதற்கு உதவுபவனாக இரு; நான்காம் நபராக இருந்துவிடாதே'' என்று கூறியிருப்பதன் மூலம் ஒருவருக்கு அறிவு எந்தளவுக்கு தேவைப்படுகிறது என்பதை அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கிறது. ஆகவே, நாம் எப்படியாவது அறிவைத் தேடிப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

அறிவை வழங்குகின்ற ஆசிரியர்கள் ஏணியையும், தோணியையும் போன்றவர்கள். இவர்கள் அடுத்தவர்களை உயர்த்திவிட்டு, கரைசேர்த்துவிட்டு தாங்கள் அந்த இடத்தில் மெழுகுவர்த்தியாய் உருகிக் கொண்டிருக்கிறார்கள். இவர்களின் இன்றைய நிலை மிகவும் பரிதாபத்துக்குரியது. இவர்கள் பாடசாலையில் மட்டும், மாலை நேர வகுப்புக்களில் மட்டும் ஆசிரியர்களல்ல. வீடு சென்றாலும் எந்நேரமும் ஆசிரியர்களாகவே தொழிற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

புதிய கல்விச் சீர்திருத்தத்தின் கீழ் கணிப்பீடு என்ற புதிய திட்டமானது ஆசிரியர்களின் வேலைப்பளுவை மேலும் அதிகரித்துள்ளது. இவர்களுக்கு நிம்மதியே இல்லை. கணிப்பீடு மட்டுமா? ஆசிரியர்கள் அறிவை அள்ளி வழங்குவதற்காக ஒவ்வொரு நாளும் ஆயத்தமாக வேண்டியிருக்கிறார்கள். அதற்காக தேடவேண்டியுள்ளார்கள். இதனால் தனது பிள்ளைகளை சிறப்பாக கவனிக்க நேரமில்லை. கணவனின் அல்லது மனைவியின் வேலைகளை உரிய நேரத்திற்கு செய்துகொடுக்க வழியில்லை. அதனால் அவர்களுக்கிடையில் பிரச்சினைகளும், மனக்கசப்புகளும் ஏற்பட வழிபிறக்கிறது. இந்நிலையில் மனைவிக்கு தொழிலே தேவையில்லை என எச்சரிக்கிறார் கணவர். வீட்டின் பொருளாதார நிலை காரணமாக தொழிலை விடவும் முடியாத நிலை...!

மாணவ சமுதாயத்திற்கு கல்வி கற்றுக்கொடுக்க ஆயத்தமாவதால் தனது பிள்ளையின் கல்வியைக் கவனிக்க நேரமில்லாது தடுமாறுகின்றனர் ஆசிரியர்கள். அடுத்த பிள்ளை தலையைத் தடவினால் தன் பிள்ளை தானே வளரும் என்ற முதுமொழியை வைத்துக் கொண்டு தன் பிள்ளைக்கு அல்லாஹ் அறிவை வழங்குவான் என்று கூறி அல்லாஹ்வின் பக்கம் விட்டு விடுகிறார்கள் சிலர்.

இருந்தாலும் ஆசிரியர்களின் பிள்ளைகள் கெட்டிக்காரப் பிள்ளைகளாக இருக்கிறார்கள்தான். அதற்காக மற்றப் பிள்ளைகள் கெட்டிக்காரப் பிள்ளைகள் அல்ல என்பதல்ல. தொழிலே செய்யாத பெற்றோரின் பிள்ளைகளும் வறுமையில் வாழ்ந்த பெற்றோரின் பிள்ளைகளும் இன்று பல்கலைக்கழகங்களிலும், கல்விக் கல்லூரிகளிலும் என உயர் கல்வி பெறுகிறார்கள். இவர்கள் இவ்வாறு சென்று உயர்கல்வி கற்க காரணம் யார்? பெற்றோரா? இல்லவே இல்லை. ஆசிரியர்கள்தான் என்பதில் உளரூர மகிழ்ச்சி ஏற்படுகிறது. ஒரு பிள்ளை பல்கலைக்கழகம் செல்வதாக இருந்தால் முதன்முதலில் சந்தோஷப்படுவது ஆசிரியரேதான். பல்கலைக்கழகம் செல்லாமல் தடைப்பட்டால் கவலைப்படுவதும் ஆசிரியர்தான்.

ஆசிரியர்களை அந்நிய மதத்தினர் மிகவும் மதிக்கிறார்கள்; கௌரவப்படுத்துகிறார்கள்; அடிபணிகிறார்கள். அவர்கள் பாடசாலைக்குச் செல்லும்போது பெற்றோரைக் கௌரவப்படுத்திச் செல்கிறார்கள். அதேபோல் பாடசாலையில் ஏதாவது விளையாட்டு, கலை நிகழச்சிகளுக்கு பங்குபற்றச் செல்லும்போது வெற்றிலை வைத்து இருகரம் கூப்பி ஆசிரியர்களின் காலையும் தொட்டு வணங்கிவிட்டுச் செல்லுமளவுக்கு அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்களை மதிக்கிறார்கள். இது இஸ்லாத்தில் அனுமதிக்கப்பட்டதல்ல. இது ஷிர்க்கிற்கு இட்டுச் செல்லக்கூடியது. ஆனால் இஸ்லாமிய சமூகமோ மாணவர்களை ஏற்றிவிட்ட ஏணியை கீழ்நோக்கிப் பார்ப்பதில்லை. பாடசாலைக் காலங்களில் மட்டும் ஆசிரியருடன் நல்ல முறையில் பழகினாலும் பாடசாலையை விட்டு விலகியதும் ஆசிரியர்களைக் கண்டுகொள்ள மாட்டார்கள். பேசுவதற்குத் தயங்குவார்கள். ஏதும் உதவி ஒத்தாசைகள் புரிவதில் பின்னிற்பார்கள்.

ஆசிரியர் என்பவர் மாணவர்களுக்கு கல்வியை மட்டும் வழங்குவதில்லை. ஒழுக்கத்தையும் சேர்த்தே வழங்குகிறார்கள். அதனை மாணவர்கள் தமது வாழ்க்கையில் எடுத்து நடப்பதில்தான் வித்தியாசம் உள்ளது. நல்ல விடயங்களையும், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் முன்மாதிரிகளையும் எடுத்துக் கூறி ஒழுக்க விழுமியங்களையும் மாணவர்களிடம் பதிக்கிறார்கள்.

மாணவர்களின் தாய் செய்யும் பணிக்கு அடுத்த பணியை ஆசிரியர்களே செய்கிறார்கள். புத்திமதி கூறுதல், ஆலோசனை வழங்குதல் என்ற பலவாறான கல்வி வகைகளைப் புகுத்தும்போது அதனை சில பெரிய மாணவர்கள் தவறாகப் புரிந்து கொள்கிறார்கள். புரிவது மட்டுமா, குறிப்பிட்ட ஆசிரியருக்கு எச்சரிக்கை விடக்கூடிய அல்லது பின்னால் ஏசித்திரியக் கூடிய மாணவர்களாகி விடுகிறார்கள்.

நிச்சயமாக கல்வியும் ஒழுக்கமும் சேர்ந்து வளர்வதில்தான் கல்வியின் சிறப்பு தங்கியிருக்கிறது. ''கல்வியும், ஒழுக்கமும் நாணயத்தின் இரு பக்கங்களைப் போன்றவை''. இதனையே பாடசாலையில் ஆசிரியர்கள் கற்றுக் கொடுக்கிறார்கள்.ஆனால் சில மாணவர்களை அவர்களது வீட்டுச் சூழல் மாற்றி விடுகிறது. ஆசிரியர்கள் அல்லாஹ்வுக்குப் பயந்து தமது கல்வியை வழங்கக்கூடிவர்களாக இருக்கிறார்கள்; தாம் பெற்ற கல்வியை ஆன்மிகத்துக்காகப் பயன்படுத்துகிறார்கள். ஓரிருவர் இவ்வுலக இலாபத்துக்காக தனது கல்வியைப் பயன்படுத்துவதாக இருக்கலாம். இவர்களுக்கு மறுமையில் நிச்சயம் கேடுதான்.

''ஒரு சிறந்த ஆசிரியர் மறுமையில் அல்லாஹ்வினால் கிரீடம் அணிவிக்கப்பட்டவராகக் காணப்படுவார்'' என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள்.

கல்வியைத் தேடுவது இஸ்லாத்தின் உயிர்நாடி. ஓர் ஆசிரியன் கல்வியைக் கொடுப்பதற்காக மாணவனைத் தேடிக் கொண்டிருக்கிறார்.

அறிவைத் தேடியலையும் ஒருவன் அவன் திரும்பும் வரையில் அல்லாஹ்வின் பாதையில் இருப்பதாக அல்ஹதீஸ் கூறுகிறது.

அந்த வகையில் ஆசிரியர்களும் மாணவர்களும் கல்வியைத் தேடியலைபவர்களாகவே உள்ளனர். மாணவர் சமுதாயத்தை எதிர்காலத்தின் உத்தமர்களாக மட்டுமன்றி ஒரு வைத்தியராக, பொறியியலாளராக, சட்டத்தரணியாக, ஒரு கல்விமானாக உருவாக்குவதில் முழுமூச்சோடு ஈடுபடுபவர்களே என்றால் மிகையாகாது. ஒரு சிறந்த ஆசிரியர் ஒரு சிறந்த மாணவனை சமூகத்தில் உருவாக்கினால் அந்த மாணவனைக் காணும்போதெல்லாம் ''என்னால் உருவாக்கப்பட்ட ஒருவன்'' என மன மகிழ்ச்சியோடு கூறிவிடலாம். அவ்வாறான சந்தோஷங்களைப் பெற்றுக் கொள்வதில் ஆசிரியர்கள் தற்போது ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆசிரியர் சேவையே நாட்டின் இன்றைய அவசியத் தேவையாக உள்ளது.

சற்றுக் கீழிறங்கி ஆசிரியர்களின் நிலையைப் பார்த்தால் மிகக் கவலைக்குரியதாக இருக்கும். அதாவது சிறிய கைக்குழந்தைகளைப் பெற்றுவிட்டாலோ அந்தோ பரிதாபம்! சிலருக்கு குழந்தையைக் கவனிக்க குடும்பத்தில் பல பேர் இருப்பார்கள். ஆனால் எல்லா அரசாங்கத் தொழில் செய்பவர்களுக்கும் அப்படி இல்லை. பெற்றோர்கள் வயோதிபர்களாக இருக்கலாம். அல்லது தனிக்குடித்தனம் என்று சொல்லும்போது ஆதரவளிக்க ஒருவரும் இல்லாதிருக்கலாம். இவ்வாறான நிலையில் குழந்தையும் வளர்க்கப்பட வேண்டும். நான்கு மாதங்கள் வரை தாய்ப்பாலை தவிர வேறெந்தப் பாலும் குழந்தைக்கு ஊட்டக்கூடாது என்பது வைத்திய ஆலோசனை. இருப்பினும் நான்கு மாதங்களின் பின் வேலைக்குச் செல்ல வேண்டிய ஒரு ஆசிரியர் இரண்டு, மூன்றாம் மாதத்திலேயே குழந்தைக்கு புட்டிப்பால் பழக்க வேண்டி ஏற்படுகிறது. கூடவே ஒரு வேலைக்காரியையும் பழக்க வேண்டி ஏற்படுகிறது. வேலைக்காரி கிடைக்காவிட்டால் குழந்தை பலரிடமும் மைமாறி தாய்ப்பாசம் குன்றி வளர்கிறது. இவ்வாறு எத்தனையோ பிள்ளைகள் நேரத்துக்கு உணவின்றி, குளிப்பின்றி அன்பு இன்றி, ஆதரவின்றி வளர்க்கப்படுகின்றனவே பரிதாபம்!

இதுதவிர இத்தியாதி பிரச்சினைகளுக்கு மத்தியில் அடுத்தவன் பெற்றெடுத்த பிள்ளையின் கல்விக்காக, தன் பிள்ளையின் சுகமான வாழ்க்கையை தூக்கி எறிந்துவிட்டு கடமையே கண் என்று செயற்படுகிறார்களே, தியாகம் செய்கிறார்களே! இவர்கள்தான் ஆசிரியர்கள். பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவர்கள். இவர்களின் இந்நிலைமைகளை மாணவர்கள் புரிந்து கொண்டார்களானால் ஆசிரியர்களை மதிக்கக்கூடியவர்களாகவும், தன் கல்வியில் கூடிய அக்கறை செலுத்தக் கூடியவர்களாகவும் இருப்பார்கள். இருப்பார்களா?

எனவே ஆரிசியர்கள் சமூகத்திற்கு ஒளிகொடுக்கும் மின்மினிப் பூச்சியைப் போன்றவர்கள். ஆசிரியர்களின் திறமையான சேவைகள் இல்லாவிட்டால் பாடசாலை எனும் நிறுவனம் செயற்படாமல் நின்றுவிடும். எதிர்காலத் தலைவர்களை உருவாக்கும் முயற்சியில் இரவுபகலாக ஓயாது உழைத்துக் கொண்டிருக்கும் ஆசிரியர்கள் இன்று இலங்கையில் இலட்சத்திற்குமேல் இயங்கிக் கொண்டிருப்பதால் இலங்கையின் எழுத்தறிவு வீதம் 94% என அண்மைய தரவுகள் கூறிக் கொண்டிருக்கின்றன. ஆசியாக் கண்டத்தில் இரண்டாவது இடத்தை வகிப்பதில் ஆசிரியர்களுக்கு உள்ளூர மகிழ்ச்சியல்லவா?

சமூகத்தில் விஞ்ஞானியையும், பொறியலாளனையும், வைத்தியனையும், சட்டத்தரணியையும் இன்னம் பல தொழில்வான்மையாளர்களையும் உருவாக்கியவன் யார்? ஆசிரியன்தானே! இந்த ஆசிரியப் பெருந்தகைகள், வானில் மின்னும் தாரகைகள் போல் என்றும் மிளிர அவர்கள் அந்த ஒரு நாளிலாவது வாழும்போதே வாழ்த்தப்பட வேண்டியவாகள்.

வாழ்க அவர்கள்! வளர்க அவர்கள் பணி! ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேள்வி – பதில்

"ரமழானில் பள்ளிவாசலோடும், தொழுகை, குர்ஆன் என்பவற்றோடும் நெருக்கமான தொடர்பு வைத்துக் கொண்டிருக்கும் பலர் நோன்பு முடிந்தவுடன் மார்க்கத்தை விட்டு தூரமாகிவிடுகிறார்கள். ஷைத்தான்கள் விலங்கிடப்படுவதுதான் இதற்குக் காரணமா?" என வினவுகிறார் ஒரு வாசகர்.

நோன்பு முடிந்தால், மார்க்கம் முடிந்ததா?

அதுவும் ஒரு காரணமாக இருக்கலாம். எனினும் அதனை விட முக்கியமான காரணங்களும் இருக்கத்தான் செய்கின்றன. அவற்றுள் ஒன்று ''ரமழான் தரும் அவகாசமும், மார்க்கம் பற்றிய எமது கண்ணோட்டமும்"

முதலில் மார்க்கம் பற்றிய எமது கண்ணோட்டத்தை நோக்குவோம். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கொண்டு வந்து, உலகில் அறிமுகம் செய்து, செயல்படுத்திக் காட்டிய மார்க்கம் வேறு, நாம் இன்று விளங்கியிருக்கின்ற மார்க்கம் வேறு.

நபிகளார் கொண்டு வந்த மார்க்கம், ஒரு வாழ்க்கை முறையாகவும், ஒரு நாகரிகமாகவும், உலகின் பிரச்சினைகள் அனைத்தையும் தீர்க்கக்கூடியதாகவும், உலகத்துக்கு தலைமைத்துவத்தை வழங்கி வழிநடத்தக்கூடியதாகவும், உலகில் நன்மைகளை வளரவைத்து தீமைகளை அழித்தொழித்து நீதியை நிலைநாட்டும் வல்லமை கொண்டதாகவும் விளங்கியது.

அத்தகையதொரு மார்க்கம் அதன் உன்னத நிலையிலிருந்து வீழ்ச்சியுற்று, உடைந்து, தேய்ந்து, மறைந்து 1400 வருடங்களின் பின்னால் சில நடைமுறை எச்சமிச்சங்களோடு இன்று எஞ்சியிருக்கிறது.

அந்த மிச்சங்களை மட்டுமே ''நிறைவான மார்க்கம்" என்று கருதும் நிலைதான் இன்று எம்மத்தியில் காணப்படுகிறது. இதுதான் மார்க்கம் பற்றிய எமது கண்ணோட்டம்.

மார்க்கம் பற்றிய எமது கண்ணோட்டத்திற்குள் கல்வி, பொருளாதாரம், விஞ்ஞானம், தொழில்நுட்பம், அரசியல், சமூகவியல், தலைமைத்துவம், ஐக்கியம், ஒருமைப்பாடு, நீதி, நிருவாகம், பாதுகாப்பு, சமூக அமைப்பு, மனித நலன், மனித நேயம், சகோரத்துவம், வாய்மை, நேர்மை, சமூக உறவுகள், கொடுக்கல் வாங்கல், வியாபாரம், திருமணம், சொத்துப் பங்கீடு, பேச்சு,நாகரிகம், குடும்ப விவகாரங்கள்..... என்று எதுவும் இடம்பெறுவதில்லை

மாறாக, மார்க்கம் பற்றிய எமது கண்ணோட்டம் மிகச் சிறியதொரு எல்லைக்குள் முடங்கிக் கிடக்கின்றது.

எமது கண்ணோட்டத்தின் எல்லைக்குள் அடங்கியிருக்கும் அம்சங்களை நாம் விரல்விட்டு எண்ணிவிடலாம்.

தொழுகை, நோன்பு, குர்ஆன் ஓதல், தவ்பா இஸ்திஃபார், சதக்கா, ஹஜ், உம்ரா, ஜனாசாக் கடமைகள், திருமணத்தில் ஈஜாப் கபூல், போன்ற சில நற்செயல்களும் தான் நாம் மார்க்கம் என்று நினைத்திருக்கின்ற எல்லைக்குள் அடக்கம்.

இவற்றுள் தீயவை என்று நாம் கருதும் சிலவற்றைத் தவிர்த்து நல்லவைகள் என்று நாம் பட்டியலிட்டிருப்பவைகளைச் செய்வதற்கு அரியதொரு சந்தர்ப்பமாக ரமழான் அமைந்துவிடுகிறது.

இந்த வகையில் ரமழான் பலருக்கு மன நிறைவைத் தருகிறது. அதாவது அவர்கள் மார்க்கம் என்று நினைத்திருந்தவைகளை முழுமையாகச் செய்துவிடும் அவகாசத்தை அவர்கள் ரமழானில் பெற்றுக்கொள்கிறார்கள். ரமழான் முடிந்ததும் அந்த அவகாசமும் முடிந்துவிடுகிறது. அவர்களும் மார்க்கத்திலிருந்து தூரமாகிவிடுகிறார்கள். இனி அடுத்த ரமழான் வரவேண்டும்- மீண்டும் அந்த அவகாசத்தை பெறுவதற்கு.

இது எப்படிப் போன்றது எனின் வேளாண்மை மட்டும் தெரிந்த ஒருவர் அதற்குரிய பருவம் வந்தவுடன் உற்சாகமாகச் செயற்பட்டு அறுவடையோடு ஓய்வு பெறுவதாகும். தொழில் என்றால் அவருக்கு வேளாண்மை மட்டும்தான். எனவே அதற்குரிய பருவம் வந்தவுடன் அவர் இயங்கத் துவங்குகிறார். முடிந்தவுடன் ஓய்வு பெறுகிறார்.

இதேபோன்று மார்க்கம் என்றால் இவ்வளவுதான் என்ற நோக்குடையவர்கள் அதற்குரிய காலமாக ரமழானைக் கூறுகிறார்கள். ரமழான் முடிந்தவுடன் ஓய்வு பெறுகிறார்கள்.

இதற்கு மார்க்கம் போதிப்பவர்களும் ஒரு வகையில் காரணமாக இருக்கிறார்கள்.

ரமழான் வருகின்றபோதெல்லாம் நன்மைகளைக் கொள்ளையடிக்கின்ற மாதம் வருகின்றது தயாராகுங்கள் என்பதுபோலத்தான் இவர்களின் போதனை அமைகின்றது.

இஸ்லாம் பற்றிய முழுமையான கண்ணோட்டமுள்ளவர்களுக்கு இவ்வாறு போதனை செய்வது தவறல்ல. இஸ்லாமே இவ்வளவுதான் என்று அதன் கண்ணோட்டத்தை சுருக்கிக் கொண்டவர்களுக்கு இவ்வாறு போதனை செய்தால் அவர்கள் தாம் நினைத்திருக்கின்ற மார்க்கத்தை செயல்படுத்தும் ஒரு பருவமாகத்தான் ரமழானை நோக்குகின்றார்கள். பருவம் இருக்கும்வரை அவர்களிடம் உற்சாகமும் இருக்கிறது. பருவம் முடியும்போது அவர்களிடமிருந்த உற்சாகமும் விடைபெற்றுவிடுகிறது.

எனவே இத்தகைய நோன்பாளிகளைக் குறை கூறுவதில் பயனில்லை. இவர்கள் விளங்கி வைத்திருக்கின்ற மார்க்கம்தான் இந்தத் தவறு இடம் பெறுவதற்கு காரணமாக அமைகின்றது.

மார்க்கத்தை இவர்கள் முழுமையாக விளங்கவில்லை. அது மட்டுமல்ல மார்க்கத்தை இவர்களுக்கு சொல்லிக் கொடுத்தவர்களும் அரை குறையான மார்க்கத்தைத்தான் முழுமையானது என்று இவர்களை நம்ப வைத்திருக்கிறார்கள்.

இந்த அடிப்படைத் தவறை நீக்க முடியுமாக இருந்தால் ரமழானைப் பயன்படுத்துவோரின் குறைகளையும் நீக்கிவிடலாம், இன்ஷா அல்லாஹ். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல பழக்க வழக்கங்கள் என்னைக் கவர்ந்தன

கார்ள் தஸ்லோ எனும் அமெரிக்கப் பெண்மணி 1951ல் அமெரிக்காவில் நியுயோர்க் நகரில் பிறந்தவர். திருமணம் முடித்தவர். அவர் அமெரிக்காவில் ஒரு யூதக் கம்பனியில் முகாமையாளராக வேலை செய்கிறார். யூனுஸ் என்கின்ற சங்கையான ஜோர்தானிய குடும்பத்தின் நல்ல பழக்கவழக்கங்கள், நற்குணங்கள் அவர்களது நிம்மதியான வாழ்க்கை முதலியன அவரை இஸ்லாத்தைத் தழுவத் தூண்டின.

அவர்கள் மார்க்கத்தைப் பின்பற்றும் முறை, அவர்களது சுத்தம், நடைமுறைகள் அனைத்தும் தன்னை கவரக்கூடியதாக இருந்தது என்றும் அவர் கூறினார். அவர் சஊதி அரேபிய 'அல்ரியாத்' நாளிதழுக்கு அளித்த பேட்டி இது.

கேள்வி: நீங்கள் இஸ்லாம் மார்க்கத்தை தழுவியதன் பின்னணி என்ன?

பதில்: இஸ்லாத்தில் மன்னிப்பு, சங்கையான வாழ்க்கை, பரஸ்பர உறவு, நற்குணங்கள் ஆகியவை அடங்கியுள்ளன. அது கருணை காட்டும் மார்க்கம். எல்லா நேரங்களுக்கும், எல்லா காலங்களுக்கும் ஏற்றமான மார்க்கம். வாழ்வைப் பூரணப்படுத்தும் மார்க்கம். அது சமூக பொருளாதார, மனிதநேயம் ஆகியவற்றைப் பூரணப்படுத்தும் மார்க்கம். மனதுக்கு அமைதியையும், உறுதிப்பாட்டையும் அல்லாஹ்விடமிருந்து பெற்றுத்தரும் மார்க்கம். மேற்கூறப்பட்ட காரணங்களை நான் இஸ்லாத்தில் கண்டுகொண்டதால் அதைத் தழுவிக்கொண்டேன்.

கேள்வி: நீங்கள் இஸ்லாத்தைத் தழுவ முன் இஸ்லாத்தைப் பற்றி என்ன தெரிந்து வைத்திருந்தீர்கள்?

பதில்: இஸ்லாத்தைப் பற்றி நான் முன்னர் எதையும் அறிந்திருக்கவில்லை. ஏனெனில், எமது அமெரிக்க அரசாங்கம் இஸ்லாத்தை நல்லதாகவே நினைப்பதில்லை. அழகான இம்மார்க்கத்தின் நல்ல விடயங்களை நாம் அறிய எமது அரசாங்கம் விரும்புவதுமில்லை. அமெரிக்காவில் இஸ்லாம் பரவ முஸ்லிம் நாடுகளும் சரியான பங்களிப்பைச் செய்யவில்லை. அமெரிக்க அரசாங்கம் இஸ்லாத்தை கொச்சைப்படுத்தவும், அதிலுள்ள நீதம், மனிதர்களை கண்ணியப்படுத்துவது போன்ற விடயங்களை மூடி மறைக்கவும் முயற்சிக்கிறது.

கேள்வி: அமெரிக்காவில் அதிகமாக பரவியிருக்கும் மார்க்கங்கள் யாவை?

பதில்: கிறிஸ்தவமும், யூதமும். அவ்விரண்டுக்கும் ஆசைகாட்டி, அழகுபடுத்தி இஸ்லாத்திற்கு அபகீர்த்திகளை ஏற்படுத்துபவர்கள்தான் அதிகம் உள்ளார்கள்.

கேள்வி: நீங்கள் இஸ்லாத்தைத் தழுவிய பின்னர் உங்கள் மனநிலை என்ன?

பதில்: என் மனதுக்கு சாந்தியும், அமைதியும் கிடைத்ததாக நான் உணருகிறேன். நான் முன்பு இருந்ததை விட பெரும் வித்தியாசத்தை என்னில் உணருகிறேன். ஏனெனில், நான் இஸ்லாத்தை தழுவ முன் பரதேசிபோல், பாதிப்படைந்தவள் போல், ஏதோ ஒன்றை இழந்தவள்போல் இருந்தேன். ஆனால் இப்போது நிம்மதியாகத் தூங்குகிறேன்; நிம்மதியாக வேலைக்குச் செல்கிறேன். மன நிம்மதியுடன் ஐவேளை தொழுகிறேன். நான் எனது காரியங்கள் அனைத்தையும் அல்லாஹ்விடம் ஒப்படைத்துவிட்டதாகவே உணருகிறேன். அவன்தான் எனது எதிர்காலத்தை நிர்ணயிக்கக் கூடியவன். ஆரம்பத்தில் நான் பெரும் கவலைகளை சுமந்தவளாக இருந்தேன். எனது பயம் அறியப்படாத ஒன்றாகவே இருந்தது. ஆனால் தற்போது நான் அல்லாஹ்வின் 'கழா கத்ரை' (விதியை) முழுமையாக நம்புகிறேன். எனது வாழ்வு, மரணம் அனைத்திற்கும் அல்லாஹ்வே பொறுப்பு. முன்பு சிறுசிறு விடயங்களுக்கெல்லாம் நான் மனதை கஷ்டத்துக்குள் ஆளாக்கிக் கொண்டிருந்தேன். ஆனால் இப்போது தீர்க்க முடியாத எந்தப் பிரச்சினைகள் எனக்கு ஏற்பட்டாலும் அதை அல்லாஹ்விடமே நான் விட்டுவிடுகிறேன். அவனே அதைப்பற்றி நன்கு அறிந்தவன்.

கேள்வி: நீங்கள் இஸ்லாத்தை தழுவிய பின்னர் சூழ உள்ளவர்கள் உங்களை எவ்வாறு நோக்கினார்கள்?

பதில்: என்னைச் சூழ உள்ளவர்களும், என் குடும்பமும், என் உறவினர்களும் இஸ்லாத்தைத் தழுவியதை இன்னும் அறியவில்லை.

கேள்வி: இஸ்லாத்தைப் பற்றி என்ன படித்தீர்கள்?

பதில்: அல்குர்ஆனை படிக்கிறேன். நான் ஹஜ்ஜுக்குச் செல்ல தயாராகிறேன். ஆகையால் இஸ்லாத்தைப் பற்றி முழுமையாக அறிய முயற்சித்துக் கொண்டேயிருக்கிறேன்.

கேள்வி: முஸ்லிம் அல்லாதவர்களுக்கு நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்கள்?

பதில்: இஸ்லாத்தை நன்கு படியுங்கள். மன அமைதிபெறும் அனைத்தும் அதில் உள்ளன. கவலைகள், ஊசலாட்டங்கள் அனைத்தையும் அது போக்கிவிடுகிறது. இஸ்லாத்திற்கு எதிராக எழுதப்படுகின்ற, பிரசுரிக்கப்படுகின்ற எதையும் நீங்கள் நம்ப வேண்டாம். இதுதான் நான் அவர்களுக்கு கூறும் முக்கிய விடயம்.

கேள்வி: இஸ்லாத்திற்கு எதிராக கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ள பிரசாரங்களைப் பற்றி கேள்விப்பட்டிருக்கிறீர்களா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதில்: ஆம், அவை பொய்யான, இட்டுக்கட்டப்பட்ட பிரசாரங்கள் ஆகும். எல்லோரும் இஸ்லாத்தைப் பயப்படுகிறார்கள். பயங்கரவாதம் என்ற பெயருக்கு இஸ்லாம் பலிக்கடாவாகி விட்டது. ஆனால் இஸ்லாம் மார்க்கமோ அவ்வாறான குற்றச்சாட்டுக்களில் இருந்து நிரபராதி. பயங்கரவாதத்திற்கு வித்திட்டவர் புஷ்ஷும், அவரை ஒட்டியுள்ளவர்களும், அவருடைய அரசும்தான். உலகில் ஏற்பட்டுள்ள அனைத்துப் பிரச்சினைகளுக்கும் இஸ்லாம்தான் காரணம் என எமக்கு அவர்கள் சொல்லித் தருகிறார்கள். ஆனால் இதில் எவ்வித உண்மையும் இல்லை. அமெரிக்க மக்களோ பாதிப்படைந்துள்ளனர். உண்மையான ஜனநாயகம் அமெரிக்காவில் இல்லை. அங்கு சர்வாதிகார, மேலாதிக்கமுள்ள அரசுதான் உள்ளது. எமது அரசு கிறிஸ்தவ மதத்தையும், யூத மதத்தையும் மாத்திரம்தான் படிக்க அனுமதித்துள்ளது. இஸ்லாம் மார்க்கத்தைப் படிக்க அனுமதிக்கவில்லை. ஜனநாயகத்தை நடைமுறைப்படுத்துமாறும், மக்கள் கருத்துக்களுக்கு மதிப்பளிக்குமாறும் அரபு நாடுகளை அமெரிக்கா வேண்டுகிறது. இது ஆச்சரியமானதொரு விடயம். இராணுவப் பலமுள்ள எமது அரசு ஒருவருடைய ஆலோசனைப்படியே மக்களை அடக்கி ஆட்சி செய்கிறது. இவ்வாறு சர்வாதிகார, மேலாதிக்கம் செலுத்துகின்றவர்களினால் எனது நாட்டின் எதிர்காலம் பற்றி நான் பயப்படுகிறேன். மடையர்கள் செயற்படுவது போல இவர்களும் செயற்படுவதால் அமெரிக்காவை நரகத்துக்கு இவர்கள் இட்டுச் செல்வார்கள் என பயப்படுகிறேன். எந்தளவென்றால் எமது அரசு எமது தொலைபேசிகளை ஒற்றுக்கேட்கிறது. எமது வங்கிக் கணக்குகளை ஆராய்கிறது. எமது தனிப்பட்ட சுதந்திரங்கள் உட்பட எமது அனைத்து விடயங்களிலும் எமது அரசு தலையிட்டுக்கொண்டே இருக்கிறது.

கேள்வி: இக்கெடுபிடிகள் அனைத்தையும் எதிர்வரும் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலுக்குப் பிறகு இல்லாமலாக்கி விடலாமே?

பதில்: நான் அவ்வாறு நினைக்கவில்லை. ஏனெனில் புஷ் நிருவாகம் தேர்தல்களில் கள்ள வாக்குகள் மூலம் மோசடி செய்யும். புஷ் நிருவாகமே மக்களை அடக்கி ஆளும். மக்களுக்கு மத்தியில் அமெரிக்காவின் பெயரைக் கெடுத்த இவர்கள் போன்றவர்களால் அமெரிக்காவின் எதிர்காலம் குறித்து பயப்படுகிறேன். இவர்களின் செயல்களினால் அமெரிக்கர்கள் என்றாலே எம்மை அனைவரும் வெறுக்கின்றனர். ஏனெனில், தற்போதைய அமெரிக்க அரசு எவ்வித அடிப்படைக் காரணங்களுமின்றி பல நாடுகளை ஆக்கிரமித்து அவையல்லாத மேலும் பல நாடுகளை ஆக்கிரமிக்க அது பேராசை கொண்டுள்ளது. அமெரிக்கா ஈராக்கை ஆக்கிரமித்தது எவ்வித அடிப்படைக் காரணங்களுமில்லாத, அனைத்து சட்டங்களையும் மீறிய ஆக்கிரமிப்பாகும். இவ் ஆக்கிரமிப்புச் செயலை அமெரிக்க மக்கள் முற்றாக எதிர்க்கின்றனர். எமக்கு வெளிநாடுகளில் என்ன நடக்கும் என்றே எம் மக்களுக்குத் தெரியாது. இதனால் அமெரிக்கா என்ன விரும்புகிறது? அது ஏனைய நாடுகளுக்குச் சென்று அந்நாடுகளை ஆக்கிரமித்து அதன் பிரச்சினைகளை சீர்செய்ய முன் எம் நாட்டின் அனைத்துப் பிரச்சினைகளையும் சீர்செய்து அதற்கு முடிவுகண்டுவிட்டதா என நான் அவர்களிடம் கேட்க விரும்புகிறேன். எனது நாடு வேறு நாடுகளை பலாத்காரமாக ஆக்கிரமிப்புச் செய்து, அழிவுகளை ஏற்படுத்திவிட்டு, பின் உலகில் பல கம்பனிகளையும், நாடுகளையும் ஆக்கிரமிப்புச் செய்யப்பட்ட அந்நாடுகளை புனர்நிர்மாணம் செய்ய உதவுங்கள் என்று கேட்பதை பெரும் இழிவாகவே நான் கருதுகிறேன். இங்கு என்ன நடைபெறுகிறது? இதுதானா அரசியல்? இதுதானா நீதி? இதுதானா ஜனநாயகம்?

கேள்வி: நீங்கள் தற்போது ஒரு முஸ்லிம் பெண்மணி. நீங்கள் வேலை செய்கின்ற இடங்களில் இஸ்லாமிய ஆடை அணிகிறீர்களா?

பதில்: சங்கையான, இஸ்லாமிய ஆடைகளை நான் அணிகிறேன். என்றாலும் நான் முகமூடி அணிவதில்லை. ஏனெனில், நான் ஒரு யூதக் கம்பனியில் வேலை செய்கிறேன். அதனால் பிரச்சினைகளுக்கு நான் காரணமாக ஆகுவதையோ அல்லது பிரச்சினைப்பட்டுக் கொண்டு தொழில் செய்வதையோ அல்லது இதனால் யாரும் அங்கு என்னைத் தவறாக எண்ணுவதையோ நான் விரும்பவில்லை.

கேள்வி: அமெரிக்காவுக்கு வெளியில் எதையும் நாம் அறிய மாட்டோம் என்று கூறுகிறீர்களே! அமெரிக்காவில் உள்ள தொலைத்தொடர்பு சாதனங்களை நீங்கள் பார்ப்பதில்லையா?

பதில்: அமெரிக்க தொலைத்தொடர்பு சாதனங்கள் அமெரிக்க மக்களை தவறாக வழிநடத்துகின்றன. உண்மையான விடயங்களைப் பார்ப்பதை விட்டும் அது மக்களைத் தடுக்கிறது. வெடிபொருள் நிரப்பப்பட்ட வாகனம் வெடித்துச் சிதறியது என படம் எடுத்துக் காட்டுகின்ற அத்தொலைத்தொடர்பு சாதனங்கள், இத்தாக்குதலுக்குப் பின்னணி, காரணம் என்ன என்பதைக் காட்டுவதில்லை. தெளிவில்லாத, பூரணமில்லாத செய்திப் படங்களைத்தான் அவர்களது தொலைத்தொடர்பு சாதனங்களில் காண்பிக்கிறார்கள்.

அமெரிக்கா ஒரு நாட்டை பலவந்தமாக ஆக்கிரமிப்புச் செய்கிறது. ஆக்கிரமிப்புச் செய்யப்பட்ட நாட்டில் உள்ளவர்கள் தங்களது நாட்டை மீட்டெடுக்க எதிர்த்துப் போராடினால் அவர்கள்தான் பயங்கரவாதிகள், அநீதமிழைப்பவர்கள் என்றெல்லாம் அமெரிக்க தொலைத் தொடர்பு சாதனங்கள் சொல்கின்றன. தங்கள் நாட்டை மீட்டெடுக்கப் போராடுபவர்கள் என்று சொன்னது கிடையாது. இது நயவஞ்சகத் தன்மை. இது பெரும் அநியாயம். இது மக்களை கோமாளிகளாக எண்ணுவதாகும். அமெரிக்காவின் இச்செயல்களை பார்த்து வெட்கித் தலைகுனிகிறோம். நாம் ஏன் உலகில் அநியாயமாக போர் புரிகிறோம்? ஏன் போர்கள் ஏற்படுகின்றன? இவ்வாறான போர்கள் ஆரம்ப சமூகங்களுக்கு மத்தியில் இருக்கவில்லையே! நாம் எல்லோரும் மனிதர்கள்தானே? எமது இறைவனும் ஒரே ஏக இறைவன்தானே! ஏன் நாம் பிரச்சினைப்பட்டுக் கொண்டிருக்கிறோம். மனித நேயம், ஜனநாயகம் என்ற பெயரில் ஏன் நாம் ஒருவருக்கொருவர் சண்டை செய்துகொண்டும், ஒருவரையொருவர் அறுத்துக் கொண்டும் இருக்கிறோம் என அவர்களிடம் கேட்க விரும்புகிறேன். நிச்சயமாக புஷ் நிருவாகம் தனது பொருளாதாரத்தை வளம் மிக்கதாக ஆக்கிக்கொள்ளத்தான் ஏனைய நாடுகளை ஆக்கிரமிப்புச் செய்கிறது. தனது சீரழிந்த பொருளாதாரத்தை மேம்படுத்தத்தான் அது எப்போதும் வழிதேடிக் கொண்டிருக்கிறது. மனிதனுக்கு நிம்மதியை அது ஒருபோதும் தேடவில்லை. தேடவும் மாட்டாது. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கஹட்டோவிட நிழ்வானூர் ரஹீம் -

பெருநாளை இப்படிக் கொண்டாடுவோம்!

பாவங்களின் பாரத்தினை பஞ்சாக மாற்றுகின்ற ஒரு புனிதமிக்க மாதத்தை அடைந்திருக்கிறோம். ''எவர் ஈமானோடும் நன்மையைப் பெறும் நோக்கிலும் றமழானில் நோன்பு நோற்கிறாரோ...'' இன்னும் சில அறிவிப்புக்களில் ''இரவிலே நின்று வணங்குகிறாரோ அவரது முன்னைய பாவங்கள் மன்னிக்கப்படும்'' என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். பகலிலே இறை கட்டளைக்காக நோன்பு நோற்கிறவர்கள் இரவிலே இறை உவப்பை எதிர்பார்த்து கால்கடுக்க நின்று வணங்குவதை இம்மாதத்தில் காண்கிறோம்.

நன்மைகளைச் சொரியும் இம்மாதத்தை எதிர்பார்த்து இபாதத் செய்தவர்களெல்லாம் றமழானின் இறுதியில், செய்த நல்லமல்களுக்காக மகிழ்வுறுகிறார்கள். ஆனாலும் இவ்வாறு மகிழ்வுறுபவர்களில் பெரும்பாலானோர் அதனை வழியனுப்பி வைக்கும் முறைதான் இன்று பரிதாபத்துக்குரியதாய் மாறியிருக்கிறது. பெருநாள் தினத்தினை முஸ்லிம்கள் கழிக்கின்ற முறையினைப் பார்க்கும்போது றமழானில் செய்த நன்மைகளும், இத்தினத்தின் கண்ணியமும் கேள்விக்குறியாகியுள்ளதைக் காணலாம்.

சிறியோர், பெரியோர், முதியோர், ஏழை, பணக்காரன், ஆண், பெண் என்ற பாகுபாடின்றி எல்லோரும் சேர்ந்து மகிழ்ச்சியாக கழிக்கக்கூடிய ஒரு தினமே பெருநாள் தினம். இத்தினத்தைப் பற்றி நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பின்வருமாறு நவின்றார்கள் ''நீங்கள் வழக்கமாக வருடத்தில் இரண்டு நாட்களை வைபவ ரீதியாக கொண்டாடி வருகின்றீர்கள். அவற்றை விடச் சிறந்த இரு நாட்களை அல்லாஹ் உங்களுக்கு அருளியுள்ளான். அவை ஈதுல் பிதர், ஈதுல் அழ்ஹா ஆகிய இரண்டு பெருநாட்களுமாகும். வருடத்தில் இவ்விரு பெருநாட்களையும் மிகுந்த மகிழ்ச்சியோடும், முழுமையான குதூகலத்தோடும் கொண்டாடுங்கள். உறவினர்களுடனான ஒன்றுகூடலுக்கு ஏற்பாடு செய்யுங்கள். மகிழ்ச்சியாக விளையாட்டுக்களில் ஈடுபட்டு உங்கள் உள்ளத்தின் மகிழ்ச்சி உணர்வுகளுக்கு இயற்கையான வழியில் இடமளியுங்கள்''

இந்த ஹதீஸினூடாக பெருநாள் தினத்தின் மகிமையையும் அதனை ஒரு முஸ்லிம் எவ்வாறு கழிக்க வேண்டும் என்பதனையும் இலகுவாக விளங்கிக் கொள்ளலாம்.

ஆனால் இன்று இத்தினம் உரிய முறையிலன்றி இஸ்லாமிய ஷரீஆ அனுமதித்ததற்கு மாற்றமான முறையில் கொண்டாடப்படுவதைக் காண்கிறோம். மாற்று மதத்தினர் தமது விஷேட தினங்களைக் கொண்டாடுவதற்காக உருவாக்கிக் கொண்டுள்ள சில சம்பிரதாயங்களும், நிகழ்வுகளும் அப்படியே எமது சமூகத்தினரால் உள்வாங்கப்பட்டுள்ளன. இவற்றைத் தெரிந்தோ தெரியாமலோ நாம் செய்வதனால் பெருநாள் தினத்தின் மகிமையே பாழ்பட்டுவிடுகிறது. அத்தகைய சில நிகழ்ச்சிகளை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

1. சினிமா தியேட்டர்களுக்குச் செல்லல்

பெருநாள் தொழுகையை தொழுதுவிட்டு மாலைப் பொழுதை மகிழ்ச்சியாக கழிக்க வேண்டும் என்பதற்காக குடும்பத்தோடு கூட்டமாக தியேட்டர்களுக்கு எம் சமூகத்தினர் செல்வதை காணலாம். இன்றைய சினிமா இஸ்லாமிய ஷரீஆவால் தடைசெய்யப்பட்ட ஒரு விடயமாக இருக்க, அதனை நாம் எமது பொழுதுபோக்கு அம்சமாக கருதுவது அறிவுரீதியான ஒரு செயலல்ல. இவர்களது ஆசைகளுக்குத் தீனியாக 'பெருநாள் தின வெளியீடு'களும் வெளிவந்து கொண்டிருக்கின்றன. ஒரிரு மணித்தியால இன்பத்திற்காக ஒரு மாதம் செய்த நல்லமல்களையெல்லாம் இவர்கள் பாழ்படுத்தி விடுவதனை ஏனோ உணர்வதில்லை!

2. வீடுகளைத் தியேட்டர்களாக மாற்றுதல்

வெளியிடங்களில் உள்ள சினிமாத் தியேட்டர்களுக்குச் செல்ல வாய்ப்பற்றோருக்கு அவர்களின் நலன் கருதி தமது வீடுகளையே தியேட்டர்களாக மாற்றிக் கொடுக்கும் சில உத்தமர்களும் எமது சமூகத்தில் இருக்கத்தான் செய்கிறார்கள். அதேபோன்று அரச, தனியார் தொலைக்காட்சிகளும் முஸ்லிம் சமூகத்தை தம் பக்கம் ஈர்த்துக் கொள்வதற்காக புதிய புதிய திரைப்படங்களை அத்தினத்தில் ஒளிபரப்புகின்றன. இதனால் நேரத்திற்கு தொழ மறுக்கும் இவர்களில் சிலருக்கு பெருநாள் தொழுகையே அவ்வருடத்திற்கான இறுதித் தொழுகையாகவும் அமைந்துவிடுகிறது.

3. இசைக்கச்சேரிகளை நடாத்துதல்

திருமண வைபவங்கள், விளையாட்டுப் போட்டிகள் என்ற சிறு வரையறைக்குள் மாத்திரம் சுருங்கியிருந்த, சீரழிந்த இந்த அந்நியக் கலாசாரம் இன்று பெருநாள் தினத்தையும் அலங்கரிக்க ஆரம்பித்திருக்கிறது. பாடசாலை அபிவிருத்தி, சமூக சேவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்றவற்றை நோக்காக கொண்டு இவற்றை நடத்துவதாக ஏற்பாட்டாளர்கள் கூறுகின்றனர். இராப் பொழுதில் ஆண்களோடு சேர்ந்து 'தலைமறைத்த' பெண்களும் சரிசமமாக இவற்றில் கலந்துகொள்ளும்போது அப்பிரதேசத்திற்கு இறைதண்டனையை தவிர வேறு எதனை எதிர்பார்க்க முடியும்?

றமழானில் செய்த நன்மைகளை பாழ்படுத்திவிடக்கூடிய இத்தகைய காரியங்களை செய்வதானது தனிப்பட்ட மனிதநலனுக்கு மாத்திரமன்றி சமூகத்தின் இருப்புக்கும் அச்சுறுத்தலாய் அமைகிறது. பெருநாள் தினத்தை சந்தோஷமாகக் கழிக்க வேண்டும் என்பதற்காக ஷரீஆ அனுமதிக்காதவற்றை செய்ய முனைவது அறிவுபூர்வமான விடயமல்ல. அது இறை கோபத்தையே பெற்றுத்தரும் என்பதை நினைவில் வைக்க வேண்டும். இலக்கு இறைதிருப்தி என்றால் அதனை அடையும் வழிமுறையும் இறைதிருப்தியைப் பெற வேண்டியது அவசியமில்லையா?

தியேட்டர்களுக்குச் செல்வதாக இருக்கலாம். அல்லது இசைக் கச்சேரிகளை ஒழுங்கு செய்வதாக இருக்கலாம். இவற்றில் முன்னணி வகிப்பவர்கள் இளைஞர்களே. ஒரு சமூகத்தின் எழுச்சியும், வீழ்ச்சியும் அதன் இளைஞர்களின் கைகளில்தான் இருக்கிறது. அதல பாதாளத்தை நோக்கி அல்ல, மலை உச்சியினை நோக்கி இவர்களின் பார்வைகள் திருப்பப்பட வேண்டும். இவர்கள் பெருநாள் தினத்தை உரிய முறையில் கழிப்பதற்கு மாற்றீடாக புதிய விடயங்களை அறிமுகப்படுத்த வேண்டும். இஸ்லாம் அனுமதித்தவற்றை ஷரீஆவின் வரம்பினுள் நின்று நடைமுறைப்படுத்த முயல வேண்டும். அப்போதுதான் பெருநாள்தினம் மகிழ்ச்சியாக கழிவதோடு இறை உவப்பையும் பெற வாய்ப்பேற்படுகிறது. அதற்கான சில வழிகாட்டல்களைத் தருகிறோம்.

1. கலை விழாக்கள், விளையாட்டுப் போட்டிகளை ஒழுங்கு செய்தல்

பெருநாள் தினமன்று மக்கள் மகிழ்ச்சியாக இருப்பதற்காக விளையாட்டுப் போட்டிகளை ஒழுங்கு செய்வதனை இஸ்லாம் அனுமதித்திருக்கிறது. பெருநாளன்று ஹபஷிகள் மஸ்ஜிதில் விளையாடியதை நபியவர்களோடு சேர்ந்து ஆஇஷா றழியல்லாஹு அன்ஹா அவர்களும் சலிப்பேற்படும் வரை பார்த்ததாக புகாரியில் பதியப்பட்டிருக்கிறது. இதன்படி பெருநாள் தினத்தில் விளையாட்டுப் போட்டியினை ஒழுங்கு செய்வதையும் அதனை பெண்கள் பார்வையிடுவதையும் இஸ்லாம் தடை செய்யவில்லை. எனினும் இவற்றினைப் பார்வையிடும்போது ஆண்-பெண் ஒன்றாகக் கலப்பதை முற்றாக தடைசெய்வதோடு இஸ்லாமிய ஆடைகளோடு அங்கு வருவதற்கும், போட்டிகளில் கலந்து கொள்வதற்கும் ஆவன செய்யப்படல் வேண்டும்.

2. நாடகங்களை மேடையேற்றுதல்

இஸ்லாமிய வரலாறுகளை நிகழ்கால முஸ்லிம் சமூகத்தின் நிலமையினை நாடகங்கள் மூலம் வெளிக்கொணரும்போது அவை சமூகத்தில் பெரும் தாக்கத்தினை ஏற்படுத்துகின்றன. பல மேடைகளில் பல தலைப்புகளில் ஒரு கருத்தை வலியுறுத்துவதை விட ஒரே மேடையில் ஒரே காட்சியில் நாடகத்தின் மூலம் அக்கருத்தை தெளிவாக்கலாம். இதனால் சமூகத்திற்கு ஒரு கருத்தை தெளிவுபடுத்திய திருப்தியோடு பெருநாளை சிறந்த முறையில் கழித்ததற்கான மனநிறைவையும் அடைந்துகொள்ளலாம்.

3. குடும்பங்களை, நண்பர்களை தரிசித்தல்

பெருநாளை சிறந்த முறையில் கழிக்க முடியுமான இன்னொருமுறைதான் பரஸ்பரம் குடும்ப உறுப்பினர்களை, நண்பர்களை சந்திப்பது ஆகும். மனிதர்களுக்கிடையில் அன்பை வளர்க்கும் ஒரு முறையாகவும் இது காணப்படுகிறது. எனவே பரஸ்பரம் அன்பினை வளர்ப்பதற்காகவும் காழ்ப்புணர்வுகளை நீக்கிக் கொள்வதற்காகவும் இம்முறையினை இத்தினத்தில் கைக்கொள்ளலாம்.

4. சுற்றுலாக்களை மேற்கொள்ளல்

மனதிற்கு அமைதியை மாத்திரமன்றி செல்பவர்களிடையே இறுக்கத்தையும் நெருக்கத்தையும் ஏற்படுத்தும் ஒரு காரணியாக இச்சுற்றுலாக்கள் அமைகின்றன. எமது சமூகம் மாற்று மதத்தினரின் விஷேட தினங்களில் இச்சுற்றுலாக்களை அதிகமாக மேற்கொள்வதால் நாம் கலாசாரப் பாதிப்புக்குட்பட்டிருக்கிறோம். இதனை எமது பெருநாள் தினங்களில் அமைத்துக் கொள்ளும்போது பல சாதகமான விளைவுகள் ஏற்பட வாய்ப்பேற்படுகிறது.

5. ஈத் மிலன்

முஸ்லிமல்லாத சகோதரர்களை அழைத்து விருந்தளித்து இஸ்லாம் பற்றிய கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளலாம். இதன் மூலம் இஸ்லாம் பற்றிக் கொண்டுள்ள தப்பிப்பிராயங்களை நீக்கலாம். இஸ்லாத்தின் தூய கொள்கைகளையும், போதனைகளையும் எடுத்துக்கூறலாம்.

இத்தகைய முயற்சிகளை இளைஞர் குழுக்கள், ஒன்றியங்கள், விளையாட்டுக் கழகங்கள் போன்றன ஏற்று நடத்த முன்வர வேண்டும். கிராம, நகரங்களில் இயங்குகின்ற தரீக்காக்கள், ஸாவியாக்கள், இஸ்லாமிய இயக்கங்கள் இவற்றிலும் குறிப்பாக பள்ளித் தலைமைத்துவங்கள் அதற்கான உதவியையும், ஒத்தாசைகளையும் இவர்களுக்கு வழங்க வேண்டும். இரு தலைமுறையினருக்கான இடைவெளி குறைக்கப்படும்போதெல்லாம் சமூகம் இன்னொருபடி மேலெழுந்தே செல்கிறது. எனவே ரமழானின் மகிமை காத்து பெருநாளின் கண்ணியம் பேண உரியவர்கள் முயற்சி எடுப்பார்களா? ■

அன்பின் வாசக நெஞ்சங்களே!

கடந்த இதழில் வெளியான அல்ஹஸனாத் கருத்துக் கணிப்புக்கென பிரசுரிக்கப்பட்ட கேள்விக்கொத்தினை ஏராளமான நேயர்கள் பூர்த்தி செய்து அனுப்பிய வண்ணம் உள்ளனர். அனைவருக்கும் எமது நன்றிகள்.

இதுவரைக்கும் அனுப்பாத சகோர, சகோதரிகள் அதற்கென சற்று நேரத்தை ஒதுக்கி கேள்விக்கொத்தினைப் பூர்த்திசெய்து அனுப்புமாறு பணிவுடன் வேண்டுகிறோம். (ஆசிரிய பீடம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைஞர்களே!
இறைபணியில் இணைந்திடுவோம்!
மறைவழிப் பாதையில் நகர்ந்திடுவோம்!
குறை நிறைந்த கொள்கைகளை கூடிநின்று தகர்த்திடுவோம்!
இளைய சக்திகள் இணைந்தெழட்டும்!
இமயப் புரட்சியும் இமைப் பொழுதினில் என்றாகட்டும்!!

ஒரு முஸ்லிமின் நம்பிக்கைகள்

உண்மையான ஒரு முஸ்லிம் பின்வருவனவற்றை நம்புகிறார்:

இறைவன் ஒருவன், அவன் மேலானவன், நிரந்தரமானவன், முடிவற்றவன், வல்லவன், கருணையுள்ளவன், அளவற்ற அன்புடையவன், படைத்தவன், பரிபாலிப்பவன், பாதுகாப்பவன்... இவற்றில் ஒரு முஸ்லிம் பரிபூரண நம்பிக்கை கொள்கிறார்.

இந்த நம்பிக்கை உறுதிபெற இறைவனையே நம்பியிருக்க வேண்டும். அவனிடமே தஞ்சம் புக வேண்டும். அவனுடைய ஆணைகளுக்கு அடிபணிந்திட வேண்டும். அவனுடைய உதவிகளையே சார்ந்திருக்க வேண்டும். இந்த நம்பிக்கை மனிதனுக்கு கௌரவத்தை அளிப்பதோடு, அவனை அச்சத்திலிருந்தும் விரக்தியிலிருந்தும், குற்றங்களிருந்தும், குழப்பங்களிலருந்தும் பாதுகாக்கிறது.

ஒரு முஸ்லிம் இறைவனின் தூதர்கள் அனைவரையும் நம்புகிறார். இறைவனின் தூதர்களுக்கிடையில் அவர் எந்தவித வேற்றுமையையும் பாராட்டுவதில்லை.

முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைத் தவிர ஏனைய நபிமார்கள் ஒரு குறிப்பிட்ட சமூகத்திற்கோ அல்லது குறிப்பிட்ட நிலப்பரப்பிற்கோ அனுப்பப்பட்ட இறைதூதர்கள் எனத் தெரிகிறது. இருப்பினும் எல்லா இறைத் தூதர்களின் மார்க்கமும் அவர்கள் கொண்டுவந்த இறைத்தூதும் ஒன்றாகத்தான் இருந்து வந்திருக்கிறது. அதுதான் 'இஸ்லாம்'.

மேலே சொன்னவற்றின் விளைவாக முஸ்லிம்கள் இறைவனின் எல்லா வேதங்களையும், வேத வெளிப்பாடுகளையும் நம்புகிறார்கள். இவ்வேதங்கள் இறைவனின் நேரிய பாதையை தம் மக்களுக்கு காட்டுவதற்காக இறைதூதர்களால் இறைவனிடமிருந்து பெறப்பட்டவையாகும். இப்போது இருக்கின்ற வேதங்களில் ஆதாரபூர்வமான முழுமையான ஒரே வேதம் திருக்குர்ஆனே ஆகும்.

உண்மையான ஒரு முஸ்லிம் வானவர்கள் உண்டு என நம்புகிறார். வானவர்கள் ஆன்மிகமயமானவர்கள்; ஒளி பொருந்தியவர்கள். அவர்களுக்கு உடல் ஆசைகளும், உலகத் தேவைகளும் கிடையாது. அவர்கள் இரவையும், பகலையும் இறைவனின் பணியிலேயே செலவிடுவார்கள்.

இறுதித்தீர்ப்பு நாள் உண்டு என்று உண்மையான முஸ்லிம் நம்புகிறார். இந்த உலகம் ஒருநாள் முடிந்துவிடும். இறந்தவர்கள் எல்லோரும் தங்களது இறுதித்தீர்ப்பை பெறுவதற்காக எழுப்பப்படுவார்கள்.

இறைவனின் அறிவு காலத்தின் கட்டுக்களை, எல்லைகளைக் கடந்தது. இதை ஒரு முஸ்லிம் முழுமையான மனதுடன் நம்புகிறார். அதுபோலவே திட்டமிடுவதில் இறைவனுக்கு இருக்கின்ற ஆற்றலையும் அவற்றை நிறைவேற்றுவதில் அவனுக்கு இருக்கின்ற ஆற்றலையும் ஒரு முஸ்லிம் முழுமையாக ஏற்றுக் கொள்கிறார்.

இந்த அடிப்படையான நம்பிக்கைகள் தவிர இன்னும் சில விடயங்களையும் ஒரு முஸ்லிம் நம்புகிறார்.

இறைவனுடைய படைப்பு அர்த்தமுள்ளதாகும். மனிதனுடைய உலகியல் செயல்களுக்கும், உடல் தேவைகளுக்கும் அப்பால் வாழ்க்கைக்கு ஒரு சிறந்த நோக்கம் இருக்கிறது. இவற்றை ஒரு முஸ்லிம் நம்புகிறான்.

படைப்புக்களில் எல்லாம் மனிதனே சிறந்த படைப்பு என்றும், அவனே உயர்ந்த நிலையில் உள்ளவன் என்றும் ஒரு முஸ்லிம் நம்புகிறான். பகுத்தறிவு ஆன்மிக நாட்டங்கள், சிந்தித்து செயற்படும் திறன் இவைகள் அனைத்தும் மனிதனுக்கு மட்டுமே வழங்கப்பட்டுள்ளன.

பிறக்கும்போது ஒவ்வொருவனும் முஸ்லிமாகவே பிறக்கிறான் என்பதை ஒரு முஸ்லிம் பூரணமாக நம்புகிறான்.

மனிதன் பிறக்கும்போது பாவத்தோடு பிறந்தவனல்ல. அவன் பாவமற்ற ஒரு நிலையிலேயே பிறக்கிறான். அதுபோலவே அவன் பரம்பரை புண்ணியங்களுக்கு உரிமை கொண்டாடாத நிலையிலும் பிறக்கிறான் என்று ஒரு முஸ்லிம் நம்புகிறார்.

இறைவன் தந்திருக்கிற வழிகாட்டுதலைக் கொண்டு மனிதன் தன்னுடைய ஈடேற்றத்திற்கு தானே முயற்சிகளை மேற்கொண்டு வழிதேடிக் கொள்ள வேண்டும் என்று ஒரு உண்மையான முஸ்லிம் நம்புகிறான்.

இறைவன், மனிதனுக்கு நேரிய வழியைக் காட்டியிருந்தாலன்றி அவனை அவனது செயல்களுக்கு பொறுப்பேற்கும்படி பணிக்க மாட்டான் என்பதை ஒரு உண்மையான முஸ்லிம் நம்புகிறான்.

திருக்குர்ஆன் இறைவனின் வார்த்தைகள் என்றும் அது முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு அருளப்பட்டது என்றும், அது வானவர் ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் வழி அருளப்பட்டது என்றும் ஒரு உண்மையான முஸ்லிம் நம்புகிறான்.

திருக்குர்ஆனே இஸ்லாத்தின் முதல் மூல ஆதாரமாகும். அது அரபு மொழியில் அருளப்பட்டது. அது இன்றுவரை அருளப்பட்ட மொழியில், அப்படியே அணுவும் மாறாத வகையில் பாதுகாக்கப்பட்டு வருகிறது. இது அவ்வாறே பாதுகாக்கப்பட்டு வரும்.

ஒரு உண்மையான முஸ்லிம் திருக்குர்ஆனுக்கும் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வாழ்வுக்கும், வாக்கிற்கும் இருக்கும் தனித்தன்மைகளை பூரணமாக நம்புகிறார். திருமறை இறைவனின் வார்த்தைகளை- கட்டளைகளைக் கொண்டது. ஹதீஸ் எனப்படும் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வாழ்வும் வாக்கும் திருக்குர்ஆனின் நடைமுறை விளக்கமாகும்.

மூலம் : மஹ்மூத் அப்த் அல் அத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களச் செய்திகள்

கிழக்குப் பிராந்திய ஊழியர் முகாம்

ஜம்இய்யாவின் கிழக்குப் பிராந்திய ஊழியர் முகாம் கடந்த 09.09.2004 வியாழக்கிழமை சம்மாந்துறை சென்னல் கிராமத்தில் நடைபெற்றது.

10 வருடங்களின் பின்னர் நடைபெற்ற இம்முகாமில் ஏறாவூர், மருதமுனை, கல்முனை, சாய்ந்தமருது, சம்மாந்துறை, இறக்காமம் ஆகிய கிளைகளில் இருந்து 45 ஊழியர்கள் கலந்துகொண்டனர்.

கிழக்குப் பிராந்திய நாஸிம் சகோதரர் எம்.எஸ்.எம். நிஹாப் தலைமையில் நடைபெற்ற இம்முகாமில் அஷ்ஷெய்க் அப்துல் கமால் இஸ்லாஹி அவர்கள் 'காயி'தாக கடமையாற்றினார். ஒரு வித்தியாசமான சூழலில் நடைபெற்ற முகாமில் அனைத்து நிகழ்ச்சிகளிலும் ஊழியர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு தமது திறமைகளை வெளிப்படுத்தினர்.

கோஷங்கள் சொல்லிக் கொடுக்கப்பட்டு ஊழியர்களால் மனனம் செய்யப்பட்டதுடன் ''விவாத அரங்கு'' ஒரு தாயின் மனோவலிமை, மரணமும் மறுமையும், கியாமுல்லைல் ஆகிய நிகழ்வுகள் சிறப்பாக நடைபெற்றது. அதிகாலை ஊழியர்கள் புதிய உத்வேகத்துடன் சிறந்த மனோவலிமையுடனும் முகாமைவிட்டு த.'.வா களம் நோக்கி புறப்பட்டனர்.

இம்முகாமிற்கான சகல ஏற்பாடுகளையும் சம்மாந்துறை கிளை ஊழியர்களும் ஜமாஅத் சகோதரர்களும் சிறப்பாக செய்திருந்தனர், அல்ஹம்துலில்லாஹ்.

கிழக்குப் பிராந்திய ரமழான் தர்பியா நிகழ்ச்சி

ஜம்இய்யாவின் கிழக்குப் பிராந்தியத் திற்கான ரமழான் விஷேட தர்பியா நிகழ்ச்சி நவம்பர் 6ம்,7ம் திகதிகளில் மருதமுனை யில் நடைபெற உள்ளது. இது கிழக்குப் பிராந்திய ஜம்இய்யா ஊழியர்களுக்கான பிரத்தியேக நிகழ்ச்சியாகும். எனவே அனைத்து ஊழியர்களையும் இதில் கலந்து கொள்ளுமாறு பிராந்திய நாஸிம் சகோ. நிஹாப் வேண்டுகோள் விடுக்கிறார்.

மாவனல்லை ஜம்இய்யாவின் ரமழான் தர்பியா

மாவனல்லை ஜம்இய்யா கிளை புனித ரமழான் மாதத்தை முன்னிட்டு விஷேட தர்பியா நிகழ்ச்சி ஒன்றினை ஏற்பாடு செய்துள்ளது. இம்மாதத்தின் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் காலை 9 மணி முதல் இப்தார் வேளை வரை இந்த நிகழ்ச்சிகள் நடைபெறும். இதன்படி முதலாம் வெள்ளிக்கிழமை அதாவது கடந்த 22ம் திகதி நடைபெற்றது. இந்நிகழ்வில் ஜமாஅத்தின் அமீர் உஸ்தாத் ஹஜ்ஜுல் அக்பர் அவர்களும் ஜம்இய்யாவின் முன்னை நாள் நாஸிம் சகோதரர் நிஸ்மி அவர்களும் தர்பியா வழிகாட்டல்களை வழங்கினர். இதில் பங்குகொண்ட அனைத்து சகோதரர்களும் சிறந்த பயன்பெற்றுச் சென்றனர்.

(தகவல் : சகோதரர் அனஸ்)

கொழும்பு ஜம்இய்யாவின் பயிற்சி முகாம்

ஜம்இய்யாவின் கொழும்பு நகரக்கிளை கடந்த மாதம் 2ம், 3ம் திகதிகளில் ஏத்தாளையின் அழகிய கரையோரச் சூழலில் பயிற்சி முகாம் ஒன்றை செவ்வனே நடாத்தி முடித்தது.

ஜம்இய்யாவின் மேற்குப் பிராந்திய நாஸிம் சகோமரர் ஸைபுல்லாஹ் (இஸ்லாஹி) அவர்களின் தலைமையில் நடைபெற்ற மேற்படி பயிற்சி முகாமில் ஆலங்குடா, ஏத்தாளை, புத்தளம் ஆகிய கிளைகளை சேர்ந்த சகோதரர்கள் சிலரும் கலந்துகொண்டது குறிப்பிடத்தக்கது.

மேற்படி பயிற்சி முகாமில் ஆன்மீக செயற்திட்ட பாசறை ஊழியர்களின் உணர்வுகளை தட்டிக் கொடுத்ததோடு, தரமான சிந்தனைத் தூண்டலுக்கும் வழி வகுத்தது. மேலும் வாழ்வின் சகலதுறை சார்ந்த செயற்பாடுகளான சகிப்புத்தன்மை, கட்டுப்பாடு, சமயோசிதம், விட்டுக்கொடுப்பு போன்ற அடிப்படை விடயங்களுக்கான பயிற்றுவிப்புக்களுக்கும் வழி கோலியது. இன்னும் இங்கு ஊழியர்கள் பூரண இஸ்லாமிய தாகத்தோடு கலந்து கொண்டு சிறப்பித்தது வரவேற்கத்தக்கது. கலந்துகொண்டவர்களின் திறமைக்கும் வாய்ப்பு கொடுக்கும் முகமாக கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. இறுதியாக சகோதரர் சலீம் அவர்களின் உரையுடன் நிகழ்ச்சிகள் செவ்வனே நிறைவுபெற்றன, அல்ஹம்துலில்லாஹ்.

ஊழியர்களுக்கான ரமழான் தர்பியா நிகழ்ச்சி

வழமைபோன்று ஜம்இய்யாவின் ஊழியர்களுக்கான ரமழான் தர்பியா நிகழ்ச்சி இம்முறை ஹெம்மாதகமவில் நடைபெற்றது. இதில் ஊழியர்களுக்கான அறிவு, ஆன்மிக, திறன்விருத்தி மேம்பாடு தொடர்பான விடயங்கள் நடத்தப்பட்டன.

நாட்டின் பல பாகங்களிலும் உள்ள ஜம்இய்யாவின் கிளை ஊழியர்கள் பங்குகொண்ட இந்நிகழ்வில் ஜமாஅத்தின் அமீர்உஸ்தாத் ஹஜ்ஜுல் அக்பர் சகோதரர் அப்துர் ரஷீத், ஆர்.எம். இப்ராஹீம் (மௌலவி) Dr. மஹீஸ், அஷ்ஷெய்க் றிழ்வான் (இஸ்லாஹி), அஷ்ஷெய்க் அஸ்மின் (நளீமி), அஷ்ஷெய்க் நிஸ்மி (நளீமி), அஷ்ஷெய்க் ரஜாஈ (நளீமி) என்போர் நிகழ்ச்சிகளை சிறப்பாக நடத்தினார்கள்.

புத்தளத்தில் ரமழானை வரவேற்கும் நிகழ்ச்சி

புத்தளம் ஜம்இய்யா கிளை ரமழானை வரவேற்கும் நிகழ்ச்சி ஒன்றினை ஏற்பாடு செய்திருந்தது. பாடசாலை மாணவர்களை மையமாக வைத்து இடம்பெற்ற இந்நிகழ்வில் புத்தளம் நகரம், தில்லையடி, மணல்குண்று, கட்டாளை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மாணவர்கள் பங்குகொண்டனர். ரமழான் பற்றிய விழிப்புணர்வை மாணவர்கள் மத்தியில் ஏற்படுத்தும் இந்நிகழ்வு புத்தளம் ஸாஹிரா தேசிய பாடசாலை அஸ்வர் மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வின் நிகழ்ச்சிகளை ஜம்இய்யாவின் நாஸிம் சகோதரர் அஜ்மல் மற்றும் சகோதரர் அப்துர் ரஷீத் ஆகியோர் சிறப்பாக நடத்தி வைத்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இரண்டு பேரீத்த மரங்கள்"

- மீராவோடை எம்.ஐ. பிந்துல் ஹுதா -

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது காலத்தில் ஒரு ஸஹாபி வாழ்ந்து வந்தார். அவர் மிக்க ஏழ்மையானவராகவும் நற்குண நல்லொழுக்கங்கள் நிறைந்தவராகவும் இருந்தார். நபிகளாருடன் மிகுந்த நட்பு கொண்டிருந்த அவரிடம் சற்று மாறுதலான பழக்க வழக்கம் ஒன்று சில நாட்களாக இருந்து வந்தது. அதாவது சுபஹ் தொழுகைக்காக அதான் சொல்லப்படுகின்றபோது பள்ளிவாயலுக்கு வந்து நபிகளாரது ஜமாஅத்துடன் இணைந்து தொழுகையில் ஈடுபடும் அவர் தொழுகை முடிந்ததும் மிக விரைவாக பள்ளிவாயலை விட்டு வெளியாகி விடுவார். தொழுகைக்குப் பிறகு இடம்பெறக்கூடிய நபிகளாரது பிரார்த்தனைகள், உபதேசங்கள், கலந்துரையாடல்கள் முதலான எவற்றிலும் அவர் பங்கெடுப்பதில்லை. இதனை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் தோழர்களும் அவதானித்து வந்தார்கள்.

ஒருநாள் வழமைபோன்று சுபஹ் தொழுகை முடிந்தவுடன் அந்த மனிதர் விரைந்து வெளியே செல்ல எத்தனித்தபோது நபிகளார் அவரை அழைத்து நிறுத்தினார்கள். "தோழரே! தொழுகை முடிந்த பிறகு நாங்கள் பிரார்த்தனைகள், உபதேசங்கள் முதலான விடயங்களில் ஈடுபடுகிறோம். எங்களுடன் இணைந்து இவ்வாறான நற்கருமங்களில் ஈடுபட உங்களுக்கு விருப்பமில்லையா?" என்றார்.

"இல்லை யா ரசூலல்லாஹ்! தங்களுடன் இணைந்து அந்நற்கருமங்களில் ஈடுபட நானும் விரும்புகிறேன்"

"பிரார்த்தனை முடிந்த பிறகு நாங்கள் எங்கள் ஒவ்வொருவரது வணக்கங்கள், வழிபாடுகள் பற்றிய விடயங்களை எங்களுக்குள் பரிமாறிக் கொள்கிறோம். இவ்விடயத்தில் பங்கெடுக்க உங்களுக்கு ஆர்வமில்லையா?"

"இல்லை யாரசூலல்லாஹ்! அவற்றில் கலந்துகொள்ள எனக்கு ஆர்வம் இருக்கிறது"

"அவ்வாறெனில், இவை எவற்றிலும் கலந்து கொள்ளாமல் சுபஹ் தொழுகை முடிந்தவுடனேயே நீங்கள் விரைந்து வெளியே சென்று விடுகிறீர்களே என்ன காரணம்?"

"யாரசூலல்லாஹ்! எனக்கு ஒரு கடமை இருக்கிறது. ஒவ்வொரு நாளும் அதிகாலையில் தாமதமின்றி அதனை நிறைவேற்றியாக வேண்டும். தொழுகைக்குப் பிறகுள்ள அமல்களில் நான் கலந்துகொண்டால் தாமதமாகி அக்கடமையை சரிவர நிறைவேற்ற முடியாது போய்விடும் என்பதனால்தான் தொழுகை முடிந்ததும் நான் விரைந்து வெளியேறுகிறேன்."

"நாங்கள் உங்களது நெருக்கமான அன்பிற்குரிய தோழர்கள். உங்களது கடமை என்னவென்பதை நாங்கள் அறிந்து கொள்ளலாமா?"

"ஆம் யா ரசூலல்லாஹ்! அதுபற்றிக் கூறுகிறேன். எனது அயலிலே ஒரு மனிதர் வாழுகிறார். அவரது வீட்டு முற்றத்தில் இரண்டு பேரீத்த மரங்கள் இருக்கின்றன. அவை எனது வீட்டுச் சுவரோடு இணைந்ததாக நிற்கின்றன. இது பேரீத்தம் பழ அறுவடைக்காலமாதலால் அவ்விரு மரங்களிலும் பழங்கள் நிறைந்து தொங்கிக் கிடக்கின்றன. இரவிலும், அதிகாலை நேரத்திலும் காற்று சற்று பலமாக வீசுகின்றபோது மரத்திலிருந்து சில பேரீத்தம் பழங்கள் கீழே விழும். அவை நிலத்தின் மேல் பரந்து காணப்படும். இவ்வாறு விழக்கூடிய பழங்களில் ஒரு சில எனது வீட்டு முன்றலில் விழுகின்றன.

எனக்கு இரண்டு பெண் குழந்தைகள் இருக்கின்றனர். அவர்களிருவரும் அதிகாலையில் துயிலெழுந்ததும் ஓடிவந்து முன்றலில் விழுந்து கிடக்கக்கூடிய பேரீத்தம் பழங்களை எடுத்துச் சாப்பிடுவதை பழக்கப்படுத்திக் கொண்டு விட்டனர். அவர்கள் அந்த இரண்டு பேரீத்த மரங்கள் மீது மிக்க விருப்பம் கொண்டுள்ளனர். அவர்களது கனவுகளிலும்கூட அந்த மரங்களும், அவற்றில் தொங்கும் பழங்களுமே அடிக்கடி தென்படுவதாக என்னிடம் கூறுவர். கீழே விழுந்து கிடக்கக்கூடிய பழங்களை பொறுக்கிச் சாப்பிடும்போது என்னிரு குழந்தைகளும் ஆனந்தமும், பரவசமும் கொள்வர்.

பொருளின் உரிமையாளருடைய அனுமதியில்லாமல் ஒன்றைச் சாப்பிடுவது குற்றமாதலால் நான் எனது அயலவனிடம் சென்று உண்மையைக் கூறி எனது குழந்தைகள் அந்த பேரீத்தம் பழங்களை சாப்பிடுவதற்கு அனுமதி வழங்குமாறு அவரிடம் வேண்டினேன். ஆனால், அவரோ மறுத்து விட்டார். "அந்த பழங்களெல்லாம் எனக்கும், என்னுடைய பிள்ளைகளுக்கும் மட்டுமே உரியன. எனவே எனது மரங்களிலிருந்து பழங்கள் உங்கள் முற்றத்தில் விழுந்தால் அவை முழுவதையும் ஒப்படைத்துவிடுவது உங்களது கடமை" என்றும் கூறிவிட்டார்.

"எனது முற்றத்தில் உங்களது பேரீத்தம் பழங்களுக்கீடாக நான் ஒவ்வொரு நாளும் ஏதேனும் வேலைகள் செய்து தருகிறேன். ஆகவே அந்தப் பழங்களை சாப்பிட என் குழந்தைகளுக்கு அனுமதி தாருங்கள்" என்று நான் மீண்டும் மன்றாடினேன். ஆனால் அதையும் மறுத்துவிட்ட அம்மனிதர் "நீங்கள் செய்து தருவதற்கேற்ற வேலைகள் எதுவும் என்னிடத்தில் இல்லை. தவிரவும் என்னுடைய பழங்களை யாருக்காகவும் விட்டுக்கொடுப்பதற்கும் எனக்கு இஷ்டமில்லை. என்னுடைய பழங்களை எடுத்துக் கொண்டு அதே எண்ணிக்கையிலான வேறு பழங்களை தந்தால் அதைக்கூட என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது" என்று கடுமையாகக் கூறிவிட்டார். அதற்குமேல் எதுவும் பேசமுடியாது நான் திரும்பி வந்துவிட்டேன்.

"யா ரசூலல்லாஹ்! எனது குழந்தைகள் பேரீத்தம் பழங்கள் மீது கொண்டுள்ள விருப்பத்திற்காக அவர்களைக் கண்டிப்பதற்கோ, அல்லது தண்டிப்பதற்கோ என் மனம் இடம் கொடுக்கவில்லை. அவர்கள் அதிகாலையில் துயில் எழுவதையோ அந்தப் பேரீத்தம் பழங்களை பொறுக்கச் சொல்வதையோ கூட என்னால் தடுக்க முடியவில்லை. ஏனெனில் பழங்களை பொறுக்க வருகின்றபோது என் குழந்தைகள் இருவரும் மிக்க பரவசத்துடன் காணப்படுவர். அவர்களது கள்ளங்கபடமற்ற முகங்களில் சந்தோசமும், புன்னகையும் கரைபுரண்டோடும்.

இவ்வாறு உரிமையாளரின் அனுமதியின்றி அவர்களது பழங்களை சாப்பிடக் கூடாது என்பதை தெளிவுபடுத்தினால் அதை விளங்கிக் கொள்ளக்கூடியளவுக்கு அவர்களுக்கு வயதோ, புத்தியோ இல்லை. எனவே இந்தப் பிரச்சினைக்கு ஒரு முடிவெடுக்க வேண்டும் என்று தீர்மானித்தேன். அம்முடிவு அயல் வீட்டவனையோ என் குழந்தைகளையோ எவ்வகையிலும் பாதிக்காததாக அமைய வேண்டுமெனவும் தீர்மானித்தேன்."

(அவர் என்ன செய்தார் என்பது இன்ஷா அல்லாஹ் அடுத்த இதழில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பி தங்கைகளே! A. B நிரல்களில் சிதறிக்கிடக்கும் எழுத்துக்களை ஒழுங்குபடுத்துங்கள். பின்னர் வட்டத்திற்குள் இருக்கும் எழுத்துக்களைக் கோர்த்து இரு நிரல்களிலும் ஒவ்வொரு ஸஹாபியின் (ஆண்/பெண்) பெயரைக் கண்டுபிடியுங்கள்.

A	B
ன் அ ச ர	ரோ ஆ க் ம ஷ
அ தி யோ த்	டா டோ ப ப ம்
ம் வ க ன	ரி ணா ப ம ம்
ன ம் க த	பீ ம் டா க ம்

இமாம் அபூ ஹனீபா (ரஹிமஹுல்லாஹ்)

முஸ்லிம்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரதான நான்கு மத்ஹபுகளில் ஒன்றான ஹனபி மத்ஹபின் ஸ்தாபகர் இமாம் அபூஹனீபா ரஹிமஹுல்லாஹ். இவர்கள் ஹிஜ்ரி 80ம் ஆண்டு கூபாவில் பிறந்தார்கள். இவர்களின் தந்தையின் பெயர் ஸாபித் என்பதாகும். பெற்றோர் இவர்களுக்கு நு:மான் என்று பெயரிட்டனர். ஆனால் அபூஹனீபா என்ற புனைப் பெயராலும் இமாமுல் அ:லம் எனும் சிறப்புப் பெயராலுமே அவர்கள் அநேகமாக அழைக்கப்பட்டார்கள்.

இளமையிலேயே அறிவும் விவேகமும் உடையவர்களாக காணப்பட்டாலும்கூட தந்தையை இழந்தமையால் அவர்களின் வர்த்தகத்தை கவனிக்க வேண்டி ஏற்பட்டது. இருந்தும் இமாம் ஷஅபி ரஹிமஹுல்லாஹ் அவர்களின் தூண்டுதலால் வாலிப வயதில் படிக்க ஆரம்பித்தார்கள். அறபு மொழி, அறபிய வரலாறு, குர்ஆன், ஹதீஸ், பிக்ஹு, தத்துவம் முதலிய பாடங்களில் அடிப்படை அறிவைப் பெற்றுக்கொண்டு தத்துவத்தை சிறப்பாக பயில ஆயத்தமானார்கள். ஆனால் ஸஹாபிகளின் வரலாற்றை அவதானித்த பின் பிக்ஹு துறையில் தனது முழுக்கவனத்தையும் செலுத்தினார்கள். அக்காலத்தில் சட்டத்துறையில் சிறந்த அறிஞராக இருந்த ஹம்மாத் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் வகுப்பில் சேர்ந்து படித்தார்கள். ஹஜ்ஜுக்கு செல்லும்போது அதாஹ் இப்னு முன்திர், மாலிக் இப்னு தீனார் ரழியல்லாஹு போன்றோரிடம் கற்றார்கள். ஹம்மாத் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் மரணித்தபோது அவர்களின் சட்டவகுப்புக்கு ஆசிரியராக நியமிக்கப் பட்டார். நினைவாற்றலும் அறிவுக்கூர்மையும் சுயமாக முடிவெடுக்கும் திறனும், வாக்குச் சாதுரியமும், விளக்கமளிக்கும் ஆற்றலும் அமைந்திருந்த இமாம் அவர்களின் கலாபீடத்துக்கு முஸ்லிம்கள் வாழுகின்ற எல்லா நாடுகளிலிருந்தும் மாணவர்கள் திரண்டனர். சட்டப் பிரச்சினைகளுக்கு குர்ஆன், ஹதீஸ் சட்ட மூலாதாரங்களிலிருந்து தீர்ப்புகளை வழங்கினார்கள். சிறந்த முஜ்தஹிதாவும் நேர்மையான வர்த்தகராகவும் விளங்கிய அவர்கள், மௌனம், தயாளம், அன்பு, தியானம், உண்மை போன்ற உயரிய குணங்களைக் கொண்டிருந்தார்கள்.

தொகுப்பு: அல்ஹாபில் முஹம்மத் அஸ்வர், மீராவோடை

தயாரிப்பு:
எம். ஏ. ஃபாஹிம்

முதல் பரிசு பெறுபவர்
(500 ரூபா பெறுமதியான நூல்கள்)

அத்தீபா றிபாஸ்
தரம் - 04
முஸ்லிம் மகளிர் கல்லூரி
கொழும்பு - 12

இரண்டாம் பரிசு பெறுபவர்
(300 ரூபா பெறுமதியான நூல்கள்)

றிபாஸா
தரம் - 09
அல்ஸிறாஜ் முஸ்லிம் வித்தியாயலம்
பொல்கஹவெல

மூன்றாம் பரிசு பெறுபவர்
(300 ரூபா பெறுமதியான நூல்கள்)

எம். எல். எம். அப்ஸல்
தரம் - 7
நம்முவெவ மு.ம.வி ஹீலோகம

10ம் ஆண்டுக்குக் கீழ்ப்பட்ட தம்பி தங்கைகள் மட்டும் கலந்து கொள்ளலாம். வகுப்பும், பாடசாலை முகவரியும் கட்டாயம் குறிப்பிடப்பட வேண்டும்

பரிசுகளுக்கு அனுசரணை:
ALUTH PHARMACY (PVT) LTD
Pharmaceutical Distributors
85A, Dhawalasingherma MW, Colombo - 15
Tel: 0114617599, 0777395859.
Fax:011-4616911

விடைகள் வந்துசேர வேண்டிய இறுதித் திகதி: 25.11.2004

அல்ஹஸனாத்தைப் பரிசாகப் பெறும் 20 அதிஷ்டசாலிகள் பக்கம் : 51இல்

தம்பி தங்கைகளுக்கென தனியான சிறுவர் பத்திரிகை ஒன்றினை அல்ஹஸனாத் எதிர்வரும் ஜனவரி முதல் வெளியிடத் தீர்மானித்துள்ளது. இதுபற்றிய தம்பி தங்கைகளது கருத்துக்களை எழுதி அனுப்புங்கள். சிறந்த கருத்துரைகள் சிறுவர் பத்திரிகையில் இடம்பெறும், இன்ஷா அல்லாஹ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஃதிகாபும் அதன் ஒழுங்குகளும்

- அபூ சுஜாஆ -

ரமழானின் இறுதிப் பத்து நாட்கள் ஒரு முஸ்லிமைப் பொறுத்தமட்டில் குறிப்பாக இஸ்லாமிய அழைப்பாளர்களைப் பொறுத்த மட்டில் பெறுமதியான நாட்களாகும். இந் நாட்களில் ஆயிரம் மாதங்களைவிட சிறந்த தோர் இரவு மறைந்திருக்கிறது. அவ்விரவை, இறையில்லங்களுடன் தங்களை இறுகப் பிணைத்துக் கொள்கின்ற மனிதர்களால் இலகுவாக அடைந்துகொள்ள முடிகிறது.



"இஃதிகாப்" பத விளக்கம்:

ஒரு நன்மையான அல்லது ஒரு தீமை யான விடயத்திற்காக உள்ளத்தைக் கட்டுப் படுத்தி, மட்டுப்படுத்தி அதற்காக ஒதுங்கியி ருத்தல் என்ற கருத்தை இ.்திகாப் என்ற பதம் தொனிக்கிறது.

இ.்திகாப், ஷரீஆ சட்டங்களுக்குட்பட்டது என்பது அறிஞர் பெருமக்களின் ஏகோபித்த முடிவாகும். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஒவ்வொரு ரமழானி லும் பத்து நாட்கள் இ.்திகாப் இருந்து வந்தார்கள். அவர்களது உயிர் கைப்பற்றப் பட்ட வருடத்தில் இருபது நாட்கள் இ.். திகாப் இருந்தார்கள்.

(புகாரி, அபூதாவுத், இப்னுமாஜா)

ஆஇஷா ரழியல்லாஹு அன்ஹா அவர் கள் அறிவிக்கிறார்கள்: நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை அல்லாஹ் வபாத்தாக்கும்வரை ரமழானின் இறுதிப் பத்தில் அவர்கள் இ.்திகாப் இருந்தார்கள்; அவர்களது மரணத்தின் பின் அவர்களது மனைவிமார் இ.்திகாப் இருந்தனர்"

(புகாரி, முஸ்லிம்)

அபூ ஸயீத் அல்குத்ரி ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள்: "நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர் கள் ரமழானின் முதல் பத்தில் இ.்திகாப் இருந்தார்கள். பிறகு நடுப்பத்தில் இ.்திகாப் இருந்தார்கள். பிறகு "நிச்சயமாக நான் லைலதுல் கத்ரை தேடி முதல் பத்தில் இ.். திகாப் இருந்தேன். பிறகு நடுப்பத்தில் இ.். திகாப் இருந்தேன். பிறகு "நிச்சயமாக அவ்விரவு இறுதிப்பத்தில்தான் உள்ளது" என எனக்குக் கூறப்பட்டது. ஆகவே, உங்க ளில் இ.்திகாப் இருக்க விரும்புகின்றவர் இ.்திகாப் இருக்கட்டும்." (புகாரி)

இஃதிகாபின் வகைகள்

வாஜிபான இ.்திகாப், சுன்னத்தான இ.். திகாப் என இருவகை உண்டு. அல்லாஹ்வை நெருங்கி அவனது நற்கூலியைப் பெற்றுக் கொள்ளும் நோக்குடனும் நபி ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப் பின்பற்றும் நோக்குடனும் மேற்கொள்ளும் இ.்திகாப் ஸுன்னத் என்ற தரத்தை உடைய தாகும். குறிப்பாக இது ரமழானின் இறுதிப் பத்தில் நிறைவேற்றப்படும். ஒருவர் தன்மீது கடமையாக்கிக் கொள்கின்ற இ.்திகாப் வாஜிப் என்ற தரத்தை உடையதாகும். ஒருவர், 'அல்லாஹ்வுக்காக இ.்திகாப் இருப்பது என்மீது கடமை; அல்லது எனக்கு அல்லாஹ் நோய் நிவாரணமளித்தால் நான் இத்தனை நாட்களுக்கு இ.்திகாப் இருப்பேன்' என நேர்ச்சை செய்தால் அந்த இ.்திகாபை நிறைவேற்றுவது வாஜிபாகும். நபி ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறி னார்கள். "அல்லாஹ்வுக்குக் கட்டுப்படுவதாக நேர்ச்சை செய்தவர் அதை நிறைவேற்றட்டும்". (புகாரி)

உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் "அல்லாஹ்வின் தூதரே! நான் மஸ்ஜிதுல் ஹராமில் ஓர் இரவு இ.்திகாப் இருப்பதற்கு நேர்ச்சை செய்துள்ளேன்" என்றார். அதற்கு அண்ணலார் "உமது நேர்ச்சையை நிறை வேற்றுவீராக!" என்று கூறினார்கள். (புகாரி)

எத்தனை நாட்கள் இ.்திகாப் இருக்க வேண்டும்?

வாஜிபான இ.்திகாபை பொறுத்தவரை ஒருவர் எத்தனை நாட்கள் இ.்திகாப் இருப்ப தாக நேர்ச்சை செய்தாரோ அத்தனை நாட் கள் இ.்திகாப் இருப்பது கடமை. முஸ்தஹப் பான இ.்திகாபைப் பொறுத்தமட்டில் அதற்கு நிர்ணயிக்கப்பட்ட கால நேரம் கிடையாது. இ.்திகாப் இருக்கும் நிய்யத்துடன் நீண்ட நேரம் அல்லது குறுகிய நேரம் பள்ளிவாய லில் தரித்திருப்பதன் மூலம் இந்த முஸ்த ஹப்பான இ.்திகாப் நிறைவேறும். பள்ளி வாயலில் தரித்திருக்கும் காலமெல்லாம் அவருக்கு நற்கூலி வழங்கப்படும். பள்ளி வாயலை விட்டு வெளியேறி, மீண்டும் இ.். திகாப் இருப்பதற்கு நாடினால் நிய்யத்தைப் புதுப்பித்துக் கொள்ள வேண்டும்.

இஃதிகாபுக்கான நிபந்தனைகள்

இ.்திகாப் இருப்பவர் முஸ்லிமாக, பருவ வயதை அடைந்தவராக, ஜனாபத், மாத விடாய், பிரசவருது போன்ற பெருந் தொடக்கி லிருந்து சுத்தமானவராக இருக்க வேண்டும்.

இஃதிகாபின் அடிப்படைகள்

இ.்திகாப் என்பது அல்லாஹ்வை நெருங்கும் எண்ணத்துடன் மஸ்ஜிதில் தரித்தி ருப்பதைக் குறிக்கும். 'அல்லாஹ்வுக்குக் கீழ்ப்படிந்து வணக்க வழிபாடுகளில் ஈடுபடு தல்' என்ற நிய்யத்து உருவாகவுமில்லை; 'பள்ளிவாயலில் தரித்திருத்தல்' என்ற செயல் பாடு நிகழவுமில்லை என்றால் இ.்திகாப் நிறைவேறமாட்டாது. இவ்வகையில் நிய்யத் வாஜிபாகும். அல்லாஹ் கூறுகிறான்:

"முழுமையாக அவனுக்குக் கட்டுப் பட்டு, உளத்தூய்மைமிக்கவர்களாக அல்லாஹ்வை வணங்கி வழிபடுமாறு அவர்கள் கட்டளை யிடப்பட்டுள்ளார்கள்".

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்:

"நிச்சயமாக செயல்கள் எண்ணங்க ளைப் பொறுத்தே அமைகின்றன"

இ.்திகாபை நிறைவேற்ற பள்ளிவாயலில் தரித்திருப்பது அவசியமாகும். அல்லாஹ் கூறுகிறான்:

"நீங்கள் பள்ளிவாயல்களில் இ.்திகாப் இருக்கும்போது உங்கள் மனைவிகளாகிய அவர்களுடன் கூடாதீர்கள்"

பள்ளிவாயல் அல்லாத வேறு இடங்க ளில் இருப்பது ஆகுமானதாக இருந்திருந் தால் பள்ளிவாயலில் இ.்திகாப் இருக்கும் போது மனைவிமாருடன் வீடுகூடுவது ஹராம் என்று குறித்து சொல்லப்பட்டிருக்க மாட்டாது. ஏனெனில் மனைவிமாருடன் கூடுவது இ.்திகாபுக்கு முரணானதாகும்.

இஃதிகாப் இருக்கும் பள்ளிவாயல் குறித்த சட்டவல்லுனர் கருத்துக்கள்

இ.்திகாப் இருக்க செல்லுபடியாகும் பள்ளிவாயல் குறித்து சட்டவல்லுனர்கள் மத்தியில் கருத்துவேறுபாடு உண்டு. ஐவேளைத் தொழுகைகள் கூட்டாக நிறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேற்றப்படுகின்ற எல்லாப் பள்ளிவாயல்களிலும் இ.்.திகாப் இருப்பது கூடும் என இமாம் அபூஹனீபா, அஹ்மத், இஸ்ஹாக், அபூ தெளர் போன்றோர் கூறுகின்றனர். இவர்கள் தமக்கு ஆதாரமாக பின்வரும் ஹதீஸை முன்வைக்கின்றனர்:

''முஅத்தினும், இமாமும் இருக்கின்ற எல்லா பள்ளிவாயல்களும் இ.்.திகாப் இருப்பதற்கு பொருத்தமானதாகும்.'' (தாரகுத்னீ)

ஆனால் இது ஆதாரமாகக் கொள்ள முடியாத 'முர்ஸல்' என்ற தரத்தையுடைய பலவீனமான ஹதீஸாகும்.

அனைத்து மஸ்ஜிதுகளிலும் இ.்.திகாப் இருப்பது கூடும் என்பதற்குத் தெளிவான ஆதாரங்கள் இல்லை என இமாம்களான மாலிக் (ரஹ்), ஷாபிஈ (ரஹ்), தாவூத் (ரஹ்) போன்றோர் கூறுகின்றனர். ஜும்ஆப் பள்ளி வாயலில் இ.்.திகாப் இருப்பது மிகச் சிறந்தது. ஏனெனில், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஜும்ஆப் பள்ளிவாயலில் இ.்.திகாப் இருந்தார்கள். மேலும் ஜும்ஆப் பள்ளிவாயிலில் அதிகமான ஜமாஅத்தினர் வருகை தருவர் என ஷாபிஈ மத்ஹபைச் சார்ந்தோர் குறிப்பிடுகின்றனர்.

ஜமாஅத் தொழுகை நடைபெறுகின்ற அனைத்து பள்ளிவாயல்களிலும் இ.்.திகாப் இருப்பது கூடும். ஏனெனில் திருமறை வசனத்தில், ''பள்ளிவாயலில் இ.்.திகாப் இருக்கும்போது...'' என்று பொதுவாகவே கூறப்பட்டுள்ளது. ஆனாலும் ஜும்ஆப் பள்ளி வாயலில் இ.்.திகாப் இருப்பது மிகச் சிறந்த தாகும். நவீனகால பேரறிஞர்களாகவும், மார்க்கத் தீர்ப்பாளர்களாகவும் வாழ்ந்து மறைந்த அஷ்ஷெய்க் அப்துல்லாஹ் பின் பாஸ், அஷ்ஷெய்க் முஹம்மத் பின் ஸாலிஹ் அல்உஸைமீன் போன்றோரும் இக்கருத்துடையோரே!

1424 வருடகாலமாக சர்ச்சைக்குரிய சட்டப் பிரச்சினையாக முன்வைக்கப்படாத 'இ.்.திகாப் இருக்கும் பள்ளிவாயல்' குறித்த விவகாரம் இன்று பெரியதொரு சட்டப் பிரச்சினையாக கிளறிவிடப்பட்டுள்ளது. இது குறித்த சமகால மார்க்க அறிஞர்களின் கருத்துக் களை நோக்குவோம்.

நவீனகால அறிஞர்களின் தீர்ப்புகள்:

1. அஷ்ஷெய்க் முஹம்மத் ஸாலிஹ் அல்உஸைமீன் (ரஹ்) அவர்களிடத்தில், ''மூன்று பள்ளிவாயல்கள் அல்லாத வேறு பள்ளிவாயல்களில் இ.்.திகாப் இருப்பது கூடுமா? அதற்கான ஆதாரம் என்ன?'' என வினவப்பட்டது. அதற்கு அவர்கள் பின்வருமாறு பதிலளித்தார்கள்:

''மஸ்ஜிதுல் ஹராம், மஸ்ஜிதுல் நபவி, மஸ்ஜிதுல் அக்ஸா என்ற மூன்று மஸ்ஜித்க ளைத் தவிர உள்ள மஸ்ஜித்களிலும் இ.்.திகாப் இருப்பது கூடும். இதற்கான ஆதாரம் கீழ்வரும் பொதுவான மறை வசனமாகும்: ''நீங்கள் பள்ளிவாயல்களில் இ.்.திகாப் இருக்கும்போது உங்கள் மனைவிகளாகிய அவர்களுடன் கூடாதீர்கள்'' (அல்பகரா: 187)

இந்த திருமறை வசனம் அனைத்து முஸ்லிம்களையும் விழித்துப் பேசுகிறது. இந்த வசனத்தில் இடம்பெற்றுள்ள 'மஸ்ஜிது கள்' என்ற சொல்லின் கருத்து அந்த மூன்று மஸ்ஜிதுகள் மட்டுமே என நாம் கூறுவதாக இருந்தால் பெரும்பான்மையான முஸ்லிம் கள் இந்த வசனத்தின் விழிப்புக்கு உட்பட மாட்டார்கள். ஏனெனில், பெரும்பான்மையான முஸ்லிம்கள் மக்கா, மதீனா, குத்ஸ் ஆகிய நகரங்களுக்கு அப்பால் வாழுகின்றனர்.

இந்த கருத்தின் அடிப்படையில் அனைத்து பள்ளிவாயல்களிலும் இ.்.திகாப் இருப்பது கூடும். *''மூன்று பள்ளிவாயல்களைத் தவிர வேறு பள்ளிவாயல்களில் இ.்.திகாப் இருக்கக் கூடாது.''* என்ற ஹதீஸ் ஆதாரபூர்வமான தாக இருந்தால் பரிபூரணமான, மிகவும் சிறந்த இ.்.திகாப், இந்த மூன்று மஸ்ஜிது களிலும் நிறைவேற்றப்படும் இ.்.திகாபைத் தவிர வேறு பள்ளிவாயல்களில் நிறைவேற் றப்படும் இ.்.திகாப் அல்ல என்ற கருத்தைத் தொனிக்கும். நிச்சயமாக இந்த மூன்று மஸ்ஜிதுகளில் இ.்.திகாப் இருப்பது, வேறு பள்ளிவாயல்களில் இ.்.திகாப் இருப்பதைவிட சிறந்ததாகும். அவ்வாறே வேறு மஸ்ஜித் களில் நிறைவேற்றப்படும் தொழுகையை விட இந்த மூன்று மஸ்ஜித்களில நிறைவேற் றப்படும் தொழுகை மிகவும் சிறந்ததாகும்.

மஸ்ஜிதுல் ஹராமில் நிறைவேற்றப்படும் ஒரு தொழுகை ஒரு இலட்சம் தொழுகையை நிகர்த்ததாகும். மஸ்ஜிதுன் நபவியில் நிறை வேற்றப்படும் ஒரு தொழுகை மஸ்ஜிதுல் ஹராமில் நிறைவேற்றப்படும் தொழுகைக்கு அடுத்தபடியாக ஏனைய பள்ளிவாயல்களில் நிறைவேற்றப்படும் ஆயிரம் தொழுகைகளை விட சிறந்ததாகும். மஸ்ஜிதுல் அக்ஸாவில் ஒரு தொழுகையை நிறைவேற்றுவது ஐந்நூறு தொழுகைகளுக்கு நிகரானதாகும். (பதாவா ரமழான், பாகம் 2, பக்கம் 875-876)

2) அஷ்ஷெய்க் அப்துல்லாஹ் பின் அப்துர் ரஹ்மான் பின் ஜிப்ரீன் அவர்களி டத்தில், ''இ.்.திகாப் குறித்த சட்டம் என்ன? மஸ்ஜிதுகளைத் தவிர வேறு இடங்களில் இ.்.திகாப் இருப்பது கூடுமா?'' என வினவப் பட்டது. அதற்கவர்கள் பின்வருமாறு பதிலளித்தார்கள்:

''இ.்.திகாப் என்பது சுன்னத்தாகும். மஸ்ஜி துகளைத் தவிர வேறு இடங்களில் இ.்.தி காப் இருப்பது கூடாது. ஏனெனில் அல்லாஹ், ''நீங்கள் பள்ளிவாயல்களில் இ.்.திகாப் இருக்கும்போது உங்கள் மனைவிமார்களு டன் கூடாதீர்கள்'' எனக் கூறுகிறான்.

''நீங்கள் இருவரும் தவாப் செய்கின்ற வர்களுக்காகவும், இ.்.திகாப் இருக்கின்றவர்க ளுக்காகவும் எனது வீட்டை சுத்தமாக வைத்திருங்கள்'' (அல்பகரா:125)

''எனது வீடு'' என்பது மஸ்ஜிதுல் ஹராமை குறிக்கும்.

இரண்டாவதாக, மஸ்ஜிதுகளைத் தவிர வேறு இடங்களில் ஒருவர் இ.்.திகாப் இருந் தால் பள்ளிவாயல்களில் ஜமாத்துடன் தொழுவதைவிட்டுவிட நேரிடும். தொழு கையை விடுவது பெரும்பாவமாகும். ஒவ் வொரு வேளையும், தொழுகைக்குச் சென்று வருதல், அதிகமாக வெளியேறிச் செல்லுதல் என்பன இ.்.திகாபுக்கு முரணானவையாகும். ஏனெனில் இ.்.திகாப் என்பது குறித்த இடத்தில் தரித்திருப்பதேயாகும்.
(பதாவா ரமழான், பாகம் 2, பக்கம் 869)

3) அஷ்ஷெய்க் அப்துல்லாஹ் பின் பாஸ் (ரஹ்) அவர்களிடத்தில், 'ஆண்கள், பெண்கள் இ.்.திகாப் இருப்பது குறித்த சட்டம் என்ன? இ.்.திகாப் இருப்பதற்கு நோன்பு நோற்றி ருத்தல் ஒரு நிபந்தனையா? இ.்.திகாப் இருப்பவர் எத்தகைய செயல்களில் ஈடுபட வேண்டும்? இ.்.திகாப் இருக்கும் இடத்திற்கு எப்போது செல்வது? எப்போது வெளியேறு வது?' என்ற வினாக்கள் தொடுக்கப்பட்டன.

அதற்கு அவர்கள் அளித்த நீண்ட மார்க்கத் தீர்ப்பிலிருந்து பிரதான பகுதியை மட்டும் இங்கு முன்வைக்கிறோம்:

''ஆண், பெண் இருபாலாருக்கும் இ.்.திகாப் சுன்னத்தாகும். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ரமழானில் இ.்.திகாப் இருந்துள்ளார்கள். இறுதியாக அவர்கள் ரமழானின் இறுதிப் பத்தில் இ.்.திகாப் இருந்துள்ளார்கள். அவர்களுடன் அவர்களுடைய மனைவிமார்களில் சிலரும் இ.்.திகாப் இருந்தார்கள். நபிகளாரின் வபாத்தின் பின்னர் மனைவிமார் இ.்.திகாப் இருந்தார்கள். இ.்.திகாப் இருக்குமிடம் ஜமாஅத் தொழுகை நடைபெறும் பள்ளி வாயல்களாகும். இ.்.திகாப் இருக்கும் காலத்தில் ஜும்ஆ தொழுகையில் கலந்து கொள்ள வேண்டிய நிலை ஏற்படுமென்றால், இ.்.திகாப் இருப்பவரது வசதி வாய்ப்பைப் பொறுத்து ஜும்ஆ மஸ்ஜிதில் இ.்.திகாப் இருப்பது அவருக்கு மிகவும் சிறந்ததாகும்.
(துஹ்பதுல் இஹ்வான் - பக்கம் 183)

ஆகவே, ஜமாஅத் தொழுகை நடை பெறுகின்ற எல்லாப் பள்ளிவாயல்களிலும் இ.்.திகாப் இருப்பது ஆகுமாகும். ஆனால் ஜும்ஆப் பள்ளிவாயலில் இ.்.திகாப் இருப்பது மிகவும் சிறந்ததாகும்.

(51ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்.எச்.எம். ஹஸன்
(தேசியக் கல்வி நிறுவகம்)

அன்றாட வாழ்வில் அனைவருக்கும் உளவியல்-24

பிள்ளைகளின் பண்பாட்டு விருத்திக்கான வழிகாட்டல்

வீட்டில் அவசரமான ஒரு வேலையில் ஈடுபட்டிருந்த தந்தைக்கு பிள்ளைகளின் சந்தடி சற்று இடைஞ்சலாக இருந்தது. இவர்களை ஒரு வேலையில் ஈடுபடுத்திவிட்டால் எல்லாம் சரி என்று யோசித்த அவர், ஓர் உலகப் படத்தை எடுத்து தாறுமாறாக பல துண்டுகளாக வெட்டி மீண்டும் சரியாகப் பொருத்தும்படி பிள்ளைகளிடம் கொடுத்து விட்டார். ''கொஞ்ச நேரத்துக்கு தொல்லை இருக்காது" என்று நிம்மதியாக தனது வேலையில் ஈடுபட்ட சற்று நேரத்தில் ''செய்து முடித்து விட்டோம்" என்று வெற்றிக் களிப்பில் கொண்டு வந்து கொடுத்தனர் பிள்ளைகள். ''அதெப்படி இவ்வளவு கெதியாகச் செய்தீர்கள்?" ஆச்சரியமாகக் கேட்டார் தந்தை. ''உலகப் படத்தின் மறுபக்கத்தில் ஒரு மனிதனின் படம் இருந்தது. அந்த மனிதனின் உருவத்தை சரியாகப் பொருத்தினோம். உலகப்படம் தானாகப் பொருந்திவிட்டது" என்று கூறினர் பிள்ளைகள்.

ஆம்! ''மனிதர்கள் சீர்பட்டுவிட்டால் உலகம் தானாக சீர்பட்டுவிடும்" என்பதற்கு இது நல்ல உதாரணமே. உலகத்தை ஒளிமயமாக்க திட்டமிடும் அறிவு மேதைகள் கூடச் சில வேளைகளில் தம் சொந்தப் பிள்ளைகள் விடயத்தில் கோட்டை விடுவதும் உண்டு. பாடசாலையிலும், வெளியிலும் கற்றலுக்குத் தேவையான ஏற்பாடுகளை மேற்கொள்ளும் பலருக்கும் இருக்கும் ஒரு பிரச்சினை பண்பாட்டுப் பயிற்சியை எவ்வாறு வழங்குவது என்பதாகும். சமய விழுமியங்களை எவ்வாறு புரிய வைப்பது என்பது அடுத்த பிரச்சினையாகும்.

அறநெறி பற்றிய பிள்ளைகளின் அறிவு அவர்களின் நுண்ணறிவு வளர்ச்சியுடன் தொடர்புபட்டதென்பதே உளவியலாளர்களின் கருத்தாக உள்ளது. சந்தர்ப்பத்துக்கும் சூழலுக்குமேற்ப சமூகம் எதிர்பார்க்கும் விதத்தில் ஒரு பிள்ளை நியாயமாக நடந்துகொள்ளும் நிலையை அடைவதே சமூக இயைபாக்கம் அல்லது சமூக பண்பாடு என்று 'பியாஜே' என்ற உளவியலாளர் கூறியுள்ளார். ஒருவரின் பண்பாடு சேர்ந்த பழக்கவழக்கம் என்பதில் நுண்ணறிவு, தனியார் அனுபவம், சமூக நடத்தை என்பன தொடர்புபடுகின்றன. இந்நிலையில் பிள்ளையின் சமூக இயைபாக்கத்தின் முதற்காரணியான குடும்பமே இவ்விரு வகை விருத்திகளிலும் செல்வாக்குச் செலுத்தும் காரணியாகும்.

ஒரு குடும்பத்தில வாழும் பிள்ளை இருவிதமான தொடர்புகட்குட்படுகின்றது. ஒன்று, குடும்பத்தின் கட்டுப்பாடான இடைத்தொடர்பு; மற்றையது, பொருட்படுத்தப்படாததை 'கூட்டுறவு தொடர்பு' என்றும் கூறலாம். இந்நிலையில் பிள்ளை இரண்டு வகையான அந்தங்களில் சிந்தனைத் தடுமாற்றத்திற்கு உட்படும் நிலை ஏற்பட முடியும்.

உண்மை பேசுதல், பிறரை மதித்தல், நீதியாக நடந்துகொள்ளல், நியாயம் வழங்குதல், சமத்துவம் பேணல், பிறர் நலனில் அக்கறை கொள்ளல் என்பன சமூகம் போற்றும் அறநெறிகளாகவும் மனிதர்களிடம் எதிர்பார்க்கப்படும் பண்பாடுகளாகவும் கொள்ளப்படுகின்றன. கல்வி, உளவியற் கற்றல் கொள்கைகள் வரிசையில் சமூகக் கற்றற் கொள்கை என்ற ஒன்றுள்ளது. அதன் முன்னோடிகளாகக் கருதப்படுகின்றவர்கள் 'அல்பிரட் பண்டுரா' மற்றும் வோல்ட்டர் கூட்டுறவான சமூகத் தொடர்பு. குறிப்பிட்ட ஒரு விழுமியத்தை, சமய பண்பாட்டை, நற்பழக்க வழக்கத்தைக் கொண்டுள்ள ஒரு குடும்பத்தில் வளரும் பிள்ளை இங்கு மேலே குறிப்பிட்ட கட்டுப்பாடான தொடர்புகளில் வளரும்போது காரண காரியங்கள் தெரியாத நிலையிலும்கூட சமய விழுமியங்களை மதிக்கும் நிலைக்கும், அதனைப் பின்பற்றும் நிலைக்கும், அதனைப் புறக்கணிப்பதை அல்லது தவிர்ப்பதை பாரதூரமாக எண்ணும் நிலைக்கும் உட்படுத்தப்படுகிறது. அதேநேரம் விஸ்தீரணமான குடும்பத்தில் அயலில் பலருடன் கூட்டுறவாகப் பழகும் பிள்ளைகளிடையே அவர்கள் சார்ந்த பல கட்டுப்பாட்டுக்கப்பாற்பட்ட நடத்தைகள் புகுந்துவிடும் வாய்ப்பு உள்ளது. உதாரணமாக மூத்தோரைக் கண்டால் எழும்புவது என்ற பழக்கத்தை எடுத்தால் வீட்டில் இது சரியாக நடைமுறைப்படுத்தப்படுவதை 'கட்டுப்பாடான தொடர்பு' என்றும், பக்கத்து வீட்டில் அல்லது உறவினர் வீட்டில் இது அவ்வளவாகப் (Bandura, Walters -1963) என்பவர்கள். அவர்கள் மேற்கொண்ட ஆய்வுகளுள் பல பண்பாட்டுரீதியான பழக்கவழக்கங்களைப் பழக்கப்படுத்தும் மிகச்சிறந்த வழி 'அவதானிப்பு முறை' எனத் தெரிய வந்துள்ளது. தாய், தந்தை, ஆசிரியர், வீட்டிலுள்ள மூத்த சகோதர சகோதரிகளிடம்தான் பிள்ளைகள் அவதானிப்பின் மூலமாக அநேக விடயங்களைக் கற்றுக் கொள்வதாக ஆய்வுகள் குறிப்பிட்டுள்ளன. பண்பாட்டு ரீதியான நற்பழக்கவழக்கங்களைக் கற்பிப்பதற்கான சிறந்த வழியும் இதுதான் என்று சமூகக் கற்கைக் கோட்பாட்டை வழங்கியவர்கள் கூறியுள்ளார்கள்.

பிள்ளைகள் தாம் பார்க்கும் காட்சிகள், நாடகங்கள், சினிமா, கலை நாடகம் போன்றவற்றாலும் பெரிதும் கவரப்படுகிறார்கள். உண்மையில் இந்த நாடகங்களை வேறுபடுத்தும் ஆற்றல் சிறுபிள்ளைகளிடம் இல்லை. நாடகங்களில் தொலைக்காட்சிகளில் பார்த்தவற்றை அச்சொட்டாக கற்றுக்கொள்ளும் நிலையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையில் ஓர் அறநெறி அல்லது பண்பாடு உணர்வுடன் சேர்ந்து தோன்றாதவிடத்து அது வெறும் அறிவாக_மாத்திரமே இருக்கும். எந்த ஒரு அறிவும் வாழ்க்கைக்குப் பயன்பட வேண்டுமாயின் முதலில் ஒன்றைப் பற்றிய அறிவும் அதனைத் தொடர்ந்து அதுபற்றிய மனப்பாங்கும் விருத்தியடைந்து அதனூடாக அது தொடர்பான திறனை விருத்தி செய்ய வேண்டும். அதன் பின்னர்தான் அச்செயலைப் பின்பற்ற அவர் உந்தப்படுவார். தான் பெற்ற அறிவைப் பற்றிய நன் மனப்பாங்கு இருக்குமட்டும் அதனைச் செய்து பார்க்கும் அல்லது பின்பற்றும் திறன் பற்றி அவர் சிந்திப்பார். அவ்வாறு தெரிந்துகொள்ளும்போது, அவ்வாறு படித்துக் கொள்ளும்போது அது திறன் என்ற மட்டத்தை அடைகின்றது. இத்தகைய படிமுறையில் வரும் பழக்கங்கள் வாழ்க்கையிலிருந்து ஒருபோதும் மறந்துவிடுவதில்லை.

காணப்படுகிறது. காந்தியடிகள் தமது சத்திய சோதனை என்ற சுயசரிதை நூலில் குறிப்பிட்டுள்ள ஒரு சம்பவம் நினைவுகூரத்தக்கது. தாம் சிறுவயதில் பார்த்த அரிச்சந்திரன் நாடகத்தின் காரணமாக தம் மனதில் ஏற்பட்ட துலங்கலின் அடிப்படையில் வாழ்க்கையில் ஒருபோதும் பொய் பேசக்கூடாது என்ற மனப்பாங்கு உறுதியடைந்ததாக அவர் கூறுகிறார்.

ஒரு நற்பழக்கத்தை தீயவழியில் அல்லது பொருத்தமற்ற வழியில் ஏற்படுத்துவது கூடுமா? என்ற சர்ச்சையும் உள்ளது. உளவியலாளர்கள் இதுபற்றியும் ஆராய்ந்துள்ளனர். உண்மையில் ஓர் அறநெறி அல்லது பண்பாடு உணர்வுடன் சேர்ந்து தோன்றாதவிடத்து அது வெறும் அறிவாக மாத்திரமே இருக்கும். எந்த ஒரு அறிவும் வாழ்க்கைக்குப் பயன்பட வேண்டுமாயின் முதலில் ஒன்றைப் பற்றிய அறிவும் அதனைத் தொடர்ந்து அதுபற்றிய மனப்பாங்கும் விருத்தியடைந்து அதனூடாக அது தொடர்பான திறனை விருத்தி செய்ய வேண்டும். அதன் பின்னர்தான் அச்செயலைப் பின்பற்ற அவர் உந்தப்படுவார். தான் பெற்ற அறிவைப் பற்றிய நன் மனப்பாங்கு இருக்குமட்டும் அதனைச் செய்து பார்க்கும் அல்லது பின்பற்றும் திறன் பற்றி அவர் சிந்திப்பார். அவ்வாறு தெரிந்துகொள்ளும்போது, அவ்வாறு படித்துக் கொள்ளும்போது அது திறன் என்ற மட்டத்தை அடைகின்றது. இத்தகைய படிமுறையில் வரும் பழக்கங்கள் வாழ்க்கையிலிருந்து ஒருபோதும் மறந்துவிடுவதில்லை. அவ்வாறில்லாதபோது அது அறிவுடன் மட்டும் நின்றுவிடும். நம்மில் பலருக்கு பல விடயங்கள் தெரியும். அதன் உண்மை நிலைகள் பற்றிய விளக்கம்கூடத் தெரியும். ஆனால் உணர்வும் திறனும் விருத்தி பெறாமையால் அவை வாழ்க்கையில் பின்பற்றப்படுவதில்லை. இவ்விதி பண்பாட்டுப் பழக்கங்களுக்கும் பொருந்தும்.

''சமையலறையில் உள்ள போத்தலில் இருந்து சீனியைத் திருட வேண்டாம்!'' என்று பிள்ளைகளுக்குக் கட்டளையிடும் தாயின் நடவடிக்கை பற்றி யோசிப்போம். சீனியைத் திருடிக்கொண்டு பிள்ளை ஓடும்போது தடுக்கி விழுந்துவிட்டால், ''சீனியைத் திருடியதால்தான் தடுக்கி விழுந்துள்ளாய்'' என்று உணர்த்த முற்படுவது சரியா? அது சரியல்ல என்பதுதான் அறிஞர்களின் கருத்து. இவ்வாறு பிழையான அணுகுமுறைகளினால் வரும் பண்பாடுகள் நிலைத்திருக்காது. அவற்றின் உண்மை தெரியும்போது பண்பாடு நலினப்பட்டுப் போவதை அறியலாம்.

ஓர் ஆய்வாளர் பின்வரும் சம்பவத்தை இரு குழுக்களிடம் முன்வைத்தார். இங்கிலாந்தில் உள்ள ஒரு மனிதரின் மனைவி மிக மோசமாக நோய்வாய்ப்பட்டார். அதியுயர்ந்த விலையுயர்ந்த மருந்தை வைத்தியர் குறிப்பிட்டார். 200 பவுண்கள் அதன் விலை. ஏழை மனிதரிடம் அவ்வளவு பணம் இல்லை. தெரிந்தவர்களிடம் சென்று ஒருவாறு 100 பவுண்கள் தேடிக்கொண்டார். 100 பவுணுக்கு மருந்தைத் தருமாறும் இதனைக் கொடுக்காவிட்டால் மனைவி இறந்து விடுவாள் என்றும் அவர் கெஞ்சினார். கடைக்காரரின் மனம் இளகவில்லை. பின்னர் அந்த மனிதர் கடையில் புகுந்து அந்த மருந்தை திருடினார்.

கிராமப்புறச் சூழலில் வாழ்ந்த பிள்ளைகள், 'திருடியது தவறு' என்ற விடையைத்தான் அநேகமாகக் கூறியிருந்தனர். நகரத்தின் சூழலில் உள்ள பிள்ளைகள், 'அவன் செய்தது சரி' என்றே பதிலளித்தனர்.

இச்சம்பவத்தையும் அதற்குப் பிள்ளைகள் அளித்த பதில்களையும் பார்க்கும்போது சூழல் ஒரு முக்கிய காரணியாக அமைகின்றது என்பது தெளிவாகிறது. இச்சம்பவத்திலிருந்து படித்துக்கொள்ள வேண்டிய இன்னொரு பாடமும் உண்டு. பிள்ளைகளுக்குப் பண்பாட்டுப் பயிற்சியை வழங்குவதாகக் கூறும் பெற்றோரும், ஆசிரியரும் கூட சிலவேளைகளில் தவறுகளை, பிழைகளை நியாயப்படுத்தும் சந்தர்ப்பங்கள் உண்டு. பண்பாடு பற்றிய சிந்தனை துளிர்விடும் நிலையில் முரண்பட்ட செயற்பாடுகளை அவதானிக்க நேரும்போது பிள்ளைகளின் நேர் சிந்தனை பாதிக்கப்பட வாய்ப்புள்ளது.

ஒரு குற்றத்தை உணரவைக்கும்போதும் அல்லது தண்டனை வழங்கும்போதும் அதற்கான நியாயத்தை பிள்ளை உணர்வதற்காக சந்தர்ப்பம் வழங்குவது முக்கியமாகும். ஒரு வகுப்பிலுள்ள ஒரு பிள்ளை ஒரு தவறைச் செய்துவிட்டு அதனை எல்லோரும் கூட்டாகத் திட்டமிட்டு மறைக்கும் சூழ்நிலையில் எல்லோரும் தண்டிக்கப்படுவது நியாயம் என்ற கருத்தைப் பிள்ளைகள் ஏற்றுக் கொண்டுள்ளார்கள் என்று இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட ஓர் ஆய்வு கூறுகின்றது. தண்டனை அல்லது அதுபோன்ற நடவடிக்கைகளின்போது நியாயமானதாகவும், பாரபட்சமற்றதாகவும் இருப்பது உறுதிப்படுத்தப்படும்போது அது பண்பாட்டுப் பயிற்சியாக அமையும். மாறாக தண்டனை வழங்குபவரின் கோபத்தைத் தீர்த்துக் கொள்ள அல்லது பழிவாங்க என்று முனையும்போது அதனால் ஏற்படும் எதிர்விளைவுகள் மிக மோசமானதாக இருக்கலாம்.

வீட்டிலுள்ள பூச்சாடியை அல்லது அலங்கார கண்ணாடிப் பாத்திரத்தை உடைக்கும் பிள்ளை அது தவறுதலாக நடந்ததாக ஏற்றுக்கொள்ளும்போது அதற்காகக் கவலைப்படும்போது தண்டிக்கப்படின் எதிர்காலத்தில் தாம் செய்பவற்றை தந்திரமாக மறைக்கும் நிலைக்கே அதனைஇட்டுச் செல்லும்.

இவ்வாறு பண்பாட்டுப் பயிற்சி தொடர்பாக சிந்திக்க வேண்டிய பல பக்கங்கள் உண்டு. சமய ரீதியான சிந்தனைகளைப் பிள்ளைகளிடையே வளர்ப்பது தொடர்பான சவாலும் முக்கியமாகும்.

அதுபற்றி அடுத்த இதழில் பார்ப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈராக்

ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக தொழுகையில் வேண்டுதல்



ஈராக்கிலுள்ள பிரபல மஸ்ஜிதுகளில் அமெரிக்க ஆக்கிரமிப்புப் படையினருக்கு எதிராக குறிப்பாக தராவீஹ் தொழுகையில் பிரார்த்தனை நிகழ்த்தப்படுகிறது. இறைவனின் அருளையும், பாவமன்னிப்பையும், நரக விடுதலையையும் வேண்டி, ஈராக்கியரின் பிரார்த்தனைகளில் இம்முறை அந்நிய ஆக்கிரமிப்பாளர் இடம்பிடித்துள்ளனர்.

''முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் சாதாரண, கடின சூழ்நிலைகளின்போது இவ்வாறு பிரார்த்தித்துள்ளார்கள். ஆக்கிரமிப்பை விட கடினமான சூழ்நிலை இப்போது வேறு எது?" என்கிறார் அல்ஹாதி மஸ்ஜிதின் இமாம் ஷெய்க் நிஹாத் ஹிக்மத் அல்ஹப்பூரி

''இமாம்கள் ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக வெளிப்படையாகவே பிரார்த்தனை செய்ய வேண்டும். நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களும் இஸ்லாத்திற்கு எதிராக சூழ்ச்சி செய்த யூத, கிறிஸ்தவர்களுக்கு எதிராக இவ்வாறு பிரார்த்தித்துள்ளார்கள்.

ஈராக்கிய மக்கள் ஆக்கிரமிப்பின் விளைவாக நோய்கள், அங்கவீனம், உளவாளிகள், கைதிகள், கடத்தப்பட்டவர்கள், குண்டுத்தாக்குதல், அப்பாவி சிறுவர்கள் பெண்களின் கொலை என்பவற்றால் அவதியுறுகின்றனர். இவையனைத்துக்கும் தனித்தனியாக தராவீஹ் தொழுகையில் பிரார்த்தனை செய்ய வேண்டும்" இவ்வாறு கூறுவார் அல்ச.ர்துன் மஸ்ஜிதின் இமாம் ஷெய்க் அல் ஷாபிப்.

ஈராக்கின் பல்வேறு நகரங்களிலும் தராவீஹ் தொழுகைகளின்போது வெளிப்படையாகவே ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராகவும், முஜாஹிதுகளுக்கு ஆதரவு வேண்டியும் கண்ணீர் மல்க பிரார்த்தனைகள் செய்யப்படுகின்றன.

எனினும் சில மஸ்ஜிதுகள் - அவை ஆக்கிரமிப்பாளர்களின் தாக்குதலுக்கு உள்ளாக்கப்படலாம் என்ற ஐயம் காரணமாக இவற்றைத் தவிர்த்து வருகின்றன. ''இவ்வாறு தவிர்ப்பது ஈராக்கின் மிகப்பெரிய சோகம்" என்கிறார் அல்யாஸீன் பள்ளிவாயிலின் இமாம் ஷெய்க் பாயிக் அல் டிக்ரிட்டி.

கியூபா

கியூபாவில் அமெரிக்க டொலர் பாவனைக்கு முடிவு

இம்மாதம் (நவம்பர்) 8ம் திகதி முதல் கியூபாவில் அமெரிக்க டொலரின் புழக்கம் முடிவுக்கு கொண்டுவரப்பட உள்ளது. டொலருக்குப் பதிலாக கியூபாவின் ''பீஸோ' (Peso) நாணயமே நாடு பூராவும் புழக்கத்தில் விடப்படும்.

மக்கள் கைவசமுள்ள டொலர்களை 8ம் திகதிக்கு முன்னர் வங்கிகளில் கொடுத்து 'பீஸோ'வாக மாற்றிக் கொள்ள முடியும். இதற்கு 10% வரி அறவிடப்படும் என கியூபாவின் மத்திய வங்கி அறிவித்துள்ளது.

யாசீர் அரபாத்

யாசீர் அரபாத் கடுமையான நோய்வாய்ப்பட்டு சிகிச்சைக்காக பாரீஸுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார். மத்திய கிழக்கில் மிக நீண்ட அரசியல், போராட்ட வரலாறு கொண்டவர்களுள் யாஸீர் அரபாத் முக்கியமானவர்.

'முஹம்மத்' என்ற இயற் பெயரைக் கொண்ட யாசீர் அரபாத் ஆகஸ்ட் 01, 1929ம் ஆண்டு பிறந்தார். ஜெருஸலம் நகரில் பிறந்ததாக குறிப்பிட்டாலும், அவர் பிறப்பால் எகிப்தின் தலைநகர் கெய்ரோவைச் சேர்ந்தவர் என்ற கருத்தும் உண்டு. கெய்ரோ பல்கலைக்கழகத்தில் பொறியியல் பட்டப்படிப்பை பூர்த்தி செய்த இவர். 1948ல் இஸ்ரேல் உருவாக்கத்துக்கு முன்னரே பலஸ்தீனுக்குள் ஆயுதங்களைக் கடத்திக் கொண்டு வரும் வேலையைச் செய்து வந்தார்.

1956ல் 'அல்பதாஹ்' இயக்கத்தை ஆரம்பித்தார். இவ்வியக்கம் ஆரம்பிக்கப்பட்ட புதிதில் எகிப்து, சிரியா, ஜோர்தான் போன்ற நாடுகள் அதற்கு ஆதரவு வழங்கவில்லை. 1968ல் விடுதலை இயக்கத்தின் (PLO) தலைவரானார். சுமார் 20 வருடங்களாக இஸ்ரேல் மீது மிக உக்கிரமான தாக்குதல்களை நடத்தினார். அப்போது இஸ்ரேலின் பாதுகாப்பு அமைச்சராக இருந்த ஏரியல் ஷெரோன் (1995) யாசீர் அரபாத் பற்றிக் குறிப்பிடுகையில்,

"நாஸிகளுக்கு பின்னர் அரபாத்தை விட யூதர்களின் இரத்தத்தை பூசிக் கொண்ட வேறு ஒருவரை எனக்கு தெரியாது" என்றான்.

ஆனாலும், 1988ல் இஸ்ரேலை இறைமையுள்ள அரசாக ஏற்றுக் கொண்டதாக அறிவித்து முழு முஸ்லிம் உம்மத்தின் மீதும் கரிபூசி, பலஸ்தீனப் போராட்டத்தையே கொச்சைப்படுத்தினார். அதுவரைக்கும் பலஸ்தீனப் பயங்கரவாதியாகத் தெரிந்த அரபாத், வெகுவிரைவில் அமெரிக்கா முதலிய நாடுகளுக்கு நெருங்கிய நண்பரானார். 1993ல் இஸ்ரேலியப் பிரதமர் யிட்ஸக் ரபினுடன் 'ஒஸ்லோ' ஒப்பந்தத்தில் கைசாத்திட்டு புனித பூமியை இஸ்ரேலுக்கு தாரைவார்த்து விட்டு 1996ல் பலஸ்தீனின் மேற்குகரை, மற்றும் 'காஸா'வை உள்ளடக்கிய பலஸ்தீன அதிகார சபையின் ஜனாதிபதியானார். இவ்வொப்பந்தத்தைச் செய்து கொண்டதன் மூலம், அரபாத், யிட்ஸக் ரபின், இஸ்ரேலின் வெளிநாட்டமைச்சர் ஷிமொன் பெரஸ் ஆகியோருக்கு 1994ம் ஆண்டு சமாதானத்திற்கான நோபல் பரிசு கிடைக்கப் பெற்றது. ஒஸ்லோ ஒப்பந்தத்தை முன்னின்று நடத்திய நாடு நோர்வே என்பது குறிப்பிடத்தக்கது.

பலஸ்தீன அதிகாரசபை தோற்றுவிக்கப்பட்டதன் பின்னர் விடுதலைக்காக போராடும் முஜாஹிதுகள் மீதான அரபாத்தின் அடியாட்களது கெடுபிடிகள் அதிகமாயின. முஜாஹிதுகளைக் கைது செய்தல், அவர்கள் பற்றிய செய்திகளை இஸ்ரேலியர்களுக்கு வழங்குதல் போன்ற கைங்கரியங்கள் பலஸ்தீன அதிகாரசபையின் இஸ்ரேலிய விசுவாசத்தை வெளிப்படுத்தி நிற்கின்றன. என்னதான் ஆக்கிரமிப்பாளர்களுக்கு இசைந்து நடந்தபோதும் அண்மையில் அரபாத்துக்கு ஏற்பட்ட கையறு நிலையை முழு உலகமும் கண்டு கொண்டது. பலஸ்தீன் போராளிக் குழுக்களை கட்டுப்படுத்தத் தவறியதன் காரணமாக அவரே பயங்கரவாதியாகி தாக்குதலுக்கு உள்ளானதோடு கைதி போலவே அவர் ரமல்லாஹ்வில் இருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈராக்

ஈராக்கில் 160 அரபு மரண தண்டனைக் கைதிகள்

ஈராக்கில் நிலைகொண்டிருக்கும் அமெரிக்கப் படையினருக்கு எதிரான தாக்குதல்களை மேற்கொண்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட 160 அரபுப் போராளிகள் மரண தண்டனையை எதிர்நோக்கியுள்ளனர். இத்தகவல் ஈராக்கிய இடைக்கால அரசின்பால் தெரிவிக்கப்பட்டுள்ளன.

எனினும் பிரபல ஊடகவியலாளரான நாஸர் அல் நாகிப் கருத்துத் தெரிவிக்கையில் அவர்கள்மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டாலும் அவர்கள் யுத்தக்கைதிகளாகவே நடத்தப்படுவர் எனவும் அவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட மாட்டாது எனத் தான் கருதுவதாகவும் தெரிவித்தார்.

இந்தியா, ஜோர்தான், பலஸ்தீன், ஈரான், யெமன், எகிப்து, மொரோக்கோ, லெபனான் முதலிய நாடுகளிலிருந்து ஈராக்கிற்கு வந்து அமெரிக்கக் கூட்டுப்படைகளுக்கு எதிராக போராடிவரும் அரபுக்களும் இதில் உள்ளடங்குவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை நஸ்ரியாவிலும், பானி சஅத் நகரிலும் முறையே 4,000, 3,000 பேர்களை கொள்ளக்கூடிய சிறைகள் அமைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை பிரிட்டனிலுள்ள மருத்துவ வாரப்பத்திரிகை ஒன்று நடாத்திய ஆய்வில், 2003 மார்ச் மாதத்தில் அமெரிக்க கூட்டுப்படையினர் ஈராக்கை ஆக்கிரமித்ததிலிருந்து இதுவரை 100,000 மேற்பட்ட அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்களுள் அரைவாசிப்பேர் பெண்களும், சிறுவர்களும் ஆவர். இவற்றுள் அதிகமான இழப்புகள் அமெரிக்காவின் இலக்கற்ற வான்வெளித்தாக்குதலினாலேயே ஏற்பட்டுள்ளது எனவும் அவ்வறிக்கை தெரிவிக்கிறது.

பொஸ்னியா

1955ம் ஆண்டு பொஸ்னியாவின் ஸ்ரப்ரெனிகா மாநிலத்தில் முஸ்லிம்களுக்கெதிராக இடம்பெற்ற பாரிய மனிதப் படுகொலைகளை உலகம் அறியும். சேர்பியரால் மேற்கொள்ளப்பட்ட இவ்வினச் சுத்திகரிப்பின்போது கொலைசெய்யப்பட்டவர்கள் பாரிய குழிகளில் புதைக்கப்பட்டனர்.

இப்படுகொலைகள் இடம்பெற்று 10 வருடங்களின் பின்பு மேலும் ஒரு மனிதப் புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. முழுமையான 55 எலும்புக்கூடுகளும், சிதைந்த நிலையில் 39 எலும்புக்கூடுகளும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவற்றுள் சிறுவர்களின் எலும்புக் கூடுகளும் 15 காணப்பட்டன.

செப்டம்பர் மாதத்தின் நடுப்பகுதியில் 372 மனித உடல்கள் ஒரு புதைகுழியிலிருந்து கண்டெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

ரஷ்யா

ரமழான் வாழ்த்துத் தெரிவிக்க மறுக்கும் புட்டின்

ரமழான் மாதத்தின் நடுப்பகுதி கடந்த பின்னரும், ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் ரமழான் வாழ்த்துச் செய்தியை ரஷ்ய முஸ்லிம்களுக்கு விடுக்காதிருக்கிறார்.

வழமையாக 'ரஷ்ய முப்தி கவுன்சில்' ஊடாக ரஷ்யத் தலைவர்கள் தமது ரமழான் வாழ்த்துக்களைத் தெரிவிப்பர். எனினும் புட்டினின் இவ்வருட நடவடிக்கை கேள்விக்குறியை ஏற்படுத்தியுள்ளது. ரஷ்யாவின் 144 மில்லியன் மக்கட் தொகையில் 23 மில்லியன் பேர் முஸ்லிம்கள் ஆவர்.

ஆப்கானிஸ்தான்

கடந்த மாதம் நடைபெற்ற ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி தேர்தல் அமைதியாக இடம்பெற்றுள்ளது. இதற்குக் காரணம் தாலிபான்கள் தாக்குதல்களை நடத்த முடியாதளவு பலவீனமாக உள்ளதாக மேற்கு ஊடகங்கள் தெரிவித்தன.

எனினும் இக்கருத்துக்கு ஆப்புவைக்கும் முகமாக தாலிபானின் பேச்சாளர் அப்துல் லதீப் ஹாகிமி பேட்டியளித்துள்ளார். அவர் கூறியுள்ளதாவது ''அப்பாவி முஸ்லிம்களின் இரத்தம் சிந்தப்படக்கூடாது என்ற நோக்கிலேயே வாக்களிப்பு நிலையங்கள் தாக்கப்படவில்லை. எம்மிடம் தாக்குதல் திட்டங்கள் இருந்தன. ஆனால் மக்கள் கூடுமிடங்களிலல்ல. ஸாபுல் மாகாணத்தில் அதன் தலைநகர் தவிர்ந்த எந்த இடத்திலும் வாக்களிப்பு இடம்பெறவில்லை.

தாலிபான்கள் பலவீனமடைந்துவிட்டனர் என்ற கருத்தை அவர் மறுத்துவிட்டார். ''அனைத்து மலைப்பகுதிகளும் இஸ்லாமிய நிருவாகத்தின்கீழேயே உள்ளன. தாலிபான்கள் ஒழுங்கமைக்கப்பட்டே உள்ளனர். ஒவ்வொரு நாளும் மேலும் மேலும் அவர்கள் ஒழுங்கமைக்கப்பட்டு வருகின்றனர். தேர்தல்கள் எமக்கு பொருட்டல்ல. எமது ஜிஹாத் தொடரும்'' என அவர் கூறினார்.

இதேவேளை அமெரிக்காவின் ஏற்பாட்டில் ஹமீத் கர்ஸாயியின் சகோதரரான வலி கர்ஸாயியுடன் தாலிபானின் உயர்மட்ட அதிகாரியான முல்லாஹ் அப்துர் ரஸ்ஸாக் பேச்சுக்களில் ஈடுபட்டிருப்பதாகவும் தாலிபான்களிலுள்ள முற்போக்குச் சிந்தனையுள்ள ஒரு குழுவினரை கர்ஸாயி அரசினுள் உள்வாங்குவதே அதன் நோக்கம் என்ற வதந்தி இப்போது பரவி வருகிறது. ஈரானிய ஊடகங்கள் இவ்வாறான இரண்டு சந்திப்புக்கள் இடம்பெற்றுள்ளன என்று தெரிவித்துள்ளபோதும் இச்செய்தியினை ஊர்ஜிதப்படுத்த முடியாதுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்து கண்டிப்புடன் அவர்களை விசாரணை யும் செய்தார்கள். நபிகளார், ''இவர்கள் குறைஷிகளின் இராணுவத்தினர்தான்; இவர் களை அதட்டத் தேவையில்லை'' என்று சூசகமாகக் கூறினார்கள். பின் கைதிகளை நோக்கி சில கேள்விகளை தொடுத்தார்கள்.

'உங்களுடன் எத்தனைபேர் உள்ளார்கள்?

'பலர்'

'எத்தனை மிருகங்கள் அறுக்கப்படுகின்றன?

'சில நாட்களில் 9; சில நாட்களில் 10''

'அப்படியானால் அங்கே 900 அல்லது 1000 படைவீரர்கள் குழுமியிருக்கிறார்கள்' என நபிகளார் குறிப்பிட்டார்கள்.

அவ்வாறே தோழர் அபூபக்ருடன் உளவு பார்த்து திரிந்தபோது ஒரு வயோதிபரை சந்தித்தார்கள். அவரிடம் குறைஷிகளைப் பற்றி விசாரித்தார்கள்.

வயோதிபர்: நீங்கள் யாரென்று சொன்னால் விடை பகர்வேன்.

நபிகளார்: நீங்கள் சொன்னதும் நாங்கள் யாரென்று சத்தியமாக உங்களுக்குச் சொல்வோம்.

வயோதிபர்: 'முஹம்மதும் அவருடைய தோழரும் வெளிப்பட்டு இந்த இந்த இடங்க ளில் இருக்கிறார்கள். குறைஷிகளும் வெளிப் பட்டு இந்த இடத்தில் கூடாரம் அடித்திருக் கிறார்கள்.

வயோதிபர் (மீண்டும்): நீங்கள் யார்? நபிகளார்: நாங்கள் 'மா'விலிருந்து (நீரிலி ருந்து) வந்தவர்கள்.

வயோதிபர் ஈராக்கில் உள்ள 'மா' எனும் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என ஊகித்துக் கொண்டார்.

4. பரஸ்பர புரிந்துணர்வு

போராட்டத்தில் தலைமைக்கும், படை வீரர்களுக்கும் இருக்க வேண்டிய அடிப்படை பண்புகளில் இதுவும் ஒன்று. நிறைய போராட் டங்களில் வெற்றி தோல்வியை இதுவே நிர்ணயித்திருக்கிறது. குறிப்பாக தலைமை யையும் அதன் இலக்கு, நோக்கங்களையும் ஆசீர்வதிக்கக்கூடிய உறுப்பினர்கள் இன்றிய மையாதவர்கள். பத்ர் யுத்தத்திற்கு தயார் படுத்துவதற்காக நபிகளார் படைவீரர்களை வரிசைக் கிரமமாக ஒழுங்குபடுத்தினார்கள். அப்போது ஸவாத் இப்னு ஹுஸைமா றழியல்லாஹு அன்ஹு வரிசையை விட்டு சற்று விலகி இருந்தார். நபிகளார் அவரை அம்பினால் மெதுவாக குத்தி சரியாக நிற்கு மாறு கட்டளையிட்டார்கள். உடனே தோழர் 'நீங்கள் எனக்கு வலியுண்டாக்கிவிட்டீர்கள்'. என முறைப்பட்டு, தானும் அதே இடத்தை தாக்கப் போவதாக சொன்னார்கள். றஸூலுல் லாஹ் அனுமதி வழங்கவே அத்தோழர் றஸூலுல்லாஹ்வின் அவ்விடத்தை கட்டிய ணைத்து முத்தமிட்டார்கள். இது தலைவர் மீதிருந்த பற்றுறுதியைக் காட்டுகிறது.

5. இறையுதவி

''பத்ர் போரில் நீங்கள் சக்தி குறைந்தவர் களாக இருந்தபோது அல்லாஹ் உங்க ளுக்கு உதவி புரிந்தான். ஆகவே நீங்கள் நன்றி செலுத்துவதற்காக அல்லாஹ்வுக்கு அஞ்சி நடந்து கொள்ளுங்கள்'' (3:123) என்ற அல்குர்ஆன் வாசகத்தைப்போல் இறை உதவியை பத்ர் களம் நேரடியாகக் கண்டது. பத்ர் போராட்ட தினத்தில் படைவீரர்களை தயார்படுத்திவிட்டு பிரார்த்தனை புரிந்த றஸூலுல்லாஹ், தோழர் அபூபக்ரிடம் பின் வருமாறு கூறினார்கள். ''உற்சாகத்துடன் இரும் அபூபக்கரே! இறைவனின் உதவி வந்துவிட்டது. ஜிப்ரீல் தலைமையிலான போராட்டக் குழு வந்திருக்கிறது'' என அல்லாஹ்வின் வாக்குறுதியை ஞாபக மூட்டினார்கள். இவற்றை ஸஹாபிகளும் நேரடியாகக் கண்டார்கள். உக்காஸா றழியல்லாஹு அன்ஹு அவர்களின் வாள் போராட்டத்தின் இடையில் உடைந்தபோது றஸூலுல்லாஹ் கொடுத்த தடி, வாளாக பலரை வீழ்த்தியது அல்லாஹ்வின் அருளின் மூலமாகத்தான்.

6. இறையுதவிக்கான அடித்தளம்

ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இறைவனது தீனை உலகில் ஸதாபிக்கும் பணியில் ஈடுபட்டி ருந்தார்கள். அதற்காகவே தனியலகைத் தேடினார்கள். எனவே. ஒரு நீதிமிக்க, தூய் மையான, மனிதாபிமான ஆட்சி உலகில் உருவாக்கப்பட வேண்டும் என்ற தூய கொள்கை இங்கு முக்கியமாகக் கவனிக் கப்பட வேண்டியதாகும். முஸ்லிம்கள் ஏற்க னவே வாழ்ந்து கொண்டிருக்கும் பிரதேச மாக அது இருந்தால், அங்கு இறைநீதியும், இஸ்லாமிய ஒழுங்கு முறையும் நிலைபெறு வதற்கான போராட்டமாக அது அமையும் போதே இறையுதவி நிச்சயம் வந்தடையும்.

முடிவாக....

பத்ர் போராட்டம் இவ்வாறான பல போத னைகளை எமக்குச் சொல்லியிருக்கிறது. றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இஸ்லாம் என்ற கொள்கையை அதிகாரம் பெற்ற சக்தியாக மாற்றுவதற்கு முதலில் மதீனா என்ற தனியலகைத் திட்ட மிட்ட முறையிலும், கட்டம்கட்டமாகவும் அப் போதைய சூழ்நிலைகளை கருத்திற் கொண்டும் உருவாக்கியிருக்கிறார்கள். அங்கு அதிகாரத்தைக் கையிலெடுத்த பின்பே இஸ் லாத்தை வாழவைப்பதற்காகவும், விரிவு படுத்துவதற்காகவும் ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்தார்கள். அதிலும் வெற்றி பெறு வதற்கும் வரலாற்றை மாற்றியமைக்கக் கூடிய சாதனையைப் புரிவதற்கும் தூதரின் தூய்மையான தலைமைத்துவமே துணை நின்றதென்பது வரலாற்றுப் பதிவாகும்.

இன்றைய நாட்களில் 'தனியலகு', 'சுய நிர்ணயம்', 'அரசியல் போராட்டம்' 'ஆயுதப் போராட்டம்' போன்ற தீர்வுகளைப் பற்றி சிந்திக்கும் எமக்கும் தனியலகு பற்றி கோரிக்கை விடும் அரசியல்ஞானிகளுக்கும், புலமைத்துவவாதிகளுக்கும் பத்ர் போராட்டம் ஒரு 'தெளிவை' ஏற்படுத்தும் என்பது நிச்ச யம். அவ்வாறானதொரு தெளிவை இவ்வருட நோன்பு எமக்கு ஏற்படுத்துமாயின் அதுவே எமது நாளைய போராட்டங்களுக்கு அத்தி பாரமாய் அமையும் என்பது மட்டும் உறுதி.

புண்ணிய மாதமா, பிச்சைக்கார...

ஸக்காத் கொடுப்போர் ஒன்று சேர்ந்து ஸுன்னா முறைப்படி ஒழுங்காக ஸக்காத் தைக் கொடுக்க வேண்டும். மற்றும் வசதி படைத்தோர் தம் உறவினர்களில் ஸக்காத் துக்கு உரித்தானோர் உள்ளனரா எனப் பார்த்துக் கொடுத்தாலே 50% பிரச்சினை தீர்ந்து விடும்.

மற்றும் ஒவ்வொரு மஹல்லாவும் அங்குள்ள ஏழை-மிஸ்கீன்-கடன்காரர்-புதிதாக இஸ்லாத்தைத் தழுவியோர் இவர் களை இனங்கண்டு அவர்களுக்குக் கொடுப் பதன் மூலம் தகுதியுடையோர் ஸக்காத் தைப் பெற்றுக் கொள்வது மட்டுமல்ல, அவர்கள் அந்த ஸக்காத்தை தகுந்த முறை யில் உபயோகித்து முன்வருவதற்கும் முயற்சிப்பார்கள்.

ரமழான் வருவதற்கு முன்னரே பள்ளி நிருவாகத்தாரும் ஊர்ப் பெரியோரும் ஒன்று சேர்ந்து ஒரு சிறந்த வழிமுறையை உரு வாக்கி ஸக்காத்தைச் சேர்த்து அவசியமா னோருக்கு கொடுக்க வழிவகுக்க வேண்டும். நம்பிக்கைக்குரியவர்களை நியமிப்பதன் மூலமும், குழுவாக மஷ்ரா முறைப்படி செயல்படுவதின் மூலமும் நம்பிக்கையில் லாப் பிரச்சினையையும் யார் யாருக்கு எவ்வளவு கொடுக்கலாம் என்பதில் ஏற்படும் கருத்து வேறுபாடுகளையும் தீர்த்துக் கொள்ளலாம். ஏழைகளைப் பொதுவிடத் துக்கு வரவழைத்து மானபங்கப்படுத்தாமல் அவரவர் வீட்டுக்குச் சென்று அன்போடு ஸக்காத் கொடுக்கப்படுமானால் எவ்வளவு அழகாக இருக்கும்! அப்படிச் செய்வோமா னால் இப்புனித மாதம் உண்மையிலேயே ஒரு புண்ணிய மாதமாக மாறுமே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஃதிகாபும் அதன் ஒழுங்குகளும் (தொடர்)

இஃதிகாப் இருக்கும் பிரத்தியேகமான இடத்தினுள் செல்லும் நேரமும், அதிலிருந்து முழுமையாக வெளியேறும் நேரமும்

சுன்னத்தான இ.'திகாபைப் பொறுத்தமட்டில் நேரம், காலம் நிர்ணயிக்கப்படவில்லை. ஆனால், ஒருவர் ரமழானின் இறுதிப் பத்தில் இ.'திகாப் இருப்பதற்கு நிய்யத் வைத்திருந்தால் 21ம் நாள் ஸுபஹ் தொழுகையைத் தொடர்ந்து அவ்விடத்தில் நுழைவது சுன்னத்தாகும். இவ்வாறு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் செய்துள்ளார்கள். ஆனாலும், இ.'திகாப் இருக்க நினைத்தவர் இருபதாம் நாள் சூரியன் மறைந்த பின்னர் இரவின் ஆரம்பத்திலேயே பள்ளிவாயலுக்கு வருகைதர வேண்டும். ரமழான் மாதத்தில் இறுதிநாள் சூரியன் மறைந்ததன் பின்னர் அவ்விடத்தை விட்டும் வெளியேற வேண்டும்.

இஃதிகாப் இருப்பவருக்கு முஸ்தஹப்பான விடயங்கள்

நபிலான வணங்கங்களை அதிகமாக நிறைவேற்றுவது இ.'திகாப் இருப்பவருக்கு முஸ்தஹப்பாகும். தொழுகை, குர்ஆன் ஓதல், தஸ்பீஹ், தஹ்மீத், தஹ்லீல், தக்பீர் போன்ற திக்ருகளில் ஈடுபடுதல், இஸ்திக்பார் செய்தல், நபியின் மீது ஸலவாத்தும், ஸலாமும் சொல்லுதல், பிரார்த்தித்தல் போன்ற இறைநெருக்கத்திற்கு வழிவகுக்கும் இபாதத்துகளில் ஈடுபடல் வேண்டும். மேலும் இஸ்லாமிய நூற்களையும், கிரந்தங்களையும் வாசித்தல் போன்ற கல்விசார் செயற்பாடுகளிலும் ஈடுபடலாம். தனக்கு சம்பந்தம் இல்லாத விவகாரங்களில் சொல்லாலும், செயலாலும் ஈடுபடுவது மக்றூஹ் ஆகும். மேலும் இறைநெருக்கத்திற்கு வழிவகுக்கும் என நினைத்து பேசுவதை முழுமையாக தவிர்ந்து கொள்வதும் விரும்பத்தகாததாகும்.

இஃதிகாப் இருப்பவருக்கு ஆகுமானவை

1. தனது மனைவியை அல்லது குடும்பத்தாரை வழியனுப்பி வைப்பதற்காக இ.'திகாப் இருக்கும் இடத்திலிருந்து வெளியே வருதல் ஆகுமானது.

(புகாரி, முஸ்லிம், அபூதாவுத்)

2. முடியை வாருதல், தலைமுடி சிரைத்தல், நகம் வெட்டுதல், உடற்சுத்தம் பேணல், அழகிய ஆடை அணிதல், நறுமணம் பூசுதல் முதலியன ஆகுமானவை.

(புகாரி, முஸ்லிம், அபூதாவுத்)

3. அவசரத் தேவைக்காக வெளியேறிச் செல்லுதல் ஆகுமானது.

தேவைக்காக வெளியேறிச் செல்வதை மூன்றாக வகைப்படுத்தலாம்.

அ) ஷரீஅத் ரீதியாகவும் இயல்பாகவும், கட்டாயம் வெளியாகிச் சென்று நிறைவேற்ற வேண்டிய ஒரு விவகாரத்திற்காக செல்லுதல் ஆகுமாகும். உதாரணமாக ஜும்ஆத் தொழுகைக்காக செல்லுதல், உணவையும், குடிப்பையும் கொண்டு வருவதற்கு யாருமில்லை என்ற நிலையில் அதற்காக வெளியேறுதல், மலசலம் கழிப்பதற்காக செல்லல் போன்ற வற்றைக் குறிப்பிடலாம்.

ஆ) வாஜிபல்லாத கடமைகளுக்காக செல்லுதல். உதாரணமாக நோயாளிகளை சுகம் விசாரித்தல், ஜனாஸாக் கடமைகளில் கலந்து கொள்ளுதல் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இ.'திகாபின் ஆரம்பத்தில் 'இக்கடமைகளுக்காக வெளியேறிச் செல்வேன்' என நிபந்தனையிட்டிருந்தால் செல்வது கூடும். அப்படியில்லையென்றால் வெளியே செல்லக்கூடாது.

இ) இ.'திகாபுடன் நேரடியாக முரண்படுகின்ற ஒரு விடயத்திற்காகச் செல்லல். உதாரணமாக, வீட்டுக்குச் செல்லல், கொடுக்கல் வாங்கல், வியாபாரத்தில் ஈடுபட வெளியேறுதல், தனது மனைவியுடன் கூடுவதற்காக செல்லல் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இவற்றுக்காக நிபந்தனையுடனோ, நிபந்தனையில்லாமலோ வெளியேறிச் செல்வது கூடாது.

இஃதிகாபை முறிக்கும் காரியங்கள்

1. வேண்டுமென்று தேவையின்றி மஸ்ஜிதை விட்டு வெளியேறுதல். அது குறுகிய நேர வெளியேறுதலாக இருந்தாலும் சரியே! ஏனெனில், பள்ளிவாயலில் தரித்தல் என்ற அம்சத்தை அது இழக்கச் செய்கிறது. பள்ளியில் தரித்தல் இ.'திகாபின் மிக முக்கியமான அடிப்படைகளில் ஒன்றாகும்.

2. மதம் மாறுதல்.

3. போதை, பைத்தியம் போன்றவற்றால் புத்தியிழத்தல் மற்றும் மாதவிடாய், பிரசவ ருது ஆகியவற்றால் இ.'திகாப் முறிந்துவிடும்.

4. மனைவியுடன் வீடு கூடுதல்.

இ.'திகாப் இருக்க விரும்புபவர் பள்ளிவாயலில் தனக்கென ஓர் இடத்தை ஒதுக்கி கூடாரம்போல் அமைத்துக் கொள்ள வேண்டும். மேற்படி இ.'திகாப் ஒழுங்குகளை கடைப்பிடித்தொழுக வல்ல அல்லாஹ் நம் அனைவருக்கும் துணை நிற்பானாக! இ.'திகாப் இருக்கும் சுன்னத்தை ஹயாத்தாக்க வல்ல அல்லாஹ் நம் அனைவருக்கும் வசதிவாய்ப்பைத் தந்தருள்புரிவானாக!

துணை நின்றவை
பிக்ஹுஸ் ஸுன்னா,
பதாவா ரமழான், குஹ்பதுல் இஃவான்.

அல்ஹஸனாத் இதழ் பரிசு பெறும் தம்பி தங்கையர்

1. தன்வீர் ஜஹான்
   தரம் - 06
   இமாம் கஸ்ஸாலி வித்., நிந்தவூர்
2. சுமையா சியாட்
   தரம் - 10 439, கலிகமுவ, கெலிஓய
3. முன்பீக் அஹமட்
   தரம் - 06 மின்ஹாஜ் தே. பாடசாலை திக்குவல்ல
4. முஹமட் மஹ்தூக்
   தரம் - 07
   அல்மனார் தே.பா., மருதமுனை
5. எம்.ரீ. றிப்கான்
   தரம் - 08,
   அல்அக்ஸா தே. பாடசாலை, கல்பிடிய
6. ஏ.எல்.எப். ஹஸீனா
   126/1, கண்டி றோட், வரகாமுற
7. எம்.ஜே.எப். ஸீனியா
   402/6 ஹிஜ்ரா மாவத்த, நாங்கல்ல
6. அஸ்கர் ஹுஸைன்
   தரம் - 07
   யகஸ்முல்ல முஸ்லிம் வித்தியாலயம்
8. எஸ்.எம். இப்ஹாம்
   தரம் - 05 260/B கல்பிடிய வீதி, கொலனி, ஏத்தாளை
10. எம்.எம். முஹம்மட்
    தரம் - 03
    ஸாஹிறா தே. பா, மாவனல்லை
11. எஸ்.எப். நுஸ்கா
    தரம் - 04, பாத்திமா பாலிகா ம.வி ஓட்டமாவடி
12. ஏ.ஆர். இம்றான்
    தரம் - 06, கல்பானுவ முஸ்லிம்.வித்., முன்னேகுளம், நிக்கவரட்டிய.
13. எப். பஹ்றா
    தரம் - 03
    தங்கல்ல முஸ்லிம் ம.வி, தங்கல்ல
14. எம்.எம்.எப். மின்ஹா
    தரம் - 06, மெத்தஹெடிய மு.வி பொகுஹெர
15. மு.சீ. ஆக்கிலா பர்வின்
    தரம் - 05, தி/கிண்ணியா மு.ம.கல்லூரி
    கிண்ணியா - 6
16. ஏ.கே. ஸாஜித்
    தரம் - 03, நாபாவள மு.ம.வி, நாபாவள
17. ஏ.சீ.எம். அஜ்வத்
    தரம் - 08, கல்/திகளி மு.ம.வி, கல்பிட்டி வீதி, கப்பலடி
18. எம்.ஆர். நுஸ்லா
    தரம் - 10, ஜின்னா வீதி, இறக்காமம்
19. அ.ம. பாத்திமா பாரிகா
    தரம் - 07 அல் ஹிலால் வித்தியாலயம், சாய்ந்தமருது
20. ஸஃதியா நஸீர்
    ஆண்டு 8G முஸ்லிம் பாலிகா வித்., எகொடவத்த, பேருவளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நீங்கள் ரமழானுக்கு ரெடியா?'' ஆக்கம் மிகவும் சிறந்ததாக இருந்தது. காலத்துக்குப் பொருத்தமாகவும் இன்றைய சமுதாயத்துக்கு ஒரு வழிகாட்டியாகவும் இருந்தது.

அதேபோன்று ''வெண்பனித் தேசத்தில் வெந்துபோன மலரொன்று'' இரு மாதங்களில் வந்த சிறுகதை எமது மக்களுக்கு ஓர் எடுத்துகாட்டாகவே இருக்கிறது. இன்றைய சமூகத்தில் இவ்வாறான சம்பவங்கள் எவ்வளவு நடைபெறுகின்றன! எமது பெற்றோர் சிலர் இவ்வாறு லண்டன் மாப்பிள்ளைக்குத் தன் மகளை கட்டிவைத்து எப்படித் தவிக்கிறார்கள்! இதுபோன்று பெண்களை ஏமாற்றும் பாவிகள் எவ்வளவோ எமது சமூகத்தில் வாழ்கிறார்கள். சொத்துக்கு, பணத்துக்கு, அதேபோன்று பெயருக்கு (லண்டன், கனடா, மிட்லீஸ்ற்) என்று புகழுக்கு ஆசைப்பட்டு இம்மை என்ற இந்த சொற்ப வாழ்வுக்கு ஏமாந்து தன்னுடைய பெண் மக்களை திருமணம் முடித்துவைக்க தயாராக இருக்கும் எமது பெற்றோர் இருக்கும்வரை இவ்வாறான ஏமாற்றுக்காரர்கள் அழியவே மாட்டார்கள். இவ்வாறான ஆக்கங்கள் எமது சமுதாயத்துக்கு உண்மையிலேயே ஒரு முன் அறிவிப்பாகும்.

எமது சமுதாயத்தை நல்வழியில் கொண்டு செல்வதற்கு எமது அல்ஹஸனாத் தொடர்ந்து கொடிகட்டிப் பறக்க இறைவன் துணைபுரிவானாக!

அஸ்மா யூசுப்

சென்ற மாத இதழில் ''நீங்கள் ரமழானுக்கு ரெடியா' என்ற சகோதரி Dr. மீனா தாஹா ரிபாய் அவர்களது கட்டுரை வாசகர்களுக்கு சிறந்த பல சிந்தனைகளை எழச் செய்தது. மற்றும் Dr. றயீஸ் அவர்களின் 'சிறுநீரகத்தை இழந்தபோதும் அல்ஹம்துலில்லாஹ்' எனும் கட்டுரையானது மனதை பெரிதும் உருகச் செய்தது. மேலும் சிறுகதை, கவிதை, குர்ஆன் ஹதீஸ் விளக்கங்கள் சிறப்பாக காணப்பட்டன. அல்ஹஸனாத்தின் பணிகள் தொடர என் இதயபூர்வ வாழ்த்துக்கள்

ஆயிஷா ஹனூன் நஜீம்தீன்
அதிபர் சீனன்கோட்டை மு.ம. வித்., பேருவளை

சொல்லவேண்டிய இஸ்லாமிய செய்திகளை அழகான நடையில் விளங்கிக் கொள்ளக்கூடியவாறு இன்றைய சூழலுக்கேற்ப தருவதில் அல்ஹஸனாத்துக்கு நிகர் அல்ஹஸனாத்தேதான். முன் அட்டை தொடங்கி, முடியும் அட்டைவரை ஒரு செய்திகூட உதாசீனப்படுத்த முடியாததாகஇருக்கிறது. நான் 2004ம் ஆண்டு கலைப்பிரிவு மாணவி. எனக்கு இஸ்லாமிய பாடத்தில் B சித்திபெற பெரிதும் உதவியது அல்ஹஸனாத்தின் ஆக்கங்களே.

அல்ஹஸனாத் ஆசிரியருக்கும் வெளியீட்டு நிறுவனத்திற்கும் நன்றி கூறுவதோடு என்னைப்போல் பலரும் இதில் பயன்பெறவும் பிரார்த்திக்கிறேன்.

அஸ்மியா நிஸாம், நாவலப்பிட்டி

இஸ்லாமிய விழுமியங்களோடு வாழ்வை அமைத்து, வாழ்ந்து, மரணித்துவிட வேண்டும் என்ற அவாவுடன் வாழும் என் போன்ற ஈமானிய இதயங்களுக்கு 'அல்ஹஸனாத்' வழங்கும் போதனைகள் ஈடில்லாதவை. குறிப்பாக, உஸ்தாத் ஹஜ்ஜுல் அக்பர் அவர்கள் வழங்கும் 'த.'.வா களம்', ஆஸிம் அலவி அவர்களின் ஆழமான சிந்தனைக் கருத்துக்கள் என்பன மெய்சிலிர்க்க வைக்கின்றன. அல்ஹஸனாத்தின் நீண்டகால வாசகனான நான் மத்திய கிழக்கு நாட்டுக்கு தொழில் நிமித்தம் வந்தும் அல்ஹஸனாத்தை தவறாது படித்து வருகிறேன். என்போன்ற இஸ்லாமிய நெஞ்சங்களுக்கு அறிவு புகட்டும் அல்ஹஸனாத்தே, உன் இஸ்லாமியப் பயணம் நீண்ட ஆயுளுடன் தொடர எல்லாம் வல்ல அல்லாஹ் அருள்புரிவானாக!

ஓட்டமாவடி முஹம்மத் இத்ரீஸ், டுபாய்

உன் வருகை தொடர வாழ்த்துக்கள். இம்முறை ரமழான் சிறப்பிதழ் மிகவும் பிரமாதம். அத்துடன் Dr. றயீஸின் அனுபவ ஆக்கங்கள் சமூகத்தை விழித்தெழச் செய்து அல்லாஹ் மீதுள்ள உறுதியை அதிகரித்து, எப்போதும் அல்லாஹ்வுக்கு நன்றியுடைய அடியானாக எம் ஒவ்வொருவரையும் இருக்கத் தூண்டுகிறது. அவருக்கும் அதனைப் பிரசுரிக்கும் அல்ஹஸனாத் பீடத்துக்கும் அல்லாஹ்வின் நற்கூலியும், நற்பாக்கியமும் உண்டாவதாக!

கந்தளாய் சிட்டு ஸுஜானா

மாதமொருமுறை மலர்ந்துவரும் மாதாந்த இதழே! உனது பணி மேலும் வளர வாழ்த்துகிறேன். இரத்தினச் சுருக்கமான உனது ஆக்கங்களுக்கு நன்றி. அல்ஹஸனாத் மாதாந்த சஞ்சிகையில் 'இறைநம்பிக்கையை உறுதிப்படுத்தும் நவீன விஞ்ஞானம்' என்ற தொடர் கட்டுரையை வாசித்து வருகிறேன். தனியே விஞ்ஞானத்தை மட்டும் கற்றுவரும் எமக்கு இஸ்லாத்தையும் அது கூறும் கருத்துக்களையும் விஞ்ஞானத்துடன் தொடர்புபடுத்தி கற்க வாய்ப்பளிக்கிறது. இத்தொடரை தரும் Dr. பாயிக் அவர்கள் இலகுவாக விளங்கிக் கொள்ளக் கூடியவாறு சிறந்த எழுத்து, மொழிநடையில் தருவதையிட்டு அவருக்கு நன்றி. மேலும் இவ்வாறான ஆக்கங்கள் தொடர்ந்தும் இடம்பெற வேண்டுகிறேன்.

A.L. ஷாகிரா, கெகுணகொல்ல

அல்ஹஸனாத்தின் புதிய வாசகி நான். ஒரு வருடமாக அதைப் பெற்று படித்து வருகிறேன். இதில் இஸ்லாமிய வாழ்க்கை அமைய வேண்டிய முறையையும், ஈமானில்லாத மனிதராய் வாழ்ந்தவருக்கு ஈமான் பற்றிய பல விளக்கங்களையும், பொழுதுபோக்குக்காக எதுவுமே இன்றி தவிப்படைந்த எனக்கு ஒரு பொழுதுபோக்காகவும் அல்ஹஸனாத் அமைந்தமைக்கு எனது நன்றிகள் உரித்தாகட்டும், அல்ஹம்துலில்லாஹ்.

அல்குர்ஆன், ஹதீஸ் விளக்கங்கள், உஸ்தாத் ரஷீத் ஹஜ்ஜுல் அக்பர் அவர்களின் த.'.வா களம், கேள்வி-பதில், ஆரோக்கிய சந்திப்பு போன்ற அத்தனை அம்சங்களும் வியப்பூட்டுகின்றன. இதுபோல் இன்னும் பல சிறப்பு நிகழ்ச்சிகளைத் தந்து எம் மனிதர்களை நேரான வழியில் செலுத்திட இறைவனிடம் நான் இருகரம் ஏந்திப் பிரார்த்திக்கிறேன். ஆமீன்!

ஹஸானா கரீம், பண்ணவ

உங்களது ஆக்கபூர்வமான கருத்துரைகளே எம்மைச் செழுமைப்படுத்தும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கை நோக்கி...





வேகமுடன்...

மிகக் குறுகிய காலத்தில்
சர்வதேச கல்வித்தரம்

BTEC HND In just One year

Leading to BSc (Hons) in just one more year
from Universities in UK, USA, Australia, New Zealand, Canada etc..

- Computing
- Business Information Technology
- Software Engineering

4 Semester / Full Time

www.bcas.lk

British College of Applied Studies

32, Dharmarama Road, Colombo-06.
Tel: 0112 559255 / 501145 / 0777 3114105.
344, Peradeniya Road, Kandy.
Tel: 081 2246300 / 2224731 / 0777 634508.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered as a News Paper in Sri Lanka GPO No: GD/36/News/2004

NORFOLK
INTERNATIONAL QUALITY FOODS

for Finest Meat Meals

Crescent

Mini Kievs

Delicately spiced ground chicken filled with creamy cheese, parsley and garlic. Coated in crispy crumbs. The much loved kids snack.

Chicken Fingers

Shaped ground chickenstuffed with mildly spiced mashed potatoes & coated in crispy crumbs. Simply serve hot with a chilli/ garlic sauce.

Chicken Burgers

Spicy crumbed mini burger patties, coated in crispy crumbs. Insert in to a burger bun with salad and sauce. Ideal for a school snack.

Fish Fingers

Shaped ground fish stuffed with mildly spiced mashed potatoes & coated in crispy crumbs. Simply serve hot with a sauce of your choice.

Fish Chinese Rolls

Made the traditional way by using fresh fish, potatoes & spices stuffed into a pan cake. Battered, crumbed & Flash fried. For best results, thaw for around 10 minutes and deep fry in hot oil until golden brown. Do not freeze once thawed.

Chicken Nuggets

Ground, seasoned & formed chicken, coated in crispy crumbs. Serve as a fun snack with heaps of sweet tomato sauce.

Fish Cutlets

Spiced fish & potatoes coated with a layer of potato batter crumbed & flash fried. Fry from frozen. Do not freeze once thawed.

Golden Drummers

Chunky chicken mixed with mild spices & coated in crispy crumbs. Serve with fries, salads and sauce. ideal as a anytime snack

COOKING INSTRUCTION

Thawing not neccessary. Deep fry 3-4 minutes until golden brown.

STORAGE

Store in deep freezer at -18c. Do not refreeze once thawed

Norfolk Foods (Pvt) Ltd.
142, Katuwana Industrial Estate,
Homagama, Sri Lanka.
Tel: 2857340. Fax: 2857341
E-mail : norfolk@sltnet.lk

Nothing can fool your taste-buds

AVAILABLE IN LEADING SUPERMARKETS AND GROCERY STORES IN SRI LANKA, MALDIVES AND BANGLADESH.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printer: A.J. Prints (Pvt) Ltd., 44, Station Road, Dehiwala Tel: 2723205